சொந்தங்கள்

லகா முகுந்தன்

சொந்தங்கள்

லகா முகுந்தன்

சொர்க்தங்கள்

1

"ஏகாம்பரம் வந்துவிட்டானா?" - கேட்டுக் கொண்டே வீட்டினுள் நுழைந்தார் துரைசாமி. காலையிலே ஒரு முறை வந்தாயிற்று. அப்போதும் வெளியில் போயிருப்பதாக சொன்னார்கள். துரைசாமியும், ஏகாம்பரமும் பால்ய சினேகிதர்கள். ஊரில் இருக்கும் போது தினமும் ஒரு முறையாவது பார்க்காவிட்டால் மண்டை வெடித்து விடும் அவருக்கு.

"வாங்கண்ணே" சட்டென்று புடவைத் தலைப்பால் போர்த்திக் கொண்டு பேசுகிறாள் சென்பகம். ஏகாம்பரத்தின் மனைவி.

"ஏம்மா அவன் வீட்டிலே இல்லையா? இன்னுமா வீட்டுக்கு வரலை? எங்கே போனான்?" கேள்விக்கு பதில் வரும் என்ற உணர்வுடன் அவளையே பார்த்தவாறே நிற்கிறார்.

"இல்லை அண்ணே. மடத்துக்கார ஜோஸியர் கிட்டே போயிருக்காரு..."

"என்னடா இது?" மெதுவாக பல்லைக் கடிக்கிறார்.

''ஏம்மா நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. உம் புருஷனுக்கு தெரிய வேண்டாமா? ஒண்ணுக்கு மூணு பொண்ணு பெத்து வச்சிருக்கீங்க? ஒரு கல்யாணம் காட்சி செய்ய வேண்டாமா? மொத பொண்ணுக்கே இருபத்து நாலு வயச ஆயிடலே.''

செண்பகம் பெருமூச்சு விடுகிறாள். 'என்னத்தை சொல்வது? நெஞ்சில் நெருப்பை எரிய வைக்கும் சமாசாரம் இது.' அவளைப் பொறுத்தவரையில் ஆக்கி விளக்கி, பெருக்கி அதைத் தவிர அவளுக்கு எதுவுமே தெரியாது. வீட்டைவிட்டு கூட ரொம்ப தூரம் போனதில்லை. எது வேண்டுமானாலும், தன் மூன்று பெண்களும் ஓடி ஓடிப்போய் வாங்கிக் கொண்டு வந்து விடும். பெண்களோடு வேலையைப் பகிர்ந்து கொண்டாலும் தானாக முயற்சி எடுத்து செய்ய செண்பகத்திற்கு எதுவும் தெரியாது தான். எல்லா விஷயங்களையும் கணவரே பார்த்துக் கொள்வார் என்று போட்டு விடுவாள்.

வாயையே அதிகம் திறக்காத ஒரு பிறவி. தன் கணவன் செய்யும் கெடுபிடிகளில் தன் பெண்களுக்குத் திருமணம் என்பது நடக்குமா என்ன? நினைந்து நினைந்து மனதிற் குள்ளே புழுங்கும் கேள்விகள் யாரைப் போய் கேட்பது? ஏதாவது கேட்டால் கணவனிடமிருந்து ஏடாகூடமான பதில்களும், திட்டுக்களும் சில சமயங்களில் உதைகள் கூட விழுவது உண்டு. கூடுமானவரை வாயைத் திறக்காமலேயே இத்தனை நாட்கள் நகர்த்தி விட்டாள் செண்பகம். இருந்தாலும் இந்த நான்கு வருடங்களாக மனதை வாட்டிக் கொண்டிருந்த கேள்வியைக் கேட்டே விட்டாள்.

''ஏண்ணே நீங்களாவது சொல்லக்கூடாதா? நாலு வருஷமா வந்த வரனை எல்லாம் ஏதோ ஒரு காரணம்

சொல்லி தட்டிக் கழிச்சிட்டு. பொண்ணையும், என்னையும் குறை சொல்றாரு. சட்டுபுட்டுன்னு ஒரு இடத்தை முடிக்க சொல்லக்கூடாதா? பெரியவளுக்கு இருபத்து நாலு; சின்னவளுக்கு இருபத்து இரண்டு. கடைசி பொண்ணுக்கும் இருபது ஆகிப் போயிடுச்சு. இவ போனாதான் அடுத்தவளுக்கு ஏதான செய்ய முடியும்.''

துரைசாமி பெருமூச்சு விட்டார்.

''நான் சொல்லியா கேக்கப் போறான். சரி அந்த ஜோஸியர் வீட்டுக்கே போய் பார்க்கிறேன் அவனை.'' விடை பெற்றுக் கொண்டு செல்லும்போது அந்த அம்மாள் பாவமாக நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

'இந்த மடையனை என்ன செய்யறது? இவனை மாதிரி தானே எனக்கும் மூன்று பொட்டைப் பிள்ளைங்க. இரண்டு பேரை கட்டிக் கொடுத்து மொத பொண்ணுக்கு கொழந்தை கூட பொறந்தாச்சு. ரெண்டாவது பெண்ணுக்கு அஞ்சு மாசம் ஆயிற்று. இரண்டாம் பெண் பிள்ளை பெற்றபின் மூன்றாம் பெண்ணுக்கும் ஒருவனைப் பார்த்து முடித்துவிட வேண்டும். முதல் பெண்ணுக்கு கம்ப்யூட்டர் இன்ஜினியர், ரெண்டாவது பெண்ணுக்கு ஒரு ஆடிட்டர். அடுத்தவளுக்கு ஒரு நல்ல பையனைத்தான் பார்க்க வேண்டும். பிராவிடண்ட், கிராஜீவடி எல்லாவற்றிலும் கை வைத்தாகிவிட்டது. ஏதோ சிறுக, சிறுக சேர்த்து வைத்த நகைகள், பணம் இவற்றைக் கொண்டு ஒரு வழியாக இரண்டு பெண்களையும் கரை ஏற்றியாகிவிட்டது.

மூன்றாவது பெண்ணுக்கு தன் சொந்த வீடு இருக்கிறது. அதை அடமானம் வைத்து சீர் செய்துவிட்டால், அந்தத் திருமணத்தையும் சமாளித்து விடலாம்.'

அவரும் ஏகாம்பரமும் ஒரே ஆபீசில், ஒரே நிலையில் உள்ள அதிகாரிகள். ஒரே அளவு பணம் சம்பாதிப்பவர்கள் அதுமட்டுமல்ல. சிறு வயதில் இருந்தே ஒன்றாகப் படித்தவர்கள். ஒன்றாகவே வேலைக்குப் போனவர்கள். ஒரே வருடத்தில் திருமணமும் செய்து கொண்டவர்கள். இது மட்டுமல்ல இரண்டு பேருக்குமே பிள்ளைகள் கிடையாது. மூன்று பெட்டைக் குழந்தைகள். இப்படி எல்லாவற்றிலும் ஒற்றுமையாக இருந்தாலும் பொறுப்பு என்று வரும்போது அவருடைய நண்பனுக்கு போதாது தான். தான் சிறுகச் சிறுக சேர்த்து சற்று தொலைவில் சொந்த வீடு கட்டிக் கொண்டு போனபோது, ஏகாம்பரம் அவரைப் பார்த்து நகைத்த நாட்கள் அதிகம்.

''பயித்தியக்காரா. இருக்கறவனுக்கு ஒரு வீடு இல்லாதவனுக்கு பல வீடுடா. அங்கே இருந்தா தினமும் வேலைக்கு வருவே. உன்னைப் போல மூட்டாள் இருக்கவே முடியாது.'' கடிந்து கொள்வார்.

அவருடைய பெரிய பெண் புவனாவும், தன் பெண் நித்யாவும் ஒரே வயதுதான். இருந்தாலும் தன் முதல் பெண்ணுக்கு மூன்று வயதில் ஒரு பையன் வேறு இருக்கிறது. புவனாவிற்கு இன்னும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஏகாம்பரம் சற்று அடிக்கும் வெள்ளையில் இருப்பார். அவர் மனைவி செண்பகமும் நல்ல நிறம்தான். ஏகாம்பரத்தின் மூன்று குழந்தைகளுமே நன்றாக வெளுப்பாக, மூக்கும், முழியுமாக பளிச்சென்று நன்றாகவே இருக்கும்.

தன் பிள்ளைகள்... தன் பிள்ளைகள் எல்லாமே மாநிறம்தான். அதுவும் தன்னுடைய பெரிய பெண் நித்யாவிற்கு பல் சற்று வெளியில் தூக்கி அப்படியே தன்

அம்மாவைக் கொண்டு பிறந்திருந்தது. இதற்குத் திருமணம் என்ற ஒன்று ஆகுமா என்று கூட கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இருபது பவுன் போட வேண்டிய இடத்தில் நாற்பது பவுன் போட்டு, ஒன்றுக்கு இரண்டாக சீர்வரிசைகள் செய்து, தேடித் தேடி அலைந்து ஒரு வழியாக பெண்ணைக் கொடுத்து விட்டார். முதலில் இத்தனை வேண்டும். அத்தனை வேண்டும் என்று கராராக கேட்டார்களே தவிர, அதன்பின் ரொம்பப்பிடுங்கல் இல்லை. இருந்தாலும் அவ்வப்போது கோக எழும் கசைப்புகள், மாப்பிள்ளையின் தேவைகள் என்று வரும்போது, இயன்றவரை மிக நன்றாகவே செய்தார். அவரைப் பொறுத்தவரையில் தன் பெண்கள் தன் வாரிசுகள். ஆசையைக் கொட்டி, கொட்டி வளர்த்தவர்கள். பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து விட்டு தன் கடன் முடிந்தது என்று அவர் விலகினதே இல்லை. சனி, ஞாயிறு வந்து விட்டால்போதும், பெண்டாட்டி கட்டித்தரும் பட்சணங்களைக் கட்டிக் கொண்டு பெண்ணைப் பார்க்க கிளம்பி விடுவார். தன் முதல் மருமகன் வீட்டோடு சற்று ஐக்கிய மாகிப்போன அந்த நிகழ்ச்சியும் அவருக்கு ஞாபகம் வந்தது. வழக்கப்படி பெண்ணைப் பார்க்க அவர் கிளம்ப, ஏகாம்பரம் கூட கடிந்து கொண்டார்.

''என்னடா நீ மனுசன்? பொல்லாத பெண்ணை பெத்துட்டே. சனி, ஞாயிறு வந்தா ரெஸ்ட் எடுத்துக்கிட்டு உடம்பை கவனிச்சிப்பியா? ஓடறியா? அததைக் கட்டிக் கொடுத்தா அப்பா ஒழிஞ்சதுன்னு இருப்பாங்களா இப்படியா?''

''ஏண்டா இப்படி பேசறே? இத்தனை வருஷம் நம்பவீட்டுலே இருந்த பொண்ணுடா. கூட கீட போட்டுக்

கட்டிக் கொடுத்தா நல்லா வச்சுப்பாங்க இல்லே. அதுக்கு ஏதான கஷ்டம்னா எங்கடா போகும்? யாரு கிட்டே சொல்லும்? நான் போறது அதுக்கு ஒரு ஆறுதல். கொஞ்ச நேரம் மனசு விட்டு பேசும். பாவம்.''

''இப்ப ஏன் பரிதாபப்படறே? அப்படியாவது ஒண்ணுக்கு ரெண்டு சீர் போட்டு பொண்ணை கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் என்னடா?''

''என்னடா பேசறே? அதைச் செய்யலேன்னா அவளுக்கு ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினியர் கிடைச்சிருப்பானா?''

''சரி செய்துட்டே. இனிமே மட்டும் அவ சுகமா இருப்பான்னு என்ன நிச்சயம்? அவளைப் பணம், பணம்னு பிடுங்கமாட்டாங்கன்னு என்ன நிச்சயம்? எத்தனையோ இடத்துலே ஸ்டவ் வெடிச்சிருக்கு. பெண்ணை சாகடிக்க நாங்க.''

''இல்லேடா. அந்த மாதிரி எதுவும் நடக்காது. நான் தான் வாராவாரம் போறேனே. மருமகன், மாமனார் எல்லாம் அத்தனை மோசம் இல்லே. மாமியார் தான் கொஞ்சம் கொத்திப் பிடுங்குது. அப்பப்ப ஏதாவது சொல்லுது'' துரைசாமி சற்று குரல் கமறப் பேச,

''இது தேவையா? விரலுக்கு ஏத்த வீக்கம் வேணும்டா.'' ஏகாம்பரம் சற்று எகத்தாளமாகத்தான் பேசுகிறார்.

''எம் பொண்ணுங்க என்ன உம்பொண்ணுங்க மாதிரி அழகா இருக்கறவங்களா? இல்லே. ஒரு டிகிரி தான் படிச்சிருக்காங்களா? எல்லாம் ப்ளஸ்டூவோடு நிறுத்தியாச்சு. பெரிய பொண்ணை பாத்த நாலுபேரில் மூணு பேர் பொண்ணு பிடிக்கலைன்னு நேரிலே சொல்லிட்டு போயிட்டாங்க. இவுங்க வீட்டுலே தான் சீர் பத்தி பேசினாங்க. பண்ணிக்கறேன்னு சொன்னாங்க. எப்படி

யாவது முடிக்கணும்னு முடிச்சுட்டே. அப்பப்ப சின்ன சின்ன சச்சரவுகள் இருக்கு. ஆனா மருமகன் வீட்டையும் ஒரேடியா கெட்டவங்கன்னு சொல்ல முடியாது. மருமகப் பிள்ளை என்மகனை நல்லதான் வச்சிருக்காரு'' துரைசாமிப் பேச பேச கடைசியில் குறுக்கிட்டார் ஏகாம்பரம்.

''நீ திருந்தமாட்டேடா. ஏதான ஏடாகூடமானதுக்கப்புறம்தான் முழிச்சிக்கப் போறே.'' ஏகாம்பரம் சொல்ல பதறிப்போய் விட்டார் துரைசாமி. ''டேய் வினையாட்டுக்கு கூட இந்த மாதிரி சொல்லாதே. உன் வாய் பலிச்சிடப்போகுது. அந்த மாதிரி எதுவும் ஆயிடக்கூடாதுன்னுதானே வாரம் ஒருமுறை ஓடறேன். பொண்ணு முகம் விழுந்திடுச்சான்னு பாத்து கிட்டே இருப்பேன்.''

ஆனால் அந்த பயத்திற்கும் ஒரு விடிவு வந்தது. என்னதான் இரட்டை சீர் போட்டு திருமணம் செய்து கொடுத்தாலும், மருமகன் பெண்ணை நன்றாக வைத்துக் கொள்வானா என்று மனதில் ஒரு நெருடல். பேரன் பிறந்த பிறகு கூட அவருக்கு அந்த சந்தேகம் போக வில்லை. எப்போது லீவு கிடைத்தாலும் ஒரு எட்டு போய் பெண்ணை பார்த்து விட்டு வருவார்.

''மூணு நாளைக்கு முன்னாடி தானே போனீங்க ஏன்?'' என்று பெண்டாட்டி ஆரம்பித்தாலே.

''பேசாம இரு'' என்று பெண்டாட்டியை அடக்குவார். தான் பார்த்து முடித்த திருமணம் தன் மகள் எந்த பிரச்னையிலும் மாட்டிக் கொள்ளக்கூடாது. அவள் வாழ்க்கையில் மீள முடியாத துன்பம் என்று வந்து விட்டால், அவர் மனசாட்சியே அவரைக் கொன்று தின்று விடும். அவரால் ஏகாம்பரம் போல் நிச்சந்தையாக தான், தன் பெண்டாட்டி என்று தன்னை மட்டுமே கவனித்துக் கொண்டிருக்க முடியாது. அவரைப் பொறுத்தவரையில்

அவர் நேசிக்கும் தன் பெண்களின் சுகம் மிக மிக முக்கியம் தான்.

அன்றும் வழக்கம்போல் அவர் போனபோது தன் பெண்ணின் மாமனாருக்கு நெஞ்சு வலித்து ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்து இருந்தார்கள். மருமகப்பிள்ளை இங்கேயும், அங்கேயும் ஓடித் தவிக்க மாமியாரும், மருமகளும் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தனர். பெண்ணைப் பார்க்கப்போனவர் இது தான் சமயம் என்று அங்கேயே தங்கிவிட்டார். சம்பந்தியோடு ஆஸ்பத்திரியிலேயே வாசம் செய்தார்.

அவர் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வரும் வரை பத்திரமாகப் பார்த்து, கவனித்து வீட்டிற்கு கொண்டு வந்து விட்டு வந்தபோது ஏகாம்பரம், பிலு, பிலுவென்று பிடித்துக் கொண்டார்.

''ஏண்டா துட்டைதான் கொண்டு போய் கொட்ட றேன்னா இது வேறயா? உன்னை வேலைக்காரனாகவே வச்சுக்கப் போறாரு. உம் தலை எழுத்து சொன்னா திருந்தமாட்டே.''

ஒரு புன்சிரிப்போடு தன் நண்பனின் திட்டுக்களை வாங்கிக் கொண்டார்.

''தெய்வாதீனம்'' என்பார்களே. அதன் பலன் தான். அவரின் உண்மையான உதவிகள் சம்பந்தியின் மனதை மாற்றிவிட முதல் பெண்ணின் வாழ்க்கை தப்பித்தது. வாழ்க்கை சொர்க்கமாகியது.

இரண்டாவது பெண் மீனா முதல் பெண்ணை விட சற்று தேவலை. ரொம்ப அழகு என்று இல்லாவிட்டாலும் அசிங்கம் இல்லை. சொந்தத்திலே வந்த ஆடிட்டர் மாப்பிள்ளையை வளைத்துப் போட்டார். முதல் பெண்

அளவிற்கு அத்தனை செய்யவில்லை என்றாலும் இரண்டாவது பெண்ணுக்கும் மன நிறைவாக செய்து விட்டார். ஆயிற்று இன்னும் ஐந்து மாதத்தில் குழந்தை பிறந்து அவளையும், சீர் செனத்தியோடு அனுப்பிவிட்டால் அவருடைய கடமை முக்கால்வாசி முடிந்து விடும்.

இன்னும் ஒரு பெண் ரேணுகா. அதுவும் கடைசி. இவளையும் ஒப்பேற்றி விட்டால் தன் கடமை முற்றிலும் முடிந்துவிடும். இந்தப் பெண் மற்றவர்களை விட இன்னும் சற்று அழகாகவே இருப்பாள். இவளுக்குத் திருமணம் அத்தனை கடினமல்ல. அந்த வீட்டை விற்று விட்டால் கிடைக்கும் தொகையில் அவர் கடமைகளை முடித்து விடலாம். பிறகு தனக்கு வரும் பென்ஷன் தாராளமாகவே போதும். அந்திமக்காலம் வரைக்கும் சுலபமாக ஓட்டிவிடலாம். தான் இப்படி எல்லாம் கணக்கு போட்டு பார்த்து குழந்தைகளின் வாழ்வே பிரதானம் என்று வாழும் போது ஏகாம்பரம் ஏன் ஒரு சராசரி தந்தையாகக்கூட இல்லை. ஏன் இப்படி இருக்கிறான்?

இதில் என்ன வாரிக்கொட்டிக் கொண்டு போகப் போகிறான்? இத்தனையும் யோசித்தவாறே மடத்து ஜோஸியரிடம் வந்த போது ஏகாம்பரம் அமர்ந்து ஏதோ கேட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. என்ன கேட்கிறான்?

''சாமி இந்த ஜாதகத்துலே எது பொருத்தம்னு பார்த்து சொல்லுங்க.''

''ஏம்பா மூணாவது தடவையா பேப்பர்லே போடறே இல்லே. இத்தனை தானா வந்தது?''

''இல்லை சாமி. இந்த தடவை ரொம்ப ஒண்ணும் வரலை. ஒரு நாலஞ்சு ஜாதகம் தான் வந்தது.''

''மொத்தமே அத்தனை தானா வந்தது?''

''இல்லைங்க ஒரு ஆறு வந்தது. அதுலே இந்த நாலுதான் தேறிச்சு. உங்க கிட்டே கொடுத்து பாக்க சொல்லலாம்னு வந்தேங்க.''

''சரிதான் நீங்களே எது தேறிச்சு. எது தேறலைன்னு முடிவு கட்டின பிறகு நான் எதுக்கு?''

''இல்லை சாமி நீங்கதான் நாலு பேர்ல ஒரு நல்ல பையனை செலக்ட் பண்ணனும். செய்வீங்களா?''

''செய்தா போச்சு.'' அவர் ஏதேதோ கணக்கு போட்ட வாறு அமர,

''சரி சாமி அப்புறம் சாயந்திரம் வந்து வாங்கிக் கறேன்.''

வெளியே வந்தவர்.

''என்னப்பா துரை எங்க இத்தனை தூரம்?''

''எல்லாம் உன்னை தேடிகிட்டுதான்.''

''என்னையா?''

''உன்னையே தான்.''

''ஆமா என்ன விஷயம்?'' ஏகாம்பரம் அலட்சிய மாகப் பேச,

''வழக்கமானது தான்.''

''என்ன வழக்கமான விஷயம்?''

''ஏண்டா உனக்கு எத்தனை சொன்னாலும் தெரி யாதா? உம்பொண்ணு பாவம்டா. இத்தனை அழகா, அடக்கமா திறமையுள்ளவளா படைச்சிட்டு, அவளுக்கு அதிர்ஷ்டத்தை மட்டும் வைக்க மறந்துட்டானே கடவுள். வேதனையாக இருக்குடா'' துரைசாமி மனம் இளகிப்பேச,

''வைக்கலை இல்லே. அப்புறம் நீயும் நானும் வருத் தப்பட்டு என்ன பிரயோசனம்? அதுந்தலை எழுத்துப் படி நடக்கட்டும்.'' ஏகாம்பரம் அலட்சியமாக சொல்லுகிறார்.

''டேய் பாவம்டா.''

''என்னடா பாவம்? எரிந்து விழுகிறார் ஏகாம்பரம் ''எவண்டா வந்தான்? யார் வந்தான்?''

ஏகாம்பரத்தின் பதிலில் எரிச்சல் அடைகிறார் துரைசாமி.

''எப்படிடா வருவான்? பொண்ணு உன்னோடது தானே. நல்ல இடம் பார்த்து கல்யாணம் பண்ணி குடுப்பியா? இப்படி செய்வியா. நீ ஜோஸியர் கிட்டே சொன்ன எல்லாமே என் காதிலேயும் விழுந்தது. இப்ப பேப்பரில் போட்டியே நாலு ஜாதகம்தானா வந்தது. நானும் தானே கூட இருந்தேன்.'' ஏகாம்பரம் மௌனமாக இருக்க.

''சொல்லுடா.''

''சரி நூறு ஜாதகம் வந்தது என்னங்கறே?''

''அடப்பாவி இந்த ஆற மட்டும் எப்படிடா செலக்ட் பண்ணினே.''

''எனக்கே ஜோசியம் தெரியுமில்லே'' சொல்லிவிட்டு சந்தோஷமாக சிரிக்கிறார்.

''என்ன மாதிரி ஜோஸியம்? உன்னைவிட மருமகன் பணக்காரனா இருக்கக்கூடாது. உசந்த ஸ்டேடஸ்லே இருக்கக்கூடாதுங்கற ஜோஸியமா?''

''என்னடா என்னென்னவோ பேசறே?''

''இருக்கறதை தாண்டா சொல்றேன்'' என்கிறார் துரைசாமி.

''சே! உன் பொண்ணுங்க எல்லாம் பாவம்டா. உன் வயத்துலே பிறந்ததுக்காக அவுங்க கஷ்டப்படணுமா?

உன்னை விட பிள்ளைங்க உசறக்கூடாதுன்னு நினைக் கிறியே. அது பாவமில்லே. உம் பொண்ணுங்களை நல்ல இடத்துலே கல்யாணம் பண்ணிக்கொடுடா. அதுங்களும் நல்லா இருக்கும். உனக்கும் ஒரு மரியாதை இருக்கும்.''

''என்னை என்ன உன்னை மாதிரி கேணைன்னு நினைச் சியா? இருக்கற துட்டுலே உன் ரெண்டு பொண்ணு களுக்கும் கடன் வாங்கி எல்லாம் செய்து கொடுத்துட்டே நாளைக்கு உனக்குன்னு நாலு காசு வேணாமா?'' ஏகாம்பரம் நக்கலாக கேட்க.

''எனக்கு வேண்டிய காசு. இருக்குதே. எங்க போயி டுச்சு? மூணாவது பொண்ணை கல்யாணம் கட்டித் தந்த பிறகு என்ன செலவு இருக்கு? அதும் பிரசவத்துக்கு கொஞ்சம் ஒதுக்கி வச்சிட்டு. மீதி எல்லாம் சேர்க்க வேண்டியது தானே. இன்னும் அஞ்சு வருஷம் சர்வீஸ் வேற பாக்கி இருக்கு. வாங்கற சம்பளத்துலே வீட்டுக் கடனை எல்லாம் அடைப்பேன். மிச்சத்தை சேர்த்து நிம்மதியா வாழ்ந்துட்டுப் போறேன். அட அதுகூட சரிப்பட்டு வரலை. ஒண்ணுமே இல்லைன்னு வச்சுக்க, ரிடையர் ஆனா ஊர் பட்ட பென்ஷன் வருது. அது ரெண்டு பேத்துக்கும் தாராளமா போதும். சொச்ச நாளை ஒரு வாடகை வீட்டுலே இருந்துட்டு போயிடறோம். நான் செத்தாலும் அவளுக்கும் நல்ல பென்ஷன் வரும். அவ ஒருத்திக்கு அது போதும். அதுனால என்னை முட்டாள்னு சொல்லாதே. கணக்கு பாத்து தான் செலவு செய்தேன்.''

''ம்... இப்ப பேசுவே பின்னாலே கஷ்டப்படும் போது தெரியும்.''

''டேய்... நீ பிடிச்ச முயலுக்கு மூணு கால்னு பேசாதே. டேய் நானாவது வீடு, கீடு வாங்கி கொஞ்சம் துட்டு

செலவு பண்ணிட்டேன். ஆனா நீ அதுகூட செய்யலே இல்லே. கொஞ்சம் கூட குறைச்சலானும் பரவாயில்லை. நல்ல இடமா பாத்து முடிடா.''

''கூடவா? இருக்கறதை எல்லாம் வரவன்கிட்டே அள்ளி விடறதுக்கு நான் என்ன கேணையா?'' துரைசாமி பெருமூச்செறிந்தார் வருத்தப்பட்டார்.

''டேய் பாவம்டா உன் பொண்ணுங்க. உம் பொண் ணுங்க படிச்சிருக்காங்க. பார்க்கறதுக்கும் நல்ல கலரா எல்லாம் நல்ல அழகாகவே இருக்காங்க. கொஞ்சம் தாராளமா செலவு செய்தா நல்ல இடத்துலே முடிச்சிட லாம்.'' துரைசாமி சொல்ல, சொல்ல எரிந்து விழுந்தார் ஏகாம்பரம்.

''டேய் உங்கதையைப் பாரு. என்னால இதுதான் முடியும். அதுக்கு எவனை போட்டிருக்கோ அவன் தான் வரமுடியும்.'' ஏகாம்பரம் அலட்சியமாகப் பேச, பேச துரைசாமிக்கு ஏகாம்பரத்தின் பெண்களை நினைத் தாலே வேதனை எழும்பியது.

'ம்... இவனைத் திருத்த முடியாது. உயிரை விட் டாலும் விடுவான். இந்த கலர் காகிதத்தின் மேல் இருக் கும் மோகம் மட்டும் இவனுக்கு அழியாது. பாழாய்ப் போன காசுக்காகத்தானே தன் குழந்தைகளின் வாழ்க்கையைக் கூட நாசம் பண்ணத் தயாராக இருக்கிறான்' யோசனை யோடு சற்று மௌனித்த போது, ஏகாம்பரம் பேச்சை வேறுபுறம் திருப்பினார்.

''ஆமா உன் இரண்டாவது பொண்ணுக்கு எத்தனை மாசம்?''

''அஞ்சு...''

''டாக்டர் கிட்டே செக்கப் பண்ணப் போனியா?'' சற்று அக்கறை காட்டியவாறு ஏகாம்பரம் பேச, அவரையே பார்க்கிறார் துரைசாமி.

''என் விஷயம் எல்லாம் கரெக்டா நடந்துடும். இந்த காலனா, அரையணாவுக்காக ஒருத்தர் வாழ்க்கையோட விளையாடமாட்டேன்.'' சொல்லி விட்டு துரைசாமி திரும்பிச் சென்றுவிட, போனவரையே சிறிது நேரம் நின்று பார்த்துக் கொண்டிருந்த ஏகாம்பரம், தன் வழியே போக திரும்ப, ஒரு டீக்கடை வாசலில் தன் பெரிய பெண் புவனாவும், யாரோ ஒரு இளைஞனும் சிரித்து சிரித்து பேசுவதை பார்க்கிறார்.

2

பார்க்க, பார்க்க எரிந்தது ஏகாம்பரத்திற்கு 'பொட்டைக் கழுதை, நட்ட நடுவிலே நாலு பேர் பார்க்கற மாதிரி... உடம்புக் கொழுப்பு.'

இன்னும் வாயில் வந்த கெட்ட வார்த்தைகளை உபயோகப்படுத்தியவாறே எட்டி நடைபோட்டார். 'சிரிச்சுப் பேசற ஜோர்லே கழுதைக்கு அப்பன் எதிர்லே இருக்கறது கூட கண்ணுக்குத் தெரியலே.'

அவர் அருகே போனபோது,

''அது எப்படி உங்க சிரிப்பு மட்டும் பூர்ண சந்திரன் மாதிரி அத்தனை குளிர்ச்சியா இருக்கு'' எதிரில் இருந்த இளைஞன் பெண்ணிடம் கேட்க, பெண் மறுபடியும் ஆனந்தத்தோடு சிரிக்க, சொன்ன பையன் மேல் கை வைத்தார் ஏகாம்பரம்.

''இருக்கும்டா இருக்கும். ஒண்ணும் தெரியாத பொண்ணு மனசை கெடுக்க, எத்தினிபேர் இப்படி கிளம்பி இருக்

கீங்க?'' சட்டையை பிடித்து, அவர் உலுக்கிய உலுக்கலில் அதிர்ந்து போய்விட்டான் அந்த பையன்.

''சார் நீங்க என்னை தப்பா நினைச்சுகிட்டு இருக்கீங்கன்னு நினைக்கறேன்.''

''என்னடா தப்பா நினைக்கறது? ஒரு வயசு வந்த பொண்ணுகிட்டே போய் 'சிரிச்சா சந்திரன் மாதிரி இருக்கு. சூரியன் மாதிரி இருக்குங்கறது' என்ன சாதாரண விஷயமா?''

''சார் அது வந்து...''

''வாயை மூடுடா...''

''சார்...'' சொல்வதற்குள் தொடர்ந்தாற்போல் அறைகள் முகத்தில் விழுந்தது. திடீரென்று ஏற்பட்ட தாக்குதலில் அரண்டு போய்விட்டான் அவன். முகமெல்லாம் அழுகையாகி அவரையே ஒரு ரோஷத்துடன் பார்த்தவாறே கன்னத்தை தடவியவாறே நிற்கிறான்.

''அப்பா... ப்ளீஸ்... அப்...பா'' மெதுவான குரலில் பயந்து போய்... புவனா பரிதவித்துப் போய்கூற அடுத்த நிமிடம் அவளின் தலை மயிர் அவரின் கையில். தலைமயிரைக் கொத்தாக பிடித்துக் கொண்டு ''குடிகேடி, பேரைக் கெடுக்கவா செய்யறே? நாயே.'' தலை மயிரைப் பிடித்து உலுக்கி கன்னத்தில் அறைந்ததில் சற்று தூரப்போய் அவள் விழுந்தாள்.

''சார் அடிக்காதீங்க'' அவன் தடுக்க, தடுக்க பெண்ணைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு கிளம்புகிறார்.

உள்ளே நுழையும் போதே ஏகாம்பரத்தின் மனைவி செண்பகம் விழிக்கிறாள்.

''என்னங்க?'' கேட்கும் போதே புவனாவைத் துணி உதறுவதுபோல் தள்ளி விட்டு.

''பொண்ணை என்னடி வளர்த்துருக்கே?'' என்றவாறு செண்பகத்தின் கன்னத்திலும் பளாரென்று ஒன்று விழ, அவள் விக்கித்துப் போய் நிற்கிறாள். மறுபடியும் பெண்ணின் தலை மயிரைப் பிடித்து சுழற்றி அடித்ததில் பெண் அலறிப்போய் தூர விழுகிறது. மற்ற இரண்டு பெண்களான கௌரியும், விஜியும், ''அப்பா... அப்பா...'' என்று அழுகிறார்கள். அ... என்ற வார்த்தைக்குமேல் வார்த்தைகள் வராமல் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ள பயத்தில் பெண்டாட்டி, பெண்கள் துடித்துப் போய் கண்கள் வெளிற பார்க்க.

''ஏய் என்னங்கடி... லவ்வா... கேக்குது.'' அதற்கு மேல் கொச்சையான, அசிங்கமான, பச்சை, பச்சையான வார்த்தைகள் செண்பகம் விக்கித்துப் போய் நிற்கிறாள்.

''இதென்ன அநியாயமாய் இருக்கிறது. வாயில்லா பூச்சி தன் பெண். தன் பெண்ணை எதற்கு இப்படி இம்சிக்க வேண்டும்? இன்னொரு பெண்ணாக இருந்தால் எப் போதோ வீட்டை விட்டு ஓடிப்போயிருக்கும். ஆனால் தன் பெண்கள் ரொம்பவே பயந்த சுபாவிகள். தன்னைக் கொண்டு பிறந்து இருக்கிறார்கள். மூன்று பெண்களுமே பட்டப்படிப்பு படித்தவர்கள். மூன்று பேரும் படித்து இருந்தாலும் அப்பாவின் முன் நாக்கை உயர்த்தி எவளுமே பேசமாட்டாள். அதிலும் முதல் பெண் படுபயந்தாரி. அப்பாவைப் பார்த்தாலே கோழிப்போல் பதுங்கிவிடும். வாயே திறக்காது. அப்பா அலுவல கத்திலிருந்து வரும் வரை கலகலவென்று பேசும் பெண் கள் அப்பா அலுவலகத்திலிருந்து வரும் நேரம் என்று தெரிந்தாலே மௌனமாகி விடுவர். வந்துவிட்டாலோ அதது மறைந்துவிடும். விளக்கு வைக்கும் நேரமாக இருந்தாலும் ஒன்று புழற்கடைப்பக்கம் போய் ஒளிந்து

கொள்ளும். இன்னுமொன்று படுக்கை அறையில். மற் றொன்று சமையல் அறையை விட்டு வெளியே வரவே வராது.

அலுவலகம் விட்டு வரும் போதே, பெண்டாட்டி அவசரம் அவசரமாக ஓடிவந்து, பயந்தபடி டம்ளரில் தண்ணீரைத் தர, தண்ணீரைக் காபியைப் போல் வாங்கி உறிஞ்சிக் குடிப்பார். ஒரு பத்து நிமிடம் கழித்து தான் காபியைத் தர வேண்டும். அதற்குள் ஏகாம்பரத்தின் கண்கள் நாலாபுறமும் சுழலும். உறுமி ஆரம்பித்து விடுவார்.

''எங்க உன் பொண்ணுங்க?'' என்பார். ஏதோ தன் பெண்டாட்டிக்கு மட்டும் பிறந்தது போல், தனக்கும் அந்த பெண்களுக்கும் சம்பந்தம் இல்லை போல் அவர் பேச்சு இருக்கும். தேவையில்லாமல் மனைவிக்கு ஒரு திட்டுவிடும். சரி பெண்கள் இல்லையென்றால் திட்டு கிறாரே என்று பயந்து அவர் வரும் நேரம் அவருடைய பெண்கள் எதிர்பட்டால் போதும். ருத்திரதாண்டவமே ஆட ஆரம்பித்து விடுவார்.

''நான் ஒருத்தன் தானே சம்பாதிக்கிறேன். எல்லாம் மாடு மாதிரி உக்காந்து தின்னுதுங்க. தரித்தரப்பாடைங்க. இங்கேயிருந்து ஒழியவும் மாட்டேங்குதுங்க.'' அவ ருடைய திட்டு காதில் விழ விழ, எப்போதுமே சமையல் அறையையே சரணாகதி என்று பதுங்கிக் கிடக்கும் பெரிய பெண் புவனா பிழியப்பிழிய அழுவாள்.

செண்பகத்திற்கு ஒவ்வொரு நேரம் பெண்களைப் பார்த்தாலே பாவமாக இருக்கும். புலிக்குகையில் மான் போன்று பரிதாபத்தோடு பெண் விழிக்கும் காட்சியே வேதனையாக இருக்கும். ஆனால் எதைப் பற்றியும் எதிர்த்து கேட்க முடியாது. ஏதாவது கேட்கப் போனால்

நிலைமை இன்னும் மோசமாகிவிடும். ஆனால் இதைப் பார்த்து, பார்த்து இப்படியே வாழ்ந்து வாழ்ந்து இதுவும் பழகிவிட்டது. ஆரம்ப கால வேதனைகள் கூட போய் விட்டது. எல்லாமே தினமும் நடக்கும் சங்கதிகள் பார்த்து, பார்த்து பெருமூச்சு விட்ட சங்கதிகள். வேதனைகள் கூட மாறிப் போய் இதுவும் தினமும் நடக்கும் ஒரு செய்தி யாகி விட்டது. இப்படி இருக்கும் போது தன் பெண் தப்பான வழியில் போகிறாள் என்று சொல்கிறாரே? என்னென்னவோ பேசுகிறாரே. இது எப்படி சாத்தியம்?

''என்னடி பொண்ணையே பாக்காத மாதிரி பார்க் கறே? அம்மா பொண்ணெல்லாம் சேர்ந்து மாய்மாலமா பண்ணறீங்க? வெட்டிடுவேன்.'' செண்பகம் வாயைப் பொத்திக் கொண்டு பார்க்கிறாள்.

மூன்று பெண்களும் மெதுவாக பின்பக்கம் நகர, இரண்டு பெண்கள் கலங்கிப்போய் நிற்க, புவனா பிழியப் பிழிய அழுது கொண்டிருக்கிறாள். கன்னங்களில், நெற்றியில் வார்வாராக கீற்று, கீற்றாக ஏகாம்பரத்தின் கை விரல்கள், கௌரியும், விஜியும் மெல்லிய குரலில் கேட்கிறார்கள்.

''புவனா என்ன நடந்தது?'' யாரையும் பார்க்கும் நிலையிலும் இல்லை. எதையும் கேட்கும் நிலையிலும் இல்லை புவனா.

''அக்கா...'' விஜி ஏதோ ஆரம்பிக்க, இன்னும் அதிகமாக அழுகிறாள் புவனா.

''புவனா... ப்ளீஸ்... என்னாச்சுன்னு சொல்லு?'' கௌரி தூண்ட, மறுபடியும் புவனா குலுங்கி, குலுங்கி அழுகிறாள்.

கணவர் இருக்கிறாரா என்று சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, ''புவனா... இத பாரு... என்னாச்சு? நீ... யாரை

யாச்சும்...'' செண்பகம் தயங்கித் தயங்கித்தான் இந்த கேள்விகளை கேட்கிறாள்.

அவளைப் பொறுத்தவரையில் திருமணம் ஆகும் வரை யாரையும் மனதால் நினைப்பதுகூட பாவம் என்று வளர்ந்தவள். பன்னிரண்டு வயதில் திருமணம். பூப் பெய்து முன்பே ஏற்பட்ட திருமண பந்தத்தில் ஏகாம் பரத்தை தவிர, அவளுக்கு வேறு யாரையுமே தெரியாது. இப்போது பெண்ணுக்கே இருபத்து நான்கு வயதாகி விட்டது.

இன்னும் திருமணமாகாமல் வீட்டில் வைத்திருப்பது பாவமல்லவா? சதா கண்ணீரால் தன் பெண்ணுக்கு திருமணம் என்று ஒன்று ஆகாதா என்று ஆண்டவனை நினைந்து அபிஷேகம் செய்வாள். தன் புருஷன் மனது மாறி, தன் பெண்ணுக்கு ஏற்ற வரனைப் பார்த்து... இதெல்லாம் நடக்குமா? தன் பெண்ணும் திருமணம் ஆகி பிள்ளை குட்டி என்று வாழ்வாளா?

மறுபடியும் பெண் என்ன தவறு செய்தாள் என்று அறியும் ஆவலில்.

''என்னம்மா ஆச்சு?'' கெஞ்சுகிறாள்.

''அப்பா நினைச்ச மாதிரி இல்லைம்மா. அவரு தப்பா நினைச்சிட்டாரம்மா. நான் எந்த தப்பும் செய் யலைம்மா'' பெண் பிழிய, பிழிய அழுகிறாள்.

''அழாதேம்மா...'' என்கிறாள் செண்பகம்.

தன் கணவன் பொய் சொல்வானா என்ன? ஏதோ ஒரு முகம் தெரியாத ஆடவனோடு, தான் பெற்ற பெண் ணையே சம்பந்தப்படுத்தி எப்படி பேச முடியும்? இருந்தாலும்... கணவன் பேசுகிறவன்தான். ஒரு காபி

கொண்டு வர பத்து நிமிடம் தாமதமாகிவிட்டால் வாயில் பச்சை, பச்சையான வார்த்தைகள் வந்திருக்கிறது.

''ஏம்மா யாரு என்னன்னு விவரம் சொல்லு. நான் அப்பா கோபம் தணிஞ்ச பிறகு அவருகிட்டே விலாவரியா சொல்றேன். என்னன்னு சொல்லு?''

கேட்க கேட்க புவனா அழுகிறாள்.

''அவரு என்கூட காலேஜ்ல ஒண்ணா படிச்சவரும்மா. ஏதோ தமாஷ் செய்தாரு. நான் சிரிச்சேன். உங்க சிரிப்பு எப்படி பூர்ண சந்திரன் மாதிரி குளிர்ச்சியா இருக்குன்னு கேட்டாரும்மா. அப்பதான் அப்பா வந்தாரும்மா...'' அதற்கு மேலே சொல்ல முடியாமல் அழுகிறாள். பின் அழுது கொண்டே சொல்கிறாள்.

''எங்களுக்குள்ளே பழக்கம்னு சொல்லிட்டு அந்த ஆளை போட்டு அடிச்சு, என்னை தலை மயிரைப் பிடிச்சு தரதரன்னு இழுத்துகிட்டு வந்து...'' சொல்லும் போதே விம்முகிறது. மறுபடியும் பொங்கிப்பொங்கி அழுகை வந்தது.

''அப்ப... வேற ஒண்ணுமே இல்லியா?''

''என்னம்மா இப்படி கேக்கறே? அந்தப் பையன் பேர் கூட எனக்கு ஞாபகம் இல்லை. ஏம்மா இப்படி பேசறே?''

மறுபடியும் பெண் கலங்க, செண்பகத்திற்கு பெண்ணின் நிலைமை புரிந்தது. 'இருந்தாலும் கணவன் இல்லாமல் சொல்லியிருப்பானா? ஒருவேளை கணவன் சொன்னது உண்மையாக இருந்தால் என்ற மன உளைச்சல். அந்தப் பையன் யாரு? இந்தப் பொண்ணு ஏதேனும் ஏமாந்துடுச்சுன்னா?' மனசு எதையோ எண்ணி, எண்ணி நெஞ்சு வலித்தது.

அன்று இரவு கணவனுக்கு குடிக்க பாலைக் கொடுத்து விட்டு மெதுவாக சொல்கிறாள்.

''புவனா பாவம் ஒரு தப்பும் செய்யலை.''

''அடி செருப்பால. நான்தான் கையும் களவுமா புடிச்சிருக்கேன். உம் பொண்ணு ஒரு தப்பும் செய்யலையாம்மா. இத பாரு சொல்லிவை அப்பன், ஆத்தா, பாத்து செய்தாதான் கல்யாணம். தானே செய்துகிட்டு சீரழிஞ்சா ஒரு துண்டு கூட கொடுத்து உதவ மாட்டேன். ஞாபகம் வச்சுக்கோ.''

செண்பகத்தின் மனது வேதனையில் ஆழ்ந்தது. 'இந்தப் பெண் அந்த மாதிரி தப்புதண்டா பண்ணுமா? பண்ணினால் நிலைமை என்னாகும்? அப்பா என்பவர் கரித்துக் கொட்டினாலும் இன்று ஏதோ முக்கால் வயிற்றுக்காவது சோறு என்று இருக்கிறது. முன்பின் தெரியாதவனை திருமணம் புரிந்து கொண்டால், அந்த சோற்று வாயில் கூட மண் தானே.' மனது அவதிப்பட்டது. 'பெண்ணிடம் பேச வேண்டும். பக்குவமாக பேச வேண்டும்.. இன்று இல்லாவிட்டால் நாளையாவது அவள் திருமணம் என்பது நிச்சயமாகாதா? அவளுக்கு என்று இனிமேயா ஒருத்தன் பிறக்கப் போகிறான். கண்டிப்பாக பிறந்தே இருப்பான்.'

அடுத்த இரண்டு, மூன்று நாட்களும் பெண்ணுக்கு உபதேசங்கள்தான்.

''புவனா இங்க உக்காரு. நம்ப ரஞ்சிதம் அக்கா கதை உனக்குத் தெரியுமா?''

''ம்...'' என்று புவனா தலை ஆட்ட,

''என்ன தெரியும்? யாரையோ காதலிச்சு, ஏமாந்து போய் பாவம் ரொம்ப கஷ்டம்.''

''தெரியும்மா...'' புவனா விட்டேத்தியாக சொல்ல,

''அதாம்மா சொல்றேன். அப்பன் திட்டலாம். அதெல்லாம் பெரிசு பண்ணக்கூடாது. பெத்தவங்க, பிள்ளைங்க நல்லதுக்காகத்தானே திட்டறாங்க. இந்த லவ் சமாசாரமெல்லாம், எப்படி ஆவுது பார்.'' அப்பாவின் திட்டிலிருந்து அடியிலிருந்து மனம் முறிந்து போய், சற்று தேறி வருபவர்களுக்கு அம்மாவின் கேள்விகள் சந்தேகத்தைத்தான் எழுப்புகிறது.

''இதை ஏம்மா என்கிட்டே சொல்றே?'' புவனா எரிச்சலை அடக்கியவாறு கேட்க,

''சும்மா சொல்றேன். எதையும் தப்பா எடுத்துக்காதே. நம்பகோடி வீட்டு ஐயர் பொண்ணு. அதான் நம்ப கௌரி ப்ரண்ட் அவ கதை தெரியுமா வீட்டுக்கே ஒருத்தனை கூப்பிட்டுகிட்டு வந்திடுச்சாம். இப்ப சோத்துக்கே திண்டாட்டம் தானாம்.''

புவனாவிற்கு தெளிவாகத் தெரிந்தது. அம்மா தன்னை சாக்கிட்டு தான் சொல்லுகிறாள்.

''ஏம்மா அப்படி நீங்க கூடவா என்னை நம்பலை.''

''அதுக்கில்லை கண்ணு. அப்பா திட்டினாலும் அது நீ நல்லா இருக்கணும்னுதானே. அதுக்காகத் தானே அப்படி நடந்துக்கறார்.''

புவனா பெருமூச்சு விடுகிறாள். 'இவர்கள் யாரும் நம்பப் போவதில்லை. வாழ்க்கை என்பது நம்பிக்கையின் அடிப்படையில்தான் அமையணும். ஆனால் தன்னோட வாழ்க்கை. பெற்ற தாய், தந்தையே தன்னை நம்பவில்லை. தன்னை நம்ப முடியாத அளவிற்கு தன் நடத்தையில் ஏதேனும் குறை கண்டார்களா?' மனம் விம்மியது. பொறுமியது. எதையும் வெளிக்காட்டிக்

கொள்ள முடியாத உணர்வுகள். 'இறந்துவிடலாமா? தன் பேச்சை தன் பெற்றோர் ஏன் நம்பவில்லை? ஆனால் அப்பா எதையும் நம்ப மாட்டார்.'

ஒரு நீண்ட பெருமூச்சை விடுகிறாள் புவனா. 'அவருக்கு பெண் என்றாலே ஒரு வெறுப்பு. மனைவி பெண் இனம் தான். பெற்று எடுத்த மூன்றுமே பெண் குழந்தைகள்தான். பெண்களை எத்தனைக்கு எத்தனை வெறுத்திருக்கிறாரோ அத்தனைக்கு அத்தனை 'போதுமா... போதுமா' என்று கேட்டு அடித்திருக்கிறான் கடவுள்.' மறுபடியும் பெருமூச்சு விடுகிறாள். 'பெருமூச்சுதான் தன் வாழ்க்கையா? இதன் முடிவும் படைத்தவனுக்கு மட்டும் தான் தெரியும். பெருமூச்சு பெரிதாகி வெறும் மூச்சுகூட நின்றுவிடுமா? தெரியவில்லை. இந்த நான்கு நாட்களில் தான் அழுத அழுகை. 'இனிமேல் வாழ்க்கை முழுவதும் அழக்கூடாது என்று இறைவன் குறிப்பால் உணர்த்துகிறானா? இல்லை இதுதான் ஆரம்பம் என்கிறானா?' மறுபடியும் மனம் நெருப்பு பற்றிக் கொண்டது போல் எரிய கண்களை மூடிக் கொண்டாள் புவனா.

பத்தொன்பது வயதில் படிப்பை முடித்துவிட்டு, இந்த ஐந்து வருடங்களாக நெல் கொட்டி வைத்திருக்கும் குதிரைப்போல் நிற்கிறாள். ஓடிவந்த தேர் பாதியில் நின்றது போல் பத்தொன்பது வயதில் எழுந்த கல்யாணக் கனவுகள் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கி ஒடுங்கி இந்த இருபத்துநான்கு வயதில் ஒரு வயோதிகப் பெண் போல் உணர்ந்தாள். டிகிரி முடிக்கையிலேயே அப்பா தனக்கு பிள்ளை தேட ஆரம்பித்தார். பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். பத்திரிகைகளில் தனக்கு தோதான வரன் வந்தால் அதைப் பார்க்கவும் தயங்கவில்லை. கோவில்

களில், தெரிந்தவர்களிடம் என்று எக்கச்சக்க பேரிடம் சொல்லி வைத்தார்.

புவனாவிற்கு அப்போதெல்லாம் வருவது கலர் கனவுகள் தான். மிக மிக அழகான ஒரு ராஜகுமாரன் தன்னை திருமணம் செய்து கொள்ள ஓடி வருகிறான். 'எத்தனை அழகு' என்று தன்னை பார்த்து விமர்சிக் கிறான். தெருவை அடைத்தாற்போல ஒரு காரில் வந்து முன் பக்கத்தில் அமர்ந்து தலையை ஸ்டைலாக வாரிக் கொண்டு இவளைப் பார்த்து ஸ்பெஷலாக கண் சிமிட்டுகிறான். வரதட்சணையைப்பற்றி பேசியபோது மூச்... அவளை கட்டின புடவையோடு அனுப்ப வேண்டும் என்ற கண்டிஷன். இப்படி எல்லாம் விதவித மான கனவுகள். ஆனால் நிஜம் கனவில் வரவில்லையே கனவில் மட்டுமே வந்த இராஜகுமாரன் நிஜத்தில் மறைந்து போனான். எங்கே போனான்? முதலில் இரு நூறு ஜாதகத்திற்கு மேல் வந்தது என்று அப்பா பீற்றிக் கொண்டார். எதைப் பார்த்தாரோ தெரியவில்லை. இது சொள்ளை, சொத்தை என்று கிட்டத்தட்ட தொண்ணூறு மேல் தள்ளப்பட்டது.

'கண்டவனுக்குப் போய் பெண்ணைத் தர முடியுமா?' வந்த பத்தும் ஜோஸியரிடம் போனதில் எட்டு பொருத்தம் இல்லாமல் போனது. மிச்சம் இருந்த இரண்டு வரன்களையும் பெண் பார்க்க அழைத்திருந்தார் அப்பா.

முதல் பையன் ஏதோ ஒரு தனியார் கம்பெனியில் ஐநூறு ரூபாய் வாங்கும் கிளார்க். இன்னொருவன் மாமாவின் கடையில் வேலை பார்ப்பவன். அவனுடைய சம்பளமே தெரியவில்லை. கேள்விப்பட்டதிலிருந்து புவனாவின் மனம் தடதடவென்று ஆடியது. அதிர்ச்சி உண்டாகிறது.

தன் கடமையை செவ்வனே செய்த தலைவன் போல் வளைய, வளைய வருகிறார் ஏகாம்பரம்.

''அம்மா அப்பாகிட்டே சொல்லேன். வேற இடம் பாத்துக்கலாமே.'' புவனா கெஞ்ச,

''பேசாம இரு. இப்பதான் நூறு ஜாதகத்துக்கு அலசி எடுத்திருக்காரு. வரவங்க வரட்டும். வந்து பார்த்தாலே கல்யாணம் நிச்சயமாயிடுமா என்ன?''

அம்மா பேசுவதிலிருந்து அம்மாவிற்கும் உள்ளுக்குள் பிடிக்கவில்லை என்று தெரிந்தது.

ஆனால் அப்பாவிற்கு யாரையும் கேட்டு செய்யும் வழக்கமே கிடையாது. தவிரவும் பெண்டாட்டியும் பெண்களும் அவரின் உப்பைத் தின்பவர்கள். அவர் களுக்கு சுயசிந்தனை இருப்பதுகூட தவறு என்று வாதிடுபவர். அவரிடம் என்ன பேச முடியும்? ''இது என்னடி அநியாயமாயிருக்கு? செம சூப்பர் வரனை பார்த்து வச்சிருக்கிறாரே அப்பா. எட்டணாவிற்கு கறிவேப்பிலை கொத்து வாங்கற மாதிரி மாப்பிள்ளை பார்த்திருக்கிறார்'' கௌரி அங்கலாய்க்க.

''நான் என்னடி பண்ண முடியும்?'' புவனா வருத்தப்பட,

''உனக்கு வேண்டாம்னா சொல்லுடி. பயப்படறதுக் கும் ஒரு எல்லை இருக்கு.'' முதல் தங்கை கௌரி பேசப்பேச, ஏதோ ஒரு ஆவேசம் வந்தது. தைரியமும் கூடவே வர அடுத்த நிமிடம்.

''நீயும் வறியா?'' என்று தைரியத்திற்காக தங்கையை கூப்பிட்டவாறே, தந்தை அமர்ந்து செய்தித்தாள் படிக்கும் இடத்திற்கு செல்கிறாள்.

அப்பாவைப் பார்க்கும் வரை இருந்த தைரியம் எல்லாம் போய் அப்பாவை பார்த்தவுடன் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ள, ஒரு நிமிடம் பேசாமல் நிற்கிறாள். பிறகு திரும்பலாம் என்று நினைக்கும் பொழுது அப்பா கேட்கிறார்.

''என்ன விஷயம்?''

தங்கை தான் நிமிண்டி விடுகிறாள். ''சொல்லு...''

அப்பா கேட்க, மெதுவாக தயக்கமாக சொல்ல, சொல்ல, அப்பாவின் முகம் எண்ணெய் போட்ட கடுகாக பொறிய, ''என்ன பெரிய தேவலோகத்து ரம்பைன்னு நினைப்பா? பொண்ணை பார்க்கவே யார் வரானுங்க? ஏதோ ரெண்டாவது குதிரிச்சேன்னு நினைச்சேன் பாரு. வந்து சரின்னு உன்னைப் பார்த்து சொல்லிவிட்டாலே ரொம்ப ஆச்சரியம் தான்.''

அப்பா குத்தலாக, நக்கலாகப் பேசப் பேச அழுகை வந்தது. தான் என்ன அத்தனை ரூபியா? துக்கம் தொண்டையை அடைத்தது. அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காமல் கலங்கிய கண்களைத் துடைத்தவாறே மொட்டை மாடியில் ஆசையாய் அழுது தீர்க்கப் போக, இது என்ன பக்கத்து வீட்டு மாடியில் யார் இது? பதினாறே வயது நிரம்பிய கடைசி தங்கை விஜி, பக்கத்து வீட்டு பையனின் அணைப்பில் இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டாள் புவனா.

3

அக்காவைப் பார்த்தவுடன் ஆடு திருடின கள்ளனைப்போல் விழிக்கிறாள் விஜி. பக்கத்து வீட்டுப் பையன் ரவி விஜியைவிட ஒரு கிளாஸ் அதிக

மாகப் படிப்பவன். புவனாவைப் பார்த்ததுமே வெட்கப் பட்டவனாய் குதித்து ஓடிவிட, விஜிதான் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு நிற்கிறாள்.

''என்னடி இதெல்லாம்?'' தன்னுடைய துக்கம் எல்லாம் மறந்து போய் தங்கையை அதட்டுகிறாள்.

''எனக்கு ஒண்ணும் தெரியாது.''

''ஒண்ணும் தெரியாதா? நீ இப்ப பண்ணிகிட்டு இருக்கறது என்ன? அப்பா பார்த்துட்டாருன்னா...'' புவனா கேட்க, கேட்க தங்கை ஓவென்று அழுகிறாள்.

''அக்கா... ப்ளீஸ் அப்பாகிட்டே சொல்லாதே. என்னைக் கொன்னே போட்டுருவார். அக்கா சாரி தெரியாமப் பண்ணிட்டேன்.'' அவள் பிழியப் பிழிய அழ, புவனாவும் அழுகிறாள்.

'இந்த மனம் இந்த களியாட்டத்தை தானே அதிகம் விரும்புகிறது. ஏன் இப்படி? பருவம். வயது ஒரு காரணம். சாதாரணமாக வயிற்றில் எழும் பசிபோல் இது ஒரு உணர்வு. இயற்கையான உணர்வு. இதை நாம்தான் ஏதோ கற்பு, கிற்பு என்று ஒரு பெயரைக் கொடுத்து, பெண்ணுக்கு ஒரு பெரிய வேலியையும் போட்டு, பெருமூச்செறிகிறாள்.

தங்கையின் விஷயம் அப்பாவிற்குத் தெரிந்தால் த்சு போகட்டும் என்று விடமாட்டார். ஒரு பெரிய பாரதப் போரே நடந்துவிடும். அவரின் வாயிலிருந்து விழும் அம்புகளில் மனங்கள் நசுங்கி, உணர்ச்சிகள் வடிந்து... மறுபடி யோசிக்க முடியாமல் அம்மாவின் குரல் கேட்டது.

''வா போவோம்'' தங்கையின் கண்ணீரைத் துடைத்தவாறே தன் கண்ணீரையும் சேர்த்து துடைத்து, மெதுவாக தங்கையோடு வெளியே வருகிறாள்.

"ஏண்டி என்ன மசமசனனு நின்னுகிட்டு இருக்கீங்க? போடி, நீ போய் முகம் கழுவி, தலை சீவி, நல்ல டிரஸ்ஸா போட்டுகிட்டுவா."

"ஏம்மா?" புவனா, ஆச்சரியப்பட்டு கேட்க, "ஒரு பையன் கிளார்க்காக இருக்கான்னு சொன்னாங்களே அவன் இன்னிக்கு வரான்."

"என்னம்மா இது? அடுத்த வாரம் தானே பொண்ணு பாக்க வரேன்னாங்க." விஜி ஆவலாகக் கேட்க,

"இல்லேடி பையன் ஏதோ வேலையா மெட்ராஸ் வரானாம். நாலஞ்சு பொண்ணுங்களை பாக்கறானாம். எது வேணுமோ அதை செலக்ட் பண்ணுவானாம்." சென்பகம் முடிக்கவில்லை.

"ஏம்மா நாமளும் அப்படி செய்யலாமா? அக்காவுக்கு ஒரு நாலஞ்சு பையனை வரச் சொல்லிட்டு ஒருத்தனை செலக்ட் பண்ணினா என்ன?" விஜி குதூகலமாய் கேட்க,

"சீ... வாயைக் கழுவு. பொட்டையா பொறந்துட்டு இப்படி எல்லாமா பேசுவாங்க. நாலைஞ்சு பேராமில்லே பாக்கற மொத வரனே முடியணும்னு முருகசாமிக்கு நேந்துக்கணும்" சென்பகம் கூற,

"அம்மா" பதறிப் போகிறாள் புவனா. "வேண்டாம் இந்தப் பையன் வேண்டாம்மா."

"ஏன்?" அம்மா ஆச்சரியமாகக் கேட்க,

"என்னம்மா எல்லாத்தையும் மறந்துட்டு பேசறே? பையனுக்கு ஐநூறு ரூபாய் சம்பளம். ஒரு அக்காவை கட்டிக் கொடுத்தாச்சு. இன்னும் ஒரு தங்கச்சி இருக்குது. அம்மா அப்பா எல்லாம் கூடவே இருக்காங்க." புவனா சலித்த குரலில் கூற,

"இது என்னடா அதிசயமா இருக்கு. பார்க்கும் போதே மாமியார் வேணாம் நாத்தனார் வேணாம்னா நெனைக்கறது. நான் பண்ணண்டு வயசுலே வந்தவ. நான் வந்து மூணு நாத்திமாருக்கு கல்யாணம் வச்சேன். ரெண்டு மச்சினமார்களை படிக்க வச்சு கல்யாணம் கட்டிக் கொடுத்தேன்.

"இப்படியா?" அம்மா பெண்ணைக் குத்திக் காண்பித்தபோது.

"ஏம்மா எதையுமே சரியா கேட்டுக்க மாட்டீங்களா? அந்த ஐநூறு ரூபா சம்பளத்திலே அவன் எத்தினி பேரைக் காப்பாத்துவான். நான் வேற பாரமாத்தானே உக்காரணும்" கேட்க, கேட்க,

"அடி போடி பெண்டாட்டி புருஷனுக்கு ஒரு பாரமா? எல்லாம் தானா சரியா போயிடும். இப்ப பேச நேரங் கிடையாது. வடைக்கு நனைச்சிருக்கேன். கேசரியைக் கிண்டி, வடை, காபி கொடுத்து அனுப்பிச்சிடுவோம். இதுக்கே உங்க அப்பா திட்டிகிட்டு இருக்காரு - தண்ட செலவுன்னு கூவி கிட்டு இருக்காரு. போய் சட்டுனு முகம் கழுவிட்டு வா. அவுங்க மூணு மணிக்கு வந்திடுவாங்க." மனமில்லாமல் சுரத்தில்லாமல் நடக்கிறாள் புவனா.

கண்களில் முட்டிக் கொண்டு வரும் அழுகையை அடக்க முடியவில்லை. 'கடவுளே என்னைப் பிடிக்கலைன்னு சொல்லிட்டா ரொம்ப நல்லா இருக்கும். அப்பா... முருகா உதவி பண்ணுப்பா' மனது வேண்டிக் கொண்டது.

வீடே துரித கதியில் மாறியது. கௌரி சுத்தம் செய்ய விஜி கடைக்குப் போய் வேண்டிய சாமான்களை வாங்கி வர புவனா கண்களில் கண்ணீரோடு தனக்கு வரப் போகிறவனை நினைத்துப் பார்க்கிறாள். புலி கூண்

டுக்குப் பயந்து, பாழும் கிணற்றில் விழுந்த கதையா
தன் கதை ஆகிவிடுமோ? 'பித்தா, பிறைசூடி, பெரு
மானே' மனம் சிவபெருமானை மானசீகமாக வேண்
டியது. 'கடவுளே நல்வழி காட்டு. என் மனது இந்த இட
சரியாக இருக்காது என்று சொல்கிறதே.' மனம் மரு
காரணம் இல்லாமல் பயமும், சோகமும் அப்பிக் கொள்
பலி ஆடு பலிக்கு தன்னை தயார் படுத்திக் கொள்வது
போல் தயார் ஆகிறாள்.

அவள் மனது பத்தொன்பது வயது இளமையாக இ
லாமல் முப்பத்து ஐந்து வயது முதுமைப் பெண் சிந்திப்பது
போல் சிந்திக்க ஆரம்பித்தது. தன் மனதில் இளமையின்
உற்சாகங்கள், உல்லாசங்கள், துள்ளல்கள் எதுவும் இல்லை

மணி நான்கு அடிக்கும்போதே அப்பா முழுக்கை
சட்டை அணிந்து வாசற்புறத்தை பார்ப்பது தெரிந்தது. காபி
டிபன் எல்லாவற்றையும் அப்பா ஒரு கை பார்த்துவிட்டு
தட்டிலே கை கழுவியவாறே சற்று சாய்ந்து உட்கார,
கௌரி ஓடி வந்து எல்லாவற்றையும் சுத்தம் செய்கிறாள்.

''எத்தினி மணிக்கு வரேன்னாங்க?'' முணுமுணுத்த
வாறே கை கடிகாரத்தை பொறுமை இல்லாமல் பார்க்
கிறாள்.

'பெரிய... இது... பையன் வீட்டுக்காரன்னா கொம்
புன்னு நினைப்பா. ஐநூறு ரூபா சம்பாதிக்கிற பிச்சைக்கார
பயல்!' வார்த்தைகள் முணுமுணுப்பிலிருந்து சற்று உரத்த
குரலில் ஒலிக்க, இது புவனாவின் காதுகளில் விழுந்தது.
தகுதி இல்லாத திருமணம் என்று தெரிந்தும்,தன் தந்தை
இத்தனை ஆர்வப்படுவானேன்.' சுரத்தில்லாமல் நிற்க
சட்டென்று டாக்ஸியில் இருந்து இறங்கினார்கள் மாப்
பிள்ளையும் அவனுடைய தாயாரும்.

''அப்பா மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்க.'' பதினாறு வயது விஜி துள்ளிக் கொண்டு ஓடி வர,

''போங்கடி உள்ளே'' தந்தை விரட்ட கௌரியும், விஜியும் உள்ளே நுழைந்து மறைய இன்னொரு பக்க ஜன்னல் வழியாக மூன்று சகோதரிகளும், மாப்பிள்ளையின் மணம், நிறம் குணத்தை அலசுகிறார்கள். முதலில் மாப்பிள்ளையை பார்க்க வர மறுத்த புவனா கூட தங்கையின் தூண்டுதல் பேரில் பார்க்கிறாள்.

தல முடி, முகம், எது என்று தெரியாத ஒரு ஆழ்ந்த கறுப்பு. அதில் சற்று அடர்ந்த மீசை. பார்க்கும் பார்வை வெறித்த பார்வை. பார்த்த முதல் பார்வையிலேயே புவனாவிற்கு ஏமாற்றம் பின்னும் நெஞ்சை அடைத்தது.

''அக்கா இந்த ஆளை பார்த்தாலே பிடிக்கலை'' இது கௌரி.

''வேண்டாம்னு சொல்லு'' என்கிறாள் விஜி. 'தன்னால் என்ன செய்ய முடியும்? தான் சொன்னால் கேட்பவர் யார் இருக்கிறார்கள். அப்பாவை எதிர்த்து கேட்டுவிட்டு இந்த வீட்டில் மறுபடியும் இருக்க முடியுமா? என்ன சாப்பிடவேண்டும் என்பதிலிருந்து என்ன துணிபோட வேண்டும் என்பது வரை எல்லாமே அப்பாவின் விருப்பம். இன்று மட்டும் தன்னால் எதிர்த்துக் கொள்ள முடியுமா? தலை எழுத்து போல் ஆகட்டும்.'

அப்பாவின் குரல்கேட்டு இனிப்பு, காரம் எடுத்து வந்து தந்த போது, வந்தவனின் வெறித்த பார்வை தன்மேல் விழுவதை உணர்கிறாள்.

''சரிம்மா நீ போ.'' அவர் சொல்ல மௌனமாக தன் இருப்பிடம் போகிறாள்.

'என்ன ஆகும்? சரி என்று சொல்லி விடுவானா?' சில நிமிடங்களில் கௌரி உள்ளே ஓடி வருகிறாள்.

"ஏய் புவனா அந்த ஆள் உன்னை கல்யாணம் பண்ணிக்க சம்மதம்னு சொல்லிட்டான். மனம் மறுபடியும் விழுந்தது. அவர்கள் ஏதேதோ பேசுவது கேட்டது தெரிந்தது.

'என்ன பேசுகிறார்கள்? திருமணத்திற்கு நான் வேறு குறித்து விட்டார்களா? தன்னை ஒரு வார்த்தை கூட கேட்கவில்லையே.' விழி சற்று மூச்சு இறைக்க உள்ளே ஓடி வருகிறாள். வெளியில் ஒலி சற்று அதிகமாக எனவாக இருக்கும்? குரல் சற்று உயர்ந்திருந்தது.

"என்ன விழி?"

"உன் கல்யாணம் நடக்காது. சந்தோஷப்பட்டுக்கோ."

"எனாச்சு?"

"சீர்வரிசையிலே தகராறு."

"அந்தம்மா நிறைய எதிர்பார்க்குது."

"என்ன சொல்லறே?"

"அவுங்க பையனுக்கு பெரிய, பெரிய இடத்துலேந்து பொண்ணு கொடுக்க காத்துகிட்டு இருக்காங்களாம். நல்ல குடும்பம் வேணும்னு நம்ப சம்பந்தத்தை ஒத்துகிட்டாங்களாம்" புவனாவிற்கு மனம் குதியாட்டம் போட்டது.

இது சற்றும் எதிர்பாராதது. கடைசியில் தெய்வம் தன் பிரார்த்தனைக்கு செவி சாய்த்ததா? அந்த இடம் நின்று போன பிறகு எப்படி எல்லாம் அந்த இடத்தை காரி உமிழ்ந்தார். 'இப்படி ஒரு கேவலமான ஒரு இடம் இருக்குமா? அப்பப்பா அந்த பொம்பளையே பஜாரி. கட்டி இருந்தா பொண்ணை நடுத்தெருவிலே நிறுத்தி யிருப்பாங்க.'

புவனாவிற்கு அடுத்த சோதனையும் ஆரம்பித்தது. மாமாவின் கடையில் வேலை பார்ப்பவன் வந்தே விட்டான். ஏதேச்சையாக சென்னை வருவதாக டெலிபோனில் அறிவித்து விட்டார்கள். மாமா, மாமி, மாமாவின் பெண், பையன் என்று கும்பலே வந்தது. ஆர்ப்பாட்டமும், அமர்க்களமும் அதிகம்தான். இவர்கள் ஒத்துக் கொள்வார்களா? பையன் கண்ணாடி அணிந்திருந்தான். முதல் வரன் போல் வெறித்த பார்வை எல்லாம் இல்லை. இந்த முறையும் எதிர்பார்ப்புகள் எதுவும் இல்லாமல் இந்த திருமணம் நின்றுவிட்டால் நல்லது என்ற நினைவுடன் அவன் அவர்கள் முன்னிலையில் காபி, டிபன் நீட்டியபோது பெண் பிடித்திருக்கிறது வெளிப் படையாகக் கூறினான்.

ஒரு நிமிடம் நெஞ்சு திக்கென்றது. 'கடவுளே கடல்லே மூழ்கிவிடுவேனோங்கற பயத்துலே ஓட்டைப் படகுலே ஏறின கதையாப் போய்விடப் போகிறது என் கதை. வேண்டாம். கடவுளே. என் பிரார்த்தனை கூடவா உனக்கு கேட்கலே.' மறுபடியும் கண்ணீர், கண்களில் துளிர்த்த கண்ணீரை யாரும் பார்க்காமல் இருக்க வேண்டும் என்று வேறு புறமான பார்வை

"நீ போம்மா" அப்பா உள்ளே போகச் சொன்னபோது உள்ளே வந்தாள் மனது இரும்பாகக் கனத்தது.

"என்ன மனிதர்கள்? என்னதான் பெற்ற பெண் அடிமை என்றாலும் அவளுக்கும் ஒரு மனது இருக்காதா? வாழப் போகிறவள் அவள். அவனின் விருப்பத்தை கேட்கக் கூடாது. பிள்ளை எஸ் என்று சொல்லிவிட்டால் போதும் திருமணம் தான். அவன் வாங்கும் சம்பளத்தில் என்ன செய்ய முடியும்? வாடகை தர முடியுமா? குடும்பத்தைக் கவனித்துக் கொள்ள

முடியுமா? நாளைக்கு குழந்தை, குட்டி என்று வந்து விட்டால்...

பத்தொன்பது வயதுக்கு ஒவ்வாத கற்பனைகள். முப்பத்து ஐந்து வயது பெண்ணின் சிந்தனைகள். செய்வதறியாத ஒரு நடுக்கம். ஏமாற்றம். மனதை மறுபடியும் திடப்படுத்திக் கொள்கிறாள். நடப்பது நடக்கட்டும். தலையில் எழுதியிருக்கும் எழுத்தை இறைவனாலேயே மாற்ற முடியாதாமே. நடக்கட்டும். என் அப்பாவைப் போல் ஒரு ஆளுக்கு மகளாகப் பிறந்ததே பாவம். இந்தளை பெரிய பாவத்தை செய்துவிட்டு புண்ணியத்தை தேடி நான் ஓட முடியுமா? அப்பாவின் பெரிய குரல் வேறு கேட்கிறது. சீப்பாக முடித்து விட்டோம் என்ற பெருமை வேறு. கையில் சல்லிக்காசு தராமல் திருமணத்தை முடித்து விடுகிறோம் என்ற ஆனந்தம்.

அவர்கள் சென்ற பின் "என்ன இது நிச்சயம் பண்ற அளவிற்கு போயிட்டீங்க. பெண்ணை ஒரு வார்த்தை கேக்க வேண்டாமா?" சென்பகம் பதை பதைக்க,

"என்ன கேக்கறது? அம்மாவும், பெண்ணும் எதைக் கொண்டு வந்தாலும் வேணாம் - வேணாம்னுவீங்க. அதைக் கேக்கறதுக்கு நான் என்ன மடையனா?" ஏகாம்பரம் பொறும,

"அதுக்கில்லீங்க. பையன் ரொம்ப சின்ன வேலை. உங்க ஆபீசிலே வேலை செய்யற பியூனுக்குக்கூட அவனைவிட கௌரவமும், அந்தஸ்தும் இருக்கும். இப்படி குடுக்க வேண்டாமே."

"ஆரம்பிச்சிட்டியா? வரிசையா மூணு பெண்களை பெத்து, என்னை ஓட்டாண்டி ஆக்கிட்டே." சென்பகத்திற்கு கண்களில் நீர் நிரம்பியது. 'இன்னும் எத்தனை

காலத்துக்கு இதை கேட்பது? இனிமேல் பேச முடியாது. அம்மா பேச்சை மட்டும்தான் அந்த மனுஷன் கொஞ்சம் கேட்கும். அதுவும் தங்கள் விஷயங்களில் எடுபட வில்லை. விதிப்படி நடக்கட்டும்' கல்லாய் சமைந்திருந்தாள். தங்கைகள் இருவர் முகங்களிலும் ஈயாடவில்லை.

'அக்கா வீட்டுக்காரன் இவன்தானா? பாவம் அக்கா. ஆனால் நாம் நினைத்தது போல எல்லாம் வாழ்க்கை நடக்கும் என்பதற்கு நாம் என்ன பிரம்மாவா என்ன? நீங்கள் போடுவதை போடுங்கள் என்று சொல்லிவிட்டார்களாம்.'

"அவுங்க தாய்யா உண்மையான மனுஷனுங்க." அப்பா சந்தோஷம் தாங்காமல் ஆகாயத்துக்கும், பூமிக்குமாக குதித்துக் கொண்டிருந்தார்.

"அதுக்காக என்னவேணா நடக்கட்டும். கல்யாணம் கட்டிக்க மாட்டேன்னு சொல்லு."

"அவுங்க உப்பைத் தின்னு வளர்ந்திருக்கேன். ஒண்ணும் சொல்ல முடியாது." ஒரு வாரம் துக்கத்திலும், வேதனையிலும் கழிந்தது. முதலில் மாட்டேன் என்று மறுத்த அம்மா கூட கடைசியில் ஒத்துக் கொண்டு விட்டாள்.

அடுத்த ஒரு வாரத்திற்குள் அவள் ஆசையையும் கடவுள் நிறைவேற்றி வைப்பார் என்பது அவளுக்கு எப்படி தெரியும்? ஒரு வாரத்தில் பையனின் மாமா விடமிருந்து கடிதம் வந்தது. "தாங்கள் எதுவும் டிமாண்ட் செய்யவில்லை என்றாலும் பையனின் அம்மாவிற்கு அது பிடிக்கவில்லையாதலால் அவர்கள் கேட்பதை செய்துவிட வேண்டும். அவருக்குப் பின் அவரின் மூன்று பெண்களுக்குத் தானே இந்த வீடு. அதில் ஒரு பகுதியை விற்றுவிட்டு பணத்தை பையனின் பெயரில்

வங்கியில் போட்டு வைக்க வேண்டுமாம். இதற்கு சம்மதம் என்றால் அடுத்த மாதத்தில் நிச்சயம், திருமணம் எல்லாவற்றையுமே சேர்த்து நடத்தி விடலாம்'' என்று எழுதி இருந்தனர்.

ஆயிற்று அடுத்த வசை மழை ஆரம்பம் ஆயிற்று. அப்பா நாக்கில் நரம்பில்லாமல் வந்தவர்களைத் திட்டி பேசினார். கன்னா, பின்னாவென்று கடிதம் எழுதிப் போட்டார். வேலை வெட்டி இல்லாத நாய். எடுபிடி பொழைச்சுப் போறான்னு பொண்ணை குடுக்கலாம்னா திமிரைப்பாரு.'' பையனின் குறைகள் அடுக்கடுக்காக வெளிவந்தது. அப்பாவின் வாயிலிருந்து திட்டுக்களை கேட்க,கேட்க பிள்ளையை அவர் எத்தனை கேவலமாக எடை போட்டார் என்று புரிந்தது. இப்படி நினைத்தவனிடமா தன்னைக் கொடுக்க ஒத்துக் கொண்டார். அப்பாவின் சுயநலம் புரிந்தது. அவர் மேல் இருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையும் போனது.

'இவனுங்க என்ன பெரிய இது?' அப்பா வரிந்து கட்டிக் கொண்டு மறுபடியும் பேப்பரில் போட்டார். இம்முறையும் ஒரு நூறுஜாதகம் வந்தது. அப்பா தானே ஜாதகம் பார்த்து யோசித்து, யோசித்து, கழித்து கட்டி பின் ஒரு வழியாக நாலுவரன்களை 'சரி என்று எடுத்து வைத்தார்.

இந்தக் களேபரங்களில் வருடங்கள் இரண்டு ஓடிப் போனதே யாருக்கும் தெரியவில்லை. முறையாக அந்த நான்கு பேர்களுக்கும் கடிதம் எழுதினார்.

முதலாவது ஒரு பெரிய கூட்டுக் குடும்பம். ஏதோ கம்பெனியில் வேலை. இவளைவிட பதினைந்து வயது மூத்தவன். தங்கை, தம்பிகளை, கரை ஏற்றத்தான் இத்தனை நாள் திருமணம் புரியாமல் இருந்தானாம்.

''எப்படிம்மா வயசு வித்தியாசம் நிறைய இருக்குதே.'' புவனா சற்று வருத்தத்துடன் கூற,

''எத்தையாவது சொல்லாதே. உங்கப்பன் பண்ற கெடுபிடியிலே உனக்கு கல்யாணம்னு ஒண்ணு ஆகுமான்னு பயந்துட்டு இருக்கேன். ஏதோ இந்த மட்டும் வேலைல இருக்கறவனா உங்கப்பன் பாத்தானே. சந்தோஷப்படு'' அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்து போனாள் புவனா.

அம்மா சற்று வாயில்லா பூச்சி தான். ஆனாலும் இப்போதெல்லாம் அதிகமாக பேசுகிறாள். சூழ்நிலை மனிதர்களை மாற்றி விடுமோ. இப்படி பேசவைக்கிறதோ.

அடுத்த பையன் தாய், தந்தை இல்லாதவன். ஒரு தனியார் நிறுவனத்தில் சேல்ஸ் ரெப்ரசன்டீவாக இருப்பவன். 'தன் தந்தை ஏன் ஒரு நல்ல வரனைப் பார்க்கக் கூடாதா? வருவது எல்லாமே தொட்டுக்கோ தொடைச்சுக்கோ என்பது போல் சம்பளம் வாங்கிக் கொண்டு, இருந்தும் இல்லாமல் வாழ முடியுமா? வறுமைக் கோட்டுக்கு கீழே நின்று கொண்டு மறுபடியும் தந்தையிடம் வந்து ஒண்ட முடியுமா? தன் கீழ் இருக்கும் போதே சோறு போட அத்தனை சலித்துக் கொள்ளும் தந்தை திருமணம் முடிந்து போய் நின்றால் ஒரு வாய் சோறு போடுவாரா? மறுபடியும் மனம் வெருண்டது. சரி எனக்கு இவன்தான் என்றால் யாரால் மாற்ற முடியும்? பார்த்துக் கொள்வோம்.'

மூன்றாவது பையன் டிகிரி முடித்துவிட்டு ஏதோ ஒரு கம்பெனியில் தற்காலிகமாக வேலை பார்க்கிறானாம். வேறு வேலை தேடிக் கொண்டிருப்பவனாம்.

கடைசி வரன் ஏதோ கம்பெனியில் கிளார்க்காக இருப்பவன். இதுவும் கூட்டுக் குடும்பம்தான். இவர்களுக்கு மாய்ந்து மாய்ந்து எழுதிப் போட்டார். இதற்கிடையில் அம்மாவின் தூரத்து சொந்தம் என்று ஒருவர் தன் பிள்ளைகளுக்கு பெண்ணை கேட்க, அம்மாவிற்கு பரம சந்தோஷம் 'பையன் பேங்கிலே வேலை. இப்ப எல்லாம் பேங்கிலே சம்பளம் ஏத்திட்டாங்க. பேசாம குடுத்துடு வோம்.' ஆனால் அம்மாவின் வார்த்தையை அப்பா கேட்கவில்லை.

"உன்னை என்னடி பொண்ணு கேக்கறது? எங்கிட்டே வந்து கேக்க வேண்டியதுதானே."

"யார் கிட்டே கேட்டா என்னங்க? பையனுக்கு சம்பளம் நல்லா ஏறும். பொண்ணை நல்லா கவனிச்சு கிடுவான்." செண்பகம் ஆசை ஆசையாய் வாயெல்லாம் பல்லாக கூற,

"ஓ... நான் குறைச்சலா சம்பளம் வாங்கறேன்னு குத்திக் காண்பிக்கறியா?"

"நீங்க ஏங்க எல்லாத்தையுமே தப்பா எடுத்துக் கறீங்க? அவன் உங்களை விட கூடுதல் சம்பளம் வாங்கினா என்ன தப்பு?"

"தெரியும்டீ. புருஷன் மட்டம் தட்டணும்னுதான் நீ இந்த இடத்தையே தேர்ந்தெடுக்கணும்னு துடிக்கறே தெரியாதா?" ஏகாம்பரம் குற்றம் சொல்லும் குரலில்கூற,

"நான் ஏங்க உங்களை குறைச்சு பேசணும்? என் பிரண்ட் வீட்டுலே சொன்னாங்க. பிள்ளை கோவில்லே

வச்சு புவனாவைப் பார்த்தானாம். அவனுக்கு ரொம்ப பிடிச்சு போச்சாம். அவுங்க ஒண்ணுமே எதிர்பார்க்க மாட்டாங்களாம். எம் பிரண்டு தான் சொன்னாங்க" செண்பகம் கணவனின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் வெள்ளேந்தியாகப் பேச,

"ஓ இத்தனை நடந்து இருக்குது. என்கிட்டே ஒண் ணைக்கூட சொல்லலே. பொண்ணை கூட பாத்தாச்சா?" அப்போதுதான் கணவன் கேள்வியில் வித்தியாசமும், கோபமும் இருப்பதைப் பார்த்தவள் அதிர்ந்து போகிறாள்.

"என்னங்க... இப்படி பேசறீங்க?" செண்பகம் தவித்துப்போய் கேட்க,

"வாயை மூடுடி கழுதை. ஒண்ணும் தெரியாதவமாதிரி இருந்துட்டு இத்தனை மாமா வேலை பண்ணியிருக்கே." சட்டென்று கண்களில் நீர் பெருகியது. 'இதென்ன கணவன் இத்தனை மோசமாக இருக்கிறான். வலுவில் வந்த ஸ்ரீதேவியை யாராவது விடுவார்களா? தன் பெண்ணின் எதிர்காலம் முக்கியமில்லையா? கிளார்க், சம்பளம் இல்லாது வேலை செய்பவன், இல்லை என்றால் வயதானவன் இப்படி வரன்களை தன் கணவன் ஏன் பார்க்கிறான்? தன் குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டும் என்று எண்ணுவது ஒரு பெற்றோரின் கடமை இல்லையா? தன் பெண் நொண்டியா, முடமா இல்லை பார்ப்பதற்கு அசிங்கமாக இருக்கிறாளா? படிக்காதவ ளாய் இருக்கிறாளா? இல்லை ஜாதகம் சரியில்லாதவளாய் இருக்கிறாளா? இல்லையே அவளுக்கு எல்லாம் நன்றாக இருக்கிறது. தந்தையைத்தவிர, எத்தனையோ அழகு இருந்தும், படித்து இருந்தும் என்ன பிரயோசனம்? தலை

எழுத்தை கடவுள் சரியாக எழுதவில்லை போலருக்கே' சென்பகம் நினைக்கிறாள்.

இதை கணவன் புரிந்து கொண்டானோ என்னவோ மனைவியிடம் வலுக்கட்டாயமாக சண்டை போட்டு அவளை அடித்து உதைத்து, மிதித்து வீடே ரணகள மானது. மொத்தத்தில் செண்பகத்திற்கு கண்ணீர்தான் மிஞ்சியது. பெண் ஜென்மமாய் பிறப்பதே பாவம்தான். அந்த வீட்டில் அவர் வைத்தது தான் சட்டம். கல் யாணமோ, கருமாதியோ புருஷன் ஒப்புதல் ரொம்ப ரொம்ப முக்கியம். எப்படியோ போகட்டும். ஆனால் தன் பெண்ணுக்கு திருமணம் என்று ஒன்று நடந்தால் போதும். மறுபடியும் மனதார பிரார்த்தனைகளில் இறங்கினாள்.

ஆயிற்று இரண்டாம் சுயம்வரம் ஆரம்பமாயிற்று. இவளை விட பல வயது மூத்தவன் உண்மையிலேயே வயதானவன் போல் தான் தோன்றினான். பார்ப்பதற்கு வயதான தோற்றம் தான். தலை மயிர் எல்லாம் கொட்டிப் போய், முன் வழுக்கை விழுந்து, பல் கூட ஒன்று, இரண்டு கொட்டிப் போய் இருந்தது. சிரிக்கும் போது காணாத பல்லின் வெற்றிடம் அசிங்கப் படுத்தியது. கண்ணில் வேறு சோடா பாட்டில் கண்ணாடி. இவனா தனக்கு ஏற்றவன்? முதலில் பையனை, பையனின் தந்தை என்று தான் எண்ணினாள். அச்சுபிச்சு என்று பேசிக் கொண்டு, எதற்கு சிரிக்கிறோம் என்று தெரியாமல் சிரித்துக் கொண்டு 'இறைவா' புவனா பெருமூச்சு விடுகிறாள் என்றாவது துன்பம் என்று வரும்போது 'இறையே நீயே துணை காப்பாற்று' எனலாம். எப்போதுமே துன்பம் என்றால் தொலை

யட்டும் நடப்பது நடக்கட்டும். இறைவனுக்கு எது உசிதமோ அதுவே நடக்கட்டும்.

கண்கள் கண்ணீரைக் கொட்ட தயார்நிலையில் இருக்க வாய்மூடி, குனிந்த தலையோடு காபியை நீட்ட, கேணச் சிரிப்பு சிரித்துக் கொண்டு காபியை வாங்கியவாறே அவளைப் பார்க்கிறான் மாப்பிள்ளை.

''சரி மேற்கொண்டு பேசுவோமா?'' என்று ஆரம் பித்த அவன் வீட்டினர் ஸ்கூட்டரிலிருந்து வைர மோதிரம், சங்கிலி வரை கேட்க,

''கெழட்டுப் பயலுக்கு ஆசையைப் பாரு. பாவம் யாரும் பொண்ணு கொடுக்கலையே ஒழிஞ்சு போற துன்னு பார்த்தா எத்தனை திமிர்.''

அப்பா வழக்கப்படி புலம்ப ஆரம்பிக்க, அப்பாவிடம் பணம் கேட்டால்தான் அப்பாவிற்கு மாப்பிள்ளையின் சுய ரூபம் தெரிகிறது போலும். சாதாரணமாக ஜாதகம் பார்க்கும்போதும், பெண் பார்க்க வரச் சொல்லும் போதும், தெரியாத குறை பிள்ளை ரூபாய் கேட்டால் தெரிகிறது. அந்தக் கல்யாணம் நின்று போனது.

அடுத்தது சேல்ஸ் ரெப்ரசன்டேடிவ். பையன் சற்று நன்றாகவே இருந்தான். இருந்தாலும் ரொக்கமாக கேட்டதால், இந்த இடமும் நின்று போக, ''அம்மா அப்பா இல்லாத அனாதைக் கழுதை'' என்று திட்டினார். பையனுக்கு நல்ல வேலை வாங்கித் தரும்படி கண்டிஷன் போட, அந்த இடமும் கையை விட்டுப் போனது.

பிறகு மூன்று வருடங்கள் அப்படியே எல்லாம் நின்று போனது. இப்போது பேப்பரில் வரும் மணமகன் விளம்பரங்களுக்கு பதில் போட்ட நிலமையில், அவளை வேறு ஒரு பையனுடன் பார்த்து சாதாரண விஷயத்தை

பெரிசுபடுத்தி புவனாவிற்கு எல்லாமே சலித்துப் போனது. இந்த வீட்டை விட்டு என்றாவது ஒழிவோமா?

அன்றையிலிருந்தே அப்பாவிடம் நிறைய மாறுதல்கள்தான். சாதாரணமாகவே பெண்கள் என்றாலே பிடிக்காது. இப்போது இன்னும் விசேஷம்தான். அதுவும் அவளைப் பார்த்தாலே இன்னும் எரிந்து எரிந்து விழுந்து கூடுமானவரை அவர் கண்களில் படாமல் வாழத் தலைப்பட்டாள் புவனா.

அன்று திடீரென்று மதியம் வீட்டிற்கு வந்தவர், இரண்டு நல்ல வரன்களை தான் பார்த்திருப்பதாகவும், இரண்டில் ஒன்று கட்டாயம் முடிய வேண்டும் என்று சொல்ல, செண்பகம் மௌனமாக தலை அசைக்கிறாள். இருபத்து நான்கு வயதில் மறுபடியும் பெண் பார்க்கும் படலம். 'இம்முறை மணமகன் எப்படி இருந்தாலும் இங்கேயிருந்து ஓடிவிட வேண்டியதுதான். சதா இந்த எரிச்சலையும் வெறுப்பையும் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாது. ஏதாவது ஒரு விடிவு கிடைத்தால் பற்றிக் கொள்ள வேண்டியதுதான்.' கண்களை இறுக மூடி பெருமூச்சு விடுகிறாள் புவனா.

முதலில் வரவேண்டிய பையனுக்கே காத்திருந்து, காத்திருந்து கண் பூத்துப் போனது. அப்பா குறுக்கும் நெடுக்குமாக நடக்கிறார். நேரத்தைப் பார்க்கிறார். கைகளை உதறிக் கொள்கிறார். மறுபடியும் நிலை கொள்ளாமல் தவிக்கிறார். பையனுக்கு கொடுத்த நம்பருக்குப் போன் போடுகிறார். அவ்வளவுதான் கோபாவேசத்தில் குதி குதி என்று குதிக்கிறார். பையன் இன்று இரண்டு பெண்களைப் பார்க்க இருந்தானாம். முதலில் பார்த்த பெண்ணை ஓ.கே. சொல்லி விட்டானாம். பெண்ணுக்கும் அவனைப் போல் ஒரு கால் விளங்காதாம். செய்தி

கேட்டதிலிருந்து இலுப்பை சட்டியில் போட்டிட கடுகாக பொறிந்து விட்டார்.

''நொண்டி... கால் இப்படி இருக்கும்போதே இத்தனை திமிர்..'' இப்படி ஆக்ரோஷமாக கத்தும்போது தான் பிள்ளைக்கு கால் ஊனம் என்ற விஷயமே அனைவருக்கும் தெரியும்.

புவனாவிற்கு நெஞ்சு தடக் தடக்கென்றது. 'எத்தனை பெரிய நம்பிக்கை துரோகம்? தன் தந்தை தன்னை திட்டினாலும் வெறுத்தாலும் தன் வாழ்க்கையை கெடுக்க மாட்டார் என்று நினைத்தது பொய்யாகிப் போய் விட்டது. தன்னை பாழுங் கிணத்தில் தள்ளியே ஆக வேண்டும் என்று அப்பா அத்தனை முனைப்பாக இருக்கிறார். தான் செய்த தவறு என்ன? திருமணம் புரிய காசு செலவு செய்ய வேண்டுமே என்று நினைத்தால், தன்னைக் கூலி வேலை செய்யவாவது அனுப்பியிருக்கலாமே. தன் வயிற்றுப் பாட்டையாவது தான் கவனித்துக் கொண்டு இருக்கலாம்.' மறுபடியும் அழுகை அடி வயிற்றினின்று எழும்ப ஓசைப்படாமல் தங்கள் படுக்கை அறைக்குள் சென்று மறைந்தாள்.

அடுத்த நாளே இவளை படுகுழியில் வீழ்த்தும் திட்டம் ஒன்றும் வந்து இவள் படுகுழியில் வீழ்ந்த நாளும் வந்தே விட்டது. அப்பா இன்னொரு ஜாதகத்தைத் தூக்கி தூர எறிந்து விட்டார். பின் ஒரு ஜாதக அமைப்பிலிருந்து ஒரு ஜாதகத்தை எடுத்து தன் பெண்ணின் ஜாதகத்தை ஒரு பிரதி எடுத்து அனுப்ப, அடுத்த நாளே ஜாதகம் பொருத்தமாக இருப்பதாகவும், பெண் பார்க்க வருவதாகவும் சொல்லி அனுப்பினார்கள்.

''இத பாரு ஏகாம்பரம். அவுங்க எல்லாம் பரம்பரை பணக்காரங்க. பொண்ணு பாக்க கூப்பிடறதுக்கு முன்னால நல்லா யோசிச்சிட்டுக் கூப்பிடுங்க.''

''ஏன்?''

''பொண்ணு பையனை பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிடுச்சுன்னா வில்லங்கமா போயிடும். நீங்க போய் பையனைப் பாருங்க. எல்லாமே பேசிடுங்க. பொண்ணு பிள்ளை போட்டோ பாத்துட்டு பிடிச்சுதுன்னா வரச் சொல்லுங்க.''

அப்பாவிற்கு யோசனை ஒரு வேளை நிறைய கேட்டால்... தெரிந்தவர் ஒருவரிடம் யோசனை கேட்டபோது. ''போய்யா அவுங்க எல்லாம் பரம்பரை பணக்காரங்க. சல்லிக்காசு கேட்க மாட்டாங்க. பொண்ணு அங்க கொடுத்தியான்னா அதிர்ஷ்டம்தான்.''

சொல்ல, சொல்ல ஏகாம்பரத்திற்கு ஆசை கொழுந்து விட்டு எரிந்தது. பெண் வேறு மூக்கும், முழியுமாக பளீரென்று இருக்கிறது. ரொம்ப செலவில்லாமல் தள்ள முடிந்தால் அதிர்ஷ்டம்தான்.

அடுத்த ஒரு வாரமும் அவர்கள் குடும்பத்தைப் பற்றிய செய்திகள் விசாரிப்பதிலேயே கழிந்தது. அலைந்து, திரிந்து கேட்டதில் அவர்கள் குடும்பத்தினர் மிக மிக பணக்காரர்கள் என்றும் ஒரு சல்லிக்காசு கூட எதிர்பார்க்க மாட்டார்கள் என்றும் தெரிந்தது. இந்த இடம், இந்த இடம் முடிந்து விட்டால் ஒரு பெண்ணை சுலபமாகத் தள்ளி விட்டு விடலாம். மனது மனக் கணக் குப் போட்டது. அலைந்து திரிந்து இந்த இடத்தை முடித்து விட வேண்டும் என்று துடித்தார். தன் மனைவியிடம் விஷயத்தைச் சொல்லி பெருமைப் பட்டுக் கொண்டார்.

''என்னை எத்தினி மோசமா பேசியிருப்பே. இப்ப வாவது நான் பெண்ணுக்கு நல்ல வரனா தேடிக்கொண்டு வந்தேன்னு ஒத்துப்பியா?''

''என்ன வரன்?''

''எல்லாம் உள்ளூர்தான். பையன் வீட்டுலே செம பணக்காரங்க. மூணு பிள்ளைங்க. இரண்டு பொண்ணு. எல்லோருக்கும் கல்யாணம் கட்டியாச்சு. இதான் கடைசி. சொந்த வீடு இருக்கு. எக்கச்சக்க நஞ்சை, புஞ்சைன்னு கணக்கு பண்ண முடியாத அளவிற்கு சொத்து. நம்ப பொண்ணு மட்டும் அங்கே போயிடுச்சு மகாராணிதான்.''

செண்பகத்திற்கு ஆச்சரியமான ஆச்சரியம். சின்னச் சின்ன விஷயத்திற்கும் சஞ்சலப்படும் புருஷன். நல்ல வரனை நினைத்து விட்டாலே செலவு ஆகிவிடும் என்று நினைக்கும் கணவனுக்கு பெரிய பணக்கார பையனைப் பார்க்கும் தைரியம் எப்படி வந்தது? என்னவோ தன் குழந்தைக்கு ஒரு நல்ல வரன் அமைந்து அவள் வாழ்க்கை நன்றாக இருந்தால் நல்லது. ஆனாலும் மனதில் ஏதோ நெருடியது. தன் கணவனுக்கு எப்படி இத்தனை தாராள மனம் வந்தது. சட்டென்று துரைசாமி ஞாபகம் வந்தது. அவரிடம் சொல்லி விசாரிக்கச் சொன்னால், இத்தனை பணக்கார சம்பந்தம் நம் வீட்டில் எப்படி சம்பந்தம் வைத்துக் கொள்கிறார்கள்? கணவன் கொடுத்த பெயர்களை ஞாபகம் வைத்தவாறே துரைசாமி வீட்டிற்குக் கிளம்பினாள். துரைசாமியின் மனைவி வரவேற்று உட்கார வைத்தார். எங்கோ வெளியே போயிருந்த துரைசாமிக்காக நெஞ்சில் ஒரு ஆர்வத்தோடு காத்திருந்தாள்.

''என்னம்மா இது தேடி வந்திருக்கீங்க என்ன வேணும்?''

''வந்து...'' முதலில் தயங்கியவள், பின் மெதுவாக விஷயத்தைச் சொன்னபோது... யாரு அந்தப் பண்ணை வீட்டுக்காரன்னுவாங்களே அவங்களா?''

இதோ இருக்குது. தயவு செய்து விசாரிச்சு சொல்லுங்க அட்ரஸ்
பையனுக்குப் புடிச்சுதுன்னா கல்யாணம் நடந்துவிடு
அவன் மேலே மிஸ்டேக்குன்னா அது முதல்
தெரிஞ்சுடுச்சுன்னா தப்பிச்சிடலாம்.''

''அவுங்க அப்பாவிற்கு பெரிய வேலை. நெ
இருக்குது. வீடு இருக்குது. எல்லாமே நிஜம்தான். மூ
பையன்கள். இரண்டு பெண்கள். இதில் இர
பெண்களுக்கும், இரண்டு பிள்ளைகளுக்கும் திருமண
முடிந்து விட்டது. கடைசி பையன் தான் பாக்கி. ஆ
அவனுக்கு வேலை வெட்டி ஒண்ணும் இல்
போலிருக்கே?''

''என்ன சொல்றீங்க அண்ணே?''

''அந்தப் பையன் இருந்த வேலையையும் விட்டுட்
வந்துடுச்சு. அந்த வீட்டுலே எல்லோருக்கும் வே
இருக்கு. சம்பளம் இருக்கு. இந்த பையனுக்கு இல்லே

''ஐயையோ'' செண்பகம் பதற,

''பதறாதேம்மா. பையன் ரொம்ப நல்லவன்தா
ஆனா பொண்டாட்டியை வச்சுக் காப்பாத்துவா
தெரியலேம்மா.''

''என்னண்ணே இப்படிச் சொல்றீங்க?''

''உள்ளதுதாம்மா சொல்றேன்.''

''ஐயையோ என் பொண்ணு வாழ்க்கையே பா
பட்டுப் போயிடுமே. அவுரு இந்த இடம்னு கனவு
கண்டுகிட்டு இருக்காரு.''

''அவன் முடிவு செஞ்சுட்டா யார் பேச்சையும் கே
மாட்டானேம்மா. என்ன செய்யலாம்'' என்று யோசித்தவ

''அவனை நல்லா விசாரிக்கணும்னு சொல்லு. நாளைக்கு பொண்ணு கண்ணை கசக்கிட்டு வந்தா என்ன செய்ய முடியும்? நாம் ஒண்ணு நினைக்க, தெய்வம் வேறொண்ணா நினைத்து எல்லா செயல்களுமே துரித கதியில் மின்னல் வேகத்தில் நடந்தது. ஏகாம்பரம் பூரித்துப் போய் அவர்களைப் பெண் பார்க்கக் கூப்பிட, இரண்டு மூன்று நாட்களில் காரைப் போட்டுக் கொண்டு வைர மூக்குத்தி, வைர பேசரி பத்து விரல்களிலேயேயும் பத்து மோதிரம் மாட்டிக் கொண்டு பிள்ளையின் தாயாரும், திருமணத்திற்கு போவது போல் நகைகளை அள்ளிப் போட்டுக் கொண்டு பிள்ளையின் அண்ணி மார்களும் வர, விலையுயர்ந்த நகைகளோடு பிள்ளை யின் சகோதரிகள் வர, பார்க்கவே பெரிய பணக்கார இடம் என்று தோன்ற செண்பகம் கூனிக் குறுகினாள். ஏகாம்பரம் வாயெல்லாம் பல்லாக வந்தவர்களை வரவேற்று, பெண்ணை காபி கொண்டு வரச் சொல்லி, தன் பெண்ணை அங்கேயே கொஞ்ச நேரம் நிற்க வைக்க, பிள்ளை வீட்டார் பெண் பிடித்து இருக்கிறது என்று நேரிலேயே சொல்லி, செய்வதைச் செய்யுங்கள் என்று கூற, ஏகாம்பரம் ஆனந்தக் கூத்தாடினார்.

'அ...ப்...பா.. ஏதோ செய்ததாக பெயர் காட்டி விட்டால் போதும். பெரும் பணம் மிச்சம். பணம் எத்தனை ரூபாய்கள் மிச்சப்படுத்தலாம்.' மனம் இப்போதே கணக்குப் போட ஆரம்பித்தது. அடுத்த வார வாக்கில் நிச்சயம் செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்யப் பட்டது. அவர்கள் சென்ற பின் செண்பகம் ஆரம்பித்தாள்.

''ஏங்க பையனுக்கு வேலை இல்லை. எப்படிங்க இந்த இடத்தை நிச்சயம் பண்ணினீங்க?''

"ஆரம்பிச்சிட்டியா. குடி கேடி. நீதான் எனக்கு மு
விரோதியே. அவுங்களுக்கு வேலை செய்து சாப்பி
அளவுக்கு என்ன அவசியம். பெரும் பணக்காரங்
பையன் ராஜா மாதிரி இருக்கான். ஊர்பட்ட சொத்
இருக்கு. இவனுக்கும் ஒரு பங்கு உண்டு இல்லை. நா
ஜென்ம ஜென்மமா சம்பாதிச்சாலும் இந்த அளவு சொத்
இருக்குமான்னு சந்தேகம்தான்."

"இல்லைங்க மனசுக்கு சரிப்படலைங்க."

"ஏய் என்னடி சொல்றே? பையன் எப்படி இருக்கா
பார்த்தேயில்லே" புவனாவைக் கேட்க,

"பையன் நல்லாதான் இருக்காங்க. ஆனா எல்லோரு
வேலைல இருக்கற இடத்துல, இவங்களுக்கு மட்டு
வேலை இல்லேன்னா அதுலே வர அவமானம், துக்க
எல்லாம் எனக்குதாம்பா அதிகமாக இருக்கும்."

"நீ என்ன பெரிய உலகத்தைக் கண்டுட்டே."

"வேலை இல்லாதவன் வேண்டாம்பா."

திடீரென்று கோபம் உச்ச கதியில் அடைய,

"இனிமே உனக்கு மாப்பிள்ளையே பாக்க மாட்டே
இதுவரைக்கும் பேப்பர்லே ரெண்டு தடவை போ
டாச்சு. எத்தனை ஜாதகம் பார்த்திருப்பேன். இனி
என்னால முடியாது. இதை பண்ணிக்கலைன்னா வீட்டை
விட்டுக் கிளம்பு." அப்பாவின் பதில் இப்படித்தா
இருக்கும் என்று மனம் யோசனை செய்ய,

"வேணாமடி" அம்மா சைகை செய்கிறாள்.

"இந்த நரகத்திற்கு மீதி எந்த நரகமாக இருந்தாலு
பரவாயில்லை. துணிவோடு முடிவெடுக்க வேண்டி

வேளை. "சரிப்பா நான் பண்ணிக்கிறேன்" மெதுவாக முணுமுணுக்கிறாள்.

5

'சரி' என்று சொன்ன கொஞ்ச நாட்களிலேயே திருமணம் நடந்து முடிந்தது. ஏற்கனவே வாங்கி வைத் திருந்த பவுனை போட்டு மேலே கொஞ்சம் ரூபாய் போட்டு எப் படியோ கல்யாணத்தை ஒப்பேத்தினார் ஏகாம்பரம்.

"ஏண்டா இது நியாயமா?" துரைசாமி கேட்டபோது,

"வாயை மூடுடா. எப்படியாவது என் பொண்ணுக்குக் கல்யாணம் ஆகாதானுன்னு தவிச்சுகிட்டு இருக்கேன்" என்று அவர் மேல் எரிந்து விழுந்தார்.

செண்பகத்திற்கும் இரண்டு மனதுதான். புவனாவின் சகோதரிகள்கூட மாப்பிள்ளையைப் பற்றிக் கேட்டதும் அதிருப்தி அடைந்தனர். இருந்தாலும் என்ன செய்வது?

"வேலை இல்லாதவனை பண்ணிகிட்டு என்ன செய்வே?"

"அக்கா என்ன ஆனாலும் ஆகட்டும். முடியாதுன்னு சொல்லிடு."

"எதுவுமே முடியாது." புவனா பெருமூச்சோடு சொல்ல, பின் சகோதரிகள் கூட பேசவில்லை.

திருமணம் ஆகி கணவன் வீட்டிற்குச் சென்ற பின் தான் தெரிந்தது தான் பழுது என்று நினைத்து பாம்பை மதித்து விட்டோம் என்று. இனி ஒன்றும் செய்ய முடி யாது. அப்பாவிற்கு பெண் என்றால் வெறுப்பு. தன் கணவனுக்கு பெண் என்றால் ஒரு அலட்சியம். அப்பா

பொட்டை, பொட்டை என்று வாய்க்கு வாய் திட்ட
கணவன் பொம்பளை என்பான். கணவன் என்பவனுக்கு
தன் தந்தையைப் போல் கருமித்தனம் கிடையாது
பெண்ணின் மேல் வெறுப்பு என்பது கிடையாது
ஆனால் பெண் என்றால் அவளைச் சக மனுஷியாக
கூட நினைக்க மறுப்பவன். அது ஏதோ ஒரு ஜந்து
வீட்டை பெருக்கி, துடைத்து, துணி துவைத்து, சமைத்து
வைத்து கணவனுக்காகவே காத்துக் கிடந்து இரவில்
அவனுக்கு சுகத்தைக் கொடுக்கும் ஒரு பூச்சிதான்.

அப்பா பெண் இனத்தையே வெறுப்பவர். அவனுக்கு
பெண்கள் மேல் அத்தனை வெறுப்பு உள்ளதா என்று
தெரியவில்லை. ஆனால் பெண்டாட்டி என்றால் ஒரு
வித அலட்சியம் இருப்பது மட்டும் தெரிந்தது. அவள்
பாவம் என்ற உணர்வு அவனுக்கு ஒரு போதும்
இருந்ததாகத் தெரியவில்லை. அப்பாவின் வெறுப்பில்
புரட்டி எடுக்கப்பட்டவளுக்கு கணவனின் ஆதரவு
இருக்காதா என்ற ஏக்கம் மனதை வாட்டியது. ஆனால்
அந்த ஏக்கமே நிரந்தரமாகியது. அவனுக்கு எல்லாமே
தன் விருப்பப்படிதான் நடக்க வேண்டும். அவள்
விருப்பம் என்பதை அவன் எள்ளளவும் லட்சியமே
செய்ததில்லை என்கிறபோது மனதை வெகுவாக
அலைக் கழித்தது.

மாமியார் வீட்டில் கெடுபிடி அதிகம்தான். தங்
களுக்கு சமமான பணக்கார இடம் வரவில்லை என்பதை
மாமியாரின் ஒவ்வொரு சொல்லும் குத்திக் காண்
பித்தன. அது போதாதென்று மிகப் பெரிய பணக்கார
இடத்திலிருந்து வந்த பெரிய மருமகள் தொட்டதெற்
கெல்லாம் மாமியாருக்கு போட்டுக் கொடுத்துக்
கொண்டே இருக்க, புவனாவைப் பார்த்தாலே மாமி

யாருக்கு வேப்பங்காய் தின்பது போல் ஆனது.
இவளுக்கு மூத்தவளும் இவளை ஒத்தவள்தான் என்
றாலும் தப்பித் தவறி தன் அறையினுள்ளே கூட
அவளை நுழையவே விடமாட்டாள். கணவன் அவளைத்
தாங்குவதால் அவளுக்கு தனி மவுசு மொத்தத்தில் தான்
மட்டும் அந்த வீட்டில் ஒரு வேண்டாத விருந்தாளி
போல் தோன்ற மனது கஷ்டப்பட்டது. மற்றவர்கள்
உதாசீனத்தையாவது துடைத்துப் போட்டு விடலாம்.

ஆனால் கணவன்? அவனின் உதாசீனத்தைத் தான்
தன்னால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. அவ
னோடு வெளியே எங்காவது போக வேண்டுமென்
றாலும் நூறு தடவை சொல்ல வேண்டும். எரிச்சலும்,
ஆத்திரமும் கலந்து வள்ளென்று விழுந்து விட்டுதான்
அழைத்துக் கொண்டே போவான்.

திருமணம் ஆன மூன்று மாதத்திலேயே தான் முழு
காமல் இருப்பது தெரிந்தது. சந்தோஷப்பட வேண்டிய
தந்தை எரிச்சலடைந்தார். அம்மாவிற்கு மனம் கொள்ளாத
மகிழ்ச்சிதான்.

''என்னம்மா பேரனோ, பேத்தியோ வரப் போறாங்க
போல,'' துரைசாமி சென்பகத்தைக் கேட்க, கேட்க
அவள் வாயெல்லாம் பல்லாக உட்கார்ந்திருந்தாள்.

ஆனால் ஏகாம்பரம்? ''என்னப்பா பேரனா?
பேத்தியா?'' துரைசாமி கேட்க,

''ஆமா வேற என்ன? அடுத்த செலவு?''

''என்னப்பா இப்படி சலிச்சுக்கறே?''

''ஏண்டா நம்ம நாட்டுலே மட்டும் இப்படி ஒரு
பைத்தியக்கார வழக்கம். ஒரு பொண்ணு பொறந்தா,
அதை பெத்த பாவத்துக்கு ஆயுசு புல்லா செய்துகிட்டு

இருக்கணுமா? என்னவோ போ ஒண்ணுக்கு மூ
பொறக்கும்போதே, நான் ஓட்டாண்டியாகப் போறேன்
எனக்குத் தெரியும். நல்ல மூதேவிங்க வந்து என்னை
பிடிச்சிருச்சுங்க.''

துரைசாமி உண்மையிலேயே அதிர்ந்து போனார்.

''என்னடா இப்படிப் பேசறே? பொண்ணு
குளிச்சு தாயும் சேயுமா வர இருக்கும்போது இப்படி
ஒரு அப்பா பேசறது'' துரைசாமி கடிந்து கொள்ள,

''ந்சு... என் வயித்தெரிச்சல் பேசறேன்...''

''உன்னைத் திருத்தவே முடியாது'' துரைசா
சலித்துக் கொண்டார்.

'இவன் என்ன மனுஷன்?' மனது எரிச்சலுற்றது.

துரைசாமியின் மூன்றாவது பெண்ணுக்கு அர
கல்லூரியில் பேராசிரியராக இருக்கும் வரன் வர, அந்
வேலையில் மூழ்கி விட்டார் துரைசாமி. பையனுக்
நல்ல வருமானம். ஒரே பையன் வேறு. வேறு பிக்கல்
பிடுங்கல் கிடையாது. தாயும் வயதானவள்தான். இ
மட்டும் முடிந்தால் எத்தனை நன்றாக இருக்கும்
தன்னுடைய மூன்றாவது பெண் ரேணுகா பளிச்சென்
இருப்பதால் இந்த திருமணம் கட்டாயம் முடிந்து விடும்
இருந்தாலும் முடியும் வரை எதையும் உறுதியாக
சொல்ல முடியாது. பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை
தங்கள் ஜாதியில் சற்று அதிகம் தான். பூ வைக்கும்
இடத்தில் பொன் வைத்தால்தான் கல்யாணம் முடிக்க
முடியும். அதிலும் நல்ல வரன் என்றால் நாம் பார்க்கு
முன்னே அதற்கு தேவை வந்துவிடும். தான் கையில்
பத்து தருவதாகச் சொல்லும்போது ஐம்பது தருவதா

குறுக்கே புகுவார்கள். தன் முதல் இரண்டு பெண் திரு
மணத்திலேயே இந்த கலாட்டாவை எல்லாம் பார்த்தாகி
விட்டது. எத்தனை சாமர்த்தியமாக இந்த காரியத்தைக்
கையில் எடுக்க வேண்டியிருக்கிறது. கொஞ்சம்
ஏமாந்தாலும் அவ்வளவுதான்.

தன் முதல் பெண் நித்யாவை திருமணம் செய்து
வைப்பதற்குள் அவர் பட்ட பாடு. கஷ்டப்பட்டு ஒரு
வரனைக் கொண்டு வந்தால் அவர்கள் இன்னும் பத்து
இடத்தில் பார்த்து வைத்திருப்பார்கள். பெண் வேறு
நன்றாக இல்லை என்பதால் எத்தனை இடங்களில்
கேலிப் பேச்சுகள், அவமானங்கள். பெண்ணுக்கு மாப்
பிள்ளை பார்க்கப் போய் எத்தனை முறை அசிங்கப்பட்டு
வந்திருந்தார். பெண் பட்டது தானும் எத்தனையோ
அசிங்கப்பட்டு இருக்கிறோம்..

தன் மனைவி கூட பெண் அசிங்கமாக இருக்கிறாள்,
எனவே திருமணம் நிச்சயமாகவில்லை என்று எத்தனை
முறை கடிந்து கொண்டிருக்கிறாள். அப்போதெல்லாம்
கழுகு வாயினின்று கோழிக்குஞ்சை காப்பாற்றுவது
போல் மனைவியைக் கடிந்து காப்பாற்றியிருக்கிறார்.

''சே! ஏன் இப்படி நடந்துக்கறே? ஏற்கனவே அது
நொந்து போயிருக்கு. அதுக்கு ஆறுதல் சொல்லுவியா?
அதை இப்படி எல்லாம் பேசி மனதை நோகடிப்பியா?''
இப்படி குழந்தைகள் குழந்தைகள் என்று மாய்ந்து
மாய்ந்து குழந்தைகளை நேசித்தவர். குழந்தைகளின்
கண்கள் லேசாக கலங்கினால் போதும். மனமும்,
உடலும் பதறிப்போய் விடுவார்.

''ஆமா பொட்டைப் பிள்ளைங்களா பெத்து வச்சிருக்
கீங்க? இன்னொருத்தர் வீட்டுக்குப் போற பிள்ளைங்க

மேலே இத்தனை பாசமா?'' மனைவி அங்கலாய்த்து இருக்கிறாள். எதுவுமே அவரை மாற்றவில்லை. பெண்களுக்கு சிறிது துன்பம் வந்தால் போதும் மனம் அப்படியே சுருண்டு விடும். முகம் தொங்கிப் போய் விடும்.

'இந்தப் புரொபசர் மாப்பிள்ளை வீட்டில் ஒன்றுமே எதிர்பார்க்கவில்லையாம்' தரகர் நிச்சயமாகவே சொல்லி விட்டார். ஒத்துக் கொண்டு விட்டால் வீட்டை விற்க வேண்டிய அவசியம்கூட இருக்காது. வீட்டின் பேரில் கடன் வாங்கிக் கொண்டு அதை மெதுவாக அடைத்துக் கொள்ளலாம். தான் போட்ட கணக்கும் தப்பாது. அன்று அலுவலகத்திற்கு வரும் போது சற்று கவலையுடன் தான் வந்தார் துரைசாமி. பிள்ளை வீட்டாருக்கு ஜாதகத்தைக் கொடுத்தாகி விட்டது. அவர்கள் வீட்டில் சம்மதம் என்று சொல்லி விட்டால் எல்லாமே அற்புதம்தான். அற்புதம் நடக்குமா?

அன்று அலுவலகத்தின் உள்ளே நுழையும் போதே ''என்னப்பா செம டென்ஷன்லே இருக்கே?'' ஏகாம்பரத்தின் வரவேற்பு.

''என்ன செய்யறது? பெண்ணை பெத்துட்டேன். கடைசி ஒன்னையும் நல்ல இடத்துலே கரை சேர்த்துட்டா என் கடமை முடிஞ்சுது.''

''அதான் வேலைக்காரன் ரேஞ்சுக்கு வேலை செய்யறியே. தன்னையே அடகு வெச்சு பொண்ணு, பொண்ணுன்னு உருகி, உருகி செய்யறியே போதாதா?'' ஏகாம்பரம் நக்கலடிக்க,

''ச்சு'' என்ற துரைசாமி பின் தன் பெண்ணிற்கு வந்திருக்கும் இடம், மாப்பிள்ளை பைசா எதிர்பார்க்காத இடம் என்று விலாவாரியாகக் கூறக் கூற ஏகாம்பரத்திற்கு

மனதின் மூலையில் ஒரு ஆசை. தன் இரண்டாவது பெண் கௌரியைப் பார்க்க வைத்தால் என்ன? ஒரு வேளை பிடித்துப் போய் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டால் முதல் பெண்ணைப் போல் மற்ற பெண்கள் அத்தனை அழகு இல்லை என்றாலும் துரைசாமியின் பெண்களைவிட தன் பெண்கள் அழகுதான்.

இருவரும் ஒரே ஜாதிதானே. பேசாமல் தன் இரண்டாவது பெண்ணின் ஜாதகத்தை அனுப்பி வைத்தால் என்ன? சல்லிக்காசு கூட வேண்டாமாமே. சல்லிக்காசு இல்லாத திருமணம் என்றால் ஆச்சரியம் தான். முதல் பெண்ணிற்கு ஒன்றும் வேண்டாம் என்றாலும், அவளுக்கு என்று ஏற்கனவே செய்து வைத்திருந்ததைக் கொடுத்தும் கணக்கில் போட்டு வைத்திருந்த இருபதாயிரம் காலி ஆகிவிட்டது. சத்திரம், சாப்பாடு, லொட்டு லொசுக்கு என்று எல்லாவற்றிற்கும் செலவு ஆகிவிட்டது.

இரண்டாவது பெண்ணுக்கு திருமணம் அந்த செலவு கூட இல்லாமல் கிடைத்தால் சாமர்த்தியம்தான். பையன் எங்கே வேலை செய்கிறான் என்பதை மட்டும் கேட்டு வைத்திருந்தார். குறித்து வைத்திருந்தார். அன்று இரவே பெண்ணின் ஜாதகத்தை ஜெராக்ஸ் எடுத்து அனுப்பி ப்யூனிடம் கொடுத்து நேரில் சேர்க்கும்படி ஏற்பாடு செய்திருந்தார். கொடுத்து விட்டாரே தவிர, மனதில் லேசான உதறல்தான். துரைசாமிக்கு விஷயம் தெரிந்தால் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வான்? பார்ப்போம். தன் பெண்ணுக்கு நிச்சயம் ஆனால் போதும். பைசா செலவில்லாமல் தள்ளிவிட முடிந்தால் எத்தனை லாபம்?

இரண்டு நாளில் ஜாதகம் பொருந்தி இருப்பதாகத் தகவல் வர ஏகாம்பரத்தின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே பெண் பார்க்க வரச் சொல்லி எழுதிப்

போட்டிருந்தார். கடிதம் கண்டதும் அந்த விலாசத்திற்கு நேரிலேயே சென்று அழைத்திருந்தார். அவர்களும் நாளை மறுநாள் வருவதாகச் சொல்லி அனுப்பி இருந்தார்கள்.

அடுத்த நாள் அலுவலகத்திற்குச் சென்ற பின் துரைசாமியோடு மெதுவாகப் பேச்சுக் கொடுத்தார்.

''என்னம்மா பொண்ணு ஜாதகம் அனுப்பிச்சியே பதில் வந்ததா?''

ஏகாம்பரம் இத்தனை அக்கறையோடு தன் பெண்ணைப் பற்றி கேட்கிறானே என்று ஆச்சரியப்பட்டார் துரைசாமி.

''சொல்லும்படி என்ன இருக்கு? இன்னும் பதிலே வரலை.''

''அப்படியா?'' என்றவர் தன் வீட்டில் நிச்சயம் ஆனால் கூட இவனிடம் இப்போது சொல்லக்கூடாது என்று நினைத்துக் கொண்டார்.

''சரி விடு. காலுக்கு உதவலேன்னா கழற்றி எறிய வேண்டியதுதான்.''

அடுத்த நாள் துரைசாமி ஆபீசுக்கே வந்த பாடில்லை. 'என்னாயிற்று? மனிதன் இப்படி லீவு போட மாட்டானே. ஒரு வேளை பெண்ணைக் கரை சேர்க்க முடியாது என்ற பயத்தில் நேரே போய் கூப்பிட போய்விட்டானா? கடவுளே ஜாதகம் பொருந்தவில்லை என்று பிள்ளையின் வீட்டில் சொல்லணுமே. மனதார பிரார்த்தனை செய்கிறார். பேசாமல் நாளைக்கு லீவு போட்டு விட்டுப் போய் விட்டால் என்ன? நாளைக்கு மாலை வீட்டுக்கு வந்து விட்டால் மனைவியிடம் சொல்லி விட வேண்டியதுதான். எதையும் மூச்சு விட்டுக் கொள்ளாதே என்று சொல்ல வேண்டும்.' மறுநாள் முன் கூட்டியே

யோசித்தபடி லீவு போட்டு விட்டு அமர்ந்தார். நல்ல வேளை நண்பன் வீட்டிற்குள் வரவில்லை.

அடுத்த நாள் ஒரே பரபரப்பாக இருந்தது. காலையில் இருந்து வீட்டை சுத்தம் செய்யச் சொல்லி, பலகாரங்களைச் செய்து முடிக்கச் சொல்லி பெண்களை விரட்டி, விரட்டி அடித்துக் கொண்டிருந்தார். முழுகாமல் இருந்த பெண்ணைக் கூட விடவில்லை. மணி நான்கு, ஐந்து, ஐந்தரை ஆயிற்று. வருகிறேன் என்று சொன்னவர்கள் வரவில்லை. ஐந்தரை மணிக்கு மேல் போனில் தொடர்பு கொண்டபோது, தாங்கள் வரவில்லை என்று காலையிலேயே லெட்டர் கொடுத்து அனுப்பி விட்டதாகச் சொன்னார்கள்.

''அது மாதிரி ஒண்ணும் இல்லையே.'' இவர் பெரிதாக சத்தம் போட,

''சார் காலையிலேயே அனுப்பிச்சாச்சுங்க. சென்பகம்னு கையெழுத்துப் போட்டு வாங்கியிருக்காங்க.''

''என்னய்யா ரீல் விடறீங்க. இந்த மாதிரி பொய் சொல்றவங்களை மான நஷ்ட வழக்குப் போட்டு சாவடிக்கணும்.'' மறுமுனையில் போன் டப்பென்று வைக்கும் சத்தம் கேட்க, கொதித்துப் போனார் ஏகாம்பரம்.

வீடு இன்னொரு குருக்ஷேத்திரம் ஆனது. மனைவியிடம் கடிதத்தைக் கேட்க,

''ஆமாங்க நீங்க வெளியே போயிருக்கும்போது வந்தது'' என்றவாறே கையைத் துடைத்தவாறே கடிதத்தைக் கொடுக்க, பளாரென்று பெண்டாட்டியின் கன்னத்தில் ஒன்று விட்டார். அடித்த வேகத்தில் செண்பகத்தின் தலை தட்டா மாலை சுற்ற, அப்படியே

கீழே விழுந்தாள் செண்பகம். கையையும், காலையும் வெட்டி, வெட்டி இழுக்க, வாய் கோணியது.

"அம்மா... அம்மா.." மூன்று பெண்களும் அம்மாவைச் சூழ்ந்து கொண்டு அழுகின்றனர்.

"சனியன்களா ஒழிஞ்சு தொலையறதுதானே. இதுங்களை வைச்சுக்கிட்டு எத்தினி நாள் லோல் படறது? இதோ ஒண்ணை ஒழிச்சேன்னு பாத்தா மறுபடியும் வந்து நிக்குது."

"அம்மா... அம்மா..." அழுகிறாள் புவனா வாயும் வயிறுமாக இருந்து கொண்டு இதெல்லாம் பார்க்க பார்க்க மனம் இன்னும் வேதனைப்பட்டது.

"போடி... போ இங்க இன்னும் காலத்துக்கும் அப்பன் சம்பாதிச்சுப் போடுவான். திண்ணனுமாக்கும்" புவனாவிற்கு தாள முடியாமல் அழுகை வந்தது. அம்மாவை இந்த நிலையில் விட்டு விட்டு எப்படி போவது? தான் போனால் கணவனே தன் வீட்டாரை கேலி செய்து சிரிக்க ஆரம்பித்து விடுவானே.

அவனுக்கு தன் மாமனார் பற்றி நன்றாகத் தெரியும். ஏற்கனவே பிறந்த வீட்டில் ஏழ்மை என்று மாமியார் வீட்டில் அனைவருக்குமே கேலி. இந்நிலையில் பிரசவத்திற்கென்று வந்து விட்டு வந்த ஒரு மாதத்திலேயே அடித்து விரட்டினால், அவளுக்கு என்ன மரியாதை இருக்கும். போகவும் முடியாமல், இருக்கவும் முடியாமல் குத்துக் காலிட்டு அம்மாவின் அருகிலேயே அழுகிறாள். அம்மா அவளுக்கு என்ன ஆயிற்று? ஏன் இப்படி கை கால்கள் வெட்டி வெட்டி இழுக்கிறது. வாய் வேறு கோணி, லேசாக நுரை தள்ள, கண்கள் வேறு மேல் பார்வை பார்க்க வயிற்றைப் பிடித்துக் கொண்டு பின்னும் அழுகிறாள்.

விஜிதான் ஓடுகிறாள். "அப்பா நான் டாக்டர் யாரையாவது கூப்பிட்டுகிட்டு வரேன்."

"என்னங்கடி திமிரா? உங்கம்மா எத்தனையோ தடவை இந்த மாதிரி இழுத்துகிட்டு கிடக்கலே. அவ புத்திக்கு ஏத்த மாதிரிதான் வியாதி. இழுப்பு சாதாரணமா வரதுதானே. இதுக்கென்ன பெரிய வைத்தியம்?" அம்மா இன்னும் துடித்துக் கொண்டிருக்க, மூன்று பெண்களுமே அவளைப் பார்த்து பார்த்து அழுகிறார்கள். அம்மா பல தடவைகள் இந்த மாதிரி விழுந்ததைப் பார்த்திருக்கிறாள். ஆனால் இப்படி இத்தனை நேரம் வாய் கோணி கை, கால் இழுத்துக் கிடந்ததில்லை. மூன்று பெண்களும் பிழியப் பிழிய அழுகிறார்கள். புவனா அம்மாவின் அருகில் அமர்ந்து தலையைத் தலையை தடவி விடுகிறாள். மற்ற இருவரும் அழுதபடி பார்க்க, 'அம்மா இருப்பாளா? இல்லை இறப்பாளா?' கேள்வி மனதைப் போட்டு வாட்ட, மூன்று பேரும் அழுதபடி பார்க்கிறார்கள்.

6

பல மணி நேரம் கழித்து செண்பகத்திற்கு விழிப்பு வந்த போது கை, கால் எல்லாம் வலி எடுப்பதைப் போலவும், உடல் பலவீனப்பட்டு போவது போலவும் உணர்ந்தாள். சுற்றிலும் தன் மூன்று பெண்கள். மூன்று பேரின் முகத்திலும் எல்லை இல்லாத வேதனையோடு அழுதிருப்பார்கள் போல் இருக்கிறது. கண்கள் வீங்கிப் போய், முகம் சிவந்து போய் பார்த்தாலே பாவமாக இருந்தது.

"என்னம்மா ஆச்சு?" எழுந்திருக்க முனைகையில் படபடவென்று வந்தது.

''அம்மா... அம்மா..'' மூன்று பேரும் விக்கி, விக்கி அழுகிறார்கள்.

''எனக்கு ஒண்ணும் இல்லை. அழுவாதீங்க'' செண்பகத்திற்கு தண்ணீர் எடுத்துக் கொடுத்து விட்டு, பின் சிறிது ஹார்லிக்ஸ் கலந்து கொடுத்து விட்டு மூவரும் வெளியே வந்தபோது, முகமெல்லாம் அழுது கண்கள் சிவந்திருந்தன.

''உனக்கு பரவாயில்லை புவனா. ஏதாவது பொய் சொல்லிட்டு தன் புகுந்த வீட்டுக்குப் போயிடலாம். ஆனால் எங்க நிலைமை? எங்கே போறது?'' இரண்டு தங்கைகளும் விம்மி விம்மி அழ,

''நான் மட்டும் எங்க போக முடியும்? பிரசவத்துக் குன்னு கூப்பிட்டுகிட்டு வந்து பிரசவத்துக்கு முன்னால எங்க வீட்டுக்கு எப்படிப் போறது? ஊர் உலகம் காரித் துப்பாதா? கட்டின வீட்டிலே எத்தனை கேலியாக இருக்கும்'' அவளும் அழுகிறாள்.

பிள்ளையை சுமந்த வயிறு நெஞ்சில் வேதனை களையும் சுமந்து கொண்டு அழுதது. கிராதகன் போல் நடக்கும். தங்கள் தந்தையின் பிடியில் இருந்து எப்படி வெளியேறி வர முடியும்.

''உனக்காகவாவது இரண்டு முறை அப்பா பேப்பரில் திருமணத்துக்காக விளம்பரம் கொடுத்தார். ஆனா எனக்கு?'' தங்கை குறை சொல்லும் பாணியில் அழுத வாறு கேட்கிறாள். வீட்டின் நிலைமை இத்தனை கேவலம் என்று யாரிடம் சொல்ல முடியும்? சம்பாதித்த பணத்தை எல்லாம் தன் தந்தை என்ன செய்தார். பாடுபட்டு தேடி வைத்த பணத்தை புதைத்த கேடு கெட்ட மானிடரே கேளுங்கள். ஒளவையின் பொன் மொழி

வேறு ஞாபகத்துக்கு வர, தன் அப்பன் ஜந்து என்றாவது திருந்துமா? மனம் அவதிப்பட்டது. ஏங்கியது. முகத்தில் ஈயாடவில்லை. மனதில் வேதனை இன்னும் அதிக மானது. வேண்ட மட்டும் அழுதார்கள்.

யாரோ வெளியே கேட் கதவைத் திறக்கும் சத்தம் கேட்க, வெளியே அமர்ந்திருந்த மூன்று பெண்களும் மெதுவாக எட்டிப் பார்த்தனர். துரைசாமிதான் வந்து கொண்டிருக்கிறார். மூன்று பெண்களையும் பார்க்கிறார். முகம் சிவந்து போய், வீங்கிப் போய் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. துரைசாமி அவர்களைத் தேடி வந்து விட்டார்.

''என்னம்மா அப்பா, அம்மா யாரும் இல்லையா? யாரையும் காணோமே'' கேட்டவர், சோர்ந்து விழுந் திருந்த பெண்களின் முகம் பார்த்து தீயை மிதித்தவர் போல் ஆனார்.

''என்னம்மா? எல்லாம் அழுதீங்களா, எல்லாம் ஒரு மாதிரி இருக்கீங்க?'' குரலில் ஒரு பதற்றமும், வேதனையும், பச்சாதாப உணர்வும் வர கேட்க,

''என்னம்மா ஆச்சு? அப்பா ஏதாவது சொன்னாங் களா?'' ஆதரவான அந்தக் குரலில் மனது உருக்கப்பட்டு ஆறுதல் மொழி கேட்க மாட்டோமா என்று ஏங்குகின்ற மனதிற்கு அந்த ஆறுதல் மொழி அழுகையை வரவழைக்க அடக்க மாட்டாமல் பொங்கி பொங்கி அழுதனர்.

''புவனா... இங்க பாரு... கௌரி... விஜி.. சொல் லுங்கம்மா என்ன ஆச்சு?'' சிறிது நேரம் அழுதவர்கள், பின் ஒருவாறு சுதாரித்துக் கொண்டு, நடந்ததைச் சொன்னபோது, வாயடைத்துப் போய் நிற்கிறார்.

"நான் அவனைப் பார்த்துக்கறேன். வர, வர நீ
தனை கேவலமாகவா போயிட்டான்" எரிச்சலில் பல்லை
கடிக்கிறார்.

"வீட்டுப் பொண்ணுங்க அழக்கூடாது கண்ணுங்களா
வீட்டுக்கு ஆவாதுன்னு சொல்லுவாங்க. போனா
போகுது அழாதீங்க. எல்லாம் சரியாப் போயிடு
தேற்றுகிறார் துரைசாமி.

"வாங்க உள்ளே போவோம்" மூவரும் சற்று தயங்
"வாங்கம்மா" என்றவாறு அவர்களையும் அழை
துக் கொண்டு உள்ளே நுழைய, ஏகாம்பரம் ஹால்
உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டு இருந்தா
பெண்களைப் பார்த்ததுமே அவரின் முகத்தில் கடு
ஏறியது. ஏதோ காலங்காலமாக இருக்கும் பகைமையே
உள்ள ஒரு எதிரியைப் பார்ப்பது போன்ற ஒரு பார்வ
ஏகாம்பரத்தின் பெண்கள் கண்ணைத் தாழ்த்தி
வாறே உள்ளே போக,

"எங்கடி வர்றீங்க? அப்படியே ஓடிப் போங்கள்
சொன்னேனில்லே" மூவரும் சட்டென்று அடிபட்
வர்கள் போல் துடித்துப்போக, முகம் தரையை
பார்த்திருக்க, செய்வதறியாத திகைப்பு. இந்த அ
சாண் வயிற்றிற்காக எத்தனை அவமானங்கள்? ஒ
வரை அண்டிப் பிழைக்கும் பிழைப்பு. எத்தனை
கேவலமாக இருக்கிறது? நினைக்க, நினைக்க பொங்கி
பொங்கி அழுகை வருகிறது. வயிற்றில் பிள்ளையை
சுமந்திருப்பவளும் சேர்ந்து அழ, நெஞ்சில் ஈரமில்ல
மல் பார்க்கிறார் ஏகாம்பரம். தன்னை அலெக்ஸாந்தி
சக்கரவர்த்தியாகவும், இந்த உலகத்தையே வெற்
கொண்ட மகிழ்ச்சி அடைவதுபோல் மகிழ்ச்சி அப்பட்

மாகத் தெரிய, ஒரு விதத் திமிருடன் பெண்களையே பார்க்கிறார்.

"ஏண்டி இன்னமும் இங்கேயே நிக்கறீங்க? போற துக்கு நாதியில்லையா?" பெண்கள் விம்மிக் கொண்டே திரும்பி வாசலை நோக்கிப் போக, யத்தனிக்க, பின்னாலேயே வந்த துரைசாமி,

"உள்ளே போங்கம்மா. உள்ளே போங்க" என்று சற்று பலமாகச் சொல்ல.

"மாமா" பேச யத்தனிப்பவர்களை பேச விடாது தடுக்கிறார் துரைசாமி.

"அதெல்லாம் அப்புறம் பேசலாம் முதல்ல உள்ளாற போங்க."

அதற்கு மேல் அவர்கள் நிற்க மாட்டாமல் உள்ளே போக, மனதிலேயே எரிச்சல் பட்டார் துரைசாமி.

"இவன் என்ன மனுஷன்? சரணாகதின்னு வந்துட்டாங்கன்னா கெட்டவங்களா இருந்தாலும் காப்பாத்தறது நம்ம கடமை. நம்ப சாஸ்திரங்களிலும் அதான் சொல்லப்பட்டிருக்கு. ஆனா தான் காப்பாத்த வேண்டிய குழந்தைகளை தான் வளர்க்கிற மிருகத்தை விட கேவலமாக யாராவது நடத்துவாங்களா? அநியாயம். தன் காலுக்கு கீழே இருக்கற கோழிக் குஞ்சுகளை நசுக்கறதுலே என்ன பெருமை இருக்கு? இதுலே என்ன பெரிய வீரம் இருக்கு?" ஒரு நிமிடத்திற்குள் மனதில் இந்த உணர்வுகள் ஆக்கிரமிக்க,

"என்னடா இதெல்லாம்?" எரிச்சலோடு கேட்கிறார் துரைசாமி.

''த்சு...'' என்றவர், ''ஆமா என்ன விஷயமா வந்தே?'' இரண்டு நாளா ஆபீசுக்கு ஏன் வரலை?''

''அதைச் சொல்லத்தான் வந்தேன். ஆமா இதெல்லாம் என்னடா?'' மறுபடியும் பழைய விஷயத்தைக் கேட்க,

''எது?'' சற்று அலட்சியமாக கேட்கிறார் ஏகாம்பரம்.

''குழந்தைகளைக் கன்னா பின்னாவென்று பேசி ஏண்டா இப்படி அழவச்சுகிட்டு இருக்கே? அதுவும் முழுகாம இருக்கும் பெண்ணையும் சேத்து அழ வச்சுகிட்டு. நீ பண்றது நல்லாவே இல்லை.''

''ஆமா என்னிக்கு என்னைத் திட்டாம இருந்திருக்கே. எப்பவுமே என்னை எகத்தாளமாகத்தான் பேசி இருக்கே. என் சமாசாரத்தை விடு. உன் சமாசாரம் என்ன? நீயேன் இரண்டு நாளா ஆபீஸ் வரலை.''

''நான் ரெண்டு நாள் முன்னால ஒரு பையனைப் பத்தி சொன்னேனே; அவுங்க வீட்டிலேருந்து பதிலே வரலை. ஒருவேளை ஜாதகம் பொருத்தம் இல்லையோன்னு நினைச்சுகிட்டு நேர்லயே பார்க்கப் போனேன். ஆனா அவுங்க போனவுடனேயே பெண்ணைப் பார்க்க வரேன்னுட்டாங்க. உடனே பொண்ணு பாக்கவும் வந்தாங்க. பார்த்தவுடனே செட்டில் ஆயிடுச்சு. பையன் வீட்டுலே ஒண்ணுமே கேக்கலையாம். ரொம்ப சந்தோஷமா இருக்கு. நீங்க போடறதை போட்டு அனுப்புங்கன்னு சொல்லிட்டாங்க. அதை சந்தோஷமா சொல்லிட்டு நாளைக்கு நிச்சயம் செய்யறோம். நீ வரணும்னு கூப்பிட வந்தா இப்படி பண்றியே? நான் மறுபடியும் உன்னை திட்டறேன்னு நினைக்காதே. இந்த உலகத்திலிருந்து என்ன கொண்டு போகப் போகிறோம். குஜராத் பூகம்பம் பாத்தியில்லே. இயற்கையோட ஒரு சின்ன

அசைவிலே எத்தனையோ பேர் பரலோகம் போயாச்சு. நம்ம கைல என்ன இருக்கு? எல்லாம் அந்த ஆண்டவன் தலையில் என்ன எழுதறானோ அதுதான். இதுதானடா நிஜம். எதுக்கு நம்ம வயிற்றில் பிறந்த பெண்களை விரட்டி அழவச்சு... வேணாமடா இதெல்லாம் பாவம்.''

''நீ சொல்றபடி எல்லாமே ஆண்டவன் செயல்னா இதுவும் அவன் செயல்தான் போ.''

''உன்னைத் திருத்தவே முடியாது. நாளைக்கு தங்கச்சி கொழந்தைகளை அழைச்சுகிட்டு வந்திடு. இந்த மாசமே கல்யாணமும் முடிச்சிடணும்'' திரும்பி வாயிலை நோக்கி நடந்தவர், மீண்டும் உட்புறம் திரும்பி நடந்தார். நேராக உள்ளே போய் செண்பகம் இருக்கும் அறைக்குச் செல்கிறார். படுத்திருந்த செண்பகத்தைப் பார்த்து பதறிப் போய் விடுகிறார்.

''தங்கச்சி என்னம்மா இது?'' துரைசாமியைப் பார்த்து விட்டு பலவீனப்பட்டவளாய் இருந்த செண்பகம், எழுந்திருக்க முயற்சி செய்கிறாள்.

''என்னம்மா இது? உடம்பு சரியில்லையா? ஏன் சொல்லி அனுப்பலே. அண்ணியையாவது அனுப்பி இருப்பேனே.''

''ஒண்ணும் இல்லைங்கண்ணா'' சொல்லியவாறு எழுந்தவளை எழுந்திருக்க விடாமல் தடுத்து, மெதுவாகத் திரும்ப அந்த அறையின் மூலையில் சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு, ஒளிந்து கொண்டு இருக்கும் மூவரைப் பார்க்கையிலே வயிறு கலங்கியது. மனது வேதனைப்பட்டது.

''கிராதகன். உருப்படவே மாட்டான்'' முணுமுணுத்தவாறே தன் பெண் நிச்சயத்திற்கு வரவேண்டுமென்று அழைப்பு விடுத்து கிளம்பிச் சென்றார்.

வீட்டிற்குச் சென்றதும் ஏகாம்பரத்தைப் பற்றியும் அவருடைய பெண்களைப் பற்றியும் புலம்பித் தீர்த்து விட்டார். ''உங்க பிரண்டைப் பத்தி தெரியாதா? ரொம்ப சுயநலம் பிடிச்சவராம். ரொம்ப கர்வம் உள்ளவராம். மொத பொண்ணுக்கு திருமணம் நிச்சயம் செய்யறதுக்குள்ளே ஒம் பாடு, எம்பாடுன்னு ஆயிடுச்சுன்னு சொன்னாங்களே. ஆமா அவுங்க மொத மாப்பிள்ளைக்கு வேலை, வெட்டி ஒண்ணும் இல்லையாம். மொத பொண்ணு சோத்துக்கு என்ன பண்ணுதாம்?'' துரைசாமியின் மனைவி பார்வதம் கேட்க, ''சே! அப்படி எல்லாம் ஒண்ணுமில்லே. அவுங்க பெரிய பணக்காரங்க.''

''என்னவோ போங்க. ஆம்பிளைப் பிள்ளை வேலைக்குப் போனா பொறுப்பு வரும்.. அப்பா அம்மா தட்டுலே உக்காந்து தின்னா எத்தனை நாளைக்கு வரும்?''

''உனக்கு இதெல்லாம் யாரு சொன்னாங்க?''

''எல்லாம் கேள்விப்பட்டேன். அதான் ஊரே பேசுதே.''

''ஊருக்கு என்ன? கண்டதை பேசத்தான் பேசும். குந்தித் தின்றாலும் குறையாத சொத்து அவுங்களது.''

''என்னங்க பேசறீங்க? சொத்து இருந்தா, மாச வருமானம் வேண்டாமா?''

''ஏன் புவனா வீட்டுக்காரரு ஒரு பேக்டரியை பார்த்துக் கறாராமே. மாசம் துட்டு எடுக்காமயா இருப்பாரு.''

''அட நீங்க வேற. பொது துட்டுலேர்ந்து யாரும் காலணா எடுக்கறதில்லையாம். வரவு செலவு எல்லாமே அவுங்க அப்பா கைலதானாம்.. அதுனாலதான் இவங்க கூடப் பொறந்தவங்க எல்லாம் வேற வேற வேலை செய்யறாங்க. கொஞ்சம் ஓய்வு கிடைக்கும்போது கம்பெனி வேலையையும் பார்த்துக்கறாங்க.''

துரைசாமி ஆச்சரியப்பட்டார். தன் மனைவிக்கு எப்படி இத்தனை விஷயங்கள் தெரிகிறது.

''ஆமா இதென்ன விஷயங்கள் எப்படி உனக்கு தெரியுது?''

''என்னங்க நீங்க? என் பிரண்ட் மணிமாலா இருக்காங்க இல்லே. அவுங்க புவனா மாமியார் வீட்டுக்குப் பக்கத்துலேதானே இருக்காங்க. அவுங்க மருமகளும், புவனாவும் தோழிகள். அதனால நிறைய விஷயம் எனக்குத் தெரியும். அதுதான் இந்த சம்பந்தம் வேண்டாம்னு அடிச்சுகிட்டேன் கேட்டாங்களா?''

''ஏம்மா இப்படி சட்டுனு பேசிட்டே? பணம் இல்லாமகூட இருக்கட்டும். ஆனா பையன் தங்கமான வன்தானே. ஊரிலேயே அந்தப் பையனுக்கு நல்ல பேர் இருக்கே.''

''என்னங்க பேரு. பையன் நல்லவன்தான் எல்லாருக்கும் செய்யறவன்தான். ஆனா கட்டின பெண்டாட்டிக்கும் செய்யணுமா வேண்டாமா? அவ என்ன தப்பு செய்தா? இவனை நம்பி கழுத்தை நீட்டினதுக்கு தேவையான அளவுக்கு மேலேயே அவ அவஸ்தைப் பட்டாச்சு. அது தெரியுமா உங்களுக்கு?''

''எனக்கு எதுவுமே தெரியலையே சொல்லும்மா'' துரைசாமியின் மனம் புவனாவுக்காக வருத்தப்பட்டது. அவருக்குத் தெரிந்து நன்றாக இருக்கப் போகிறாள் என்றுதான் நினைத்திருக்க, பாவம் இன்னுமா அந்தப் பொண்ணுக்கு கஷ்டம். தான் போய் ஏகாம்பரத்தை அழைத்துச் சென்று எப்படியாவது நிலைமையை சீர்படுத்த வேண்டும். தன் குழந்தையாக இல்லா விட்டால் என்ன? சிறு குழந்தையிலிருந்து அந்தக் குழந்தை

களைத் தெரியும். தானே தூக்கி விளையாடிய குழந்தை. அதற்கு ஒரு கஷ்டம் என்றால் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

''பர்வதம் சொல்லும்மா அந்த வீட்டுலே புவனா என்ன விதமா கஷ்டப்படறா? பாவம்மா அவ?''

''எதைங்க சொல்லச் சொல்றீங்க? அவுங்க வீட்டு முதல் மருமக வீணா பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணு. அது வச்சதுதான் சட்டம். கல்யாணம் ஆகி பத்து வருஷம் ஆச்சு. இன்னும் சீர் வந்து ரொம்பிகிட்டே இருக்கு. அது பாக்க ரொம்ப சுமாராத்தான் இருக்கும். நம்ப புவனா வடக்கத்திக்காரங்க மாதிரி வெள்ளையா அழகா இருக்கா? இவ மேல காண்டு. தொட்டதுக்கெல்லாம் இவளை போட்டுக் குடுத்துகிட்டே இருக்கு. புருஷன்காரன் என்ன ஏதுன்னு கேக்க வேணாமா? வாரது சாப்பிடறது போறது. தன் இஷ்டத்துக்கு தம் பாட்டுக்கு இருக்கறது. இதுக்கு எதுக்குங்க கல்யாணம் கட்டிக்கணும்?''

''இல்லம்மா, பெத்தவங்களை எதிர்த்து எப்படி கேக்கறதுன்னு கூட இருக்கலாம் இல்லே.'' துரைசாமி சற்று சப்பைக் கட்டு கட்ட.

''அட நீங்க வேற, இரண்டாவது மருமக இருக்குதே சுமதி. அடுத்த வேளை சாப்பாட்டுக்கு இல்லாத பொண்ணு. அதை எப்படிக் கொண்டாடறாங்க? அதும் பேச்சுக்கே மாமியார் போக மாட்டாங்களாம். புருஷன் பொண்டாட்டிக்கு அத்தனை சப்போர்ட்டாம். இதைக் கேளுங்க. சாப்பாடு புவனா தான் செய்யுமாம். மாமியார்க்காரி கூடவே இருந்து வேலை வாங்கறாங்களாம். மாடு வச்சிருக்காங்க. பால் இருக்குது. நெய், தயிருக்கு பஞ்சமே இல்லே. எல்லோருக்கும் நல்ல தயிரும் பாலும்

கொடுப்பாங்களாம். புவனாவுக்கு மட்டும் மிச்சம் மீதி இருக்கற புளிச்ச மோராம். அதுதான் ஊத்தி உப்பு போட்டுச் சாப்பிடணுமாம். எல்லோரும் போன்விடா, ஹார்லிக்ஸ் எல்லாம் சாப்பிடுவாங்களாம். இவளுக்கு வெறும் காபிதான். அதுலேயும் காலைலே எல்லோருக்கும் கொடுத்துட்டு இரண்டாவது தடவையிலே இறங்குற தண்ணி டிகாஷன்லே தான் காபி கலப்பாங்களாம். பாதி பாலு பாதி வென்னீர் கலந்து, தண்ணி டிகாஷன் ஊத்தி, இவளுக்குக் காபியாம். சமைக்கணும். எல்லா வேலையும் செய்யணும். ஆனா இவளுக்கு வேணுங் கறதை மாமியார் தான் வந்து எடுத்துக் கொடுப்பாங்களாம். தண்ணி பானையைக் கூடத் தொடக் கூடாதாம். தாகமெடுத்தா கூட மாமியார் வந்து தண்ணி ஊத்தி கொடுக்கற வரைக்கும் காத்துகிட்டு இருக்கணுமாம்.''

துரைசாமி அதிர்ச்சியோடு கேட்டுக் கொண்டிருந்தார். ''இந்த காலத்துலே கூட இப்படியா? ஆமா புவனா அவுங்க வீட்டுக்காரரு கிட்டே சொல்லாதா?''

''சொல்லாம எப்படி இருக்க முடியும்? கல்யாணம் ஆகி ஒரு மாசம் வரைக்கும் பொண்டாட்டி பசியோட இருக்காளேன்னு பிஸ்கட், பழம் எல்லாம் ராத்திரி சாப்பிட வாங்கிகிட்டு வருவானாம்.''

''நல்லவனாதானேம்மா இருக்கான்.''

''அட நீங்க வேற. மோகம் முப்பது நாள். ஆசை அறுபது நாள்னு சொல்லுவாங்க. ஒரு மாசம் தான். அப்புறம் எல்லாம் கண்டுக்கறதே இல்லையாம். புவனா வருத்தப்பட்டு சொன்னா கூட 'உனக்கு வேற வேலை யில்லே. குடும்பம்னா அப்படித்தான் இருக்கும். படி டினி கிடக்க பழகிக்கோ. உடம்பு ஆரோக்கியமா இரு கும்ங்'கறானாம்; யாராவது ஏதாவது திட்டினாங்கன்னு

மனசு வருத்தப்பட்டாக்கூட எப்பவுமே மத்தவங்களுக் காகத்தான் வக்காலத்து வாங்கி பேசுவானாம். அந்த வீட்டுலே புவனா பாவம்னு நினைக்கற ஒரு ஜீவன் கூட இல்லீங்க. உங்க ப்ரண்ட் கைல பைல ஒண்ணும் கேக்கலைங்கறதுக்காக அந்தப் பொண்ணை கட்டிக் கொடுத்து அது வாழ்க்கையையே கெடுத்துட்டாரு.''

துரைசாமி பெருமூச்சு விட்டார். 'பக்கா சுயநலம் பிடித்தவனாகி விட்டான் ஏகாம்பரம்; இன்று அந்த மூன்று பெண்களும் பயத்தோடு அழுததும் ஞாபகத்திற்கு வந்தது. அந்தக் குழந்தைகள் எப்படியாவது நன்றாக இருக்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது வாசலில் 'போஸ்ட்' என்று கத்த ஓடிப்போய் கடி தத்தை வாங்கிப் பிரித்துப் படித்தவர் அதிர்ந்து நின்றார்.

7

''என்னங்க... என்னங்க ஆசசு? கடிதாசியைப் படிச்சிட்டு ஏன் இப்படி ஆயிட்டீங்க? என்னங்க எழுதி யிருக்கு அதுலே?''

''நம்ப மூணாவது பொண்ணுக்கு நிச்சயம் பண்றோ மில்லே அவங்ககிட்டேர்ந்து கடிதாசி வந்திருக்கு.''

''என்னங்க எழுதியிருக்காங்க?''

''கல்யாணம் நிச்சயம் செய்வதற்கு முன் ஏதோ பேசணுமாம். நேரிலே வர சொல்லியிருக்காங்க.''

''என்னங்க பேசணுமாம்?''

''இல்லைம்மா... எழுதியிருக்கறதே ஒரு மாதிரி எழுதியிருக்காங்க. என்னன்னு தெரியலை'' முகத்தில் கலவரம் மின்ன அவர் பேச,

''என்னன்னு எழுதி இருக்காங்க.''

''என்னை உடனே வந்து பாருங்க. நிச்சயம் ஆவதற்கு முன் பார்த்தே ஆக வேண்டும். இல்லையென்றால் நிச்சயத்தை நிறுத்தி விடலாம் என்று எழுதி இருக்கிறார்.'' முகம் கலங்கிப் போய் இருக்க, மனதிற்குள்ளேயே இறுகினார் துரைசாமி.

''என்னங்க? இப்படி எழுதியிருக்காங்க?''

''தெரியலையேம்மா. நல்லவங்களாத்தான் இருந் தாங்க. ஏன் இப்படி எழுதியிருக்காங்கன்னு தெரி யலையே? சரி என்ன விஷயம்னு போய் பார்க்கிறேன்.''

அவருடைய கடைசி பெண் ரேணுகாவைப் பற்றி ஏதேனும் தெரிந்து கொண்டிருப்பார்களா? அதுவும் பக்கத்து வீட்டுப் பையன் தன் பெண்ணை மாய்ந்து, மாய்ந்து காதலித்து கண்டபடி கடிதங்கள் எழுதி பெண்ணின் பின்னாலேயே துரத்தி, துரத்தி வந்து, தாங்க முடியாமல் பெண் தன்னிடம் வந்து குமுற, கண்டித்ததும் தற்கொலை செய்து கொண்டாளே அந்த விஷயம் ஏதேனும் தெரிந்திருக்குமா? தெரிந்தால் என்ன? என் பெயரில் என்ன தப்பிருக்கு? மறுபடியும் மனம் குடைந்தது. தன் பெண் படிக்கும் கல்லூரியில் ஒரு விரிவுரையாளர் தன் பெண்ணுக்கு காதல் கடிதங்கள் எழுதியதும், பெண் தன்னிடம் சொல்ல, கல்லூரி முதல்வரிடம் கோபப்பட்டு தான் புகார் கொடுத்ததில் வேலையை ராஜினாமா செய்துவிட்டுச் சென்றாரே அந்த விஷயம் ஏதேனும் தெரிந்திருக்குமா. அதிலும் என் பெண்ணின் தவறு என்ன இருக்கு? இல்லை தன் தங்கை மகனே 'ரேணு ரேணு' என்று சுற்றிச் சுற்றி வந்து கட்டு கட்டாக காதல் கடிதங்கள் எழுதினானே கையும்

களவுமாகப் பிடித்து அசிங்கப்படுத்தியதில் ஊரை விட்டு ஓடிப் போனானே. அந்த விஷயம் தெரிந்திருக்குமா?

தன் பெண் ரேணுகா மற்ற பெண்களைவிட பளிச்சென்று இருப்பாள். துறுதுறுவென்ற முகம். பார்ப்பவர்கள் பார்த்துக் கொண்டே இருக்கத் தூண்டும் ஒரு தோற்றம். படிப்பிலும் நல்ல கெட்டி. எத்தனையோ பேர் காதல் வயப்பட்டு அவள் பின்னே அலைந்த போதும் தான் உண்டு படிப்பு உண்டு என்று இருப்பவள். பிள்ளை வீட்டார் எதற்காகக் கூப்பிடுகிறார்களோ தெரியவில்லையே.

உடனே துணியை மாற்றிக் கொண்டு கிளம்புகிறார்.

''ஏங்க ஏதாவது பிரச்சனையா இருக்குமா?''

''தெரியலைம்மா. பார்ப்போம். எதுவா இருந்தாலும் சந்திச்சுதானே ஆகணும். பார்ப்போம். பெண்ணுக்கு நல்ல இடம் கிடைத்தது என்று நினைத்தேன். அதற்கு ஒரு பங்கம் வந்து விடுமா என்ன? நல்ல மனிதர்கள் என்று நினைத்தேனே. வீட்டு வாசலைத் தாண்டுகையில் பெண் ரேடியோவில் ஏதோ பாட்டைக் கேட்டுக் கொண்டு, கண்ணை மூடி லயித்திருக்க, தன் பெண்ணுக்கு விஷயம் தெரிந்தால் என்ன ஆகும்? மனம் மருண்டது. பாவம் தன் பெண் மனது கஷ்டப்படப் போகிறதே என்று நினைத்ததுமே மனது நிலை கொள்ளாமல் தவித்தது. மனதை அடக்கத் தெரியாமலும், தேற்றிக் கொள்ளத் தெரியாமல் தவித்துப் போகிறார். தன் பெண்கள் எந்த விதத்திலும் துன்பப்படக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் துரைசாமி. பெண்ணுக்கு ஒரு கஷ்டம் என்றதுமே மனம் விண்டு போனது. பாவம் என் குழந்தை. பாவம். மனம் இதையே ஜபித்தது. 'இறைவா என் குழந்தையைக் காப்பாற்று. இந்த திருமணத்தை

எத்தனை ஆவலோடு எதிர்பார்த்திருப்பாள் என் மகள். திருமணம் முறிந்து விட்டால் என் பெண்ணுக்கு ஆறுதலைக் கூற முடியுமா என்ன? அந்தச் சின்னஞ்சிறு மனது வெடித்து விடாதா? இறைவா என் குழந்தையைக் காப்பாற்று. என்னைக் கை விட்டு விடாதே.' மருத்துவ மனையில் சேர்த்து விட்ட நோயாளிக்காக பிரார்த்தனை செய்வது போல் செய்கிறார். அவர்கள் வீட்டை நெருங்க நெருங்க மனம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது. 'என்ன கேட்கப் போகிறார்கள்? கடவுளே காப்பாற்று. என் பெண் மனம் உடைந்து போகும் வண்ணம் எதுவும் நடக்கக் கூடாது.'

வீட்டின் கேட்டைத் திறந்து கொண்டு அழைப்பு மணியை அழுத்துகிறார். மனம் படபடக்க, வாசலி லேயே நிற்கிறார். ரேணுவின் கணவனாகப் போகும் கல்லூரி பேராசிரியர் மாப்பிள்ளை தான் கதவைத் திறக்கிறார்.

''வாங்க..'' முகத்தில் கோபம் இல்லை. குரோதம் இல்லை. எரிச்சல் இல்லை. சிரித்த முகத்துடன் தான் வரவேற்கிறார். ''வாங்க.''

''அப்பாவைப் பார்க்கணும் தம்பி.''

''வந்திடுவார். உக்காருங்க. என்ன சாப்பிடறீங்க?'' மறுக்க, மறுக்க காபியைக் கொண்டு போய் கையில் கொடுக்கிறான்.

'வரவேற்பு எல்லாம் பலமாகத்தான் இருக்கிறது. என்ன கேட்கப் போகிறார்கள்' சிறிது நேரத்தில் சம்பந்தி ஆகப் போகிற பிள்ளையின் தந்தை வந்து அமர்கிறார்.

க்ஷேம நலங்களை விசாரித்த பின் மெதுவாக விஷயத்திற்கு வந்தார் துரைசாமி.

"வரச் சொன்னீங்களாம்."

"தனக்கு வந்த மொட்டைக் கடிதாசுகளை துரைசாமி மிடம் காண்பிக்க, துரைசாமி அதிர்ந்து போகிறார். அவர் நினைத்த அதே விஷயம். தனக்கு வேண்டாதவர் யாரோ இப்படி செய்திருக்கிறார்கள். யாராக இருக்கும்? மொட்டைக் கடிதாசியில் பெண்ணின் நடத்தையினால் எத்தனையோ பேரின் வாழ்க்கை கெட்டு விட்டதாக எழுதப்பட்டிருந்தது.

துரைசாமியின் சம்பந்தி துரைசாமியையே பார்க்க என்ன பேசுவதென்று பேச ஆரம்பித்தார். நடந்தவை களை மிகைப்படுத்தாமலும் சுருக்கமாகவும் உள்ளதை உள்ளபடி சொல்ல சொல்லக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மௌனம் சாதிக்க துரைசாமி மெதுவாக பேச ஆரம்பிக்கிறார்.

"இதுதான் நடந்தது. இதில் என் பெண்ணோட தப்பு எதுவும் இல்லை. யார் மொட்டைக் கடிதாசி எழுதியிருக் காங்களோ அவுங்களுக்கும் இது கட்டாயம் தெரிஞ் சிருக்கணும். ஆனா ஏன் இப்படி தப்பாக எழுதியிருக் காங்கன்னு தெரியலை?"

"உங்களுக்கு விரோதிகள் யாராவது இருக்காங்களா?"

"அப்படி யாருமே கிடையாதுங்க."

"உங்களுக்கு வேண்டாதவங்க தான் இதை செய்திருக் கணும்."

"தெரியலைங்க."

அவருடைய பதிலில் நேர்மை இருக்க, சம்பந்தியும் மௌனம் சாதிக்கிறார். 'என்னவென்று பேசுவது?' துரைசாமி மெதுவாக சொல்ல ஆரம்பித்தார்.

"எம் பொண்ணு மேலே எந்த வித மிஸ்டேக்கும் கிடையாதுங்க. பசங்க ஆசைப்பட்டானுங்க. எல்லாம்

வயசுக் கோளாறு. அவுங்க செய்த தப்புக்கு எம் பொண் ணுக்குதாங்க கெட்ட பெயர். விஷயம் கேள்விப் பட்டா எம் பொண்ணு தாங்குமோ தாங்காதோ. அதான் கவலையா இருக்கு. சரி இனிமே பேச என்ன இருக்கு. நான் வரேங்க" பேசி முடிக்கையில் குப்பென வேர்த்துக் கொட்டியது.

தான் சொல்வதை சம்பந்தி வீட்டார் ஒத்துக் கொள் வார்கள். ஒத்துக்கொள்ள வைக்க முடியும் என்று கணக்கு போட்டார். ஆனால் ஒத்துக் கொண்டார்களா இல்லையா என்பதே கேள்விக்குறியானது. திருமணம் நின்றால் தன் மானம் மரியாதை எல்லாம் காற்றில் பறக்கலாம். தன்னைப்பற்றி என்றுமே அவர் கவலைப்பட்டதில்லை. ஆனால் தன் பெண் நிச்சயமான திருமணம் நின்று போனால் துடித்து விடாதா? பாவம் தன் குழந்தை. நடந்ததை எல்லாம் சொல்லியாகி விட்டது. அவர்கள் யோசிக்க சிறிது நேரம் கொடுத்து தான் ஆக வேண்டும். மெதுவாக எழுந்து சற்று தலை குனிந்தவாறு நடக்கையில் "நில்லுங்க. என்ன கிளம்பிட்டீங்க?" என்கிறார் சம்பந்தியாக வரவிருந்தவர்.

"சொல்லுங்க" மிதமிஞ்சிய வருத்தம் கண்களைத் தாக்க சற்று வேதனையுடன் நிற்கிறார்.

"உக்காருங்க. இந்தக் கடுதாசியை நாங்க பெரிசாவே எடுக்கலே. இந்த விஷயம் எல்லாம் எங்களுக்கு முன்னாலேயே தெரியும்."

சொல்லச் சொல்ல அதிர்ச்சி அடைந்தவராய் அமர்ந் திருந்தார்.

"என்ன சொல்றீங்க? முன்னாடியே தெரியுமா? யார் சொன்னாங்க?"

''உங்க பொண்ணு ரேணுதான்.'' மருமகனாக வரப் போகும் பாஸ்கர் சிரித்தபடி கூற,

''என்ன சொல்றீங்க?''

''சார் பொண்ணு பாக்கும்போதே நாங்க தனியா பேசணும்னு சொன்னோம் தெரியுமா? அப்போதே உங்க பொண்ணு எல்லாத்தையும் சொல்லிட்டா. எதையும் மறைக்கலே. அதுக்காகவே எனக்கு அவளை ரொம்பப் பிடிச்சுது.''

''பின்னே எதுக்காக என்னை வரவழைச்சீங்க?''

''ஸார் உங்களுக்குத் தெரியணும். இந்த கல்யாணம் நடக்கறதுலே யாரோ ஒருத்தருக்குக் கட்டாயம் பிடிக்கலை. அவுங்க உங்க பிரண்டா, விரோதியான்னு எனக்குத் தெரியாது. பின்னாடி இது பெரிய பிரச்சனை ஆயிடும். அதுக்காகத்தான் உங்களை இங்க வரவழைச் சதே. மத்தபடி கல்யாணத்தை நிறுத்தவோ, வேறு எந்த காரணங்களாலோ அல்ல.''

துரைசாமிககு போன உயிர் வந்தது போல் ஒரு உணர்வு. மனம் மகிழ்ந்து இது நிஜமா? தன் பெண்ணை அவர்கள் நிராகரிக்கவில்லை. நிச்சயிக்கப்பட்டபடி பெண்ணின் திருமணம் கட்டாயம் நடக்கும் அல்லவா? ஒரு நீண்ட பெருமூச்சை விட்டார். அவரின் நெஞ்சு ஏறி தாழ்ந்தது. தனக்கும் ஒரு விடிவு காலம் என்பது வந்து விட்டது. சற்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவர் லேசாக அமர, ''இந்தாங்க இந்த லெட்டர். இது யாரு எழுதினாங்கன்னு கண்டு பிடியுங்க. உங்க விரோதியா இருந்தா அவர் கிட்டே ஜாக்கிரதையா இருப்போம். உங்க நண்பராக இருந்தால் நீங்கள் விழிச்சுக்கோங்க. எதுவும் கஷ்டம் வருமுன் நாம தப்பிச்சிக்கலாம்.''

மொட்டைக் கடுதாசியை வாங்கியவாறே தன் வீட்டை நோக்கி நடந்தார்.

'யாராக இருக்கும்?' மீண்டும் மீண்டும் கடிதத்தின் வாசகங்களில் அவர் மனம் செல்ல, கையெழுத்தை அணுகி ஆராய்ந்தார். 'குண்டு குண்டாக ஒரே சரியாக சற்று பெரிய தாக இருக்கிறது. யாருடையதாக இருக்க முடியும்?'

வீட்டிற்குப் போகும் சந்து திரும்பும்போதே மனைவி வாயிலில் வருத்தத்தோடு நிற்பது தெரிந்தது.

''என்னங்க ஆச்சு...''

''இதுதான் எல்லாத்துக்கும் காரணம்.'' கடிதத்தை மனைவியின் கையில் கொடுக்கிறார்.

வாங்கிப் படித்தவள் உறைந்து போகிறாள்.

''என்னங்க இதெல்லாம். நம்ம பொண்ணு அப்படிக்கு இல்லாதவ. அவளை நினைச்சு யார் யாரோ எப்படியோ நடந்துகிட்டா நம்ப பொண்ணு எப்படிங்க காரணமா இருக்க முடியும்? எனக்கென்னவோ பயமா இருக்குங்க. கல்யாணம் ஆனப்புறம் அவளை ஏதேனும் கேட்டாங் கன்னா,''

''சே! அந்த மாதிரி எல்லாம் இல்லே. நல்ல மனுஷங்க தான். இந்த மாதிரி வந்திருக்கே. என்ன பிரச்சனைன்னு கேட்கத்தான் கூப்பிட்டு இருக்காங்க. ஜாக்கிரதை. கல் யாணத்தை வச்சுகிட்டு பிரச்சனை பண்ணப் போறாங் கன்னு என்னை எச்சரிச்சு விட்டிருக்காங்க. வேற ஒண் ணும் தப்பா இல்லே. நான்தான் ரொம்ப பயந்துட்டேன்.''

''சரி அந்த லெட்டரை கொடுங்க. கிழிச்சுப் போட்டுற லாம். அத வச்சிட்டு என்ன பண்ணப் போறீங்க?''

''ஏய்... கிழிக்காதே. எங்கிட்டே கொடுத்துடு. எதுக்கும் இருக்கட்டும்.''

''எதுக்கு அது? இது யார் எழுதினான்னு தேடணுமா? வெட்டி வேலை.''

''சீ... சீ... யார் எழுதினாலும் எழுதட்டும். அதபத்தி என்ன? இன்னும் கல்யாண வேலை எல்லாம் பாக்கி இருக்கு. இப்ப போய் வேலை மெனக்கெட்டு இந்த வேலையை யார் செய்யப் போறாங்க?''

''பின்னே எதுக்கு இந்த லெட்டர்?''

''இருக்கட்டும்மா.''

கடிதத்தைக் கொடுத்து சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவாறே நகர்ந்தாள் பார்வதம். 'பெண்ணின் திருமணத்திற்கு குந்தகம் வந்திடுமோ என்று தான் எப்படி பயந்தோம். நல்லவேளை கடவுள் காப்பாற்றி விட்டார். மாலை கோயிலுக்குப் போய் ஈஸ்வரன் கோவிலில் அகல் விளக்கை ஏற்றி விட்டு வரவேண்டும். தாயார் சன்னிதியிலும் முக்கியமாக ஏற்ற வேண்டும். தான் எப்படி எல்லாம் பயந்து போனோம். அந்த ஈஸ்வரனும், அம்பிகையும் அல்லவா காப்பாற்றினார்கள்.'

கடிதத்தை வாங்கிப் பையில் வைத்துக் கொண்டாலும் துரைசாமியின் முகம் வாடி இருந்தது. சொல்ல முடியாத வாட்டம்.

பார்வதம் புரிந்து கொள்கிறாள். 'பாவம் கணவன்' சம்பந்தி வீட்டார் கூப்பிட்டதும் அரண்டு விட்டார்.

''ஏங்க ஒரு மாதிரி இருக்கீங்க? தலைக்கு வந்தது தலைப்பாகையோட போச்சேன்னு சந்தோஷப்படுங்க. நல்லவேளை, ஜாக்கிரதையா இருங்கன்னு எச்சரிக்கை

பண்ணிதானே விட்டாங்க. இதுலே வருத்தப்படறதுக்கு என்ன இருக்கு? கவலைப்படாதீங்க.''

''இல்லைம்மா இந்த காலத்துலேயும் மனுஷங்க இப்படி இருக்காங்களேன்னு அதிர்ச்சி, ஆச்சரியம்.''

''என்ன சொல்றீங்க?''

''பின்னே, யாருக்கும் எதுக்கும் நேரமில்லை. இப்ப கூட மொட்டை கடிதாசி எழுதறதும், அடுத்தவனைக் கெடுக்கறதும் இதெல்லாம் நடக்குதுன்னா மனுஷங்க மாறவே இல்லை. அவுங்க கெட்ட குணங்களை மாத்திக்கவே இல்லைன்னு அர்த்தம்.''

''ஏங்க ஒவ்வொருத்தருடைய குணங்க அது. லேசுலே மாறுமா என்ன? அடுத்தவனைக் கெடுக்கறதும், அடுத்தவன் வாழ்ந்தா பொறுக்காம அவன் பொழைப்பிலே மண்ணைப் போடறதும் காலங்காலமா இருந்துட்டு வரதுதானே. எத்தனை காலம் வந்தாலும் இதெல்லாம் மாறாது'' பார்வதம் சொல்லச் சொல்ல யோசனையில் ஆழ்ந்தார் துரைசாமி.

''என்னங்க இன்னும் யோசனை?''

''இல்லைம்மா. எனக்குதான் விரோதிங்களே கிடையாதே. இதை யார் எழுதியிருப்பாங்க. பொண்ணு விஷயம் தெரிஞ்சு எழுதறவனா இருந்தா கட்டாயம் நமக்கு தெரிஞ்சவனா தான் இருப்பாங்க. யார் அது? நம்ப பொண்ணு வாழ்க்கையை கெடுக்கணும். நம்ப குடும்பம் சீரழியம்னு செய்துருக்காங்க. அதுதான் ஏன்னு தெரியலையே. நாம் யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்ததில்லையே'' மனைவியிடம் புலம்புகிறார்.

''விடுங்க. எவன் செய்தானோ அவனுக்கு தான் செம ஏமாத்தம். கவலைப்படாதீங்க.''

''சரி. நான் அப்படியே வெளியே கிளம்பி தட்டான் வீட்டு வரைக்கும் போயிட்டு வந்துடறேன். பச்சைக்கல் நெக்லஸ் கட்ட கொடுத்திருந்தோம் இல்லே. அது ரெடியாயிடுச்சா இல்லையான்னு தெரியலை.''

''அப்படியே வாழைப்பூ பேட்டன் சங்கிலி வந்துடுச்சான்னு கேளுங்க. இந்த வாரத்துல வந்துடும்னு சொன்னாங்க.''

''பார்ப்போம்'' - தலையை ஆட்டியவர் அலமாரியிலிருந்து ஒரு பையை எடுக்க, ஒரு பாலிதீன் பையில் இருந்து அந்த மோதிரம் கீழே விழ, அதை எடுத்து ஆச்சரியமாகப் பார்க்கிறார்.

''இது என்ன பர்வதம் இதைப் போய் வச்சிருக்கே தூக்கிப் போடு. பித்தளையையா வச்சுப்பாங்க. அப்ப ஏதோ அசட்டு தனத்துலே வாங்கியது.''

''என்னங்க. அந்த மோதிரத்தை எனக்குக் கொடுங்க. எம் புருஷன் முதன் முதல்லே எனக்கு ஆசையா வாங்கிக் கொடுத்தது'' பர்வதம் மோதிரத்தை வாங்கி கன்னத்தோடு வைத்தபடி சொல்ல,

''என்னம்மா என்னை அசிங்கப்படுத்தறே?'' என்கிறார் துரைசாமி.

''இதுலே என்ன அசிங்கம் இருக்கு? நம்ம முதல் கல்யாண நாளுக்கு நீங்க ஆசை ஆசையாய் எனக்கு வாங்கிப் போட்ட மோதிரம்.''

''என்னம்மா நீ. எனக்கே அசிங்கமா இருக்கு. காசுக்கு வழியில்லே. வர சம்பளத்துலே அம்மா, அப்பா,

தங்கை, தம்பின்னு அவங்களுக்கு செய்யவே சம்பளம் பத்தலை. அதே சமயம் உனக்கு ஏதாவது செய்யணும்னு மனசு அடிச்சிகிட்டு இருந்தது. அதான்.''

பர்வதம் கணவனைப் பார்த்து புன்னகைக்கிறாள். ''விலையாங்க முக்கியம். தங்கமா இருந்தா என்ன? பித்தளையா இருந்தா என்ன? கொடுக்கணும்ங்கற மனசு தாங்க முக்கியம். ஒரு பொண்ணு கணவன்கிட்டே இருந்து எதிர்பார்க்கறது அப்பழுக்கில்லாத அன்பைத் தான். இந்த அன்பு எத்தனை பெண்களுக்கு கிடைக்குதுன்னு நினைக்கறீங்க. நம்ப அக்கா சரோ. அவுங்க வீட்டுலே எத்தனை கஷ்டம். புருஷன், புருஷன்னு எத்தனை செய்தாலும் அவ புருஷன் ஒரு கடுகளவு கூட அவளை உயர்த்திப் பேசியதே இல்லை. அக்கா கடைசியிலே மனம் உடைஞ்சே போயிடலே. நல்ல வேளை எனக்கு அப்பேற்பட்டவன் எல்லாம் வரலை. உங்ககிட்டே பிடிச்சதே உங்க பண்புதாங்க. தனக்கு கீழே இருக்கற பொண்டாட்டியை எத்தனை பேர் மதிக்கிறாங்க. பொண்டாட்டி தானேன்னு அலட்சியம் அவருக்கு. நியாயமா கொடுக்க வேண்டியதை எத்தனை பேர் தர்றாங்க? உங்க கிட்டே பிடிச்சதே அதுதாங்க. உங்கள்ள சரிபாதியாகத்தான் என்னை நீங்க நடத்தறீங்க.''

''நான் நடத்தறேனா? நீ தானேம்மா எல்லாத்தையும் பாத்துகிட்டு வந்தே. இல்லைன்னா இத்தனை தூரம் நான் வந்திருக்க முடியுமா? உன்னை மனைவியா அடைய நான்தாம்மா கொடுத்து வச்சிருக்கணும்.''

''இந்த வார்த்தைகள் தான் மனதை உற்சாகப் படுத்துது. இது வைட்டமின் மாதிரி. என் தங்கச்சி ஹேமா குடும்பத்தை கவனிக்குது. சம்பாதிச்சு போடுது. ஆனா அவ புருஷன் ஹேமாவை அடிச்சு துட்டுப் புடுங்கிப்

போறதோடு சரி. நம்ப பொண்டாட்டி இந்தனை செய்யறாளேன்னு மனதோடு ஒரு மூலையிலேயா நெனச்சு பாக்கலைங்க அவ புருஷன். நல்ல காலம்ங்க எம்புருஷன் அப்படி இல்லே.

நான் வீட்டோட இருக்கறவதானே. எனக்குன்னு தனி சம்பாத்யம் எதுவும் கிடையாது. ஆனா ஒரு மனைவிக்கு வேண்டிய மரியாதையை எத்தனை அழகா தந்திருக்கீங்க. உங்களை நினைச்ச எனக்குப் பெருமையா இருக்குங்க. உங்க நல்ல மனசுக்கு எந்தக் குறையும் இருக்காதுங்க. வரவும் வாது..." மனைவியின் வார்த்தைகள் புத்துணர்ச்சி தர. "சரி நான் கிளம்பறேன்மா" சொல்லி விட்டு துரைசாமி நகர. அவரையே பெருமையுடன் பார்க்கிறான் பார்வதம்.

பஸ்சை நெக்ஸல் கட்டி விட்டாரா என்று பார்த்துவிட்டு மனைவி கேட்ட வாழைப்பூ வடிவு சங்கிலியைப் பற்றி யும் கேட்டு விட்டு திரும்பிக் கொண்டிருந்தவரின் பார்வை யில் ஒரு மரத்தினடியில் அமர்ந்து சோக அழுது கொண்டு அமர்ந்திருக்கும் புவனாவைப் பார்த்து அதிர்ந்தார்.

8

"யாரது புவனாவா? ஏகாம்பரத் தின் பெண்ணா? அந்த அம்மன் கோவிலில் சற்று ஒதுக்குப்புறமாக இருக்கும் வேப்ப மரத்தின் அடியில் இருக்கும் அந்தக் கல்லின் மேல் அமர்ந்து கொண்டு அழுது கொண் டிருக்கிறாள். வேதனை, அதிர்ச்சி, வருத்தத்தோடு அவளின் முன்னால் போய் நிற்கிறார்.

"என்னம்மா இது? ஏம்மா அழறே?"

துரைசாமியைப் பார்த்ததும் பதறிப்போய் எழுந்திருக் கிறாள் புவனா.

ஏற்கெனவே வெளுப்பான முகம் இன்னும் சிவந்து போய், கண்கள் வேறு சிவந்து குழந்த மனதில் நீர்த்துளிகள் ஒட்டி இருப்பதைப் போல், கண்களில் கண்ணீர்.

"என்னம்மா ஆச்சு?"

"ஒன்னும் இல்லை அங்கிள்." சொல்லும்போதே குரல் தழுதழுத்தது. சற்று மேடிட்ட வயிறும், தளர்ந்து போய் கசங்கிப்போன புடவையும், கலைந்து போன தலையுமாக, தன்னீர் காணாத வாடிய பயிரைப் போல தோன்றினாள். துரைசாமிக்கு மனசு என்னவோ செய்தது. வயிறு கலங்கியது.

"ஏம்மா அழறே? என்னம்மா ஆச்சு? அப்பா ஏதேனும் திட்டினாரா?"

கலங்கிப் போன கண்களோடு அவரையே பார்த்தவள், 'இல்லை' என பாவனையாகத் தலையை ஆட்டுகிறாள்.

"ஏம்மா இங்க வந்து உக்காந்துகிட்டு இருக்கே?"

"எனக்கு போறதுக்கு இடமில்லை அங்கிள்..."

"என்னம்மா இப்படிப் பேசறே? என்னாச்சு? உன்னை உங்கப்பா ஏதாவது திட்டினாரா? அதுனால கோவிச்சு கிட்டு போகணும்னு பாக்கறியா?"

"இல்லை அங்கிள்."

"த பாரும்மா, எங்கிட்டே எதையும் மறைக்காதே. நானும் உன் அப்பா மாதிரிதான். என்ன விஷயம்னு சொல்லு. அப்பா என்ன சொன்னார்?"

சட்டென்று உடைந்து போய் அழுகிறாள்.

"என்னை எங்க வீட்டுக்குப் போகச் சொல்றாரு."

"என்னவாம்?"

"வீட்டை விட்டு ஒழியணும்னுதானே கல்யாணம் பண்ணி வச்சேன். உடனே வந்து கழுத்தை அறுக்குது அப்படீங்கறாரு."

"என்னாச்சம்மா அவனுக்கு?"

"ஒரு வாரமாவே அப்படிதாங்க இருக்காங்க. மூணு பேரையும் வெளியே போயிடுங்க. வெளியே போயிடுங்கன்னு சொல்லிகிட்டே இருக்காரு. அன்னிக்கு பொண்ணுக்கு நிச்சயம் செய்திருக்கேன்னு சொன்னீங்களே அதுலேந்து ஜாஸ்தியாயிடுச்சு. அம்மாவை திட்டிக்கிட்டே இருக்காரு. எங்களைப் பார்த்தாலே வெளியே போங்கன்னு சொல்றாரு. சாதாரணமா இருந்தாலும் புகுந்த வீட்டுக்குப் போயிடுவேன் அங்கிள். வளைகாப்பு முடிஞ்சு என்னை அழைச்சுகிட்டு வந்துட்டாங்க. இப்ப குழந்தை பிறக்காம நான் எப்படி புகுந்த வீட்டுக்குப் போக முடியும்? போ போன்னு தொரத்தறாரு. இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை ஆச்சே. வீட்டிலே இருக்கார். காலைல அம்மாவுக்கு உதவியா சாமான் கழுவிட்டு, காய்கறி நறுக்கிக் கொடுத்துட்டு வீடு கூட்டிட்டு இருக்கும்போதே அப்பா வந்தார். பாத்துட்டு, "இன்னுமா இங்க இருக்கறே வெளியே போ. உன்னைத்தான் கட்டிக் கொடுத்தாச்சு இல்லே. ஏன் இங்க வந்து இருக்குறே? போன்னு" சட்டென்று அழுகிறாள்.

கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக கூற தான் வெளியே வந்த கதையைக் கூறுகிறாள்.

"அடப்பாவி" என்று பல்லைக் கடித்தவர் "வா முதல்லே வீட்டுக்கு வா. அப்புறம் பேசிக்கலாம்."

"இல்லே அங்கிள். நான் எங்கேயும் வரலை. ஒரு ரெண்டு மாசம் குழந்தை பிறக்கற வரைக்கும் என்னை இருக்க விடக்கூடாதா? அப்புறம் ஏதேனும் சாக்கு போக்கு சொல்லிட்டு ஓடிப் போயிடறேன்."

"என்னம்மா பேசறே? பச்சைப் பிள்ளையை வச்சுகிட்டு புருஷன் வீட்டுலே என்ன செய்வே? அங்கே உன்னை சவரணையாவா நடத்துறாங்க."

"திக்கில்லாதவங்க என்ன அங்கிள் பண்ண முடியும்?"

"போதும், அழுதது போதும். குழந்தை வயித்துலே இருக்கும்போது எந்நேரமும் அழக் கூடாதுடா கண்ணு. யார் கண்டா உன் பையன் பிறக்கற நேரத்தில் அம்மாவுக்கு ராஜ மரியாதை வந்தாலும் வரும். முதல்ல என் வீட்டுக்குக் கிளம்பு. அப்புறம் வெயில் தாழ உங்க வீட்டுக்குப் போகலாம்."

புவனா தயங்க. "என்னம்மா புவனா? என்னை ஏன் வேறயா நினைக்கறே? வா. உன்னை இப்படி நிர்க்கதியா விட்டுட்டு வந்தேன்னு தெரிஞ்சாவே பார்வதம் ஆண்ட்டி கோவிச்சுப்பாங்க தெரியுமா? வா." வற்புறுத்திச் சொல்ல மெதுவாக அவரோடு போகிறாள் புவனா. வயிற்றில் மட்டுமல்ல. நெஞ்சிலும் பாரம். எதிர்காலம் என்பது என்ன ஆகும்? தனக்கு எதிர்காலம் என்று ஒன்று உண்டா? பார்ப்போம்."

ஏற்கனவே காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமல் இருக்கும் வயிறு. காலையில் காபி சாப்பிட்டதோடு சரி. சாதாரணமாக காலையில் டிபன் இருக்கும். ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் பத்து மணிக்கு சாப்பாடு. டிபன் கிடையாது. இன்று சாப்பிடுவதற்குள் திட்டி அடிக்காத குறையாக வெளியே அனுப்பி விட்டார் அப்பா. அப்பா

ஏன் இத்தனை மோசமாகி விட்டார். இந்த பத்து நாட்களாகவே அவர் சரியில்லைதான். மற்ற நாட்களில் அவர் பெரிய உத்தமமான தந்தை என்று பொருள் இல்லை. எப்போதாவது கோபம் வரும்போது 'வெளியே போ வெளியே போ' என்று துரத்துவார். மற்றபடி திட்டுக்களும் வசவுகளும் தான் எப்போதுமே கிடைக்குமே தவிர இந்த ஒரு வாரத்தில் கழுத்தில் கை வைத்து தள்ளியது போல் எப்போதும் தள்ளியதில்லை.

தங்களிடம் என்றாவது அன்பைக் காட்டி இருக்கிறாரா? யோசிச்சுப் பார்த்ததில் இல்லை என்றுதான் தோன்றியது. ஊர் உலகத்தில் தகப்பன்மார்கள் இல்லையா என்ன? அதுவும் இப்போது இருக்கும் தந்தைமார்கள் குழந்தைகளுக்காக உயிரைக் கொடுப்பவராகத்தான் இருக்கிறார்கள். ஆனால் தங்கள் தந்தை... அம்மா சற்று தேவலை. சராசரி அம்மாவாகத்தான் இருக்கிறாள். ஒவ்வொரு வீட்டில் பெண்கள் எது செய்தாலும் தேவ காரியம் போல் போற்றுவார்கள். ஆனால் அம்மா அந்த ரகம் அல்ல. அதே சமயம் பெண்களை வெறுப்பவளும் அல்ல.

ஏனோ எதை நினைத்தாலும் அழுகை வந்தது. துரைசாமியின் வீட்டை அடைந்தபோது, பார்வதம் உள்ளே கதவைச் சார்த்திவிட்டு தோய்த்த துணிகளை காயப் போட்டுக் கொண்டு இருந்தாள். காயப் போடும் போதே வாயிலில் இருக்கும் மர கேட் திறக்கும் ஒலி கேட்க, விறுவிறுவென்று ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறாள்.

"என்ன இத்தனை சீக்கிரம் வந்துட்டார். நெக்லஸ் ரெடியாகலையா" சொல்லிக் கொண்டே வந்து கதவைத் திறந்தவள் புவனாவையும், துரைசாமியையும் பார்த்ததும் ஒரு நிமிடம் விழிக்கிறாள்.

"வாம்மா புவனா? என்னங்க நெக்லஸ் செய்துட்டாங்களா? வாங்கிட்டு வந்திட்டீங்களா?"

"இன்னும் ரெடியாகலே நாளைக்குத் தரேன்னு சொன்னான்."

"புவனாவுக்கு சாப்பாட்டை போடு."

"இல்லை ஒண்ணும் வேண்டாம் அங்கிள்."

"த்சு... பேசாம இரு. காலைலேந்து ஒண்ணும் சாப்பிடலைம்மா."

பார்வதம் அதிர்ந்து போகிறாள்.

"என்ன ஆச்சு? முகமெல்லாம் வாடிப்போயிருக்கு. ஏம்மா வாயும் வயிறுமாக இருக்கும்போது நேரத்துக்கு சாப்பிட வேணாமா?"

"இல்லை ஆன்ட்டி பசிக்கலே."

"சரி.. சரி வா. உனக்காக இல்லேன்னாலும் குழந்தைக்காக சாப்பிடணும். உங்கம்மா உனக்கு சிறுகீரை துவட்டிப் போடணும்னு சொல்லிட்டிருந்தாங்க. கீரையே கிடைக்கலைன்னு சொல்லிட்டு இருந்தாங்க. சிறு கீரை சாப்பிட்டா கால் வீக்கமெல்லாம் போய் நல்லாயிடும். கர்ப்பிணி பெண்கள் கட்டாயம் சாப்பிடணும். நானே பொரியல் போல செய்து வச்சிருக்கேன். சரி இவரு சாயந்திரம் போகும்போது கொடுத்து அனுப்பலாம்னு நினைச்சேன். நல்ல வேளை நீயே வந்துட்டே."

மடமடவென்று பச்சை சுண்டைக்காய் குழம்போடு, சிறுகீரைப் பொரியல், கொஞ்சம் வாழைக்காய் பொரியல் போட்டு, அப்பளப் பூவை வறுத்துப் போட்டு "சாப்பிடும்மா" என்கிறாள்.

புவனாவிற்கு சாப்பாட்டில் கை வைக்கும்போது கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. 'தன்னை ஏதேனும் ஒரு ஜீவன் மதித்திருக்குமா? அப்பாவிற்கு பெண் என்றால் வேப்பங்காய். புருஷனுக்கு பெண் என்றால் அலட்சியம். அந்தக் காலத்தில் எப்படியோ தெரியாது. ஆனால் இந்த காலத்தில் பெண்டாட்டியின் வீட்டிற்கே போய் அவள் எப்படி இருக்கிறாள் என்று பார்த்து அவளை வெளியே அழைத்துச் சென்று வேண்டியதை வாங்கித் தந்து... எத்தனையோ கணவன்மார்கள் அப்படித்தான் இருக்கிறார்கள். ஆனால் தான் வந்து கிட்டத்தட்ட ஒரு மாதமாகிறது. கணவன் வந்து பார்க்கவும் இல்லை. தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் இல்லை. உனக்கு ஏதும் தேவையா என்று கேட்கும் நிலையிலும் இல்லை. எல்லாம் தான் வந்த நேரம்?'

''த பாரு புவனா சோத்தை வச்சுகிட்டு யாராவது அழுவாங்களா? வயித்திலே குழந்தை இருக்கும்போது எப்பவும் சந்தோஷமா இருக்கணும்மா. வருத்தப் படக்கூடாது. இதப் பாரும்மா நீ இப்படி வெளியே வந்தவுடனேயே என்ன நடந்திருக்கும்னு என்னால புரிஞ்சுக்க முடியுது. ஒரு குழந்தை பிறந்தவுடனேயே எல்லாம் சரியாகப் போய் விடும். கவலைப்படாதே. எந்த தாத்தா வாய் கொள்ளாது திட்டினாரோ அந்த தாத்தாவே பேரனை கீழே கூட விட மாட்டார் பார். சாப்பிடு.''

மௌனமாக சாப்பிடுகிறாள். காலையிலிருந்து பசித்த வயிற்றிற்கு ஆதரவான வார்த்தைகளோடு கூடிய சாப்பாடு அமிர்தத்தை விட சுவையாக இருக்கின்றது.

''இந்தா வெத்திலை பாக்கு போடு ஜீரணம் ஆகும். உள்ளாற போய் படுத்துக்கம்மா'' முதலில் சற்று தயங்கி

யவள் பின் மெதுவாக உள்ளே சென்று படுத்தவள் சிறிது நேரத்தில் உறங்கியும் போனாள்.

''என்னங்க பிரச்னை?'' பார்வதம் கேட்க, துரைசாமி மெதுவாக விஷயத்தைக் கூறுகிறார்.

''ஏங்க உங்க பிரண்டுக்கு புத்திகித்தி மழுங்கிப் போயிடுச்சா? ஏன் இப்படி நடந்துக்கறாரு.''

''ஆமா அவன் என்னிக்கு ஒழுங்கா நடந்துகிட்டு இருக்கான்? எப்பப்பாரு தப்பான பேச்சு. தப்பான எண்ணங்கள். தன் வயிற்றில் பிறந்ததையே நேசிக்கத் தெரியலேன்னா இவன் என்ன மனுஷன்? இவனால அப்புறம் யாரை நேசிக்க முடியும்?''

பின் வெகு நேரம் வரை துரைசாமியும், பார்வதமும் ஏகாம்பரத்தைப் பற்றி பேசுகிறார்கள். பேசிப் பேசி வாய் வலித்து, புவனாவின் நிலையைப் பார்த்து நெஞ்சு பாரமானது.

''சரி புவனாவை பாத்துக்க. எழுந்தா காபி, டிபன் கொடு. அப்புறம் அவுங்க வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறேன். இப்ப கொஞ்சம் வெளியே போய்ட்டு வரேன்.''

''ஏங்க இப்பதான் வந்தீங்க. சாப்பிட்டு விட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கக்கூடாதா? எதுக்கு உடனே ஓடணும்?''

''இல்லைம்மா. இன்னும் சத்திரக்காரனுக்கு அட்வான்ஸ் கொடுக்கணும். ஸ்பெஷல் மாலைக்கு எல்லாம் சொல்லிட்டு வரணும்.''

''சத்திரத்திற்கு சாயந்திரமா போய்க்கலாமே.''

''ஆனா அலங்காரம் பண்றவன் காலைலேதான் இருப்பான். மண மேடைக்கு அலங்காரம், ஸ்பெஷல் மாலை இதெல்லாம் இப்பதான் சொல்லணும்.''

"மாலைல என்ன இருக்கு? சாதாரணமா இருந்தா போதாதா?"

"ஏம்மா எப்படி சொல்றே? என்னதான் அவுங்க ஒண்ணும் வேண்டாம்னாலும் அதுக்காக எல்லாம் குறைக்கலாமா? கல்யாணத்தை அழகா நல்லா நடத்தணும்னு எனக்கு ஆசைம்மா."

"சரி உங்க இஷ்டம். சமையக்காரனுக்கு சொன்னீங்களா?"

"நம்ம கோபால் அய்யரைத் தான் கூப்பிட்டிருக்கேன். அதுக்கும் இப்ப போய் அட்வான்ஸ் கொடுத்திடப் போறேன்."

"ஏங்க அவுங்க ரொம்ப காஸ்ட்லி ஆச்சே."

"என்னம்மா இப்படி சொல்றே? அவரு சாப்பாடு குப்பரா செய்வாரு. என் பொண்ணு கல்யாணத்துக்கு வரவங்க எல்லாம் வயிறு நிறைஞ்சு மனசு நிறைஞ்சு அவளை வாழ்த்தணும்."

"எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே."

"என்னாச்சும்மா?"

"இல்லை நீங்களும் அப்பாதான். எந்த ஏகாம்பரமும் அப்பாதான். இரண்டு பேருக்குள்ளே எத்தனை வித்தியாசம்?"

"என்னம்மா. இதுலே என்ன இருக்கு? நம்ப குழந்தைங்கம்மா. நாமளே நேசிக்கலைன்னா யார் சீந்துவாங்க? என்னைப் பொறுத்தவரைக்கும் என் குழந்தைகள் சௌக்கியமா சீரும் சிறப்போடு இருக்கணும். அதுக்காக என்னவேணா செய்வேன். என் தலையை அடகு வைக்கணும்னாலும் வச்சுடுவேன்" உணர்ச்சி

பெருக்கில் அவர் பேசப் பேச, சட்டென்று அவரின் வாயைப் பொத்துகிறாள் பார்வதம்.

"என்னங்க. இப்படி எல்லாம் பேசறீங்க. நீங்க நல்லா இருந்தாதான் நாங்க நல்லா இருக்க முடியும்."

மனைவியை உணர்ச்சிப் பெருக்கோடு பார்த்தவாறு "நான் வரேம்மா" என்று கிளம்புகிறார். வீட்டை விட்டு சிறிது தூரம் நடந்து, மேம்பாலத்திற்கு வந்து திரும்புகையில் பாலத்தின் அடியில் ஒரு இளம் ஜோடி கிசுகிசுத்துக் கொண்டும், அந்தப் பெண் சிணுங்கிக் கொண்டும், பிள்ளை பெண்ணை சில்மிஷம் செய்து கொண்டும்... சட்டென்று கண்களை வேறு புறம் ஓட்டியவாறு வேகமாக நகர்கிறார். இந்த இடத்தில் ஒன்றா, இரண்டா ஜோடி ஜோடியாக உட்கார்ந்து உலகத்தையே மறந்தவாறு பெற்றோருக்குத் தெரிந்தும், தெரியாததுமாக... 'கடவுளே இந்த ஜோடிக்கு திருமணத்தை நடத்தி முடித்து விடு' மனதார வேண்டியபடி நகர்ந்தபோது.

"நோ... பேசாம இருங்க யாராவது பார்த்துட்டா... நான் போறேன்."

"ஏய்... நில்லு..."

"ம்... நான் மாட்டேன்..." பெண் எழுந்து ஓட முற்பட்டது போலும்.

"ஏய் விஜி நில்லு. முரண்டு பிடிச்சா அப்புறம் உன்னை நான் பாக்க வரவே மாட்டேன்." விஜி என்ற பெயரைக் கேட்டதும் சட்டென்று திரும்பிப் பார்க்கிறார் துரைசாமி. 'யார் ஏகாம்பரத்தின் கடைசி பெண்ணா?'

தன் முன்னே லேசாகக் கலைந்த ஆடையுடன் வேகமாக ஓடும் பெண்ணை பார்க்கிறார். விஜியும் அவரைப் பார்த்து விட்டாள் போலுள்ளது. பார்க்காதது

போல் பாவனையாக விழுந்தடித்துக் கொண்டு ஓட, கலங்கிப் போய் நிற்கிறார் துரைசாமி. 'இந்தப் பெண் எல்லாவற்றிலும் சிறியது. எப்படியெல்லாம் நடந்து கொள்கிறது. கட்டாயம் ஏகாம்பரத்தின் காதில் போட்டே ஆகவேண்டும். தறி கெட்டுப் போய் விட்டால்... இவன் ஒரு மடையன் சட்டென்று ஆக வேண்டிய காரியத்தை பார்க்கக் கூடாதா? வேண்டுமென்றே வருகிற வரன் களை எல்லாம் ஏதேனும் சாக்கு போக்கு சொல்லி திருமணம் ஆகாததுக்கு வழி தேடி... பின் தேடித் தேடி பெண்ணை பாழுங் கிணற்றில் தள்ளி... ம்... இவனெல் லாம் ஒரு மனிதன்.'

தன்னுடைய வேலைகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு ஏகாம்பரத்தின் வீட்டை நோக்கி செல் கிறார். சென்று என்ன செய்வது? உன் பெண் இவ்வாறு என்று கூற வேண்டியதுதான். பெண்ணை இரண்டு கூறாகப் போட்டு விட மாட்டானா? இதைச் சொல்லாமல் விட்டால் கட்டாயம் வேறு ஏதேனும் ஆகிவிடும். விஜி சென்ற பின் 'விஜி விஜி' என்று கத்திக் கொண்டே பின்னே செல்லும் அந்த இளைஞனையே பார்த்தார்.

அவன் இவர்கள் இனத்தைச் சேர்ந்தவனல்ல. எத் தனையோ முறை கல்லூரி வாயிலிலும், பஸ் ஸ்டாண் டிலும் பெண்களையே ஸைட் அடிப்பதைப் பார்த்திருக் கிறார். எத்தனையோ முறை மனதில் எரிச்சல் பட்டிருக் கிறார். நரி வலம், இடம் என்று மாறி மேலே விழுந்து பிடுங்கும் என்று யார் கண்டார்கள்? ஏற்கனவே ஏகாம் பரத்தின் மகள்கள் மிகமிகப் பாவம். திருமணம் என்பது ஒரு விடிவு என்று நினைத்திருக்கையில் இப்பேற்பட் டவன் மணமகனாக வந்தால் என்னாகும்? ஏகாம்பரத் திடம் பேசுவதை விட அந்தப் பெண்ணிடமே பேசினால்

என்ன? அந்தப் பையனைப் பற்றி முழுவதுமாகத் தெரிந்தால் அந்தப் பெண் விழித்துக் கொள்ளாதா? சொல்லிப் பார்ப்போம். கேட்கவில்லை என்றால் பின் ஏகாம்பரத்திடம் பேச வேண்டியதுதான். மனம் முழுவதை யும் இந்த எண்ணங்களே ஆக்கிரமித்து இருக்க, அக்கம் பக்கம் எங்கும் பார்க்காமல் வேக வேகமாக நடை போடுகிறார். ஏகாம்பரத்து வீட்டின் தெரு திருப்பத்தில் யாரோ மாமா என்று கூப்பிட, சற்று நின்று திரும்பிப் பார்க்கிறார்.

விஜிதான் பொலபொலவென்று கண்ணீரை உதிர்த்த படி நிற்கிறாள்.

''என்னை மன்னிச்சிடுங்க மாமா. அப்பா கிட்டே எதுவும் போட்டுக் கொடுத்துடாதீங்க. ப்ளீஸ்...''

''என்னம்மா இப்படிப் பேசறே? உனக்குக் கஷ்டம் கொடுக்கற மாதிரியா நான் ஏதேனும் செய்வேன் சொல்லு. அந்தப் பையனை எத்தனை நாட்களா உனக்குத் தெரியும்?''

''இல்லை... மாமா பக்கத்து வீட்டுப் பையன் தான். சாதாரணமாதான் பேசிக்கிட்டு இருந்தோம். ஆனா அவன் தப்பா நடப்பான்னு நினைக்கவே இல்லை.'' விஜி படபடவென்று பேசுகிறாள்.

சட்டென்று விஜியின் தலையைத் தடவிக் கொடுக்கிறார்.

''த பாரும்மா... நீ சின்ன குழந்தை. எதுக்கும் அவசரப் படாதே. உனக்கு முன்னாடி உங்கக்கா இருக்கா. அவளுக்குக் கல்யாணம் ஆகணும். ரெண்டாவது அந்தப் பையன் அத்தனை நல்லவன் இல்லைமா. பொம் பளைங்க காலேஜ் வாசல்லேயே இவன் திரிஞ்சுகிட்டு இருக்கறதை எத்தனையோ நாள் பார்த்திருக்கிறேன்.

பத்திரம். அவன் கூட சாதாரணமாகக் கூட பழகாதே. புரிஞ்சுதா.''

விஜி அவசரம் அவசரமாகத் தலையை ஆட்டுகிறாள்.

''ஏம்மா நான் சொன்னேன்னு எம்மேல கோபமா?''

''இல்லை அங்கிள் நீங்க நிஜத்தைதான் சொன்னீங்க. நான் சாதாரணமா பேசப் போனேன். ஆனா அந்தப் பையன் தப்பா நடந்துப்பான்னு நினைக்கலே. மன்னிச்சுக்கங்க. இனிமே மறந்து கூட அவன் கிட்டே பேச மாட்டேன். தயவு செய்து சாதாரணமாகக் கூட அப்பா கிட்டே சொல்லிடாதீங்க. அப்பா எப்படின்னு உங்களுக்கேத் தெரியும் இல்லே. அவர் மனுஷன்லேயே சேர்த்தி இல்லை. எங்கக்கா பாவம். பிரக்னன்டா இருக்கா. அவளையே ஈவு இரக்கம் இல்லாம துரத்தி விட்டவரு. அம்மா அக்கா போனதிலேர்ந்து அழுது கிட்டே இருக்காங்க. அக்காவை காணாம ரொம்பவே வருத்தப்பட்டுகிட்டு இருக்காங்க. இப்ப என்னைப்பத்தி ஏதாவது தெரிஞ்சா என்னை எங்கப்பா கொலையே செய்திடுவாரு.''

விஜி சற்று அழுகையோடு கூறக் கூற துரைசாமி தலை அசைத்தவாறு கூறுகிறார். ''ஏம்மா உன்னை ஆபத்துலே மாட்டற மாதிரி விஷயத்தை நான் ஏதேனும் செய் வேனா? பயப்படாதே. சரி நான் அப்புறமா வரேன். ஜாக்கிரதையா இரும்மா'' அவர் கிளம்பிச் செல்கையில் விஜி லேசாக நிம்மதிப் பெருமூச்சு விடுவது தெரிந்தது.

'ஏதோ இந்த மட்டும் அந்தப் பெண் நான் சொல்வதைக் கேட்டதே.'

சற்று சந்தோஷத்துடன் துரைசாமி நிம்மதியாக சத்திரக்காரன், மாலைக்காரன் எல்லாரையும் பார்த்து

விட்டு. முன் பணம் கொடுக்க வேண்டிய இடங்களில் கொடுத்துவிட்டு. சத்திரங்களில் இன்னும் சில அதிக சலுகைகளையும் தேவை என்று சொல்லி விட்டு, பூக்காரனிடம் மணமேடையை மிக அழகாக அலங் கரிக்குமாறு புது மோஸ்திரத்தில் மாலைகளை செய் யும்படி கூறிவிட்டு திருமணத்தை மாப்பிள்ளை வீட்டார் மூக்கின் மேல் விரலை வைக்கும்படி நடத்த வேண்டும் என்று நினைத்தவாறே இன்னும் என்னென்ன செய்து அசத்தலாம் என்று யோசித்தவாறே நடந்து வந்தபோது,

''உங்ககிட்டே எத்தனை சொன்னாலும் புரியாது.'' பழக்கப்பட்ட குரல் கேட்டு நிற்கிறார்.

''என்னம்மா.''

''பின்னே எங்கப்பா பிரண்டுக்கு முன்னாடியா அசிங்கமா நடந்துப்பீங்க. உடனே அது எங்கப்பா கிட்டே வத்தி வைக்க வந்திடுச்சு. அப்படி இப்படி டிராமா போட்டு ஓடி வர இத்தினி நேரம் ஆச்சு?'' சொல்லிவிட்டு அந்தப் பெண் சிரிக்க, கூடவே அந்தப் பையனும் சேர்ந்து சிரிக்க, சிரிப்பு வந்த திசையில் எட்டிப் பார்க்கிறார். காலையில் யாரைப் பற்றி சொல்லிவிட்டு வந்தாரோ அந்தப் பையனின் அணைப்பில் விஜி.

9

துரைசாமிக்கு சிரிப்பதா அழு வதா என்றே தெரியவில்லை. 'இளம் கன்று பயமறியாது என்பார்கள். அதற் கென்று இத்தனை நெஞ்சு தைரியமா? என்ன திமிர் இருக்கும்? காலையில் படித்துச் சொல்லியும் இப்படியா நடந்து கொள்வார்

கள்? அதில் என்னை ஏமாற்றி விட்டதாக சிரிப்பு.' ஒரு நிமிடம் நேரே போகலாமா என்ற யோசனை மறுநிமிடம் மனத்திலிருந்து எந்த எண்ணத்தை அழித்து விட்டு 'ஏகாம்பரத்திடம் போய் சொல்லிவிட வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டார். அவனுக்கு விஷயம் தெரிந்தால் என்னாகும்? என்ன ஆனாலும் இனி மறைக்கக் கூடாது. மறைத்தால் அதன் வாழ்வு பறிபோய் விடும். இந்த மக்குப் பெண்ணிற்கு அது புரியவில்லை.' மனதிற்குள் சொல்லிக் கொண்டு ஏகாம்பரம் வீட்டை அடைந்தபோது ''கொஞ்சம் உட்காருங்க மாமா அப்பா வந்திடுவாங்க.'' கௌரி சொல்ல அமர்கிறார்..

''அண்ணே ரேணுக்குக் கூட நிச்சயம் பண்ணிட் டேன்னு சொன்னீங்களே, பையன் எப்படி என்ன ஏது எல்லாத்தையும் விலாவாரியா சொல்லுங்கண்ணே.''

இங்கே செண்பகத்திடம் பெண்ணின் திருமணத்தைப் பற்றிப் பேசப் பேச அங்கே ஏகாம்பரம் பாலத்தின் வழியாக வந்து கொண்டிருந்தவர் தன் கடைசி மகள் விஜி வேறொருவனின் அணைப்பில் இருப்பதைப் பார்த்தவர் கோபத்தின் உச்சிக்கே போனார்.

''எம் மானத்தை வாங்கத்தான் பொறந்திருக்கீங்களா?'' என்று பெண்ணின் தலை மயிரை கொத்தாகப் பிடித்து ஆட்டியவர் பையனின் முகத்தில் பலமான ஒரு குத்தை விட்டார். அவனின் தலை மயிரையும் பிடித்து ஆட்டியவாறே,

''ஏண்டா எச்சக்கலை நாயி. பக்கத்து வீட்டுலே சோத்துக்கு டிங்கி அடிக்கிற நாயி. சொந்த வீடு வச்சிருக் கவன் பொண்ணு கேக்குதா என்ன?'' பெண்ணையும், பிள்ளையையும் மாறி மாறி அடிக்கிறார்.

''ஏய் பெரிசு... கையை எடுடா..'' விஜியின் காதலனாக இருந்த சிறுவன் பிடியை தளர்த்த, முடியாமல் கையைக் கடித்து விட்டு ஓட, விஜியின் தலை மயிரை இன்னும் கெட்டியாகப் பிடித்து உலுக்குகிறார் ஏகாம்பரம்.

''லவ்வா கேக்குது. வெட்டிப் போட்டுடறேன். உனக்கு மேலே அக்கா இருக்காளேன்னு பயம் இருக்குதா நாயி.''

விஜி பிழியப் பிழிய அழுகிறாள். அப்பா ஒரு ராட்சசன் அவரிடம் போய் மாட்டிக் கொண்டோமே தன்னைக் கொலை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

துரைசாமியிடம் பெண்ணின் திருமணத்திற்கான ஏற்பாட்டைக் கேட்டவள் சற்று பிரமிக்கிறாள். ''ஏன் அண்ணே இத்தனை செய்யப் போறேன்னு சொல்றீங்க. கையை விட்டு நிறைய போகாதா?''

''ஏம்மா நம்ம குழந்தைகளுக்குப் பண்றது. அதுலே போய் லாப நஷ்டக் கணக்கு பாப்பாங்களா? எத்தனை நல்லா நடத்தறோமோ அத்தனை லாபம் பெண் ணுக்குத்தான்.''

செண்பகத்தின் முகம் வாடிப் போனது. ''அண்ணா எத்தனை நல்லவிதமா சிந்திச்சிருக்கீங்க. ஆனா இங்கே? பொண்ணு கல்யாணம் நடக்குமா அப்படின்னு கவலைப்பட்டுகிட்டு...'' மறுபடியும் வேதனையோடு பேச, துரைசாமி பெருமூச்சு விடுகிறார். பாவம் எத்தனை தடவை வேதனைப்படுவாள். காலையில் விஜியைப் பற்றிப் பேச அவர் அங்கே வந்த போது விஜி காலைக் கட்டிக் கொண்டு அழ, சொல்ல வந்ததை சொல்லாமல், ஏகாம்பரத்தைப் பார்ப்பதாக பேர் பண்ணிக் கொண்டு வந்தபோது, எப்படித் துடித்து விட்டாள் செண்பகம்.

''என்னம்மா?'' கேட்டவுடன் பொல பொலவென்று கண்ணீர் உகுத்து.

''என் பெரிய பெண் புவனா... பாவம் அண்ணே... வயிறும் புள்ளையுமா இருக்கறதை வீட்டை விட்டு துரத்தி. அது அழுதுகிட்டே போச்சு. எங்க போச்சோ. காலையில் இருந்து வெறும் வயித்தோட இருந்துச்சு. நான் பதறிகிட்டு இருக்கேன். இவங்க... ருத்ர தாண்டவம் தான் ஆடிக்கிட்டு இருக்காங்க. இவர்கூட இருக்கவே முடியாதண்ணே. சொந்த குழந்தைகளை எதிரியா நினைச்சு...'' குமுறிக் குமுறி அழுகிறாள்.

''பேரனோ, பேத்தியோ வர நேரத்துல அந்தப் பொண்ணை வீட்டை விட்டு துரத்தி நம்ப வீட்டுப் பெண்கள் அழுதா வீடு விளங்குமா அண்ணே. என் குழந்தை பசியோட அழுதுகிட்டே போச்சு'' சொல்லும் போதே தாங்க முடியாமல் அழுகிறாள் செண்பகம். இந்த தவிப்பு நிஜம். ஒரு தாயின் தவிப்பு. கூடவே அழைத்துப் போன குழந்தையை திருவிழாவில் தொலைத்து விட்ட ஒரு தாயின் அழுகை.

''அழாதேம்மா. உன் குழந்தை எங்கேயும் போகலே. புவனா எங்க வீட்டுலே தாம்மா இருக்கு. அழாதே.''

''என்னண்ணே சொல்றீங்க?'' செண்பகம் ஆச்சரியமாய்க் கேட்க,

''காலைலே கல்யாண வேலையாய் வெளியே போனேன். புவனா மாரியம்மன் கோவில் வேப்ப மரத்தடியில் உக்காந்து அழுதுகிட்டு இருந்தது. நான்தான் வீட்டுக்கு அழைச்சுகிட்டுப் போய் சாப்பாடு போட்டு, எங்கூட வச்சிருக்கேன். வெயில் தாழட்டும் அழைச்சிட்டு வரேன்.''

அப்போது சற்று நிம்மதி பெருமூச்சு விட்டாள் செண்பகம். இருந்தும் முகத்தில் சோகத்தின் சாயல் போகவில்லை. இப்போதும் கணவனின் அடாவடி செயல்களும், குழந்தைகளின் வேதனைகளையும் பேசப் பேச மறுகிப் போகிறாள்.

''மன்னிச்சிடுங்க அண்ணே. என் வருத்தத்திலே உங்க சந்தோஷத்தையும் குறைச்சிட்டேன்.''

''இதெல்லாம் என்னம்மா?... உன் குழந்தைகளுக் கெல்லாம் கல்யாணம் ஆகி நீ நல்லா இருந்தா அதுவே போதும்.''

துரைசாமியின் வாழ்த்துக்களில் மனம் குளிர்ந்து போகிறாள் செண்பகம்.

''அண்ணே உங்க மாதிரி நல்லவங்க குடுக்கிற ஆசீர் வாதத்துலே நாங்க நல்லா இருப்போம் அண்ணே.''

சொல்லி வாய் மூடவில்லை. விஜியை கதறக் கதற தரதரவென்று இழுத்து வருகிறார் ஏகாம்பரம். செண்பகம் பதைபதைத்துப் போகிறாள். என்னதான் மூன்று குழந்தைகள் இருந்தாலும் அந்தக் கடைசி என்பது எப்போதுமே மிக மிக இஷ்டமானது தான். எல் லோருக்கும் ஒரு பங்கு போனால் அங்கு ஒன்றரை யாவது கிடைக்கும். மற்ற இரு பெண்களைப் பற்றி ஏகாம்பரம் குறை சொன்னாலும், வாய் மூடி கணவனே கண் கண்ட தெய்வம் என்பது போல் நடந்து கொள்ளும் செண்பகம் தன் கடைசிப் பெண் விஜியைப் பற்றி கணவன் ஏதேனும் சொன்னாலும் தூக்கிப் போட்டு விடுவாள். ''பாவம் அது சின்னக் குழந்தை. அதுக்கு என்ன தெரியும்'' என்பாள்.

தன் ஆசைக் குழந்தையை கணவன் தலை மயிரைப் பிடித்து இழுந்து வருவதைப் பார்த்து திடுக்கிட்டுப் போகிறாள். பதறிப் போகிறாள். தவிக்கிறாள். தன் குழந்தையால் தவறே செய்திருக்க முடியாது. வேண்டுமென்றே இழுத்து வரும் கணவனைப் பார்த்த உடனே எரிச்சல் வந்தது.

"ஏங்க. என்னங்க இது? உங்களுக்கு வேற வேலை இல்லையா?" அடுத்த நிமிடம் இடி இறங்கியது போல் ஒரு சப்தம். சென்பகம் கன்னத்தைப் பிடித்தவாறு கீழே விழுந்தபடி அலறுகிறாள்.

"பாவி மனுஷா நீ நல்லா இருப்பியா?"

"என்ன... என்னை சபிக்கிறாயா?" அடுத்த நிமிடம் புரட்டி, புரட்டி அடிக்க, சென்பகம் குய்யோ, முறையோ என்று கத்த, துரைசாமி ஓடி வந்து தடுக்கிறார்.

"என்னடா இது? எல்லோரையும் அடிச்சுகிட்டு... என்னாச்சு?" அவர் கேட்க, விஜி அவரையே முறைத்துப் பார்க்கிறார்.

"பொண்ணுங்க விளக்கு மாதிரின்னு சிலாகிச்சுப் பேசுவியே. இப்ப என்னடா சொல்றே? இதெல்லாம் சிவப்பு விளக்கா?"

"டேய் ஏகாம்பரம் போதும்டா. உன் குழந்தைகளா இருந்தா கூட அதுங்களை அசிங்கப்படுத்த ஒரு எல்லை இருக்கு."

"நான் அசிங்கப்படுத்தறேனா? இல்லை அதுங்க என்னை அசிங்கப்படுத்துதா?"

"என்னடா என்னென்னவோ பேசறே?"

"பேசாம... இதோ இந்த சனியன் இருக்கே, பட்டப் பகல்லே பப்ளிக்கா ஒரு பையனோட... கேவலாம். அப்படி என்னடா? இவளுக்கு மேலே ஒருத்தி இல்லே. அதுக்குள்ளே இவளுக்கு என்ன அவசரம்? எல்லாம் இவ கொடுக்கற இடம். பொட்டைங்களை அடக்கி வளருன்னு எத்தனையோ தடவை படிச்ச படிச்ச சொன்னேன். கேட்டாளா? அதான் ஊரே சிரிக்குது."

அவர் பேசப் பேச சென்பகம் அழுகிறாள். "இதப் பாருங்க. பெண் பாவம் பொல்லாது. நாக்குலே நரம் பில்லாம பேசாதீங்க. நீங்க அப்பாவா இருக்கறதுனால பிள்ளைங்களுக்கு கஷ்டம்தான். என்னிக்கு அதுங் களுக்கு ஆதரவா பேசி இருக்கீங்க."

அப்பாவும் அம்மாவும் சண்டை போட, கௌரி லேசான பெருமூச்சோடு பார்க்கிறாள். ஆயிற்று மகாபாரத யுத்தம் தொடங்கியாயிற்று. என்று முடியும்?

கௌரிக்கு ஒன்று மட்டும் தெரியவில்லை. அம்மாவிற்கு மூன்று பெண்கள். எல்லாமே அவளின் சொந்த பிள்ளைகள்தானே. இதில் கடைசி பெண் மட்டும் என்ன உசத்தி. அம்மாவிற்கு கடைசி பெண் என்றாலே பெருமிதம். ஏதோ பெரிய படிப்பு படித்து கலெக்ட ரானது போல்... இப்போதுதான் ப்ளஸ் டூ முடித்துவிட்டு கல்லூரியில் முதல் வருடம் படித்துக் கொண்டிருக் கிறாள். ப்ளஸ் டூவில் எண்ணூற்று ஐம்பது மார்க். அந்த மதிப்பெண்ணிற்கே அம்மா பெண்ணை புகழ்ந்து தள்ளி விடுகிறாள். "எம் பொண்ணு பாவம். செம புத்திசாலி கஷ்டப்பட்டு படிச்சு என்ன மார்க் வாங்கியிருக்கா தெரியுமா?" என்பாள். கௌரி சயின்ஸ் பிரிவு எடுத்து ஆயிரத்து நூற்று முப்பது வாங்கியிருக்கிறாள். அவளைப் பற்றி அம்மா ஒரு வார்த்தை கூட

பேசியதில்லை. ஒரு முறை அடுத்த வீட்டுப் பையன் ஆயிரத்து நூறு மார்க் என்று புகழாரமாக சூட்ட, ''என்னம்மா இது அவனை விட நான் இன்னும் முப்பது மார்க் அதிகம்'' என்று கௌரி சலித்துக் கொள்ள, அந்தப் பையன் ரொம்ப மக்கு. அது வாங்கிடுச்சே அதான் சொன்னேன்'' என்கிறாள்.

கௌரியைப் பொறுத்தவரை தன்னையும், புவனாவை யும் அம்மா மனுஷியாகவே மதித்ததில்லை. விஜியை மட்டும் அம்மாவுக்கு மிக அதிகமாகப் பிடிக்கும். நின்றால் அழகு, நடந்தால் அழகு என்று பெண்ணை உயர்வாகப் பேசிக் கொண்டே இருப்பாள். புவனா வேலையில், திறமையில் எத்தனையோ கெட்டிக்காரி. ஒரு தடவை கூட அம்மா மறந்துகூட புகழ்ந்ததில்லை. புவனாவை ஒரு முறை ஒரு பையனோடு சிரித்துப் பேசுகிறாள் என்று அவளை அறைந்து இழுத்து வந்தபோது, அம்மாவும் அல்லவா சந்தேகப்பட்டாள். இதே விஜிக்கு என்றால் வேறொரு தீர்வு. அப்பாவிடம் பாய்ந்து, பாய்ந்து சண்டை போடவும் தயாரா இருக் கிறாள். மறுபடியும் புவனாவை நினைக்கும் போது வேதனையாக இருந்தது. பாவம் எங்கே போனாளோ. ''போ.. போ என்று துரத்தி விட்டாரே. எட்டு மாத கர்ப்பிணி, சாப்பிடக்கூட இல்லாமல்,'' அவளை நினைக்கையில் அழுகை வர, அம்மாவும் அழுது கொண்டிருப்பதைப் பார்க்கிறாள்.

விஜியைக் கட்டிக் கொண்டு அழுகிறாள் அம்மா. ''அப்பனா இவன்? சின்னக் குழந்தையைக் கண்டபடி பேசி மனுஷனே இல்லை அவன். அழாதேடா கண்ணு. நான் இருக்கேன்டா உனக்கு.''

அம்மா சொல்லச் சொல்ல ஏனோ புவனாவிடம் அம்மா நடந்து கொண்டது ஞாபகத்துக்கு வர, வேதனையோடு பார்க்கிறாள் கௌரி.

'இந்தக் காலத்தில் குழந்தைகளை எவ்வாறெல்லாம் நடத்துகிறார்கள். நீ முதல் மார்க் வாங்க வேண்டும். விளையாட்டில் முதலாவதாக வரவேண்டும். குழந்தை களுக்காக பெற்றோர் படும் பாடு இருக்கே. ஆனால் தன் வீட்டில் முதலாவது வந்தாலும் அதைக் கொண்டாட யாருக்கும் மனதில்லை. யார் உற்சாகப்படுத்த வேண் டுமோ அவர்கள் உற்சாகத்திற்குப் பதிலாக அதிருப்தியை அல்லவா வெளியிடுகிறார்கள். பள்ளியில் வகுப்பில் முதலாவது வந்தாலும் வெளியில் சொல்ல வெட்கம். மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளக்கூட முடியாமல் தவித்த நாட்கள் ஏராளம்.

ஏனோ வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லைதான். ஆயிற்று இந்த வருடத்தோடு தன் படிப்பும் முடிந்து விடும். பி.எஸ்ஸி முடித்துவிட்டு மேலே எம்.எஸ்ஸி படிக்க வேண்டும் என்று ஆவல். ஆனால் அப்பா ஒத்துக் கொள்வாரா? பி.எஸ்ஸிக்கே தன்னை திட்டித் தீர்க்கிறார். தான் வாங்கிய மதிப்பெண்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். எம்.எஸ்ஸி இரண்டு வருடங்கள் படித்து அமெரிக்கா செல்ல வேண்டும். தன் ஆசைகள் நிறைவேறுமா பார்ப்போம். எல்லாவற்றையும் முடிவு செய்பவன் எங்கோ இருக்கும் அந்த இறைவன். அவன் என்ன செய்கிறானோ அதன்படி நடப்போம்.'

ஏதேதோ எண்ணங்களில் மூழ்கியிருந்தவளுக்கு துரைசாமி மாமா அப்பாவுடன் வெளியே போய் பின்

அக்காவை அழைத்து வந்தது ஆச்சரியத்தைத் தர, ''அக்கா எங்கே போயிட்டே?'' வாஞ்சையுடன் அவளின் கைகளைப் பிடித்தவாறு கேட்கிறாள். ''சும்மா கொஞ்ச நேரம் வெளியே போயிருந்தேன்.''

''புவனா எங்கேடி இத்தனை நேரம் போயிட்டே?'' அம்மா அருகில் வந்து மகளின் தோளில் கை வைக்கிறாள்.

''எங்கே போக முடியும்? எனக்குப் போக இடம் இருக்கா என்ன?''

கேட்கும் போதே கண்களில் வழிந்த கண்ணீரை துடைக்கிறாள் புவனாவின் தாயார்.

''சாப்பிட்டியாம்மா.''

''சாப்பிடாம. இந்த வயித்துக்காகத் தானம்மா இத்தனை அவமானமும்.''

''என்ன புவனா இது? அப்பா சுபாவம் உனக்குத் தெரியாதா? அவரால் வேற எப்படி பேச முடியும் சொல்லு. இதை பெரிசு படுத்திப்பாங்களா? அவரு போகச் சொன்னா நீ போகணுமா? பேசாம சாப்பிட்டுட்டுப் படுக்க வேண்டியது தானே?''

புவனா குற்றம் செய்ததுபோல் அம்மா பேசப் பேச, கௌரிக்கு எரிச்சல் வந்தது. தப்பு செய்கிற அப்பாவை ஒன்றும் செய்ய முடியவில்லை. பயந்து போய் ஒதுங்கிப் போகிறவளை மறுபடியும் குட்டுவது என்ன நியாயம்.

''அம்மா போதும் நீங்க ஒண்ணும் பேசாதீங்க. டெலிவரிக்குன்னு அழைச்சுகிட்டு வந்து போ... போன்னு யாராவது சொல்வாங்களா? சப்பைகட்டு கட்டறீங்களே. பாவம் அக்கா. உங்களுக்கு பயந்து

கல்யாணம் பண்ணிகிட்டு அங்கேயும் கொஞ்ச நஞ்சம் கஷ்டம் இல்லே. அத்தனையும் அனுபவிச்சுகிட்டு இருக்கா. உங்களால தான் அவ கல்யாணம் நடந்தது. பாவம் நம்பளாலதானே அவ இத்தனை கஷ்டப் படறான்னு கொஞ்சமாவது மனசுலே பச்சாதாபம் இருக்கா. இல்லே மனசுலே குற்ற உணர்ச்சியாவது இருக்கா? நல்லதைச் செய்தா தான் தாய் தந்தை. அதைத் தெரிஞ்சுக்க.''

''என்னடி இப்படி சண்டைக்கு வரே? உங்க அப்பன் வாரிசு ஆச்சே. அப்பனுக்குத் தப்பாம பொறந்திருக்கே...'' செண்பகம் எரிச்சலோடு பேச,

''போதும்மா. நாங்களே நொந்து இருக்கோம். நீ வெந்த புண்ணிலே வேலை பாய்ச்சாதே'' புவனாவும் சலித்துக் கொள்ள,

''அண்ணே பாத்தீங்களா? இவங்க அப்பா சொன்னதுக்கு நான் என்ன செய்வேன்? என்னை எதிரியா நினைக்கறாங்க. நான் என்ன செய்தேன்? அம்மா இருக்கற வரைக்கும் அம்மாவின் அருமை தெரியப் போறதில்லே. நான் போனாதான் என்னைப் பத்தி தெரியும்.'' துரைசாமி பேசாமல் உள்ளே போகுமாறு சைகை செய்ய, புவனாவும், கௌரியும் மௌனமாக உள்ளே போக,

''பாத்தீங்களா அண்ணே, குழந்தைகள், குழந்தைகள்னு நான் உருக உருக அவங்க என்ன பண்ணிகிட்டு இருக்காங்க பாருங்க.''

''என்னம்மா இப்படிப் பேசறே? நொந்து வந்தவங்கிட்டே இதை எல்லாம் பேசினா, இன்னும் வேதனை தானேம்மா அதிகமாகும்.''

"இல்லைண்ணே. என்ன பிள்ளைங்க. மனசு விட்டுப் போயிடுச்சு."

"என்னம்மா நீயும் சின்ன பிள்ளை மாதிரி. போம்மா நடக்க வேண்டியதைப் பாரு."

துரைசாமி பேசிக் கொண்டிருக்க, மெதுவாக வெளியே வருகிறாள் கௌரி. அறையினுள் போய் படுத்து விட்டாள் புவனா.

"அம்மா கோவிலுக்குப் போய்ட்டு வரேன்" சொல்லிவிட்டுக் கிளம்ப, அம்மாவிடமிருந்து பதில் இல்லை. அம்மாவுக்கு தங்கள் மேல் கோபம் என்று தெரியும். அதான் பதில் பேசவில்லை.

"ஆமாம் இவங்க கோபம் அப்பாவிடம் செல்லாது. விஜியிடம் கோபம் மாயமாய் மறைந்து விடும். மொத்த கோபமும் தங்கள் இருவரின் மேல் தான். அதுவும் புவனா புகுந்த வீட்டிற்குச் சென்ற பின் மொத்த கோபத்தையும் தன் பெயருக்கே குத்தகை எழுதி விட்டாளோ என்னவோ. வாயைத் திறந்தாலே தன் னைப் பார்த்தாலே அம்மா சள்ளென்றுதான் விழுவாள்.

மனதில் வேதனை, வருத்தத்தோடு கோவிலுக்குச் சென்றபோது அவளுக்கு மூன்று வருட மூத்த கல்லூரித் தோழன் அருண் வந்து நிற்க கவலைகளை சற்று மறக்கிறாள்.

"ஹாய்... என்ன திடீர்னு பக்தி வந்திடுச்சா?" அருணைச் சீண்ட,

"எல்லாம் தேவி தரிசனத்திற்காகத்தான் வந்தேன்" அருண் கிண்டலாகச் சொல்ல துரைசாமியும் செண்பகத் திடம் சொல்லிவிட்டு கோவிலுக்கு வந்தவர் பிரகாரத்

தில் அருகே அருகே அமர்ந்து சிரித்து சிரித்து பேசிக் கொண்டிருக்கும் அருண், கௌரியைப் பார்த்து அதிர்ந்து போய் நிற்கிறார்.

'இதுவுமா இப்படி இருக்கணும்' அவர் வாய் முணுமுணுத்தது.

10

அருண் தன் ரெண்டாவது மகளின் மச்சினன். கல்யாணத்திற்கு இருக்கும் பிள்ளை. பெரிய நிறுவனத்தில் உயர் அதிகாரியாக இருக்கிறான். தன் பெண் மீனா போன தடவை வந்த போதே சொல்லிக் கொண்டிருந்தாள்.

தன் கணவனின் தம்பிக்கு ஒரு நல்ல இடமாகப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருந்தாள். மாமியார் சற்று பணக்கார இடத்திலிருந்து பெண் வர வேண்டும் என்று சொன்னதாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். இவர்கள் வீட்டுப் பெண்ணை விரும்பு கிறான் என்று தெரிந்தால் என்ன ஆகும்? முதல் பெண் வீட்டார் போல் பிடுங்கும் ரகம் இல்லை. ஆனாலும் செய்வதை ஓரளவு நேர்த்தியாகச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள். ஏகாம்பரத்தால் செய்ய முடியுமா? முதல் பெண் திருமணத்திலேயே திருமணம் ஆன அன்றே டிபன் கிடையாது. யாரையும் கவனிக்காமல் தான் பெரிய அரசன் என்ற நினைப்பில் அல்லவா வளைய வளைய வந்தார் ஏகாம்பரம். துரைசாமிதான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு, பிள்ளை வீட்டாரை கவனித்து, திருமணம் முடிவதற்குள் போதும் போதும் என்றானது. இது இப்படி இருக்கையில் இளைய மகளுக்கு எப்படி திருமணம் ஆகும்?

தன் பெண் வீட்டில் அதிகமாக எதிர்பார்க்க வில்லையென்றாலும் செய்வதை நிறக்க செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள். இந்தப் பெண் வேறு சிரித்து, சிரித்துப் பேசுகிறதே!

நினைத்தபடி அவர்கள் அருகில் செல்ல, அதற்குள் அருண் அங்கிருந்து எழுந்து கிளம்பிச் செல்ல, மெதுவாக கௌரியை நோக்கி செல்கிறார். அருண் சென்ற பிறகு கௌரி ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருக்க,

''என்ன கௌரிம்மா'' என்றவாறே எதிரே போய் நிற்கிறார்.

''வாங்க அங்கிள்'' என்றவள் முகத்தில் பயம் இல்லை, பதட்டம் இல்லை வருத்தம் இல்லை. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மட்டும் இருப்பது தெரிந்தது.

'என்ன இந்தப் பெண் இத்தனை தைரியமாக இருக் கிறது. பயமே இல்லையா? இந்தக் காலத்து இளசு களுக்கு தைரியம் அதிகம்தான். தவறு செய்து விட்டால் கூட எத்தனை தைரியமாக இருக்கிறது.'

மெதுவாக அருகே அமர்ந்தவர் ''கௌரிம்மா...'' என்று ஆரம்பிக்கிறார்.

''என்ன அங்கிள்?''

''நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டியே.''

''என்ன அங்கிள் சொல்லுங்க?''

''இல்லேம்மா... அந்தப் பையன் யாரு.''

''யாரைச் சொல்றீங்க?''

''இப்ப சிரிச்சுச் சிரிச்சுப் பேசிகிட்டிருந்தியே. அவன்தான்.''

''யாரோட சிரிச்சுப் பேசிக்கிட்டு இருந்தேன்.''

''இப்ப ஒரு பையன் இருந்தானேம்மா அவன்தான்.''

''என்ன அங்கிள் நீங்க. அவன் எனக்கு இரண்டு வருஷம் சீனியர். காலேஜ் மேட் தெரிஞ்சவங்களாச்சேன்னு பேசிட்டுப் போறான். அவன் நல்ல வேலையிலே இருக்கான் அங்கிள். பி.கே.லே வேலை அங்கிள். சீ.ஏ.ப் எக்ஸிகியூட்டிவா இருக்கான்.'' கௌரி கண்கள் பளபளக்கச் சொல்லுகிறாள்.

''அவன் யாரு தெரியுமா? எம் ரெண்டாவது பொண்ணு மீனாவோட மச்சினன். மனுஷங்க நல்லவங்கதான். இந்தப் பையனுக்கு பெரிய இடத்துலே பொண்ணு பாக்கறாங்கன்னு கேள்வி'' அவர் மெல்ல சொல்ல,

''ஆமா அங்கிள் எனக்கு கூடத் தெரியுமே. பையனே ரொம்ப நல்லவன் அங்கிள். அவனைக் கட்டிக்கப் போற அதிர்ஷ்டசாலி யாருன்னு தெரியலை.'' சாதாரணமாகக் கூற, அசந்து போகிறார் துரைசாமி. அதற்கு மேல் என்ன பேசுவதென்று தெரியலை.

''என்ன அங்கிள் ஒரு மாதிரி இருக்கீங்க. தப்பான நடவடிக்கை ஏதேனும் இருக்குமோன்னு பயந்துட்டீங் களா?''

துரைசாமி பதில் பேசாமல் தலை குனிய,

''என்ன அங்கிள் நீங்க கூடவா இப்படி? எங்கப்பா தான் ஸ்குரூ லூஸ்னு நெனச்சுகிட்டிருக்கேன். நீங்க கூடவா. எப்படி அங்கிள் இப்படி பிஹேவ் பண்றீங்க?''

''ஸாரிம்மா..'' துரைசாமி உண்மையில் வருத்தப்பட,

''உங்களை எல்லாம் அங்கிள்... சொல்லக்கூடாது அங்கிள். நம்ம கல்ச்சர் அப்படி. பெண் என்னதான்

படிச்சாலும் வேலைக்குப் போனாலும் ஒரு ஆணோட சகஜமா பேசினா மத்தவங்க பார்வையிலே கேவல மானவளா ஆயிடறோம். அதனால யாரைச் சொல் லியும் குத்தமில்லே.''

துரைசாமி சற்று நேரம் இருந்தவர், பின் இருப்புக் கொள்ளாமல் ''சாரிம்மா நான் கிளம்புகிறேன்'' என்று சொல்லிவிட்டு சென்றுவிட, கௌரி சங்கடப்பட்டாள். மனிதர் சரியானபடி மோப்பம் பிடித்து விட்டார்.. கல்லூரியில் படிக்கும்போதே அருணுக்கு கௌரி என்றால் தனிப் பிரியம்தான். தான் முதல் வருடம் படிக்கும்போது, அருண் எம்.எஸ்ஸி முதலாண்டு படித்துக் கொண்டிருந்தான். கல்லூரி ஆண்டு விழாவில் நாடகம் பாட்டு, நாட்டியம் எல்லாவற்றிலும் இருவரும் பங்கெடுத்துக் கொள்ள சற்று நெருக்கம் ஏற்பட்டது. அருண் அவள் மேல் ஆசைப்பட்டானே ஒழிய கௌரி மறந்தும் இதையெல்லாம் நினைத்ததில்லை. தன் அப்பா போல் ஒரு அப்பாவை வைத்துக் கொண்டு காதலித்தால் அவமானம்தான் மிஞ்சும். அவளைப் பொறுத்த வரையில் எம்.எஸ்ஸி படித்து மேற்படிப்புக்கு அமெரிக்கா செல்ல வேண்டும். அதற்கான கவனத்தில் தான் முழுவதுமாக இருந்தாள். ஆனால் அருண் தான் விடுவதாக இல்லை. கல்லூரியை முடித்தும் இன்னும் அவளைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறான்.

''கௌரி என்ன டிசைட் பண்ணப் போறே? உன் படிப்பு வேற முடிஞ்சுடுச்சு இல்லையா?''

''சந்தேகமில்லாமல் மேல் படிப்புதான்.''

''உங்கப்பா படிக்க வைப்பாரா என்ன?''

''அவரை யார் லட்சியம் பண்ணப் போறாங்க. எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும்னு காலேஜ் பிரின்ஸி சொன்னாங்க. கிடைச்சதுன்னா பார்ட் டைம் வேலை பண்ணி படிப்பேன்.''

''கௌரி... கௌரி.. ஏன் சொன்னா கேட்க மாட் டேங்கறே? பேசாம என்னைக் கல்யாணம் பண்ணிகிட்டு என்ன படிக்கணுமோ படியேன்.''

''அருண் ப்ளீஸ் விளையாடாதீங்க. எங்க குடும் பத்தைப் பத்தி ஃபுல்லா தெரிஞ்சுமா பேசறீங்க. பேசாம உங்களை பெத்தவங்களுக்கு மதிப்பு கொடுத்து அவங்க சொல்ற பெண்ணை கல்யாணம் பண்ணிக்கங்களேன்.''

''த... பாரும்மா எங்க அம்மா அப்பாவுக்குச் செய்ய வேண்டிய அத்தனை டியூட்டிகளையும் ஒரு குறையில் லாம செய்துகிட்டுதான் வரேன். நான் கட்டிக்கப் போற நீயே வந்து செய்யாதீங்கன்னு சொன்னாலும் என்னை மாத்த முடியாது. ஆனா அதுக்காக என் பர்ஸனல் வாழ்க்கையைப் பணயம் வைக்க முடியாது. என்னோட வாழ்க்கை என் இஷ்டப்படி எனக்குப் பிடிச்சவளோட தான் நடக்கும். அது உன்னோடதான்.''

''ஓ.கே. அருண் நீங்க சொல்றதைச் சொல்லுங்க, நான் செய்யறதைச் செய்யறேன்.''

''கௌரி நான் விளையாடறேன்னு நினைச்சுகிட்டு இருக்கியா? ரொம்ப ஸீரியஸ்ஸா சொல்றேன்.''

''அருண் உங்ககிட்டேயும் பலமுறை நான் சொல்லி யாச்சு. என் பிரச்னை உங்களுக்கு புரியலைன்னுதான் தோணுது. உங்களைன்னு இல்லே யாரையுமே என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது. ஒரு ஆம்பளையின்

தயவு இல்லாம ஒரு பெண்ணால வாழ்ந்து காட்ட முடியணும். அதை சாதிச்சுக் காமிக்கணும்.''

''ஏன் அதை என் துணை கொண்டு செய்யக் கூடாதா?''

இப்படி அவர்கள் பேச்சு ஓடும் போதுதான் துரைசாமி வருகிறார். அம்மாவின் வாழ்க்கை, அக்காவின் அவல வாழ்க்கை, தங்களின் நிலை தெரிந்ததிலிருந்து லவ் என்றாலே பயமாகத்தான் இருக்கிறது. என் நிலைமை யார் புரிந்து கொள்வார்கள்? யோசனையிலேயே அமர்ந்திருக்கிறாள் கௌரி.

துரைசாமி மாமா கிளம்பியும் வெகு நேரம் வரை கோவிலிலே அமர்ந்திருக்கிறாள் கௌரி. ஏனோ வீட்டுக்கு செல்ல மனமே வரவில்லை. வீட்டில் அப்பா வின் திட்டுக்கள் சகோதரியின் அழுகைகள்... ம்... எல் லாமே வெறுத்து விட்டது. ஒரு ஒரு மணி நேரம் சென்ற பின் மெதுவாக எழுந்து வீட்டிற்குச் சென்றபோது, வீட்டிற் குப் போகாமலே இருந்திருக்கலாம் என்று தோன்றியது.

புவனா அக்கா வாயிலில் நின்று கொண்டு அழுது கொண்டு இருக்கிறாள். அப்பா எரிச்சலாக ''வெளியே போ'' என்று சொல்ல அம்மா கையைப் பிசைந்து கொண்டு இருக்கிறாள். விஜி திருதிருவென்று விழித்துக் கொண்டிருக்கிறாள்.

''நீயும் ஏண்டி நிக்கறே. வெளியே போ'' விஜியைப் பார்த்து அப்பா கத்த அம்மா விஜியை இழுத்து அணைத்துக் கொள்கிறாள்.

''என்னங்க பேசாம இருங்க. என் குழந்தையை ஒண்ணும் சொல்லாதீங்க.'' அதற்குள் சரமாரியான அறைகள் சென்பகத்தின் முகத்தில் விழ,

''அடப்பாவி கொல்றியே. நீ நல்லா இருப்பியா.'' சென்பகம் மூச்சைப் பிடித்துக் கொண்டு கத்துகிறாள்.

''எல்லோரும் போங்க. வெளியே போங்க. உள்ளே இருந்த அம்மா விஜி இருவரையும் வெளியே இழுத்து தள்ளி கதவை இழுத்து சார்த்த, சென்பகம் அவமானப் பட்டவளாய் அழுகிறாள். எதிர் வீட்டு, பக்கத்து வீட்டு ஜன்னல்கள் திறக்கின்றன. வாயிலில் நின்ற இரண் டொருவர் நின்று வேடிக்கை பார்க்க, இன்னும் சிலர் வந்து நின்று லேசான கூட்டம் போட, சென்பகத்தோடு புவனாவும் கூனிக் குறுகிப் போக பின்னால் வந்து நின்ற கௌரிக்கும் அசிங்கமாக இருந்தது. 'இந்த அப்பா என்றாவது மாறுவாரா? இல்லை இப்படியே தான் கடைசி வரை இருப்பாரா? தன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளையே யாராவது இப்படி வெறுப்பாங்களா? எல்லாம் தன் நேரம்? இன்னும் சற்று நேரம் கோவிலில் இருந்திருக்கலாம்.'

''ஏற்கனவே உங்கப்பன் ஒரு மாதிரி. இதில் நீ வேற வீட்டை விட்டு காலைலே போயிட்டேன்னு சொன்னதி லேர்ந்து உன்னை வீட்டுலே விடக் கூடாதுன்னு சொல்லிகிட்டு இருந்தார். அப்பாதானே திட்டினா திட்டட்டும்னு இருந்திருக்கலாமில்லே. இப்ப உன்னால் எல்லோருக்கும் கஷ்டம். பேசாம அண்ணன் வீட்டு லேயே இருந்துட்டு ஒரு இரண்டு நாள் கழிச்சு வந்திருக்கலாம் இல்லே.'' சென்பகம் புவனாவிடம் பேசி முடிக்க ''அம்மா என்ன பேசறே நீ?'' கௌரி கடிந்து கொள்ள, ''இவ இல்லாம போனா அப்பா நம்பளை எல்லாரையும் உள்ளாற விட்டுடுவார்.''

புவனா செய்வதறியாது திகைத்து நிற்கிறாள். திருமணம் ஆகா விட்டாலும் இந்த வீட்டு மூலையில்

பதுங்கிக் கொண்டாவது வாழ்ந்து விட்டுப் போயிருக்கலாம். ஆனால் இப்போது? வாழவும் முடியவில்லை சாகவும் முடியவில்லை. மௌனமாக அழுதவாறே ஒரு மூலையில் அமர.

''இப்ப அழுது என்ன பிரயோசனம்? அன்னிக்கே உனக்குத் தெரிய வேண்டாம்'' சென்பகம் தூக்கிப் போட்டது போல் பேச,

''அம்மா கொஞ்சம் பேசாம இருங்க. இந்த நேரத்திலே தான் கவனிப்பும், கவனமும் தேவை என்பார்கள். இங்க எல்லாமே தலைகீழா இருக்கு. நீ தாங்கலேன்னாலும் அவளைப் போட்டு மிதிக்காதே. பாவம் அக்கா'' என்கிறாள் கௌரி.

''என்னடி பறிஞ்சு பேசிக்கிட்டு இருக்கே. அத்தனை பேரும் தெருவுக்கு வந்ததுக்கு ஒருத்தர் இருந்திருக்கலாமில்லே.''

''போதும்மா. கொஞ்சம் கூட நல்லாயில்லே. டெலிவரிக்குன்னு கூப்பிட்டுகிட்டு வந்து புவனாவை இத்தனை அசிங்கப்படுத்த வேண்டாம். அப்பாதான் மோசம்னா நீங்களும் அவர்லே பாதி ஆயிட்டீங்களே.''

புவனா அசிங்கப்பட்டுப் போய் கண்ணீர் விட,

''அக்கா அழாதீங்க. எல்லாம் சரியாயிடும்.''

''இந்த ஒரு தடவை ஒரு நாலு மாசம் என்னை வச்சுகிட்டா போதும். அப்புறம் இந்தப் பக்கம் தலை வச்சு தொந்தரவு தர மாட்டேன்.''

''என்ன அக்கா இது, வருத்தப்படாதே. அப்பா எதையோ பார்த்துட்டு இந்த ஆட்டம். அவர் என்னிக்கு நம்ம கிட்ட சுமூகமா பேசி சந்தோஷப்பட்டு, நம்ம

துக்கத்துல துக்கப்பட்டு இருந்திருக்கிறார். இப்படி இருக்கிறது தானே அவர் நிஜமான முகம். வேற மாதிரி இருந்தாதான் ஆச்சரியப்படணும். நீ மட்டுமில்லே. நம்ப நாலு பேருமே வெளியே வந்திருக்கோம். பாப்போம். என்ன நடக்குதுன்னு? நீ கவலைப்படாதே.''

கௌரி சொல்லி முடிப்பதற்குள் இவர்கள் வீட்டுப் பக்கத்து வீட்டுப் பையன் சுந்தர் வருகிறான்.

''என்ன ஆன்ட்டி இது? எதுக்காக இங்கே நின்னு அழுதுகிட்டு இருக்கீங்க? நம்ப வீட்டுக்குப் போகலாம் வாங்க. அங்க போய் தங்கிட்டு அங்கிள் கோபம் தீர்ந்தப்புறம் வரலாம்.''

சுந்தரின் குரல் கேட்டதும் அதுவரை முகம் சுணுங்கி அழுது கொண்டிருந்த விஜியின் முகம் பளிச்சென்று ஆனது.

''வாம்மா... எத்தனை நேரம் இங்க இருக்கறது வா. போகலாம்'' என்கிறாள்.

''அம்மா... போக வேணாம்'' புவனா மெதுவாகச் சொல்ல,

''இத பாருடி நீ வரலேன்னா இங்கயே இரு. நாங்க போறோம்.''

புவனாவும், கௌரியும் வேறு வழியில்லாமல் அவர்களோடு நடக்க, ''கௌரி அந்தப் பையன் அத்தனை நல்லவன் இல்லே. விஜியும் அந்தப் பையனும்... உனக்கும் விஷயம் தெரியாதா?'' காதில் மெதுவாக புவனா கிசுகிசுக்க,

''விடுக்கா. இன்னிக்கு ஆக வேண்டிய வேலையைப் பார்க்கலாம்'' என்கிறாள் கௌரி.

சுந்தரின் தாயார் அவர்களை வரவேற்று, தங்க இடம் கொடுத்து பசிக்கு இரவு சாப்பாட்டை போட்டு, பரிமாறுகிறாள். செண்பகத்துக்கு எரிச்சல், ஆத்திரம், கோபம் வந்தது. 'என்ன மனிதன்... இவனுக்கு மட்டும் தான் அது வீடா? தனக்கு அதில் பங்கே இல்லையா? வெளியே போ என்று துரத்தினால் போயே ஆக வேண்டுமா என்ன? சுந்தரின் தாய் சற்று பணம் படைத்தவர்கள் ஆக இருந்தால் அவர்கள் உதவியை மனம் நன்றியோடு நினைத்திருக்கும் தங்களை விட கீழ் நிலையில் உள்ளவர்கள் என்றதும் மனம் ஒப்பவில்லை. வேறு வழியில்லாமல் உள்ளுக்குள் கணவனை திட்டியவாறே அமர்ந்திருக்கிறாள் செண்பகம். விஜி அதிசயமாக சுந்தரின் தாயாருக்கு உள் காரியங்களில் உதவி செய்கிறாள். புவனாவும், கௌரியும் எதிலும் ஒட்டாமல் அமர்ந்திருக்க, செண்பகம் கணவனை நொந்த படி அமர்ந்திருக்கிறார்.

அன்று இரவு எப்படி சாப்பிட்டோம், எப்படி தூங்கினோம் என்றே தெரியாமல் போனது. மறுநாள் காலை கௌரியோடு, புவனாவும் எழுந்திருந்து பார்க்கையில் அம்மாவைக் காணவில்லை.

''ஆன்ட்டி அம்மா எங்கே?'' இருவரும் கேட்க,

''உங்கம்மா விடியறதுக்குள்ளே எழுந்து போயிட்டாங்களேம்மா.''

இருவரும் விழித்தனர். காலையிலிருந்து அப்பா என்ன திட்டு திட்ட ஆரம்பிப்பாரோ, நினைத்தவாறே எட்டிப் பார்க்க அம்மா சமையல் அறையில் சமையல் செய்து கொண்டிருப்பது தெரிந்தது. சமாதானம் ஆகி விட்டாற் போல் இருக்கிறது. சமாதானம் என்றால் இன்று

முழுவதும் அப்பா வாயைத் திறக்க மாட்டார். கௌரி லேசான பெருமூச்சு விட்டாலும், புவனா பயத்தில் ஆழ்ந்திருப்பது தெரிந்தது. இந்த சண்டையும், சச்சரவுமாக எத்தனை நாட்களை கழிப்பது? இதெல்லாம் எப்போதும் சுமுகமாக, சமாதானமாக, சந்தோஷமாக சிரித்துப் பேசும் நாள் வருமா? புவனாவின் எண்ணத்தை புரிந்து கொண்டது போல் கௌரி அவளின் தோளை லேசாக அழுத்துகிறாள். ஆயிற்று மறுபடியும் வீட்டு வாசம். ஒவ்வொருவராக வீட்டிற்கு போய் சேர்ந்து வீடு இருக்கும் சுவடே கூட யாருக்கும் தெரியவில்லை. யாரும் யாரோடும் பேசவில்லை. கௌரி புவனாவிடம் கிசுகிசுத்த குரலில் தான் பேசுகிறாள். விஜி அம்மா முந்தானையின் கீழே இருக்கிறாள். சமயம் கிடைக்கும் போது சொல்லாமல் கொள்ளாமல் அடுத்த வீட்டுக்கு ஓடி விடுகிறாள். புவனா மட்டும் இதை கண்டு கொள்கிறாள். ஆனால் என்ன செய்வது? ஏதாவது தெரியப் போனால் ஏற்கனவே பேயாட்டம் போடும் தந்தை இன்னும் பெரிய ராட்சஷனாகி விடுவார். அம்மாவுக்கு அந்தப் பெண் மிக அருமை. அதனால் தப்பித் தவறிக்கூட அவளைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. புவனா தவித்தபடிதான் இருக்கிறாள்.

இயந்திர கதியில் வேலைகளை செய்து விட்டு அவரவர் அப்பாவின் கண்களுக்குப் படாமல் இருக்க முயற்சிக்க வீட்டின் முன் ஆட்டோ வந்து நிற்கும் ஒலி. யாராக இருக்கும்? மெதுவாக அறையை விட்டு வந்த புவனா எட்டிப் பார்க்க ஆட்டோவில் இருந்து இறங்கிய பெண்மணியைப் பார்த்ததுமே ஆச்சரியமாகப் பார்க்கிறாள். இவள் எப்படி நம் வீட்டில்? வந்தவள் நேரே

கௌரியின் முன்னால் வந்து நிற்கிறாள். துரைசாமியின் இரண்டாவது மகள் மீனாதான். புவனா மட்டுமல்ல, கௌரியும் எட்டிப் பார்க்கிறாள்.

முதல் நடந்த களேபரத்தில் சரியாக தூங்காத சென்பகம் அறையில் தூங்கிக் கொண்டிருக்க, ஏகாம்பரமும் தன் அறையில் சற்று கண் அயர்ந்திருந்தார்.

''இவங்க எதுக்கு இங்க வராங்க?'' கௌரி முணுமுணுக்க புவனாவும் புரியாமல் விழிக்கிறாள். இவர்கள் எல்லோருக்குமே துரைசாமிதான் பழக்கம். அவர்கள் வீட்டுப் பெண்களை என்றோ கல்யாணங்களில் பார்த்ததோடு சரி. ஒரு நிமிடம் ஆச்சரியத்தோடு அந்தப் பெண்ணையே பார்க்க, இறங்கியவள் கடுகடுத்த முகத்துடன் உள்ளே வந்தவள் கௌரியையே எரித்து விடுவது போல் பார்க்கிறாள்.

''நீதான் கௌரியா?''

11

''ஆமா'' என்று ஆச்சரியப்பட்ட கௌரி? ''நீங்க துரைசாமி அங்கிளோட பொண்ணு தானே. என்ன விஷயம்,'' லேசாக புன்னகைத்த வாறே கேட்கிறாள்.

''என்னடி சிரிக்கறே? என்ன விஷயம்னா கேக்கறே? உனக்குத் தெரியாது.''

''என்னங்க நீங்க? வர்றீங்க. முறைச்சுப் பாத்தீங்க? ஏதேதோ பேசறீங்க? என்னாச்சு?'' புவனா சகஜமாகக் கேட்க,

''த... பாரும்மா... உங்கிட்டே நான் பேச வரலே. இவ கிட்டேதான் நான் பேசணும்.''

புவனா மௌனமாக இருக்க.

''என்ன பேசணும் உங்களுக்கு?'' கௌரி கேட்க,

''இத பாரும்மா என் மச்சினனை தயவு செய்து விட்டுடு. அவருக்கு வேற நல்ல இடத்துலே சம்பந்தம் பேசிகிட்டு இருக்கோம். உன்னால வேற கல்யாணம் செய்துக்க எம் மச்சினன் ஒப்பலை. மாமியாரெல்லாம் ரொம்ப வருத்தமா இருக்காங்க,'' சற்று மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க சொல்ல,

''இத பாருங்க. உங்க மச்சினர் கல்யாணம் கட்டிக்கலைன்னா அவர் கிட்டே பேசுங்க. என்கிட்ட பேசி என்ன பிரயோஜனம்?''

''இத பாரும்மா... சும்மா பூசி மெழுகாதே' நீ இல்லேன்னா இல்லைன்னு அர்த்தமா? கட்டினா ஒன்னைத் தான் கட்டிப்பேன்னு ஒரே அமர்க்களம். அதுதான் உன்னைப் பார்த்துட்டு வரலாம்னு வந்தேன்.''

''இதப் பாருங்க என் மனசுலே உங்க மச்சினனைப் பத்தி எந்த நினைவுகளும் கிடையாது. இப்ப கல்யாணம் பண்ணிக்கற எண்ணமும் எனக்கு கிடையாது. உங்க அருண் கிட்டேயே நேராகவே சொல்லியாச்சு. அதுனால எனக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது'' அழுத்தம் திருத்தமாக கௌரி சொல்லச் சொல்ல,

''இத பாரும்மா. எங்களை சமாதானப்படுத்தறதுக்காக சொல்றயா என்னன்னு தெரியலை. இதெல்லாம் வேலைக்கு ஆகாது. முதல்லே நீ கல்யாணத்தை பண்ணிக்க. அப்புறம் எல்லாம் சரியாப் போயிடும்.''

கௌரிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை திருமணமே வேண்டாம் உயர் படிப்பு படிக்க வேண்டும் என்று தான் கனவு காண, தனக்கு சிறிதும் சம்பந்தமில்லாத பெண் வந்து தன் வாழ்க்கையை நிச்சயிக்க முயற்சிக் கிறாள்.

''என்னம்மா நான் சொல்றது கசப்பா இருக்கா? என் மைத்துனருக்கு ஒரு நல்லது நடக்கணும்னா அது நீங்க வழிவிட்டாதான்'' மீனா சற்று குரலை உயர்த்தி அதிகார தோரணையில் கத்த, படுத்திருந்த செண்பகம், ஏகாம் பரம் எல்லோருமே எழுந்து வந்தனர்.

''என்ன இங்கே கலாட்டா, யாரு...'' மீனாவைப் பார்த்து அடையாளம் தெரியாமல் கேட்கிறாள் செண்பகம். திருமணத்திற்கு முன் கொடி போன்ற உடலோடு இருந்த பெண் இன்று இடுப்பு, வயிறு பருத்து பூசணிக்காய் போல இருந்ததால் அடையாளம் தெரியவில்லை.

''நான் மீனா மாமி. துரைசாமியோட மக.''

''அடேடே வாம்மா'' ஏகாம்பரம் வரவேற்க,

''என்ன மீனா நல்லா பெருத்துட்டியே. அடையாளமே தெரியலையே'' என்கிறாள் செண்பகம்.

''ஆமா என்னம்மா விஷயம்?'' சிவகாமி கேட்க மீனா சொல்லச் சொல்ல காலையிலிருந்து அமைதியாக இருந்த ஏகாம்பர எரிமலை வெடித்தது.

''படிச்சு.. படிச்சு சொன்னேனடி, கேட்டியா? பொண் ணுங்க பொண்ணுங்கன்னு ஓவர் செல்லம் கொடுத்தியே. இப்ப என்னாச்சு பார்த்தியா?'' ஏகாம்பரம் கேட்க,

''எந்த புத்துல எந்தப் பாம்பு இருக்கும்னு எனக்கு என்ன தெரியும்?'' யாரோ பெண்களைப் பற்றி பேசுவதுபோல பேச, புவனாவும் கௌரியும் நொந்தே போனார்கள். அம்மா ஏன் இங்கிதம் இல்லாமல் பேசு கிறார்கள்.

''இப்ப புலம்புடி. ஆரம்பத்துலேருந்து பொண்ணுங் களை அடக்கி வை, அடிச்சு வளன்னு சொன்னேன். கேட்டியா? மீதி ரெண்டு தாம் தரம் கெட்டுப் போச்சு இதுவாவது தேவலைன்னு நினைச்சேன். எல்லோரையும் மிஞ்சிடுச்சு.''

கௌரிக்கு ஆத்திரம் வந்தது. 'என்னதான் பெற்றோர் என்றாலும் அதற்கும் ஒரு எல்லை இருக்கிறது அல்லவா? ளரில், உலகத்தில் இருக்கும் பெற்றோர் போல் தன் பெற்றோர் இருந்தால் எதைச் சொன்னாலும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் எல்லாமே வேற ஜாதி. தான் என்ற சுயநலம் நிரம்பி இருப்பவர்கள். தன் வயிற் றில் பிறந்தவற்றை கூட அசலாக நினைப்பவர்கள்.'

''என்ன முறைக்கறே?'' ஆத்திரத்தில் ஏகாம்பரம் கையை ஓங்கியபோது,

''நிறுத்துங்க ஒரு அடி மேலே விழுந்தா...''

''என்னடி துளுத்துப்போச்சா?'' என்றவாறே பல்லைக் கடித்தபடி நெருங்குகிறார் ஏகாம்பரம்.

''யாரோ ஏதோ சொன்னாங்கன்னு சொந்த பொண்ணை சந்தேகப்படுவாங்களா?'' கௌரிப் பல்லைக் கடித்தபடி கேட்க,

''இதப் பாரும்மா ஜாடையா பேசற வேலை எல்லாம் விட்டுடு. இப்படி ஏதாவது பேசுவேன்னு தெரிஞ்சுதான்

கையோடு போட்டோவை எடுத்துகிட்டு வந்திருக்கேன்'' மீனா அதிகாரத் தோரணையில் கத்துகிறாள். கையோடு எடுத்து வந்திருந்த இரண்டு போட்டோக்களை ஏகாம்பரத்திடம் தர, ஆத்திரத்துடன் பார்க்கிறார் ஏகாம்பரம்.

ஒன்றில் அருகருகே நின்றவாறு அருணும், கௌரியும் போட்டோ எடுத்துக் கொண்டிருக்கின்றனர். இன்னொன்றில் இடுப்பளவு போட்டோ க்ளோஸப் இருவரும் அருகருகே சிரித்தவாறு...''

''அத்தனை பேசினியே கழுதை என்னது இது?''

''போட்டோஸ்.''

''அவன் என்ன உனக்கு புருஷனா? பக்கத்துலே நின்னு போட்டோ எடுத்துக்கிட்டு இருக்கே'' ஏகாம்பரம் எகத்தாளமாகக் கேட்க,

''அப்பா அதிகம் பேசாதீங்க. பக்கத்துலே நின்னு போட்டோ எடுத்துகிட்டா புருஷனாதான் இருக்கணுமா என்ன? அவர் என் காலேஜ்மேட். பெஸ்ட் ஃப்ரண்ட். என் ஸீனியர்.''

''இந்த பசப்பு வேலையெல்லாம் என்கிட்டே வேணாம். உன்னை காலேஜுக்கு அனுப்பினதே படிக்க.''

''படிக்காம என்ன செய்துட்டேனாம்.. த்ரோ அவுட் பர்ஸ்ட் கிளாஸ். இரண்டு சப்ஜெக்ட்லே கோல்ட் மெடல் வாங்கியிருக்கேன்.''

''போதும்டி உன் பெருமை. மெயின் சப்ஜெக்ட்லே வாங்கலையே. இது என்ன பெருமை.''

''அப்பா இங்க யாரும் பெருமைப்படுத்திக்கலை. நீங்கதான் தேவை இல்லாமல் அசிங்கப்படுத்தறீங்க.''

''வாய்க்கு வாய் பேசறியா நீ'' கையை ஓங்கி அடிக்கப் போக,

சட்டென்று அந்தக் கையை இறுக்கமாகப் பிடிக்கிறாள் கௌரி.

''என்னடி செய்யறே அத்தனை துணிஞ்சிட்டியா?'' ஏகாம்பரம் ஆத்திரப்பட,

''அப்பா அம்மான்னு மட்டு மரியாதை வேணாம்'' அம்மா புலம்ப,

''போதும்மா, புலம்பாதே. இத்தனை நாள் அப்பா தான் எங்களுக்கு இல்லைன்னு நினைச்சேன். இப்பதான் அம்மாவும் இல்லை என்று தெரிஞ்சுது.''

''பாத்தீங்களா? இதைப் போய் பெத்தோமேன்னு இருக்கு. அப்பா சொல்றாரு, திட்டறார்னு சொல்றீங்களே. அவர் திட்டறதுலே என்ன தப்பு. அவர் திட்டற மாதிரி தானே நடந்துக்கறீங்க. எதுக்கு உங்களுக்கு இத்தனை அவசரம். நாங்க கல்யாணம் செய்து வைக்க மாட்டோமா?'' அம்மாவின் இன்னொரு முகத்தைப் பார்த்து பயம் வந்தது. என் குழந்தைகள், என் குழந்தைகள் என்று உருகிய அம்மாவிற்கு என்னாயிற்று? சில நாட்களில் அம்மா இப்படித்தான் ஆகிவிடுகிறாள். தூக்கிப் போட்டதுபோல் பேசுவாள். ஆனால் இப்போது பேசியது போல் எப்போதும் கேவலப் படுத்தியதில்லை.

''அம்மா நீ நம்பினால் நம்பு. இல்லாட்டியும் எனக்கு ஒண்ணும் இல்லே. எங்களுக்குள் ஒண்ணும் இல்லே. முக்கியமா எனக்கு இவர் மேலே எந்தவித உணர்வும் கிடையாது. இவர் என் ஸீனியர் ப்ரண்ட். அவ்வளவுதான். பக்கத்துலே நின்னாலே தப்புன்னா நீ எந்த காலத்துலே இருக்கேன்னு எனக்குத் தெரியாது.''

"இத பாரும்மா. பக்கத்துலே நின்னு போட்டோ எடுத்துக்கிட்டா அதை தப்புன்னு சொல்ற அளவுக்கு நாங்க எல்லாம் கட்டுப்பட்டிகள் இல்லே. எம் மச்சினன் உன்னைத்தான் கல்யாணம் கட்டிப்பேன்னு பிடிவாதமா இருக்கான். அவனுக்குப் பெரிய பணக்கார இடத்துலே பொண்ணு ரெடியா இருக்கு. இதுக்கு என்ன சொல்லப் போறே?"

"என்னென்னவோ பேசினே. இப்ப என்ன சொல்லப் போறே?" ஏகாம்பரம் எரிச்சலாய் கேட்க,

"த. பாருங்க மத்தவங்க என்ன நினைக்கறாங்கங் கறதை பத்தி எனக்கு அக்கறையும் இல்லை. கவலையும் இல்லை. உங்க மச்சினன் அப்படி நினைச்சார்னா அது அவர் பிராப்ளம். என் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லை அது."

"உன் சம்பந்தப்பட்டதோ இல்லையோ. இதுனால நாங்கதான் பாதிக்கப்படறோம். அடுத்த வாரம் அருணுக்கு நிச்சயதார்த்தம். இப்ப வந்து முடியாதுன்னு சொல்றான். என்ன செய்யறதுன்னு தெரியலை?"

"அதுக்கு நான் என்ன செய்யணும்?"

"நீ வந்து பேசணும்?"

"த... பாருங்க. நேத்து கூட கோவில்ல மீட் பண்ணோம். அப்பவும் தெளிவாகத்தான் சொல்லியிருக்கேன். சும்மா சொன்னதையே என்னால சொல்ல முடியாது. கௌரியின் பதிலைக் கேட்டு அப்பா, அம்மா இருவரும் திகைத்து நிற்பது தெரிந்தது.

"இத்தனை நேரம் வரைக்கும் யாரையும் தெரியாது, தெரியாதுன்னு சொன்னே. இப்ப நேத்து கோவில்லே மீட் பண்ணினோம்னு சொல்றே?"

அப்பா பல்லைக் கடித்தபடி கேட்க,

"ஏண்டி இத்தனை நேரம் அத்தனை ஆட்டம் ஆடின. இப்ப என்ன பதில் சொல்லப் போறே?" அம்மா மறுபடியும் குரலில் கோபத்தை ஏற்றிக் கேட்க,

"அம்மா நீ என்ன கோபமாகக் கேட்டாலும் பொய் உண்மையாகி விடாது. நான் கோவிலுக்குப் போகும் போது எதேச்சையா அவரும் வந்தார்."

"எதேச்சையா வந்தவங்க கல்யாணத்தைப் பத்தியா பேசுவாங்க."

"அம்மா அவர் வீட்டுக்கே வந்து அப்பாவைப் பாக்கணும்னு சொல்லிக்கிட்டு இருந்தார். நேத்து என்னை பாக்கலைன்னா வீட்டுக்கே வந்திருப்பாங்க."

அம்மா பாதி நம்பி, நம்பாத நிலமையாக பெண்ணையே பார்க்கிறாள்.

"ஓ... அந்த அளவுக்கு விஷயம் போயிடுச்சா." அப்பா உறுமுகிறார்.

"அப்பா சும்மா சொன்னதையே சொல்லாதீங்க. எனக்கும் அந்த பையனுக்கும் எந்த கனெக்ஷனும் இல்லை" சற்று சத்தமாக கௌரி சொல்ல,

"வெட்டிடுவேன்" என்கிறார் அப்பா. "போனா போவுதுன்னு விட்டா துள்ளறியா ரொம்ப. உம் மூணு பொண்ணுங்களுமே சரியில்லை. பெரிசு கடையிலே டாவடிச்சுகிட்டு இருந்தது. இதும் லட்சணம்தான் சந்தி சிரிக்கிது. மூணாவது கேக்க வேணாம். அது ஏற்கனவே குரங்கு. நீ செல்லம் கொடுத்து குட்டிச் சுவராக்கிட்டே. பப்ளிக்கா பக்கத்து வீட்டுப் பையனோட கருமம்.

அதுக்கு தான் இந்த நாய்களை வீட்டுலேயே சேர்க்க வேண்டாம்னு சொன்னேன்.''

''ஏங்க குழந்தையை இப்படித் திட்டறீங்க. முதல் மாடு ஒழுங்கா போச்சுன்னா அடுத்த மாடும் நேரா போகும். நமக்கு தான் முதலே கோணலா இருக்கே.''

தாயும், தந்தையும் மாற்றி, மாற்றிப் பேச விக்கித்துப் போனாள் புவனா. 'நிஜமாகவே தப்பான வழியில் போகும் பெண்களைக் கூட அவர்கள் பெற்றோர் இப்படி பேச மாட்டார்கள். ஆனால் என்னென்ன பேச்சுக்கள். தான் ஒரு பாவமும் அறியாதவள். தவிரவும் திருமணம் வேறு ஆகிவிட்டது. கணவனின் குழந்தையை வயிற்றில் சுமக்கும்போது, எப்படி எல்லாம் பேசுகிறார்கள். இது கணவனின் காதில் விழுந்தால் என்னாகும்? ஏற்கனவே ஏழைக் குடும்பம் என்று எள்ளி நகையாடியவர்கள் தன்னை பந்தாட மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம். தனக்கு அங்கேயுமல்லவா இடமில்லாமல் போய் விடும். போதும் இதென்ன மானங்கெட்ட பொழப்பு. ஒரு சாண் வயிற்றுக்காக இத்தனை அசிங்கப்படணுமா? புருஷனும் பொண்டாட்டி என்று அன்பைச் சொரியும் ரகம் எல்லாம் கிடையாது. அனாதைகள் கூட தன்னைவிட மிக நன்றாக இருக்கும். யாருமில்லை என்றாலும் எப்படியோ வாழ்ந்து விடுவார்கள். ஆனால் தன் நிலைமை கை காலைக் கட்டிக் கிணற்றில் போட்ட கதைதான். வெளியே சுதந்திரமாகவும் போய் வாழ முடியாது. பிறந்த வீட்டில் இருக்கும் வரை அப்பா என்ற மனிதர் காட்டும் வெறுப்புகளுக்கெல்லாம் உட்பட்டு நொந்து நூலாக, பிறகு கணவன் என்ற மனிதர் வீட்டில் அங்கிருக்கும் தூணிலிருந்து துரும்புவரை செய்யும்

உதாசீனங்களை பொறுத்துக் கொண்டு... போதும் சாமி. போதும். நானே பூமிக்கு பாரம் என்னும் போது எனக்கும் ஒரு குழந்தையா? கேவலப்பட நான் ஒருத்தி போதும்.' இந்த நினைவுகள் ஓடியபின் புவனா கண்ணீர் விடவில்லை. சாதாரணமாக அம்மாவோ, அப்பாவோ ஒரு வார்த்தை சொன்னால் மாய்ந்து, மாய்ந்து கண்ணீர் விட்டு, இரண்டு மூன்று நாட்களானாலும் அதை நினைத்து, நினைத்து கண்ணீர் விடும் ரகம். இன்று அம்மா பேசுவதை மௌனமாக, மனப் போராட்டங் களிடையே கவனித்துக் கொண்டிருக்கிறாள். வாயிலிருந்து ஒரு வார்த்தை வரவில்லை.

கௌரிக்கு உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தது. அக்காவா இது? ஏதாவது சொல்லி விட்டால் போதும், திருப்பி திருப்பி அதையே சொல்லிக் காண்பித்து அழுது, அழுது ஆர்ப்பாட்டம் பண்ணும் அக்காவா இது? அதுவும் அம்மா போட்டது கொலை பாதகச் செயலை விட அதிகமான பழி. அதைக் கேட்டு விட்டு ஒன்றும் நடக்காதது போல் இருக்கிறாள்.

ஆனால் கௌரிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. 'என்ன தாய் அவள். தவறு இழைத்தாலும் தன் மக்கள், தன் இனம்' என்று கொண்டாடும் இந்த உலகில் அம்மா விசித்திரமானவள்தான். அம்மாவின் தங்கை பையன் ஓடிப்போய் காதலித்து ஒரு கிறிஸ்துவ பெண்ணை திருமணம் செய்து கொண்டான். அந்த செய்தி தன் வீட்டில் இருக்கும் யாருக்குமே தெரியக் கூடாது என்று எத்தனை பாடுபட்டாள். தன் தங்கை மகன் அந்த மாதிரி கிடையாது என்று சத்தியமே செய்து விட்டாள்.

பிறகு விஷயம் வெளியானதும் ''அவுங்களும் நம்ம பளவங்கதான்; ஏதோ நேர்ந்துகிட்டு கன்வர்ட் ஆகிட்டாங்க'' என்று எப்படி எல்லாம் பூசி மெழுகினாள். அதே தன் சொந்தப் பெண்ணை பற்றி எப்படி இல்லாதெல்லாம் சொல்கிறாள்.

இதற்குள் மீனா மூன்று பேரையும் ஒரு வித ஏளனத்தோடு பார்க்க, ஏற்கனவே உள்ளுக்குள் இருந்த கோபம் அதிகமாக அம்மாவிடம் சண்டையை ஆரம்பித்தாள் கௌரி.

''ஏம்மா நீ அம்மாதானா? ஏன் இப்படி இல்லாதது பொல்லாததெல்லாம் பேசறே? பாவம் அக்கா. அவ வாயில்லா பூச்சின்னு உன் இஷ்டத்துக்கு பேசறியா?''

''என்னடி ரொம்ப வாய் நீளுது. அவளையாவது ஒரு கூட்டிலே சேர்த்துக்கலாம். ஆனா நீ இன்னொருத்தர் கூட பழகிட்டு வீட்டுலே இத்தனை பிரச்சனையை கொண்டு வந்து விட்டிருக்கே. என்னவோ நல்ல நேரம் உங்கப்பா வாயைத் திறக்காம இருக்காரு.''

''த பாரு நீ சும்மா சொன்னதையே சொல்லாதே. நீ பொய் சொல்லிகிட்டே இருந்தா பொய் நிஜமாகிடாது.''

''எதுடி பொய் ஒருத்தன்கூட நின்னு போட்டோ எடுத்துக்கிட்டு இருக்கே. தெனம் உன்னை வந்து அவன் பாத்துட்டுப் போறான். இத்தனை நடந்துகிட்டு இருக்கு. எங்களுக்கு மட்டும் தெரியாது.''

''விடுங்க ஆன்ட்டி. நீங்க ஏன் வீணா சண்டை போடறீங்க? த பாரும்மா விட்டுட்டா உனக்கு நல்லது. நான் போய் எம் மச்சினனை அனுப்பறேன்.''

கௌரிக்கு உண்மையிலேயே தாங்க முடியாத கோபம் வந்தது. இல்லை இல்லை என்று சொல்லியும் வேண்டுமென்றே எப்படி பழி போடுகிறாள்.

இதற்குள் துரைசாமியும் வந்து சேர மீண்டும் பஞ்சாயத்து ஆரம்பித்தது. ''என்னம்மா மீனா... நீ எங்கே இங்கே?''

மீனா அப்பாவைக் கண்டதும் எல்லாவற்றையும் சிறு குழந்தை போல் ஒப்பிக்க,

துரைசாமி என்ன சொல்வதென்று தெரியாமல் விழிக்கிறார்.

''நீங்களே கேளுங்கண்ணே நியாயத்தை. இது வர வர எப்படி நடந்துக்குது தெரியுமா? இத பாருங்க போட்டோவை. ஏண்டி இந்த மாதிரி நின்னு போட்டோ எடுத்துகிட்டு இருக்கேன்னு கேட்டா எப்படி பேசுது தெரியுமா? பிள்ளைங்க கெட்டுப் போனா பெத்தவங்க கண்டிக்க மாட்டாங்களா?'' செண்பகம் படபடவென்று பேச,

''ஆக... நீ என்ன சொல்றே?'' கௌரி எரிச்சலோடு கேட்கிறாள்.

''என்னடி சொல்றே? தினம் அந்த புள்ளை உன்னை ஏன் சந்திச்சு பேசணும்? கேளுங்கண்ணே?'' செண்பகம் வெறி ஏறிய குரலில் கத்த, ஏகாம்பரம் மௌனமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார். துரைசாமியே சற்று ஆச்சரியப்பட்டவராய் ஏகாம்பரத்தைப் பார்க்கிறார்.

''என்னம்மா சொல்றே ஒருத்தரோட பேசினா நான் கெட்டுப் போயிட்டேனா?''

''ஆமாண்டி அப்படித்தான் வச்சுக்க'' செண்பகம் எரிச்சல் பட,

''அப்ப நீ கூடத்தான் இந்த அங்கிளோட பேசறே? இதுக்கு என்ன அர்த்தம்?''

12

செண்பகம், துரைசாமி, மீனா, புவனா இன்னும் ஏகாம்பரம்கூட அதிர்ச்சி அடைந்த நிலையில் நின்றனர். செண்பகத்தின் கண்களில் கூடாக கண்ணீர் மளமளவென்று இறங்க, ''அடிப்பாவி. பொண்ணு பொண்ணுன்னு பொத்தி பொத்தி வளர்த்தேனே. என்ன பேச்சு பேசிட்டே? இந்த அண்ணனை எங்கூடப் பிறந்த அண்ணனா நினைக்கறேண்டி. அவருக்கும் எனக்குமே தப்புக் கணக்கு போட்டுட்டியே'' சட்டென்று ஆவேசம் அடைந்து கௌரியின் மீது பாய்ந்து அவள் கன்னத்திலும் தலையிலும், முதுகிலும் மாற்றி மாற்றி அறைகிறாள். துரைசாமியும், புவனாவும் ஓடி வந்து தடுக்க அழுதவாறே ஓவென்று கதறியவாறே மகளை அடிக்கிறாள். கௌரிக்கு கன்னங்களில் நகக் கீறல்கள்.

அடி வாங்கியதால் முகமெங்கும் சிவந்து போய் லேசாக உப்பி வேறு போய் இருக்கிறது. அழுகை வேறு பொங்கி பொங்கி வருகிறது.

''விடுங்கண்ணே. இன்னிக்கே அவளைக் கொலை பண்ணாம விடறதில்லே. என்ன பேச்சு பேசிட்டா பாத்தீங்களா? தாயைப் பார்த்துப் பேசற பேச்சா இது? வேண்டாங்க எனக்கு கொழந்தைகளே வேண்டாம். எங்க வீட்டுக்காரர் கரெக்டா சொல்வார். அதது வைக்கறே இடத்துலே வைக்கணும்னு சொல்லிட்டு இருப்பார். ஐயோ நம்ப குழந்தைகளாச்சேன்னு ஆசையைக் கொட்டினா என்னாச்சு பாத்தீங்களா?''

''கொஞ்சம் அமைதியா இரும்மா. அது சின்ன பிள்ளை. அதுக்கு சரிக்கு சரியா பேசுவாங்களா?''

''என்னங்க நீங்க ஏன் ஒண்ணும் பேச மாட்டேங்கறீங்க? எப்பவும் நீங்க பேசுவீங்க. அதை தப்புன்னு எத்தனையோ நாள் சண்டை போட்டிருக்கேன். இப்பதான் புரியுது. ஆனா இப்ப ஏங்க வாயே திறக்க மாட்டேங்கறீங்க'' புருஷனிடம் கேட்கிறாள் செண்பகம்.

ஏகாம்பரம் பெருமூச்சு விடுகிறார். ''இப்பவாவது என்னைப் புரிஞ்சுகிட்டியே. அன்னிக்கு எல்லோருமே திட்டினீங்களே, இப்ப புரியுதா? இதுங்களோட எப்படி நடந்துக்கணும். கொஞ்சம் சுதந்திரம் கிடைத்தாலும் போதும். தலைக்கு மேல் ஏறும் திமிர் பிடித்ததுகள். நீ பெத்த மூணும் அப்படித்தான்.''

அதுவரை லேசாக அழுது கொண்டு இருந்த கௌரி மெதுவாக எழுந்து நின்று திடமான குரலில் கூறுகிறாள். ''இத பாரும்மா நீ என்னை அடிச்சாலும் சரி, தொரத்தினாலும் சரி. பேசினா தப்புன்னு நீ நினைக்கும்போது துரைசாமி அங்கிளோட பேசறதைப் பத்தி கேட்டேன். உம்மனசுலே அது ஆழமாகச் சுருக்குன்னு குத்தியிருக்கு. எனக்குப் புரியுது. நீ எங்களை சொல்றியே எங்களுக்கும் அப்படித்தான் இருக்கும். மானம், மரியாதை எப்படி உன் மனசுலே குத்துதோ அதே போல உன் வார்த்தைகளும் எங்க மனசையும் குத்திக் கிளறி வச்சிருக்கு. அதுனாலதான் அப்படி சொன்னேன். மத்தபடி உன்னை தப்பா பேசணும், நினைக்கணும்னு நான் சொல்லலே. துரைசாமி அங்கிள் தயவு செய்து நீங்க என்னை மன்னிச்சிடுங்க.'' மீனா விரிந்த விழியோடு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

''சரி ஆச்சு இல்லே. நீ கிளம்பலாம்'' ஏகாம்பரம் கௌரியைப் பார்த்து சொல்ல, கௌரி மௌனமாக நிற்கிறாள்.

"அப்பாதான் சொல்றாரு இல்லே. வெளியே போ அம்மா பத்ர காளியாய் நின்று கொண்டு பேச.

"என்னம்மா இது? ஏம்மா தங்கச்சி இப்படி பேசறே?" துரைசாமி சற்று பாவமாகக் கெஞ்சுகிறார்.

"ஏண்ணே உங்களைப் பத்தியும், என்னைப் பத்தியும் எத்தனை கேவலமா பேசுச்சு. அதுக்குப் போய் நீங்க வக்காலத்து வாங்கறீங்க."

"போகட்டும்மா ஏதோ கோபத்துலே சொல்லிட்டுக."

"கோபத்துலே எந்த வார்த்தை சொல்றதுன்னு இல்லையாண்ணே. பெத்தவளைப் பார்த்து யாராவது இப்படிப் பேசுவாங்களா?" அடி வயிற்றிலிருந்து ஆங்காரம் வர லேசான அழுகையுடன் கேட்கிறாள் சென்பகம்.

"விடும்மா. நீ சொல்ல அது பதிலுக்கு சொல்லிருக்கு. அதைப்போய் பெரிசு படுத்தாதே."

"எதுண்ணே பதில். மூணு பொட்டை பிள்ளைங்களைப் பெத்துட்டோமே அதை ஒழுங்கு முறையா கல்யாணம் பண்ணி கொடுக்கணுமேன்னு வயத்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு இருந்தேன். ஒண்ணுக்கு இப்பதான் வேளை வந்தது. இன்னும் இரண்டு இருக்கு பிள்ளைங்க பிள்ளைங்கன்னு பாசத்தை நெஞ்சத்துலே வச்சு, இவங்க திட்டும் போது தடுத்து அடி வாங்கி, எம்பிள்ளைங்க, பிள்ளைங்கன்னு உருகினதுக்கு என்ன பேர் கெடச்சுது பாத்தீங்களா?"

துரைசாமி ஒரு நிமிடம் அசந்து தான் போகிறார். அவரைப் பொறுத்தவரையில் உண்மையான அன்பு என்பது கொடுக்கப்பட வேண்டிய ஒன்று. அதற்கு எதிர்பார்ப்பு என்பதே கிடையாது என்பது அவர்

எண்ணம். சென்பகம் தன் பாசங்களை, பிள்ளைகளால் புருஷனிடம் தான் பட்ட பாட்டுக்களை சொல்லி வருத்தப்படும்போது ஒரு நிமிடம் அதிர்ந்து தான் போகிறார். இது பாசமில்லையா? இல்லை அன்பு இல்லையா? சென்பகத்தின் இந்த ரூபம் அவரை மிரளச் செய்ய, ஒரு நிமிடம் யோசிக்கிறார். இந்த அன்பில் சற்று எதிர்பார்ப்பு இருப்பதாகத் தோன்றுகிறது. நான் இத்தனை எல்லாம் செய்திருக்கிறேன். என் உணர்வுகளுக்கு நீ மதிப்பு தர வேண்டும் என்ற உணர்வு இப்படி இருந்தால் அது அன்பில் சேர்த்தியில்லையா என்ன? என் மகள் என் உயிரின் ஒரு பகுதி. நான் நினைப்பது போல் நடக்க வேண்டும் என்ற உணர்வு. நம் கையே நம் கண்ணைக் குத்தி விட்டால் எழுகின்ற எரிச்சலும், வேதனையும் அந்த சொல்லில் புரிந்தது. எது இருந்தாலும் இந்த அன்பும், ஆசையும் வருகின்ற சந்ததியினரின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருந்தால் இப்படிப்பட்ட அன்பையும் தூக்கி எறிய வேண்டியதுதான்."

"என்னண்ணே கேட்டுக்கிட்டே இருக்கேன். பேசாம இருக்கீங்க. அவளை போய்த் தொலையச் சொல்லுங்க."

"போதும்மா. சின்ன குழந்தை மாதிரி சண்டை போட்டுகிட்டு, எல்லாம் உள்ளே போங்க. ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க. முடிஞ்சது முடிஞ்சு போனதுதான். இதை தயவு செய்து பெரிசு படுத்தாதே."

அவர் சொல்லும்போதே "அப்பா..." என்று ஆரம்பித்த மீனாவை,

"நீ வாம்மா வீட்டிலே போய் பேசிக்கலாம்" என்கிறார்.

"இல்லைப்பா..." ஏதோ சொல்ல வந்தவளை சொல்ல விடாமல்,

"வா... கிளம்பி வா..." என்று அழைத்துச் செல்கிறார். செல்லுமுன் மறுபடியும் திரும்பி, "தங்கச்சி நம்ம வீட்டு குழந்தைகள் கொலையே பண்ணிருக்கட்டுமே. அதுக்காக நட்டாத்துலே விட்டுட முடியுமா? அப்படியே தொரத்தி விட்டுட்டா மாத்திரம். அதுங்க கண் எதிர்லே துன்பப்படும்போது நம்மால நிம்மதியா இருக்க முடியுமா? அதுனால தயவு செய்து நான் போன பிறகு வன்மத்தை வச்சகிட்டு தண்டிக்காதே" அவர் சொல்ல சொல்ல செண்பகம் அவரையே பார்க்க, அவள் தான் சொன்னதை பொருட்படுத்தவில்லை என்று தோன்றியது.

"கௌரி சொன்னதை நியாயம்னு நான் சொல்ல வரலை. ஆனா இப்ப நீ அவளை புரிஞ்சுக்க ஒரு சந்தர்ப்பம் கொடு. அதுக்கு பதிலா தண்டிச்சியானா, அவ புரிஞ்சுக்காதது மட்டுமல்ல நிரந்தரமா பிரியவும் வாய்ப்பு இருக்கு பத்திரம்."

அவர் சொன்னதை புரிந்து கொண்டாளோ இல்லையோ புவனா புரிந்து கொண்டு,

"மாமா எத்தனை சொல்றாரு! இப்ப கூடவா உனக்குப் புரியாது. வா உள்ளே" அழைத்துச் சென்றவள் தங்கள் அறையின் கதவை சாத்திக் கொள்கிறாள்.

அன்று கௌரியோடு புவனாவுக்கும் சாப்பாடு இல்லை. கணவருக்கு, விஜிக்கு தனக்கு என்று போட்டுக் கொண்டு சாப்பிட்டுவிட்டு சமையல் அறைக் கதவை மூடிக்கொண்டு வந்து படுக்கிறாள் செண்பகம்.

"என்ன பேச்சு பேசிடுச்சு. பொண்ணா அது?" சபிக்கிறாள் செண்பகம்.

ஏகாம்பரம் அலட்டிக் கொள்ளாமல் பேசுகிறார்.

"ஆமா உனக்கு இப்பதான் புரியுது. நான் எத்தனை நாள் தலைப்பாடா அடிச்சுகிட்டேன். புருஷனை எதிரி யாட்டம் பாத்துகிட்டு இருந்தியே. இப்ப புரிஞ்சுதா?"

புருஷன் தன்னை குத்திக் காட்டியதுகூட அவளுக்கு உரைக்கவில்லை. பெண் தன்னைக் கேட்டது மனதை உறுத்த, படுக்க முடியாமல், உட்கார முடியாமல், தூங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். பெண் இதற்கு மேல் சபிக்கவே முடியாத அளவிற்கு சபித்தாகி விட்டது. இன்னும் மனது அடங்கவில்லை.

அறையின் உள்ளே தன்னைப் போல் புவனாவும் பட்டினி கிடப்பதை பார்த்து வருத்தப்படுகிறாள் கௌரி.

"புவனா நீ ஏன் பாவம் பட்டினி கிடக்கிறே? நீ சீக்கிரம் போய் சாப்பிட்டுடு. இல்லேன்னா அம்மா சமையற்கட்டை பூட்டிட்டுப் போயிடும்."

"த்சு... விடு. ஒரு நாள் சாப்பிடலேன்னா என்னாயிடும்."

"என்ன புவனா? நீ பிரெக்னன்டா வேற இருக்கே. அந்தக் குழந்தையையும் பட்டினி போடணுமா?"

"நானே வேஸ்ட். இதுலே இன்னொரு வேஸ்ட் தேவையா?" சிரித்தவாறே சொன்னாலும் மனது கலங்கிப் போய் இருப்பது தெரிந்தது.

அம்மா அடித்தபோது சிறிது கலங்கினாலும் இன்று புவனா தனக்காக பட்டினி கிடக்கிறாள் என்றபோது

மனம் இன்னும் வேதனைப்பட்டு பொல பொலவென்று கண்ணீர் வடிக்கிறாள் கௌரி.

''ஏய் என்ன கௌரி ஏன் அழறே?''

''இல்லே உன்னை நினைச்சேன். மனசு தாளலை.''

''எனக்காக நீ ஏம்மா கஷ்டப்படணும்.''

''இது ஒண்ணும் இல்லே. பட்டினியும், பசியும் எனக்கு பழக்கப்பட்டது தாம்மா. அது தான் எனக்கு தோஸ்து. இங்கே அப்பாங்கறவர் சர்வாதிகாரி. அவர் ஒருத்தர் சம்பாத்தியத்துலே நாம சாப்பிடறதுனாலே கூனிக் குறுகி உக்காந்தோம். அங்கே புருஷன் என்ன சம்பாதிக்கிறார்னு தெரியாது. கல்யாணம் ஆகி இத்தனை மாசத்துலே இந்தா மாசம் வச்சுக்கோன்னு ஒரு தொகையும் கொடுத்ததில்லை. அங்கே நான் சம்பளம் இல்லாத வேலைக்காரி, எந்நேரமும் எல்லோரையும் சந்தோஷப்படுத்தி சமைச்சு எல்லோருக்கும் தந்துட்டு மிச்சம் இருந்தா சாப்பிடற மனுஷி. அரிசி, பருப்புலேந்து எல்லாமே மாமியார் குடுக்கற அளவுதான். அவுங்க தான் தினம் எடுத்துக் கொடுப்பாங்க. வீட்டுலே பதினைஞ்சு பேர் இருக்கோம்னா பண்ணண்டு பேருக்கு தான் சமைக்கணும். அதுனால அங்க எப்பவுமே இழுத்து பறிச்சுகிட்டுதான் இருக்கும். மிச்சம் மீதி தான் நான் சாப்பிடணும். நான் சம்பளம் இல்லாத வேலைக்காரி, சமையல்காரி. அதுனால கிட்டத்தட்ட பாதி நாளுக்கு அரை வயிறு. மீதி பத்து நாளைக்கு கால் வயிறு. ஒரு அஞ்சு நாளாவது ஒண்ணுமே இருக்காது.''

கௌரி புவனாவை வேதனையோடு பார்க்கிறாள். மதிப்பு, மரியாதை என்பது யார் தந்தது? தன் பிள்ளை

யின் மனைவி, வீட்டுக்கு வந்த மருமகள், அந்த வீட்டு வாரிசை சுமந்திருப்பவர். அவளிடம் ஏன் கேவலமாக நடக்கத் தோன்றுகிறது. பணம் இருந்தால் எல்லாமேவா சரியாகிவிடும். புதிதாக வந்த மருமகளை சரியாக நடத்தாததால்தான் பின்னாளில் மாமியாரை மருமகள் ஏறெடுத்துப் பார்க்க மறுக்கிறாள். தன் கீழ் வரும்போது தான் அனுபவித்த அத்தனை சித்திரவதைகளையும் மாமியார் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணுகிறாள். என்ன உறவு முறைகளோ, கணவன் என்பவனுக்கு என்றுமேவா தெரியாது. தன் மனைவி கஷ்டப்படுகிறாள் என்று கூடத் தெரியாத கணவன் என்ன கணவன்? தனக்கு என்ன நேர்ந்தாலும் சரி தான் இந்த கல்யாணம் என்ற பந்தத்தில் மாட்டிக் கொள்ளவே கூடாது. இப்போதுதான் எடுத்த உயர் மதிப்பெண்களுக்கு தங்கள் கல்லூரியிலே தொடர்ந்து படிக்கலாம் என்று முதல்வர் சொல்லியிருக்கிறார். ஆனால் ஸ்காலர்ஷிப் தருவதைப் பற்றித்தான் யோசிக்கிறோம்'' என்று சொன்னார். தனக்கு உதவித் தொகை கிடைக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. வங்கிக் கடன் வாங்கி தன் நிலைமையை சரி செய்து கொள்ள முடியும். இனி அப்பா கையை எதிர்பார்த்து இருக்கப் போவதில்லை. ஏதாவது ஒரு பார்ட் டைம் ஜாப் கிடைத்தால் போதும். சாப்பாட்டு பிரச்சனைகளில் கூட அவர்களை நெருங்க வேண்டியதில்லை. பாவம் அக்கா அவள் எத்தனையோ துன்பப்பட்டு விட்டாள். அவளைக் கட்டாயம் நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும். என்னதான் ஆரோக்கியப் பூர்வமாக யோசித்தாலும் பசி வயிற்றைக் கிள்ளியது. காலையில் சாப்பிட்டது. அப்புறம் கோயிலுக்குப் போய் விட்டதால் மதியம் காபி கூட சாப்பிடவில்லை. பசி வயிற்றை

இழுத்துப் பிடிக்க தூக்கம் வராமல் எழுந்து அமர்ந்தாள். புவனா எதிர்காலத்தைப் பற்றிய பயத்தில் இருந்தாள். இன்னும் இரண்டு மாதங்களில் குழந்தை பிறந்து விடும்.

முதல் பிரசவம் ஒரு மூன்று மாதங்களாவது இங்கிருந்து தாக்குப் பிடித்தால்தான் கொஞ்சமாவது கௌரவம் இருக்கும். அவளுடைய தந்தையைப் பற்றி ஊருக்கே தெரியும். கணவன் அவளின் பிறந்த வீட்டைப் பற்றி பேசும்போதே நக்கலாகக் கேலியாகப் பேசுவான். ''நீங்கள் பேசுவது போல் நாங்கள் எல்லாம் இல்லை'' என்று சொல்லக்கூட முடியாத நிலையில் பாவமாகக் கேட்டுக் கொண்டிருப்பாள் புவனா. இன்னும் குழந்தை பிறப்பதற்குள் இத்தனை அமக்களங்கள். பிறந்து எத்தனை மாதம் தன்னை வைத்துக் கொள்வார்களோ. இப்போது இருக்கும் நிலை பார்த்தால் நாளையே கூட அனுப்பி விடலாம். அப்படி அனுப்பி விட்டால் தன் நிலை?

ஏனோ துரைசாமியின் நினைவு வர, அவர் தனக்கு தந்தையாக இருந்திருக்கக் கூடாதா? எப்பேற்பட்ட மனிதன். தன் குழந்தைகளை உள்ளங்கையில் வைத்து தாங்குகிறவர். அப்பாவுக்கு அவர் நண்பராம். 'உன் நண்பனைக் காட்டு உன்னைப் பற்றிச் சொல்லி விடுகிறேன்' என்று எதிலோ படித்த ஞாபகம் அப்பாவின் நண்பர் அத்தனை அற்புதமான மனிதர். அதே தன் தந்தை? தந்தை என்று சொல்வதற்கு மட்டுமல்ல. மனிதன் என்று சொல்லவே லாயக்கில்லாதவர். புவனாவும் இவ்வாறெல்லாம் யோசித்தவாறே கண் மூடாமல் படுத்திருக்கிறாள்.

துரைசாமியின் வீட்டில் மீனா, துரைசாமி அவரின் மனைவி மூன்று பேரும் இரவு உணவை முடித்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கின்றனர்.

''அப்பா உங்ககிட்டே மறுபடியும் சொல்றேன். எங்க மச்சினனுக்கு வேறே இடத்துலே நிச்சயம் பண்ணப் போறோம். அவுங்க ரொம்ப பணக்காரங்க. ஒரே பொண்ணுதான்.

ரெண்டு வீடு, நிறைய நிலம் இன்னும் கார்லேந்து எல்லாம் தரப்போறாங்க. இந்தப் பொண்ணு வந்து கெடுக்குதேன்னுதான் நான் புறப்பட்டு வந்தேன். எங்க மாமியார் வீட்டுலே வேற சொல்லி அனுப்பிச்சாங்க. உங்க அப்பா பிரண்ட்தானே. கொஞ்சம் பேசிப் பாத்து பொண்ணை திட்டம் பண்ணி வைக்கச் சொன்னாங்க.''

''பின்னே ஏம்மா அங்கே போனே?'' துரைசாமி குழைந்து போய் தான் கேட்கிறார்.

''அப்பா இங்க தான் வரலாம்னு வந்தேன். கோவிலுக்குப் போயிட்டு வீட்டுக்குப் போயிட்டு இருந்தா சரி. அவளையே பாத்து பேசிடுவோம்னு நினைச்சேன். ஆனா அவுங்க வீட்டுக்குப் போனப்புறம் என்னென்னவோ நடந்து போச்சு.''

''நீ அங்கே போயிருக்கக் கூடாதும்மா.''

''ஆனாலும் அந்த பொண்ணு மோசம்பா.''

''அவுங்க அப்பா எப்படிம்மா?''

''அவுங்க அப்பா மோசம்னு எனக்கேத் தெரியும். பாவம் அந்த புவனா. அன்னிக்கு டீக்கடையிலே புவனாவை புடிச்சு அடிக்கும்போது நானும் அங்கதான் இருந்தேன். நான் எதேச்சையா அந்த கடைக்குப் போயிருந்தேன். அங்க ஒண்ணுமே தப்பா நடக்கலை. அப்பப்பா கொடுமை அது. அந்த மாதிரி அப்பா இருக்கறதுக்கு அனாதையாகவே இருக்கலாம். ஆனா அவுங்க அம்மா வாயில்லா பூச்சின்னு நினைச்சேன்.

எப்படிப்பா, என்னென்ன பேசிட்டாங்க. அம்மா போலவே பொண்ணும் இருக்கு.''

''அப்படி இல்லேம்மா...'' துரைசாமி இடைமறிக்க,

''என்னப்பா பூசி மெழுகறீங்க. உங்களைப் பத்தி அந்த கௌரி தப்பா பேசலே. உங்களையும் உங்க பிரண்டோட வைஃபையும் சம்பந்தப்படுத்தி பேசலே'' கேட்டுக் கொண்டிருந்த பார்வதம் திடுக்கிட்டுப் போனார்.

13

''என்னம்மா சொல்றே?'' பார்வதம் பதைத்துப்போய் கேட்க,

''என்னத்தைம்மா சொல்றது'' என்று ஆரம்பித்து அங்கே நடந்தவை களை பிட்டு பிட்டு வைக்க பார்வதம் அதிர்ந்து போகிறாள்.

''அந்தப் பொண்ணு அம்மாவையே உரிச்சு வச்சிருக்குன்னு நினைக்கறேன்.''

மீனா பேச பார்வதம் எரிச்சல் படுகிறாள்.

''ஏன் மீனா இப்படி இருக்கே? ஒரு வீட்டுலே போய் பிரச்சனையைத் தூண்டிவிட்டு அதை விமர்சிக்கிறது தப்புன்னு உனக்குத் தெரியாதா?'' பார்வதம் சற்று கண்டிப்பான குரலில் கேட்க,

''ஏய் எதுக்குக் குழந்தையைத் திட்டற. அவளே என்னிக்கோ ஒரு நாள்தான் வீட்டுக்கே வரா.'' சட்டென்று பரிந்து பேசுகிறார் துரைசாமி.

''செல்லம் கொடுங்க. குழந்தைகள் மேல ஆசை இருக்கலாம். ஆனா அது தப்பான வழியிலே தூண்டுவதா அமையக் கூடாது. காலையிலேயே புவனா அழுதுகிட்டு

வீட்டை விட்டு வெளியே வந்தா. அப்பறம் சாயங்காலம் வரைக்கும் இங்க வச்சுகிட்டு அனுப்பிச்சோம். ஒரு வாரமா வீட்டுலே ஒரே ரகளைன்னு சொல்லிகிட்டு இருந்தா. இப்ப இவ வேற போய் பிரச்சனை பண்ணலாமா?''

''ஆமாம் நீங்க என்னைதான் சொல்வீங்க. எங்க மாமியார் சொல்லி அனுப்பிச்சாங்க. பாத்துட்டு வந்தாலாம்னு போனேன். தப்பா? எங்க வீட்டுப் பெரியவங்க சொன்னா நாங்க கேட்டு தானே ஆகணும்.''

''நீ ஆயிரம் சமாதானம் சொன்னாலும் ஒத்துக்க முடியாது. திருமணங்கறது ரெண்டு மனச சம்பந்தப் பட்ட விஷயம். 'இவளுக்கு இவன்னு கடவுள் போட்டு வைக்கற முடிச்சு அது' அதை யாராலும் மாத்த முடியாது. எதுவா இருந்தாலும் நீ இங்க வந்து அந்த பொண்ணை நம்ப வீட்டுலே வச்சுப் பேசியிருக்கணும். அவுங்க பெத்தவங்க சரியில்லேன்னபோது அங்க போய் பிரச்சனையை ஆரம்பிச்சது ரொம்ப தப்பு.'' பார்வதம் அழுத்தமாகப் பேச,

''சரி விடு நடந்தது நடந்து போச்சு. ஆக வேண்டியதைப் பார்ப்போம்'' என்றவாறே பேச்சை மாற்றுகிறார் துரைசாமி.

''ஏம்மா எங்க படுக்கப் போறே? நீ அம்மா கூட ரூம்லே படுத்துக்கம்மா. நான் வெளியே ஹால்ல படுக்கிறேன்'' என்றவாறே ஒரு தலையணையையும் போர்வையையும் எடுத்தவாறு கிளம்புகிறார்.

''ஏம்மா சீக்கிரம் படு. காலைலே பொறப்பட்டது இல்லே. ரெண்டு பஸ்ஸை பிடிச்சுதானே இங்க வந்திருக்கணும். போம்மா ரெஸ்ட் எடு.''

படுக்கை அறையில் படுக்கையை தட்டிப் போட்டு கொசுவர்த்தி சுருளை ஏற்றி, விளக்கை அணைத்து விட்டு, மெதுவாக வெளியே வந்த போது பர்வதம் மிகவும் வேதனையோடு ஹாலில் உள்ள சோபாவில் அமர்ந்திருந்தாள்.

"என்னம்மா தூக்கம் வரலியா" கேட்டவர் மெதுவாக பர்வதத்தின் அருகில் போய் அமர்கிறார்.

"அந்தப் பொண்ணு பேசினதை மீனா சொல்லிச்சே அதை நினைச்சு வருத்தமா இருக்கா."

இல்லையென்ற பாவனையாக தலையை அசைத்தவள், பின மெதுவாக கேட்கிறாள்.

"அந்தப் பொண்ணு பேசனதுலே என்னங்க தப்பு இருக்கு?"

"என்னம்மா இப்படிப் பேசறே?"

"அந்தப் பொண்ணு பையனோட பேசினாலே தப் புன்னு அவுங்க சொல்லும்போது அந்தம்மா உங்களோட பேசினா தப்புன்னு அவுங்க பொண்ணு சொல்லாதா? இந்த காலத்து பசங்களுக்கு நம்பளை விட கூட்சமம் அதிகம். அவுங்க பார்க்கற பார்வை அணுகுமுறை எல்லாமே வித்தியாசமாத்தான் இருக்கு. நாமதான் கூடுமானவரைக்கும் தட்டிக் கொடுத்துவிட்டுப் போக ணும். அப்படி இருக்கும் போது அந்தக் குழந்தைகளை உங்க பிரண்ட் படுத்தற பாடு. புவனா வீட்டுக்கு வந்தப்ப சொன்னது கேட்டு நெஞ்சே ஆடிப் போச்சுங்க. பாவங்க அந்த பிள்ளைங்க. இவருதான் இப்படீன்னா அந்த அம்மாவுமா இப்படி இருப்பாங்க? அநியாயம். இந்த

நேரத்துலே நம்ப பொண்ணு வேற போய் குட்டையை குழப்பி விட்டுட்டு வந்திருக்கா."

"தப்புதாம்மா ஆனா மீனா தெரியாம செஞ்சுட்டா."

"மீனாவை விடுங்க. அந்தக் குழந்தைங்க கதி. இத் தனை சண்டை போட்டிருக்காங்களே காலைல ஒருத்தரை ஒருத்தர் எப்படிப் பார்த்துப்பாங்க." துரைசாமியும் பெருமூச்சு விட, "காலைலே நாம ரெண்டு பேருமே போவோம். நிலைமையை சீர் பண்ண என்ன வழின்னு யோசிப்போம்." மனைவி சொல்லச் சொல்ல தலையை ஆட்டுகிறார் துரைசாமி.

பர்வதம் எப்போது எழுந்தாளோ துரைசாமி எழுந்திருக் கும்போதே இட்லி, சட்னி, வடகறியின் மணம் மூக்கைத் துளைத்து பர்வதம் எல்லாவற்றிலும் பர்வதம்தான். வீட்டை வெகு சுத்தமாக பராமரிப்பது மட்டுமல்ல, மிக மிக ருசியாக சமைப்பதிலும் அவளுக்கு இணை அவள் தான். பார்ப்பதற்கும் பளிச்சென்று அழகாக இருப்பாள். இன்று அவளின் சமையலின் மணம் எப்போதும் போல் மூக்கைத் துளைக்க, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந் திருக்கிறார். நெற்றியில் துளிர்த்த வியர்வைகளை புடவை முந்தானையில் துடைத்துவிட்டு வேலையில் ஆழ்ந்திருந்த போது, சட்டென்று உள்ளே வந்து பேனைப் போடுகிறார்.

"ஏன் இப்படி வியர்த்துக் கொட்டுது? பேன் போட்டுக்கக் கூடாது" பொண்டாட்டியிடம் கரிசனமாய் கேட்க புன்முறுவல் பூக்கிறாள்.

தன் கணவனைப் போல் ஒரு மனிதன் இருக்க முடியுமா, என்ன? அற்புதமான மனிதன். பிள்ளைகள் என்றால் உயிர். மனைவியை சக மனுஷியாக நினைப் பவன். எத்தனை பேருக்கு இந்த மாதிரி புருஷன்

கிடைக்கும்? தான் மிக மிக கொடுத்து வைத்தவள். எத்தனை புண்ணியம் செய்திருப்பேனோ, இந்த மாதிரி கணவன் கிடைப்பதற்கு எத்தனை கொடுத்து வைத்திருக்க வேண்டும். தான் உண்மையிலேயே மிக மிக அதிர்ஷ்டசாலிதான்.

வேலைகளை முடித்ததும் பெண்ணைக் கூப்பிடுகிறாள் பார்வதம்.

"என்னம்மா.. டிபனை சாப்பிடு வா."

"வாயேம்மா உனக்கு பிடிச்ச வடைகறி அம்மா செய்திருக்காங்க." துரைசாமி கூப்பிட,

"நீங்களும் உட்கார்ந்துருங்களேன்," பார்வதம் கூற,

"நீயும் வா. மூணு பேரும் ஒண்ணா சாப்பிடலாம்." சாப்பிட்டுக்கொண்டே தன் பெண்ணை விசாரிக்கிறார் துரைசாமி.

"குழந்தைக்கு வெந்நீர் வெச்சிருக்கேன். துடைச்சு விட்டுடு. பாலைக் கலந்து கொடுத்திடு" என்கிறாள் பார்வதம்.

துரைசாமி சீக்கிரம் சாப்பிட்டு முடித்து பேரனை எடுத்து ஈரத் துண்டைப் பிழிந்து துடைக்கிறார். பவுடர் போட்டு விடுகிறார். குழந்தைக்கு சட்டையை மாற்ற,

"குடுங்கப்பா நான் செய்துக்கறேன்" என்கிறாள் மீனா.

"எம் பேரன்மா நான் செய்தால் என்ன?" ஒவ்வொரு வேலையும் பார்த்துப் பார்த்து ஆசையாக செய்து. பார்த்துக் கொண்டிருந்த மீனாவிற்கும் அப்பாவின் ஆசை புரிகிறது.

"உண்மையிலேயே இப்பேர்ப்பட்ட தந்தை கிடைப்பதற்கு தான் கொடுத்துதான் வைத்திருக்க வேண்டும்."

குழந்தையை சுத்தம் செய்து வேறு உடை உடுத்தி பாலைக் கலந்து கொடுத்து உறங்க வைக்கும் வரையில் துரைசாமி உதவிக் கொண்டிருக்கிறார். "ஏம்மா நீ என்னைய் தேய்ச்ச குளிக்கணும்னியே. தேய்க்கக் குளிக்கறதுதானே."

"நீங்க வேற. ஒரே சிலுசிலுன்னு இருக்கு. இந்த வாரமும் குளிரும் பனியும் அதிகம்தான். அவ ஒரு பத்து மணிக்கா உடம்புக்கு குளிக்கட்டும். அவளுக்கு ஜலதோஷம் பிடிச்சா குழந்தைக்கு தான் கஷ்டம்."

துரைசாமி தலையை ஆட்டுகிறார்.

"மீனு நானும் அப்பாவும் வெளியே போயிட்டு வரோம். ஒரு மணி நேரத்துலே வந்துடுவோம். சரியா?" பார்வதம் சொல்ல,

"எங்கம்மா? ஏகாம்பரம் மாமா வீட்டுக்கா" பார்வதம் ஆம் என்ற பாவனையாகத் தலையாட்ட மீனா பெருமூச்சு விடுகிறாள்.

துரைசாமியும் பார்வதமும் கிளம்ப, துரைசாமி இந்தப் பக்கம் அந்த பக்கம் பார்த்துவிட்டு பார்வதத்திடம் மெதுவாகக் கேட்கிறார்.

"அவுங்க வீட்டு நிலைமை எப்படி இருக்குமோ? எதுனாச்சும்..." அதற்கு மேல் கேட்க முடியாமல் நிற்க,

"நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குத் தெரியாதா?" தான் வாழையிலையில் கையோடு எடுத்து வைத்திருந்த 2 பொட்டலங்களை எடுத்துக் காண்பிக்

கிறாள். ஒரு சின்ன பாத்திரத்தில் சட்னி. இன்னொரு இலையில் வடகறி கட்டி இருப்பதைச் சொன்னவள் கிளம்ப,

"ரொம்ப தேங்ஸ்மா."

"ஐய... எதுக்கு?" சிரிக்கிறாள் பர்வதம்.

அவர்கள் வீட்டை நெருங்க, நெருங்க பயமும் வேதனைதான். வரவேற்பு எப்படி இருக்கும்? ஏதேனும் தூக்கி எறிந்து பேசினால், பர்வதம் சற்று பயந்தவாறே செல்ல, துரைசாமியும் அதே யோசனையில் இருக்கிறார். 'ஏகாம்பரம் எப்படி நடந்து கொள்வானோ?' ம்... பார்ப்போம்.

வீடு இருக்கும் தெருவை அடைந்து கேட்டின் அருகே வந்தவர்கள் லேசாக, தட்ட பதிலே வரவில்லை. வீடே கல்லென்றிருந்தது. ஒருவேளை எல்லோரும் எங்கோ போயிருக்கிறார்களா என்ன?

ஒரு வழியாக விஜி வந்து கதவைத் திறந்துவிட்டு "வாங்க அங்கிள்" என்று சொல்லிவிட்டு நகர, ஏகாம்பரம் எட்டிப் பார்க்கிறார். துரைசாமியைப் பார்த்ததும் அவர் முகத்தில் சேலான அலட்சியம் தோன்றியது.

"வாடா..." என்கிறார் நாற்காலியை விட்டு எழுந்திருக்காமலேயே கூப்பிட,

"அண்ணி இல்லையா?" என்று கேட்டவாறே உள்ளே வந்தாள் பர்வதம். இதற்குள் தான் கொண்டு வந்த பையைக் கணவன் கையில் கொடுத்துவிட்டு சமையல் அறையை நோக்கி நகர, "வாம்மா" என்று பெயருக்கு கூப்பிட்டு விட்டு பேப்பரில் ஆழ்கிறார். கண்கள் பேப்பரில் ஆழ்ந்தாலும் மனம் ஆச்சரியப்பட்டது.

இந்த அம்மாள் எதற்கு வந்திருக்கிறாள்? துரைசாமி எப்பொழுதும் வீட்டுக்கு வருவாரே ஒழிய பர்வதம் வந்ததே இல்லை. இன்று வந்தது ஆச்சரியத்தைக் கொடுத்தது. துரைசாமி பையை வாங்கிக் கொண்டு நேரே புவனா, கௌரி இருக்கும் அறைக்குள் நுழைகிறார். கண்கள் சிவந்து, முகம் வெளிறிப்போய், கண்கள் பஞ்சடைந்து போய் தலை கலைந்து இருவரையும் பார்க்கும்போதே மனது கஷ்டப்பட்டது. பாவம் என்று வயிற்றில் பிள்ளையை சுமந்து கொண்டு இருக்கறது. இன்னொன்று திருமணத்துக்காக காத்துக் கொண்டு நிற்கிறது. சொந்த குழந்தைகளை எதிரியாக நினைத்துக் கொண்டு சே! இந்த ஏகாம்பரத்திற்கு எத்தனை சொன்னாலும் உரைக்காது. தான் என்ற அகம், திமிர், தன் குழந்தைகளையே நேசிக்கத் தெரியவில்லை என்றால் பின் யாரை நேசிக்கத் தோன்றும்? இவன் என்று திருந்துவான்?

வேலையிலிருந்து ஓய்வு பெறும் நாள் கூட இன்னும் சில வருடங்களில் வந்துவிடும்.

ஆனால் இவன் மாறுவான் என்று கனவிலும் தோன்றவில்லை.

"என்ன அங்கிள்" புவனாதான் ஈனஸ்வரத்தில் கேட்கிறாள்.

"என்னம்மா ரெண்டு பேரும் சாப்பிட்டீங்களா இல்லையா?" இரண்டு பேரும் அரை மனதோடு தலை ஆட்ட,

"த பாரும்மா, ஏன் பொய் சொல்றே? உங்க கண்களே காட்டிக் கொடுக்குது. உங்க அத்தை பண்ணிக் கொண்டு வந்திருக்காங்க, சாப்பிடுங்க."

''வேண்டாம் அங்கிள்'' சொல்லும்போதே கன்னங்களில் கண்ணீர் சூடாக வந்தது.

''என்னம்மா புவனா ஏம்மா அழறே?''

''அம்மாவுக்கு என் மேலேயும் ஏதோ கோபம் பேசக்கூட இல்லை. காபிகூட அவுங்க மூணு பேருக்கும் கலந்துகிட்டாங்க. உங்களுக்கு வேணுமான்னுகூட கேட்கலை. உள்ளே போய் சாப்பிடக்கூட பயமா இருந்தது அங்கிள்.''

சொல்லிவிட்டு புவனா அழ, கௌரியும் சேர்ந்து அழுகிறாள்.

''சரிம்மா அழாதே சாப்பிடு. நான் போய் பேசறேன்'' என்றவாறே வெளியே வர கௌரியும் புவனாவும் சாப்பிடத் தொடங்கினார்.

வெளியே வந்தவருக்கு எரிச்சலும் ஆத்திரமும் வந்தது. இவன் என்ன விதத்தைச் சேர்ந்தவன் என்றே தெரியவில்லை.

''டேய் என்னடா இதெல்லாம் ஏன் இப்படி நடந்துக்கறே?''

''என்ன? நான் என்ன தப்பா நடந்துகிட்டேன். அவுங்க அம்மாவும் பொண்ணும் சண்டை போட்டா நான் என்ன பண்ணுவேன்.''

''டேய் ஏண்டா இப்படி நீ செய்றது தப்புன்னு கூடவா உனக்குத் தெரியாது.''

''ஏன்யா என்னை குத்தம் சொல்லத்தான் வறியா?''

''டேய் ஏகாம்பரம் உன்னால மனுஷங்களை நேசிக்கவே முடியாதா?''

அவர் கேள்வியில் அர்த்தம் இருந்தது. ஏகாம்பரத்தின் கூடப் பிறந்த தம்பி, அண்ணன்களைச் சேர்த்தால் ஐந்து பேர். தங்கை, தமக்கை ஒவ்வொன்று. ஆனால் அவன் கூடப் பிறந்தவர்கள் கூட அவன் வீட்டிற்கு வந்ததில்லை. புவனாவின் திருமணம் நடந்த போது வந்து விட்டுப் போனார்கள். ஏதோ வரவேண்டும் என்ற நிர்பந்தத்தில் வந்த மாதிரி முகூர்த்தத்திற்கு மட்டும் வந்து தலையைக் காட்டினார்கள். அதுவும் கூடப் பிறந்த அண்ணன் தம்பி, சகோதரிகளில் வந்தது மூன்று பேர். மீதி இருவரிடமும் பேச்சு வார்த்தையே இல்லையாம். வந்திருந்தவர்களும் ஆத்திரத்தோடு கோபத்தையும் காட்டினார்கள்.

மீதி பேரும் வரவில்லை. வந்திருந்தவர்களை சரியாக வரவேற்காததோடு ''என்னடா திடீர்னு வந்திருக்கிறாங்க ஒட்ட வர்றீங்களா?'' கேட்கப்போக சற்று கோபத்தோடு இருந்தவர்கள், பின் சாப்பிடாமல் சென்று விட்டதாகக் கேள்வி. இவர் வீட்டு ஜனங்கள்தான் இப்படி என்றால் இவரின் மனைவி வழி சொந்தம் இவரைப் பார்த்த வுடனே இவர் இருக்கும் தெருவில்கூட வராமல் சுற்றிக் கொண்டு போவதாகக் கேள்வி. அவர் தன்னிடம் மட்டும் தான் பேசி நண்பனாக இருக்கிறார். ஆச்சரியம். தன்னிடம் கூட எரிந்து விழுந்தது உண்டு. ஆனால் தான் எதையும் லட்சியம் செய்வதில்லை.

ஆனாலும் யாரையுமே நேசிக்கத் தெரியாத மனது என்ன மனது? எரிச்சலோடு அங்கே அமர.

''இத பாரு ஏகாம்பரம் நடந்தது எல்லாம் போகட்டும். நல்லபடியா பெண்களை நடத்தி ஒருத்திக்கு கல்யாணம் பண்ணி வச்சு, இன்னொருத்தியோட

குழந்தையைக் கொஞ்சி இப்படி இருப்பியா, சண்டை போட்டுகிட்டு பெண்களை வெளியே துரத்தி... ஏண்டா இன்னும் எத்தனை நாள் உலகத்துலே இருப்போம் இருக்கறவரைக்கும் நல்லா இருந்துட்டுப் போகக்கூடாதா?''

''த்சு... ஆமாம். நல்லா இருக்கணும்ங்கறதுனால தான் இப்படி நடந்துக்கறேன்.''

''என்னடா உளர்றே?''

''உளறலேடா. அதது வீட்டை விட்டு போனா போதும்னு ஆயிடுச்சு.''

''ஒண்ணு மாத்தி ஒண்ணு வரிசையா நிக்குது. அதுக்கு கல்யாணம், கர்மாந்திரம் எல்லாம் செய்யணுமே. இப்பவே அதது வீட்டை விட்டு ஓடிட்டா நிம்மதியா இருக்கும்.''

இவனை திருத்துவது என்பது நாய் வாலை நிமிர்த்திய கதைதான். தலையில் அடித்துக் கொண்டார் துரைசாமி.

அங்கே சமையலறையில் பர்வதத்தின் முன்னே விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள் செண்பகம்.

''பெத்த தாய்னு பார்க்காம எப்படி எல்லாம் பேசிடுச்சுப் பாருங்க.''

''சரி விடுங்க சின்ன பசங்க தானே. அனுபவம் இல்லாதது. விழுந்து எழுந்தால் எல்லாம் சரியாயிடும்.''

''இல்லைங்க மனசே ஆறலை.''

''சரி போகட்டும் விடுங்க. அதையே நினைச்சுகிட்டு இருந்தா எப்படி? ஆக வேண்டியதைப் பாருங்க.''

மறுபடியும் மறுபடியும் செண்பகம் நடந்ததையேக் கூற,

''அதை விடுங்க உங்க ரெண்டு பெண்களும் ஏதாவது சாப்பிட்டாங்களா? புவனா சாப்பிட வரலேன்னா

உடனே துடிச்சுப் போனீங்கன்னு இவரு சொன்னாரு. இப்ப ரெண்டு பேரும் சாப்பிட்டாங்களா?'' செண்பகம் பதில் பேசாது இருக்க,

''ஏன் இப்படிப் பெரியவங்களை போட்டு வறுத்தி எடுக்கறாங்க. உங்க மனசு என்ன பாடுபடும்னு எனக்குத் தெரியும்? இருங்க ரெண்டு பேரையும் கூப்பிடறேன். சாப்பிடக் குடுங்க. பிறகு உங்க மனசும் நிறைஞ்சிடும்'' சொல்லிவிட்டு செண்பகத்தின் பதிலுக்குக் காத்திராமல், கௌரியையும், புவனாவையும் கூப்பிடப் போகிறாள். அவர்கள் இருவரையும் செண்பகத்தின் அருகில் கொண்டு வந்து நிறுத்த,

''ஏம்மா அம்மா எத்தனை பெரியவங்க. குழந்தைகள் தான் உலகம்னு வாழ்ந்தவங்க. அவுங்களைப் பத்தி எல்லாம் பேசலாமா? முதல்லே சாரி சொல்லு'' கௌரி முதலில் தயங்கியவள் பிறகு 'ஸாரி' சொல்ல,

''பாவம் உங்கம்மா குழந்தைகள் ஒண்ணுமே சாப்பிடலையேன்னு துடிச்சுப் போனாங்க. பாவம் எப்படி வேதனைப்படறாங்க பாருங்க'' செண்பகத்தின் பதிலை எதிர்பார்க்காமல், ''வாங்க குழந்தைகளுக்கு உங்க கையால காபியைக் கொடுங்க'' என்று சொல்லி காபியைக் கலக்க வைத்து அவர்களுக்குக் கொடுத்து விட்டு, சிறிது நேரம் செண்பகத்தை புகழ்ந்து விட்டு கணவனோடு கிளம்புகிறாள்.

''என்னாச்சும்மா?'' துரைசாமி வழியில் கேட்க,

''என்னத்தை சொல்றது? இவங்களுக்கு ஏன் இத்தனை வன்மம்னு தெரியலையே. கௌரிதான் அவுங்களைச் சொல்லிச்சு. புவனா என்ன செய்தது? அதுவும் முழுகாம வேற இருக்கு பாவங்க. நம்பளைத் தவிர ப்ரண்ட்ஸ்னு

யாருமே கிடையாது. அக்கம் பக்கமெல்லாம் சண்டை போட்டாங்களாம். இவுங்களுக்கு கஷ்டம்னு வந்தா யார் உதவி பண்ணுவாங்கன்னு தெரியலை.''

''என்னவோ போ. அவனும் ஒரு பிறவியா இத்தனை வருஷம் வாழ்ந்தாச்சா. அந்தக் குழந்தைகளை ஆண்டவன்தான் காப்பாத்தணும்.''

வீட்டிற்கு வரும் வரையில் அதையே பேசிவிட்டு வந்தபோது மீனா அப்போது தான் குளித்து விட்டு தன் துணிகளை சோப்பில் ஊற வைத்து விட்டு வந்தபோது, ''மீனு உங்கப்பா சிவப்பு ஷர்ட்டையும் ஊற வச்சிடு'' என்கிறாள் பர்வதம். ஸ்டாண்டில் இருந்த அப்பாவின் சிவப்பு சட்டையை எடுத்தவள் பாக்கெட்டில் ஏதேனும் உள்ளதா என்று பார்த்தவள் அதிலிருந்து ஒரு கடிதத்தை எடுக்க, பிரித்துப் படித்தவள், ''இது எப்படி உங்கிட்டே வந்தது?'' என்று கேட்கிறாள்.

''எதும்மா... ஓ... இந்த மொட்டைக் கடுதாசியா. கல்யாணத்தைக் கெடுக்கணும்னு எந்தப் பாவியோ போட்டான்... ஆனா கடவுள் புண்ணியத்தில் ஒண்ணும் நடக்கலே.'' அவர் பெருமூச்சுவிட,

''நான்தான்பா போட்டேன்...'' மீனா சொல்ல பர்வதமும், துரைசாமியும் திடுக்கிட்டனர்.

14

''என்னம்மா சொல்றே?'' துரைசாமி பதறிப்போய் கேட்க,

''ஏம்மா உங்களுக்கு எல்லாம் என்ன குறை வச்சிருக்கோம். குழந்தைங்க, குழந்தைங்கன்னு உங்களுக்

காகத்தானே வாழ்ந்துகிட்டு இருக்கோம். இந்த படிப்பு படிக்கணும்னீங்க படிக்க வச்சோம். கஷ்டமோ, நஷ்டமோ எங்களுக்கு ஒண்ணுமே செய்துக்கலைன்னாலும் பிள்ளைங்க, பிள்ளைங்கன்னு உங்களுக்கு தானே எல்லாம் செய்தோம். நீ ஏம்மா இப்படி செய்தே? என்ன குறை வச்சுட்டோம். உனக்கும் எங்களால முடிஞ்சதெல்லாம் செய்துகிட்டுதானே இருக்கோம். ஏம்மா இப்படி செய்தே?''

''அம்மா ஏன் இப்படி வீணா புலம்பறீங்க?'' என்ன ஏதுன்னு விசாரிக்கறதுக்குள்ளே ஏன் படபடன்னு பேசறீங்க.''

''சரிம்மா எதுக்கு இப்படி செய்தே.''

''அம்மா எனக்கு ஒரு மச்சினன் இருக்கான் இல்லே. அவனுக்கு என் தங்கையை தரணும்னு ரொம்ப நாளா ஆசை.''

''அதுக்கு இப்படியா பண்ணுவாங்க? உனக்கு புத்தி பேதலிச்சுப் போச்சா. உன் தங்கைக்கு பிக்ஸ் ஆயிட்டப் புறம் அதை யாராவது தடுப்பாங்களா?''

''சொல்றதை முழுமையா கேளுங்கம்மா. என் மச்சினன். நல்ல படிப்பு படிச்சிருக்கிறார். போஸ்ட் கிராஜுவேட். பெரிய வேலைல இருக்கார். கை நிறைய சம்பளம். எங்க குடும்பத்தைப் பத்தி உங்களுக்கும் தெரியுமில்லே. நீங்களே அங்க வந்து கல்யாணத்தைப் பேசியிருக்கணும். இப்பதான் அவருக்கு கல்யாணம் செய்யணும்னு பேசிகிட்டு இருக்காங்க. நான் நம்ப ரேணுவை பத்தி சொன்னபோது மாமியார் மாமனார் உடனே சரின்னு சொல்லிட்டாங்க. அப்புறம்தான்

அவளுக்கு பிக்ஸ் பண்ணிட்டீங்கன்னு நீங்க சொன்னீங்க. அதான் லெட்டர் எழுதிப் போட்டேன்.''

துரைசாமி வருத்தப்பட்டார். 'பாவம் ஏகாம்பரம்தான் இதை செய்திருப்பானோ என்று ஒரு நிமிடம் சந்தேகப் பட்டோமே, தப்புதான்.'

''என்ன மீனா பேசறே? இத்தனை பெரிய பொண்ணு. உனக்கு ஒண்ணுமே தெரியாதா? நிச்சயம் பண்ணாத வரைக்கும் யாரை வேணா எது வேணா கேட்டுக்கலாம். செய்துக்கலாம். ஒருத்தருக்கு நிச்சயம் செய்த பிறகு அவுங்களைப் பத்தி சொல்றது. எழுதிப் போடறது எல்லாம் தப்பில்லையா.''

''அம்மா எங்க மச்சினனோட பொண்டாட்டியா வாதுக்கு என்ன வேணா பண்ணலாம். எங்க வீட்டுக் காரங்களே எத்தனை நல்லவங்க தெரியும். அதுவும் எங்க வீட்டுலே எங்க மச்சினன்போல ஒரு மனுஷனை பார்க்கவே முடியாது தெரியுமா?''

''என்னடி.... உம்புருஷன் கூடதான் ரொம்ப நல்ல மாதிரி'' பார்வதம் அலுத்துக் கொள்ள,

''அம்மா எம்புருஷன் நல்ல மாதிரிதான். ஆனா தானா எதையும் செய்யத் தெரியாது. நமக்கு ஒரு தலைவலி, கால்வலின்னாகூட கேட்டா தான் மருந்து வாங்கித் தருவார். இதைச் செய்யுங்க. அதைச் செய்யுங்கன்னு சொல்லணும். ஆனா மச்சினன் அருண் இருக்கிறாரே குறிப்பறிந்து செய்யறவர். இப்பவே ஊருக்கு நடுவிலே பெரிய பங்களாவே வாங்கிப் போட்டு இருக்கார். கல்யாணம் ஆனவுடனே கார் வாங்கப் போறாராம். பேங்கிலே எக்கச்சக்க துட்டை

வச்சிருக்கார். பெண்டாட்டியை நல்லா வச்சுக்கணு ஹனிமூனுக்கு ஸ்விட்சர்லாந்து போகணுமாம். இதெ எவளோ அனுபவிக்கறதை விட என் தங்கை அனுபவிக்கணும்னு நெனச்சது தப்பா? அதுக்காகத்தான் என்னாலான வழியை செய்தேன்'' எல்லாமே தப்பாப் போச்சு.''

பார்வதத்திற்கு பெண்ணை என்ன சொல்வதென்று தெரியவில்லை. நல்லது செய்யறேன்னு கெடுதல் செய்திருக்கா. இந்தக் கல்யாணம் நின்னிருந்தா என்னா யிருக்கும் என்றுகூட தோன்றாத நிலை. நிச்சயம் ஆன இந்த மூன்று மாதங்களாக பெண்ணும் மாப்பிள்ளையும் ஒரு நாளைக்கு ஐந்து தடவையாவது போனில் பேசிக் கொள்கிறார்கள். வீவு நாட்களில் அரை மணிக்கு ஒரு முறை போன் பெல் அடித்துக் கொண்டே இருக்கும். இந்நிலையில் திருமணத்தை நிறுத்தி இருந்தால் என்ன ஆகி இருக்கும்?''

பார்வதம் பெருமூச்சு விட்டாள். பெண் செய்தது தவறு என்று தெரிந்தும் துரைசாமி பெண்ணை திட்டவில்லை. ஆத்திரப்படவில்லை. ''பாவம் குழந்தை ஏதோ தெரியாம பண்ணிடுச்சு'' என்கிறார்.

என்னதான் பெண் செய்தது தவறு இல்லை என்று வாதித்தாலும். இப்படி அசட்டுக் காரியம் செய்து விட்டதே என்ற உறுத்தல் இல்லாமல் இல்லை. அன்று முழுவதும் ஏதோ பேசியபடியே இருந்தபோது, பெண் சொல்கிறாள்.

''த பாருங்கப்பா. என் மச்சினன் கிடைக்க நீங்க கொடுத்து வைக்கலை. ஆனா கட்டாயம் அந்த பொண்ணு கௌரி எனக்கு ஓரகத்தியா வரவே கூடா

அதை நான் ஒத்துக்க மாட்டேன். நீங்க நெனச்சா கட்டாயம் கல்யாணத்தை தடுக்கலாம். இந்தக் கல்யாணம் நடக்காதபடி நீங்கதாம்பா பண்ணனும்.''

துரைசாமிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. 'தனக்கு ரெண்டு கண் போனாலும் எதிரிக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும் என்ற நல்ல எண்ணம். என்ன பெண் இது.' உள்ளுக்குள் ஒரு நிமிடம் ஏற்பட்டாலும், 'சீ... பாவம் தன் பெண் ஒரு குழந்தை உலக அனுபவமே இல்லாத குழந்தை.'

''இத பாரும்மா நீ என்ன ஆசைப்படறியோ அது நடக்கும். உன் நியாயமான ஆசைகள் கட்டாயம் ஜெயிக்கும்.''

சொன்ன துரைசாமி யோசனையில் ஆழ்கிறார். மொட்டைக் கடுதாசி வந்ததும் ஏகாம்பரம் தான் போட்டிருப்பான் என்று தான் சந்தேகப்பட்டோமே அது எத்தனை பெரிய தவறு?

''என்னப்பா பொதுப்படையா சொல்லிட்டீங்க? அவுங்க கல்யாணம் நடத்தக் கூடாது. அது உங்களால தான்பா முடியும்'' ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த துரைசாமி திடுக்கிட்டார். இது அன்பா? இல்லை கட்டளையா?''

''என்னடி இது? என்னமோ தமிழ் சினிமாவுலே நடக்குமே அது மாதிரி பேசறே.''

''என்னம்மா?''

''த... பாரும்மா கல்யாணம்ங்கறது மேலே அவன் போடற முடிச்சு. யாரோட யார் சேரணும்ங்கறது அவன் போடுகிற முடிச்சு. அதை அந்த ஆண்டவனாலேயே

மாத்த முடியாதாம். மணமேடையில் அமர்ந்து தாலி கட்டும் நேரத்தில் கூட எத்தனையோ திருமணம் நின்று போயிருக்கிறது. அதனால் இதை நிறுத்திடு. அதை நிறுத்திடுன்னு சொல்றதே அசட்டுத்தனம். பாரு. கடவுள் மேலே பாரத்தைப் போடுவோம். அவர் பாத்துப்பாரு. உம்மச்சினனுக்கு கௌரி தான் பொண்டாட்டியா வருவான்னு இருந்தா அதையும் யாராலேயும் மாத்த முடியாது.

அதற்கு மேல் மீனா பேசவில்லை. அதன் பிறகு பேச்சை மாற்றி வேறு ஏதோ விஷயங்களைப் பேசி பர்வதம் நிலைமையை சகஜமாக்க முயலுகிறாள். சிறிது நேரத்தில் அப்பா, பெண் அம்மா என்று தங்களை மறந்து பேசிக் கொண்டிருக்க, இங்கே அம்மா கொடுத்த காபியை விழுங்கிய கௌரிக்கும், விஜிக்கும் தலை விண், விண்ணென்று வலித்தது. நேற்று ஒரு இரவு சாப்பிடாததற்கா இத்தனை சோர்வு. கௌரிக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. 'காலையில் கூட துரைசாமி அங்கிள் இட்லி, வடகறி என்று எல்லாவற்றையும் கொடுத்து விட்டார். சாப்பிட்ட பின் கண்ணை சுழற்றிக் கொண்டு வந்தது. போதாத குறைக்கு அந்த ஆன்ட்டி அம்மாவிடம் பேச வைத்து காபி சாப்பிட வைத்து, தனக்கே இப்படி இருக்கிறதே அக்காவிற்கு எப்படி இருக்கும்? பாவம் எட்டு மாத கர்ப்பிணி மெதுவாக திரும்பி அக்காவைப் பார்க்கிறாள். சற்று முன் தான் குளித்து விட்டு வந்திருக்கிறாள். சோர்ந்து போய் படுத்து இருக்கிறாள். பாவம் தன்னால்தான் அவளுக்கு இந்த நிலைமை. இல்லையென்றால் வயிற்றிற்காவது அவளுக்கு சாப்பிடக் கிடைத்திருக்கும்.'

வலிக்கவில்லை என்று யாரோ நினைத்து விடப் கூடாதே என்று எப்பொழுதாவது நினைத்து இருக்கிறாளா அம்மா அப்பா மாமா மாமி என்று யாரேனும் உரிமை கொண்டாட முடியாத ஒரு பெண்ணாகவே தன்னை நினைத்துக் கொண்டாள்.

ஆனால் தன்னை எதிர் அண்ணன்களே ஆதரவு என்று எங்கி எங்கி கடைசியில் ஒரு நடையாய் நொடியில் போய் நின்னி விட்டார் ஐயா. யாரை யார் எப்படி இருக்கிறார் என்பதை பார்க்கிலையாம் வயசிலையே அவளுக்கு எந்தனையோ நாட்கள் தன் வயிற்றை வேதனையை மனதில் வைத்தும் பூட்டி அழுது தவித்து போகிறாள். நம்பிக்கையே என்றாவது சாய்ந்து விடாமல் போதும். இந்த வேற நான் வேண்டுமா என்பார். ஒரு நம்பிக்கையை, பண்பை, பாசம் எதற்குமே போக போகிறது கொண்டே இருப்பார்.

தன் தாய் சற்று தூண்டினால் சினம் மூண்டிடும் போல்வதி என்று பாதி விளையில் மட்டமான வார்த்தை வாங்கி பெண்ணின் தலையில் கட்டிவிட்டு போவார்.

மீனாவின் மாமியார் வீட்டில் தான் பிரச்சனை நிகழ்ச்சிக்கு தங்களையும் வர சொல்லி இருந்தார் துரைசாமி. அருண் வீட்டவர்களும் கூப்பிட்டனர். மீனாவின் தந்தைக்கும், தாய்க்கும் தர வேண்டிய மரியாதை மற்ற எல்லோருக்கும் ஒரு கை மீனாவின் கைகளில் கொடுத்து பத்திரமாக வைத்திருக்க சொல்லி, கோவிலுக்கு போய் விட்டு வரச் சொன்னார். பிள்ளை அங்கேயே ஓடி விளையாடிக் கொண்டு, மச்சினன், மாமியார், மாமனார் ஆளாளுக்கு

ஆளுக்கு ஒரு திசையில் மேல்மே வெளியே அம்மா அப்பா மாமனார் மாமியார் ஹாலில் அமர்ந்து ஒரு வேலையில் முழ்கி இருந்தாள். ஓசைப்படாமல் அந்தப்புறம் கோவிலை நோக்கி நடக்கிறாள். ஒரு திட்டத்தான் நிம்மதியாக இருக்கும் இடம் முன்னாலை, வேதனைகளை யாரிடம் வெளிப்படுத்தி முடித்து விட்டால் கட்டாயம் நல்ல தீர்வை கிடைத்துவிடும். அதன் பிறகு நல்ல நாளிலிருந்து விடுதலை.

ஓடியே போய் சிவபெருமானை சேவித்துவிட்டு சுற்றி விட்டு எப்போதும் வழக்கமாக அமரும் தூண்களை அம்மனின் சன்னதிக்கு மாறாக அமர்ந்து கொள்கிறாள்.

அனைவரும் எந்தனையோ குடும்பங்களைப் பார்த்திருக்கிறாள் நாம், நந்தனை, தன் பெண், தன் பிள்ளை என்று தான் பார்த்திருக்கிறாள். 'எங்கோ போய் துரைசாமி மாமாவிற்கும்தான் மூன்று பெண் ஒரு பெண்ணைக்கூட மறந்து போய் கூட அவர் சீ என்று பார்த்ததில்லை. கூப்பிடும்போதே 'என் என்றுதான் என்று தான் ஆரம்பிப்பார்.

அவரின் முதல் மகளைத் திருமணம் செய்து கொடுத்து கொஞ்சமா கஷ்டப்பட்டார். தன் மகளை துன்புறுத்துகிறார்கள் என்று தெரிந்ததுமே சரணை என்று அவர்கள் காலில் விழுந்து, நிலமை சரியாகு என்ன தன் உடலை செருப்பாகத் தைத்துப் போட் ஆனாலும் ஏன் பிறகு வந்த மீனு விஷயத்தி மட்டுமென்ன. முதல் மகளை கவனித்தார். தன்னை

பேச, மீனா கண் கலங்க, எப்படி பதறி விட்டார் துரைசாமி.

"ஐயையோ அதும் பேர்ல தப்பே இல்லீங்க. தப்பெல்லாம் என் பேர்தான். எங்கிட்டேதான் கொடுத்து வச்சிருந்தது. நான்தான் கை மறதியா கோயில்லயே வச்சுட்டு வந்துட்டேன். தப்பு என்னுதுதாங்க. மன்னிச்சிடுங்க." ஒவ்வொருவரிடம் மன்னிப்பு கேட்டு விட்டு ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கோவிலுக்குப் போய் அது வைத்த இடத்தில் இருந்ததைப் பார்த்து அதை எடுத்து வந்து சம்பந்தியிடம் கொடுத்து. "இந்த சொன்ன இடத்துலே தான்டா கண்ணு இருந்தது. அழாதே நவுறது சகஜம்தானே" என்று பெண்ணை தேற்றினார்.

இதை நினைக்கையிலே ஏனோ புவனாவின் நினைவு வந்தது. புவனாவிற்கு தாலி பிரித்து கோக்கும் நிகழ்ச்சி புவனாவின் மாமியார் வீட்டில் விருந்து. முகச்சுளிப்பையும், எரிச்சலையும் என்னமாய் காட்டினார்கள். புவனாவின் கணவர் சாதாரணமாகவே ஒரு வார்த்தை அரை வார்த்தை தான் பேசுவார். ஆனால் தன் மனிதர்கள் வந்து விட்டாலோ யாரையுமே லட்சியம் செய்ய மாட்டார். அன்று தாலி பிரித்து கோக்கப்படும் நிகழ்ச்சியில் அக்கா எத்தனை வேலை செய்கிறாள். புகுந்த வீட்டார்கள் சுள்ளென்று விழ, அப்பாவையும் அவர் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்து இன்னும் எரிச்சல் அடைய, அப்பா எதையும் கவனிக்காமல் பெண்களை மட்டம் தட்டிக் கொண்டு சிரிக்க, சம்பந்தி வீட்டார் புவனாவின் கணவரை கூப்பிடுமாறு புவனாவிடம் சொல்ல, புவனா மெதுவாக வந்து கணவனைக் கூப்பிட,

ஆரம்பித்து விட்டார் அப்பா.

"அடங்க சார். அடி உதவை மாதிரி அண்ணன் தம்பி உதவாது. எங்க வீட்டிலேயே இந்தக் கூத்தை எல்லாத்தையும் முடிக்கிட்டு இருக்கும். இங்க வந்து துள்ளுது. அப்பப்ப வாய் மேலே போட்டுகிட்டே இருங்க. வாயைத் திறக்கவே கூடாது."

அப்பாவின் இந்த வேதவாக்கை கேட்டு புவனாவின் மாமியார் உட்பட முகத்தை களித்துவிட்டு இவர்கள் அனைவரையுமே புழுவைப் பார்ப்பதுபோல் பார்க்க, அம்மா வீட்டிற்கு வந்து அழுத அழுகை... அப்பப்பா இப்ப நினைத்தாலும் நெஞ்சே விண்டு போகிறது.

"ஹாய் என்ன என் மோகினி தனியா உக்காந்துகிட்டு நவம் பண்ணுது" குரலைக் கேட்டவள் திடுக்கிட்டு போய் திரும்பிப் பார்க்கிறாள். அருண் தான் கேட்கிறான்.

"ஓ... நீங்களா... பயந்தே போயிட்டேன்."

"என்ன பயம்?"

"சரிதான் இப்படித்தான் திடீர்னு வந்து பேசுவாங்களா?"

"இது என்னடா கதையா இருக்கு. நீ திடீர்னுதானே வந்திருக்கே."

"ஐயோ... அருண் உங்களுக்கு ஆக்சுவலா என்ன வேணும்?

"சரிதான் அதை எத்தனை தடவை சொல்றது? எப்ப நம்ப கல்யாணம்?"

"அருண் புரியலையா? இல்லே புரியாத மாதிரி நடிக்கிறீங்களா தெரியலை."

"என்ன தெரியலை. எத்தனை தடவை சொல்லி இருக்கேன். இப்ப கல்யாணம் எல்லாம் பண்ணிக்கிற மாதிரி இல்லேன்னு."

"ஏம்மா நீ மட்டும் தான் நூறு தடவை சொல்லுவியா? நான் சொல்லலே. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு படின்னு சொன்னேனா இல்லியா?"

"என்ன அருண் இது உங்க ஆசைக்கு தான் முதலிடமா? மத்தவங்க உணர்வுக்கு மதிப்பே கொடுக்க மாட்டீங்களா?"

"சரிதான் மதிப்புக் கொடுத்ததுனால தான் வாங்கி கிட்டு நிக்கறேன்."

"என்ன மதிப்பு கொடுத்துட்டீங்க?"

"உனக்கு படிக்கணும்னு ஆசைதானே. அதுக்கே கேடு வந்தா. அதான் உனக்கு ஹெல்ப் பண்ண வந்தேன்."

"இப்ப நீங்கதான் புரியாதபடி பேசறீங்க?"

"ஓ.கே. டைரக்டா விஷயத்துக்கு வந்துடறேன். எம் பிரண்டோட அப்பா ஜோசியம் பார்ப்பார் தெரியுமில்லே. உன் ஜாதகத்தையும், மாப்பிள்ளை ஜாதகத்தையும் உங்கப்பா கொடுத்து பொருத்தம் பார்க்கச் சொன்னாராம்."

"இருக்கட்டுமே. அதுக்கு நீங்க ஏன் புலம்பறீங்க?"

"இதபாரு என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு எவனோ இத்துப் போனவனை எப்படிப் பண்ணிப்பே. வாற்வன் ஒண்ணும் அமெரிக்கன் ரிடர்ன் இல்லே. சாதாரண கிளார்க். நாப்பது வயசாச்சு. கல்யாணம் ஆகாம பாதிக் கிழமாயிடுச்சு. அதையா

செய்துக்கப் போறே! அவனை செய்துக்கறதுக்கு என்னை செய்துகிட்டா என்ன தப்பு?"

"யாரைச் சொல்றீங்க?" சற்று எரிச்சலுடனும், ஆதங்கத்துடன் கேட்கிறாள் கௌரி.

"ம்... உங்க வீட்டுலேர்ந்து மூணாவது வீட்டுலே இருக்கானே ஒரு சோடா பாட்டில் அவனைத்தான் உனக்கு உங்கப்பா பிக்ஸ் பண்ணப் போறார்."

கௌரி நம்ப முடியாமல் அதிர்ந்து போனாள்.

கௌரி உண்மையிலேயே ஆடிப் போய்விடுகிறாள். தன்னைவிட இருபது வயது பெரியவன் அந்த மூணாவது வீட்டு ஆள். அவனையா தனக்கு துணையாக தன் தந்தை தேர்ந்தெடுக்கிறார். எரிச்சல், ஆத்திரம், கோபம் ஒரு சேரத் தாக்க மௌனமாகிறாள். 'இந்த அப்பா என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார். என்னையும் புவனா என்று நினைத்துக் கொண்டிருக்கிறாரா? இப்படி மட்டும் இருக்கட்டும். அப்புறம் தெரியும் சேதி.' மனதிற்குள் கறுவிக் கொண்டவள், மௌனமாக இருக்க,

"என்னம்மா சைலன்ட் ஆயிட்டே. என்ன டிசைட் பண்ணியிருக்கே?' அருண் மிருதுவாக கேட்க,

"என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியலை. இது நிஜமா, பொய்யான்னு எனக்குத் தெரியலை."

"நிஜம்தான். என் பிரண்டோட வீட்டுக்குப் போயிருந்தேன். உங்கப்பா உன் ஜாதகத்தையும், பையனையும்

கொடுத்துப் பொருத்தம் பாக்கச் சொன்னார். உங்கப்பாவைப் பார்த்தவுடனே, எம் பிரண்ட் மூலமா யாரு என்னன்னு விசாரிச்சேன் தெரிஞ்சுது. இப்ப கூட உன் பதிலை எதிர்பார்த்து காத்துக்கிட்டு இருக்கேன். சம்மதம்னு சொல்லு நாளைக்கே ரெடி பண்ணலாம்.''

''என்ன அருண் விளையாடறீங்களா? உங்க வீட்டிலேயும் என் வீட்டிலேயும் சொல்ல வேண்டாமா? என் வீட்டிலே ஒத்துப்பாங்க. ஏன்னா செலவில்லாம மாப்பிள்ளை கிடைக்குன்னா எங்கப்பா விட மாட்டார். ஆனா உங்க வீட்டுலே...''

''அதைப்பத்தி நீயேன் கவலைப்படறே? நீ சம்மதிச்சா போதும். மத்ததை நான் பார்த்துக்கறேன். சம்மதம் தானே.''

''இதப் பாருங்க. எனக்கு படிப்பு முக்கியம். அதோட அமெரிக்கா போறது என் கனவு. கல்யாணத்தை நினைக்கக்கூட மனசு ஒப்பலை.''

''உன் கனவை என் கனவா வச்சு நிறைவேத்த வேண்டியது என் பொறுப்பு. நீ ஏன் கவலைப்படறே?''

கௌரி பெருமூச்சு விடுகிறாள். ஒரு சராசரிப் பெண்ணுக்கு வேண்டுமானால் காதல் கல்யாணம் எல்லாம் இன்பத்தைத் தரலாம். ஆனால் தனக்கு? வீட்டில் கஷ்டங்களையும் வேதனைகளையுமே பார்த்துப் பார்த்து காதல், கல்யாணம் என்ற நிலைகள் இன்பத்தைக் கொடுப்பதற்கு பதில் அச்சத்தைத்தான் கொடுக்கிறது. பெருமூச்சு விடுகிறாள்.

''என்னம்மா சொல்றே?''

''அருண் முதல்லே வீட்டுக்குப் போறேன். என்னை மீறி எதுவும் பண்ணிட முடியாது. எங்கப்பா இந்த மாதிரி ஒரு மாப்பிள்ளையை கொண்டு வரட்டும் அப்புறம் பேசிக்கறேன். அப்படி ரொம்ப தாங்க முடிய லேன்னா...''

நிறுத்தியவள், பின் களுக்கென்று சிரிக்கிறாள்.

''என்னம்மா சிரிக்கறே?''

''இல்லை என்ன பத்தி கவலைப்படத்தான் ஒருத்தர் இருக்காரே. நான் ஏன் கவலைப்படணும்னு நினைச்சேன். சிரிச்சேன். நான் எத்தனை பெரிய முட்டாள்.''

அருண் முகத்திலும் மெல்லிய சிரிப்புப் படர,

''நீங்க எதுக்கு சிரிக்கறீங்க?''

''இன்னிக்குதாம்மா நீ உண்மையை ஒத்துக்கிட்டு இருக்கே.''

''ஓ... என்னை முட்டாள்னு சொல்றீங்களா?''

''அதான் நீயே ஒத்துகிட்டயே. அடாடா... கோபமா?''

சட்டென்று அவள் தலையைத் தட்டி விட, ''ஏய் என்ன இது?'' என்கிறாள்.

''ஓ.கே. நாம ரெண்டு பேரும் எங்கயாவது போயிட்டு வரலாமா?''

''எங்கே? எதுக்கு?''

''நம்ப விஷயம் ஸக்ஸஸ் ஆகுதுன்னு செலிபிரேட் பண்ணத்தான்.''

''ஹலோ... உங்களைக் கல்யாணம் பண்ணிக்கறதா நான் சொல்லவே இல்லை.''

''சொல்லாமத்தான் இத்தனை பேசினியாக்கும். சரி கிளம்பு கிளம்பு. பேச்சு வளர்ந்தா மறுபடியும் பிரச்னை தான்.''

''சார் நான் எங்கேயும் வரலை. வீட்டுக்குப் போகணும்.''

''எல்லாம் போகலாம் கிளம்பு.''

''அருண் சொன்னா கேக்க மாட்டீங்களா?''

''அதையே தான் நானும் கேக்கறேன்.''

ஏதோ மறுப்பு சொல்ல வாயெடுத்தவளை,

''கிளம்பு அருணா'' உசுப்பிவிட, அரை மனதுடன் கிளம்புகிறாள். நல்லவேளை இன்று காரை எடுத்து வந்திருக்கிறான். இல்லையென்றால் டூவீலரில் கஷ்டப் பட்டு செல்ல வேண்டும்.

காரில் அவனோடு பயணிக்கும்போதும், அவன் அருகே அமர்ந்த போதும் அவர் யோசனை முழுவதும் அவர் தந்தையின் மீதே இருந்தது.

''என்னம்மா பேசாம வர்றே?''

''இல்லை எங்கப்பாவைப் பத்தி நினைச்சேன். வேதனையாக இருக்கு.''

சிறிது நேரம் மௌனமாக வண்டியை ஓட்டியவன் பின் மெதுவாகச் சொல்லுகிறான்.

''உங்கப்பா மாதிரி ஒரு ஆளை நான் பார்த்ததே இல்லை. தன் சுற்றம் தன் குடும்பம்னு கூடவா ஒரு மனுஷனுக்கு நேசம் இருக்காது.''

''எல்லாம் எங்க தலை எழுத்துதான். அதுனாலதான் கல்யாணம்னாலே பயமா இருக்கு.''

''எல்லா ஆம்பளைங்களும் அப்படியா என்ன?''

''யார் எப்படியோ? உங்க வீட்டு ஆம்பளைங்க எல்லாமே மோசம்தான். அக்கா வீட்டுக்காரு மட்டும் என்ன வாழுது? அக்கா எத்தனையோ கஷ்டப்படுது. ஒருநாள் கூட மாமா பாவம்னு நினைச்சதில்லே. சொல்லப் போனா ஊராருக்கு செய்யற உதவிகூட எங்கக்காவுக்கு செய்யறதில்லே. அவ ஒதுக்கப்பட்டவளா புருஷன் இருந்தும் ஒரு விதவை மாதிரிதான் வாழ்ந்து கிட்டு இருக்கா. இந்த குழந்தையை சுமந்துகிட்டு அவ படற வேதனை கொஞ்சம் நஞ்சம் இல்லே. எனக்கு ஆம்பளைங்கன்னாலே வெறுப்பாதான் இருக்கு. எம் பார்வையிலே ஒருத்தன் கூட நல்லவன் இல்லேன்னு தோணுது.''

''ஈஸி...'' என்று மெதுவாக சொன்னவன், ''துரை சாமி அங்கிளைப் பத்தி என்ன நினைக்கறே. மனுஷன்னா அவர்தாம்மா மனுஷன். ஆச்சரியமா இருக்கு. தன் குழந்தைகளை இப்படி எல்லாம் கூட நேசிக்க முடியுமா?

போன மாசம் வந்திருந்தாரு. அப்ப எங்க அண்ணி பேங்க்குக்கு போயிட்டிருந்தாங்க. ஏம்மா இந்த வெய் யில்லே போறேன்னு சொல்லி அண்ணியை உக்கார வச்சுட்டு அவரு போயிட்டு வந்தாரு. அதே மாதிரி தான் போஸ்ட் ஆபீஸோ இல்லை வெளியிலே எங்க போனாலும் சரி அந்த அங்கிள் பார்த்தாருன்னா எத்தனை வெய்யிலா இருந்தாலும் தான் போய் வாங்கிட்டு வந்திடுவாரு. வெளி வேலையை விடு.

வீட்டு வேலை. போன வாரம் ஞாயிற்றுக்கிழமை பெண்ணை பார்க்க வந்திருக்காரு. அண்ணி பாத்திரம் கழுவிக்கிட்டிருந்தாங்க. கூட உக்காந்து தேய்க்க போட்ட போட கழுவி, சாமான்களை அடுக்கி வச்ச, நான் கூட எத்தனையோ தடவை வேண்டாம் வேண்டாம்னு சொல்லியும் கேக்கலை. எம்பொண்ணுக்கு நானே பண்றேன். அப்படின்னு சொல்லிட்டு மொத்த வேலையும் இழுத்துப் போட்டுகிட்டு, உங்கப்பா ஒரு துரும்பு துரைசாமி அங்கிள் அவளுக்கு நேர் விரோதம். இவங்களுக்குள்ளே ப்ரண்ட்ஷிப் வேற ஆச்சரியமா இருக்கு.''

அருகில் உள்ள ஹோட்டலுக்குள் அருண் காரை செலுத்த,

''ஏய் என்ன இது?''

''முதன் முதல்ல வர்றோம். ஏதாவது சாப்பிட்டு கிளம்பலாம்.''

''அதெல்லாம் வேண்டாம். நான் லேட்டாதான் டிபன் சாப்பிட்டேன்'' அவள் மறுக்க மறுக்க பிடிவாதமாக அழைத்து வருகிறான்.

''ஏன் இப்படி செய்யறீங்க?''

''இதப் பாரும்மா உன் கிட்டே கட்டாயம் ஒன்னைச் சொல்லியே ஆகணும். நாம வாழப் போறது எத்தனை நாள். இருக்கற வரைக்கும் சந்தோஷமா இருந்துட்டுப் போயிடுவோமே. ஏன் துக்கத்தையே நினைச்சுகிட்டு நாமளும் சந்தோஷப்படாம அடுத்தவனையும் வருத்தப் பட வச்க தேவையா?''

அதற்கு மேல் கௌரி ஒன்றும் பேசவில்லை. பேசுகின்ற நிலையிலும் அவள் இல்லை. வாழ்க்கை கொஞ்ச நாட்கள் தான் துக்கப்படக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அதற்காக துக்கப்படாமலா இருக்க முடிகிறது. ஒவ்வொரு நாட்களும் என்னென்ன நிகழ்வுகள். வேதனைகள். மற்ற வீடுகளில் எப்படியோ தன் வீட்டில் இருக்கக் கூட முடியாது. அப்பா செய்யும் ஆர்ப்பாட்டங்கள், அதிகாரம், அட்டகாசங்கள், வெளிப்படையாகவே காண்பிக்கும் வெறுப்பு. அம்மா கொஞ்சம் ஆதரவாக இருந்தவள், அவருக்கு என்னாயிற்று? மூன்று பெண்களிடையே பிரச்சனை வந்தால் கடைசி பெண்ணுக்கு மட்டும் எப்போதும் ஆதரவு தருவார். ஆனால் அப்பா செய்யும் பிரச்சனைகளில் மனம் வெந்து பாவம் என் குழந்தைகள் என்று தங்கள் பக்கம் பேசிய அம்மா இப்போது அப்பாவின் பக்கம். அப்பாவின் ஒவ்வொரு வேலைகளையும் அங்கீகரித்து தன் சொந்தப் பெண்களை அம்மாவும் விரோதியாக பார்த்துக் கொண்டு... மனம் எரிச்சல் பட்டது.

இதற்குள் அருண் மடமடவென்று ப்ரைட் ரைஸ், நான், பட்டர் பன்னீர் மசாலா என்று எக்கச்சக்கமாக ஆர்டர் செய்ய, எல்லாம் வந்தபின், ''என்னப்பா கல்யாண வாழ்க்கையைப் பத்தி இப்பவே ஹேப்பி ட்ரீம்ஸா'' என்றவன் இரு திருத்திப்புகளை ஆர்டர் செய்தான்.

''இன்னும் ஏதாவது சாப்பிடறியா?'' அவன் கேட்க, தட்டில் பரப்பி வைத்திருந்த பொருட்களைப் பார்த்து வைக்கிறாள்.

''ஐயோ என்ன இத்தனை ஆர்டர் பண்ணியிருக்கீங்க? யார் சாப்பிடறது?''

"சாப்பிடு" என்று சொல்ல, நான் சப்ஜி மட்டும் சாப்பிட்டுவிட்டு மற்றவற்றை பேக் செய்து எடுத்துக் கொண்டு கிளம்ப,

"ஏய் என்ன இது?"

"போதும் அருண். மீதி வீட்டுக்கு எடுத்துட்டுப் போய் அப்புறமா சாப்பிட்டுக்கறேன். வீட்டுக்கு எடுத்துச் செல்லப் போகிறாள் என்றதுமே இன்னும் ஒரு புலவ், பரோட்டா, சப்ஜி பார்ஸல் வாங்கி அனுப்ப,

"எதுக்கு... இத்தனை எதுக்கு?" கேட்கிறாள் கௌரி.

"வீட்டுக்குப் போறே இல்லை. சும்மா ஒண்ணே ஒண்ணு வாங்கினா நல்லா இருக்குமா என்ன?" முதலில் மாட்டேன் என்று மறுக்க நினைத்தவள் புவனாவின் ஞாபகம் வர பேசாமல் வாங்கிக் கொண்டாள். பாவம் புவனா மதியம் ஏதேனும் சாப்பிட்டாளோ என்னவோ, அம்மாவின் கோபம் தணிந்ததா என்றும் தெரியவில்லை. அவர்கள் சாப்பிட்டபின் கிளம்ப,

"தேங்க்யூ கௌரி" என்கிறான்.

"எதுக்கு.."

"எனக்கு கம்பெனி தந்ததுக்கு..."

"ஓ.கே." என்றவள் "நான் கிளம்பணும் அருண்" என்று சொன்னவாறு கிளம்பிப் போகிறாள்.

வீட்டில் இவள் இருக்கிறாளா இல்லையா என்றுகூட யாரும் கவலைப்படவில்லை போலிருக்கிறது. அப்பா, அம்மா, ஏன் தங்கை விஜியைக்கூட காணவில்லை. வீட்டைத் திறந்து போட்டுவிட்டு எங்கே போனார்கள்.

புவனாவையும் காணோமே. புவனா மெதுவாகக் கூப்பிட்டவாறு உள்ளே போக, வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்த புவனா, துடைப்பத்தை அப்படியே போட்டு விட்டு வருகிறாள்.

"எங்கேடி போயிட்டே அப்பா ஏதோ மாப்பிள்ளையை உனக்கு பார்த்திருக்காங்களாம். பையன் ஏதோ கம்பெனியிலே வேலை செய்றானாம். அதான் நீ எங்கேன்னு கேட்டாங்க. கோவிலுக்குப் போயிருக்கேன்னு சொன்னேன்."

"ஆமா அப்பா அம்மா எல்லாம் எங்கே?"

"பிள்ளை வீட்டுக்கு போயிருக்காங்க."

"ஆமாம்மா... பிள்ளையை உன்னைப் பாக்க கூப்பிட்டு வரணும்னு சொன்னாரு. அதுக்கு தான் போயிருக்காங்க."

"ஆமா பையன் யாரு என்னன்னு தெரியுமா?"

"அதெல்லாம் தெரியாது. அம்மாகிட்டே அப்பா பேசிகிட்டு இருந்தார்."

"அம்மா என்ன சொன்னாங்க?"

"பண்ணிடுங்க. பண்ணிடுங்கன்னு சொன்னாங்க. எப்படியோ உனக்கு ஒரு விடிவு வந்தா அப்பாடான்னு இருக்கும்." சொன்ன புவனாவின் முகம் வாடி இருக்க,

"ஏன்க்கா நீ சாப்பிட்டியா இல்லையா?"

"இல்லை... அம்மா கதவை எல்லாம் பூட்டிகிட்டு போயிருக்காங்க. வந்தப்புறம் போடுவாங்கன்னு நினைக்கிறேன்."

"ஏன்க்கா உனக்கு அறிவு இருக்கா?" எரிச்சலோடு கேட்கிறாள். கௌரி

"நீ வெறும் ஆளா இருந்தாலும் பரவாயில்லை. பிரெக்னன்டா இருக்கே. சாப்பிடலைன்னா குழந்தை வீக்காயிடும் தெரியாதா? ஓட்டல்லயாவது ஏதாவது வாங்கி சாப்பிடக்கூடாதா?"

"அத்தனை வசதி இருந்தா நான் ஏன் இங்க வந்து பேச்சு கேட்டுகிட்டு உக்காந்திருக்கேன். பட்டினி என்னைப் பொறுத்தவரைக்கும் சகஜம்தான்."

"சரி மொதல்ல சாப்பிடு."

"எதுக்கு? யார் வாங்கிக் கொடுத்தாங்க."

"வீட்டு நிலைமையைப் பார்த்ததுமே இப்படி ஏதாவது நடக்கும்னு தெரியும். வாங்கிட்டு வந்தேன், சாப்பிடு..."

தங்கை அன்போடு கொடுத்த சாப்பாட்டை அவசரம் அவசரமாகப் பிரித்துச் சாப்பிட, கௌரிக்கு அழுகை வந்தது.

"வரட்டும் இந்த அம்மா அப்புறம் வச்சுக்கறேன்" கௌரி கறுவிக் கொண்டாள்.

அக்கா சாப்பிடும் வரை அவளையே பார்த்தவள், பிறகு மெதுவாகக் கேட்கிறாள்.

"அக்கா பையன் யாருன்னு உனக்கு நிஜமாகவே தெரியாதா?"

"ம்... ஹூம்..." என்று சொல்லி தலையை இல்லை என்று ஆட்டியவாறே கடைசி வாயை அள்ளிப் போட்டுக் கொண்டாள். பின் தங்கையையே சிறிது நேரம் பார்த்தவள்,

"உனக்கு யாருன்னு தெரியுமா?" என்று கேட்கிறாள்.

"ம்..." என்று கௌரி தலையை ஆட்ட,

"என்ன இது அதிசயமா இருக்கு. எனக்கே அப்பா வீட்டுக்கு வந்தப்புறம்தான் உனக்கு மாப்பிள்ளை பார்த்திருக்காங்கன்னு தெரியும். உனக்கு எப்படி..."

"ஞான திருஷ்டின்னு வச்சுக்கயேன்" புவனா ஒன்றும் புரியாமல் யோசித்தவள், பிறகு சிறிது குதூகலத்துடன் கேட்கிறாள்.

"யாருடி மாப்பிள்ளை."

"நீ சந்தோஷப்படற மாதிரி எல்லாம் ஒண்ணும் இல்லே. நம்ப அப்பாவைவிட அஞ்சு வயசு சின்னவர்."

"என்ன சொல்றே நீ?"

"உனக்கு கூட அந்த ஆளை நல்லா தெரியும்."

அக்கா மலங்க மலங்க விழிக்க,

"நம்ம வீட்டுக்கு மூணு வீடு தள்ளி இருக்காரே மிஸ்டர் பசுபதி அவர்தான். சோடா பாட்டில் கண்ணாடி. அந்தாள் தான்."

புவனா எச்சில் கையோடு எழுந்தே விட்டாள். "என்னடி சொல்றே? அந்த ஆளுக்கு நாப்பத்தஞ்சு வயசு இருக்காது."

"ஆமா எனக்கு தான் இருபது முடியப் போகுதே."

"என்ன மடத்தனம் இது? என்னைவிட எட்டு வயசு பெரியவர். அதுக்கே அம்மா செய்யவே கூடாதுன்னு சொன்னாங்க. இப்ப எப்படி செய்யலாம்னு சொல்றாங்க. இப்ப எப்படி?"

"இது தெரியலையாக்கா. கோபம். நான் அவங்களைப் பத்தி தப்பா கேட்டேன்னு ஆத்திரம். அதை விடு உம்மேலே ஏன் கோபமா இருக்காங்க?"

"தெரியலையே" என்கிறாள் புவனா.

"இல்லை உன் மேலே நிச்சயமா ஏதோ கோபம் இருக்கு. இல்லைன்னா நீ சாப்பிடாம இருக்கறதை பாத்து அம்மா துடிக்க மாட்டாங்களா?"

"எனக்கு ஒண்ணுமே புரியலை. எனக்கும் அவுங்களுக்கும் என்ன?"

"இல்லைக்கா யோசிச்சுப் பாரு. இப்ப இருக்கற அம்மாவே வேறயோங்கற அளவுக்கு சந்தேகம் வருது. சின்ன வார்த்தைகளுக்கும் நம்ப கிட்டே சண்டை போடறது. தன்னை மட்டும் எப்பவும் உயர்த்தி உயர்த்திப் பேசறது. கழுதையோட சேர்ந்த கன்றுகுட்டியும்னு சொல்வாங்க. அந்த மாதிரிதான் ஆகிப்போச்சு. இவுங்களுக்கும் அப்பா குணத்திலே பாதிக்கு மேலே வந்துட்ட மாதிரி தாணுது. யோசிச்சுப் பாருக்கா. இத்தனை வருஷத்துல நமக்கு சித்தப்பா, பெரியப்பா, அத்தைன்னு யாராவது வீட்டுக்கு வந்திருக்காங்களா? சரி அப்பா மோசம்னா ஏதாவது மேரேஜ்க்கு போனா கூட அம்மாகிட்டேகூட யாரும் பேசறதில்லே. ஏன்?"

"விடு..." என்கிறாள் புவனா. "எதையும் சொல்லிப் பிரயோஜனமில்லே. சொன்னா வீணா சண்டை தான் வரும். அவுங்கவுங்களுக்கா தெரியணும். இந்த உலகத்துலே எத்தனை நாட்கள் இருக்கப் போறோம்? எதுக்கு சண்டை, சச்சரவு. இதை நம்பச் சொன்னா என்னானு? விடு. யாரும் யாரையும் மாத்த முடியாது.

எல்லோரையும் வேண்டாம், வேண்டாம்னு ஒதுக்கி வச்சிட்டு நாம மட்டும் என்ன பண்ணப் போறோம் சொல்லு? போகட்டும் விடு. அவுங்களை மாத்தணும்னு நினைக்கறதுக்கு முன்னாடி உன் நிலைமையை நினைச்சுப் பாரு. நீ எப்படி தப்பிக்கறதுன்னு யோசி. அப்பா முடிவு செய்தா செய்ததுதான். புவனா சற்று பயத்துடன், வேதனையுடனும் கூற,

"அக்கா என்னை புவனான்னு நினைச்சிட்டியா?"

"என்ன கௌரி சொல்றே?" புவனா சற்று திடுக்கிட்டவாறு கூற,

"நீ தப்பு பண்ணிட்டே அக்கா. நம்ப வாழ்க்கையை நம்ம தான் நிர்ணயம் பண்ணனும். அப்பா சொன்னாருன்னு பயந்துகிட்டு கல்யாணம் பண்ணிகிட்டு யாரு கஷ்டப்படறது? சொல்லு."

"முடியாது கௌரி. நீ நினைக்கிற மாதிரி அதெல்லாம் சுலபமல்ல. அவர் இஷ்டத்துக்கு விரோதமா நடந்து கிட்டா இந்த வீட்டிலே இருக்க முடியாது."

"அட போக்கா. இந்த ஜெயில்லேர்ந்து விடுதலை கிடைச்சதுன்னு வெளியே போயிட வேண்டியதுதான்."

"போயிட்டு என்னம்மா பண்றது? அடுத்த வேளைக்கு என்ன பண்றது அதை யோசிச்சியா?"

"அக்கா அந்த ஆளு பிக்ஸ் பண்ற இடத்துலே கல்யாணம் பண்ணிக்கறதைக் காட்டிலும் பாழும் கிணத்துலே விழலாம். செத்துப் போகலாம்."

"அதைச் செய் முதல்லே" குரல் வந்த திசையைப் பார்த்து புவனாவும், கௌரியும் திடுக்கிட்டனர்.

16

"எல்லாங்கடி. என்னமோ சின்ன காண்பிக்கிறீங்க? நான்தான் யா நீங்க. ஒழிங்கன்னு சொல்லிவிட்டு தானே இருக்கேன். என்னமோ செத்த போறேன்னு உதார் விட்டியே. இப் பவே போ. அப்பா ஒழிஞ்சது பீடைன்னு இருப்பேன் ஏகாம்பரம் தான் கத்துகிறார்.

"அக்காளும் தங்கையும் அப்பனை எப்படி எதிர் கறதுன்னு பிளான் பண்ணிகிட்டு இருக்கீங்களா?"

"பாத்தீங்களா எங்கேர்ந்து தைரியம் வந்ததுன்னு புரிஞ்சதா?" பெற்றவள்தான். இன்னும் ஏற்றிக் கொடுக் கிறாள். புவனா சப்த நாடியும் அடங்கிப் போய் நின்றிருக்க.

"இந பாரு இப்ப சொல்லிட்டேன். அந்த மூணாவது வீட்டு பகபதிதான் மாப்பிள்ளை. இதுக்கும் மேலே என்னால மாப்பிள்ளை பாக்க முடியாது. நாளைக்கு உன்னை பெண் பார்க்க வரேன். நாளைக்கே நிச்சயம் மாட்டேன்னா வீட்டை விட்டு இப்பவே கிளம்பலாம். உனக்கு யார் சப்போர்ட் பண்றாங்களோ அவுங்களும் போகலாம்."

புவனாவின் கண்கள் கலங்கிப் போக சற்று பயந்த வாறே நின்று கொண்டிருந்தாள்.

"ஏம்ப்பா உங்களை கல்யாணம் பண்ணிக் கொடுன்னு கேட்டேனா என்ன?

நல்லதா பாக்க துப்பு இல்லேன்னா பாக்காம இருக்கணும்."

கௌரி ஆத்திரத்தோடு கூற.

ஏகாம்பரம் கொதித்துப் போய் அடிக்க கையை உயர்த்த.

"இதெல்லாம் வேற யார் கிட்டேயாவது வச்சுக்கங்க. இப்ப வரவன் இல்லே நீங்க சொல்றே எந்த ஆளையும் நான் கட்ட மாட்டேன்."

"ஏன்?" அம்மா இன்னும் ஆத்திரத்தோடு கேட்கிறாள்.

"வேறென்ன உம் பொண்ணு லட்சணத்தைத்தான் போட்டோவிலே பாத்தியே" ஏகாம்பரம் நக்கலாக பேச.

"அடிப்பாவி அன்னிக்கு அவ்வளவு தூரம் இல்லேன்னு சொன்னே."

கௌரி ஒரு நிமிடம் இருவரையும் உறுத்துப் பார்க் கிறாள். யாரையும் ஒன்றும் செய்ய முடியாது. சொல், செயல், எண்ணம், எல்லாமே தவறு. இவர்களிடம் பேசுவது சுவற்றில் முட்டிக் கொள்வது போல்தான்.

"ஓ.கே... நான் கிளம்பிப் போயிடறேன். ஆனா இப்பவே கிளம்பணுமா? இல்லை நாளைக்குப் போகலாமா?"

"ஏன் நாளைக்கு நாள் பாத்து வச்சிருக்கியா என்ன? முதல்லே வீட்டை விட்டு ஓடு."

அதற்குமேல் தாள முடியாமல் அருணுக்கு போன் செய்துவிட்டு வர வெளியே போகிறாள்.

அருணுக்கு போன் செய்யும் வரை திடமாக இருந்தவள் அருணின் குரல் கேட்டதும் தான மாட்டாமல் உடைந்து போய் அழுகிறாள்.

''கௌரி... ஏம்மா அழறே என்னாச்சு?'' அருண் பதற,

''நான் வெளியே வரப் போறேன். எனக்குப் போகறதுக்கு இடமில்லே. அதான் உங்களுக்குப் போன் செய்தேன்.''

''ஸ்டுப்பிட் இதுக்கா அழுதே. வாடான்னா பறந்து வந்திட மாட்டேனா?'' சரி உன் திங்க்ஸ் எல்லாம் எடுத்து வச்சுக்க. இன்னும் அஞ்சு நிமிஷத்திலே நான் அங்கே இருப்பேன்.''

சொன்னபடியே ஐந்து நிமிடத்தில் அங்கே வந்துவிட ''ஓ... இவன் குடுக்கிற தைரியத்துலேதான் இப்படி ஆடறாளா?''

அம்மா ஆரம்பித்து வைக்கிறாள்.

''கௌரி எதுவா இருந்தாலும் பேசித் தீர்த்துக்கலாம் அவசரப்படாதே. வேண்டாம்மா'' புவனா தடுக்க,

''என்னா பேசறது. போறவளை நீ ஏன் தடுக்கறே? அப்பன் உக்கார வச்சு சோறு போட்டுகினே இருப்பானா?''

''போகட்டும். போய் வெளியிலே லோல்பட்டு, சோத்துக்கு திண்டாடினாதான் புத்தி வரும்'' அம்மா ஆங்காரமாகக் கூற,

கௌரி அம்மாவை எரித்து விடுபவள் போல் பார்க்கிறாள்.

''என்னடி முறைக்கறே? இதோ இவன் எத்தினி நாள் உன்னை வச்சிருக்கப் போறான். பாக்கத்தானே போறேன். சீரழிஞ்சு புள்ளையோட வெளியே வருவே பாரு.''

''என்னம்மா பேசறே? நீ ஒரு அம்மாவா? என்னவோ எதிரியாக மாய்ந்து, சண்டை போடறே? உன் பெண்ணை பத்தி நீயே சபிக்கிறியா? அம்மா எல்லாரையும் உன்னை மாதிரி நினைக்காதே? வெளிலே நல்ல மனுஷங்க இருக்காங்க. எல்லோரையும் உங்களை மாதிரி நினைக்காதீங்க. இவ பாவம் இவளை கூட்டிகிட்டு வந்து பட்டினி போட்டு வச்சிருக்கியே. எந்த அம்மாவாவது இப்படி செய்வாங்களா? ஈவு, இரக்கம், கருணை, மனிதாபிமானம் அதுக்கெல்லாம் பொருள் தெரியுமா? எப்படித் தெரியும் மனசு புல்லா அகங்காரமும், பழி உணர்ச்சியும் தான்ங்கற அகம்பாவமும் இது தானே உங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப இருக்கு.''

''என்னடி பேசிகிட்டே போறே? கிளம்பு. கட்டின புடவையோடு கிளம்பு. என் துட்டிலே படிச்ச சர்டிபிகேட் மட்டும் எதுக்கு? சாமர்த்தியம் இருந்தா எதுவும் இல்லாம பொழைச்சுக் காண்பி'' அப்பா பையை வெடுக்கென்று பிடுங்கி, ''போ'' என்று கூப்பாடு போட,

''ஸார்...'' என்கிறான் அருண்...

''என்னடா ஸார்...'' சட்டென்று அவன் சட்டையைப் பிடித்து அவனை அடிக்கப் போக, அவருடைய கையைத் தட்டி விடுகிறான்.

''சீ... நீயெல்லாம் ஒரு அப்பனா?''

''டேய்...'' செண்பகம் ஆரம்பிக்க,

''த... பாருங்க, பேசாம இருங்க. அம்மான்னு சொல்லிட்டு அம்மாங்கற வார்த்தைக்கே களங்கம் உண்டாக்கிடாதீங்க'' சொன்னவன்,

"எல்லாத்தையும் உதறிட்டுக் கிளம்பு..." அடுத்த சொல்ல, கோபம், வெறுப்பு, ஆத்திரத்துடன் அடு னோடு வெளியேறுகிறாள் கௌரி.

அவள் சென்றதும் வீடே அமைதியாக இருந்தது. அப்பா அம்மா யாருமே பெண் கிளம்பிப் போய் விட்டாளே என்று வருத்தப்படவில்லை. வேதனைப்பட வில்லை. புவனா அதிர்ச்சியுடனும், வேதனையுடனும் அமர்ந்திருந்தாள். அப்பாவிடம் போய் தான் உபதேசம் செய்ய முடியுமா? இப்போது அம்மாவுமல்லவா அப்பா மாதிரி ஆகி விட்டாள். மெதுவாக தன் அறைக்குள் போகிறாள். 'காலையில் சாப்பிட்டாயே இப்போது ஏதேனும் வேண்டுமா' என்றும் அம்மா கேட்கவில்லை. அம்மா முகத்திலும் ஆத்திரம் கோபம்.

அம்மா சற்று தனியாக மாட்டுவாளா என்று சமயம் பார்த்தபோது, அப்பா தன் அறைக்குச் சென்று நிம்மதி யாக படுத்து உறங்க, மெதுவாக அம்மா அமர்ந்திருந்த ஹாலின் பக்கம் வருகிறாள்.

"அம்மா... உங்கிட்டே கொஞ்சம் பேசணும்." என்ன என்பதுபோல் உயர்த்திப் பார்க்கிறாள்.

"என்னாச்சம்மா உனக்கு? ஏன் வேற மாதிரி இருக்கே? என் மேலே ஏதாவது கோபமா?"

"எனக்கென்ன கோபம்? என் கோபம் யாரை என்ன செய்யும்?"

"இல்லேம்மா குழந்தைகள்னு சொன்னபோது நீ ஒருத்திதான் ஐயோ பாவம்னு சொல்லுவே. முன்னே பாவம்னு சொன்னதெல்லாம் இப்ப மாறிப்போச்சே. ஏம்மா?"

"ஆமாண்டி நான் பாவம் பாவம்னு உருகறேன். நீ செருப்பால அடி."

"என்னம்மா பேசறே?"

"நான் பேசினேனா நீயா? உன் தங்கையோடு சேர்ந்து என்னை அசிங்கப்படுத்தலே."

"என்னம்மா உளர்றே? நான் என்ன செய்தேன்?"

"இதைத்தான் நானும் சொன்னேன். நான் என்ன செய்தேன்னு சொன்னேன். நீ வீட்டை விட்டு வெளியே போனா நான் என்ன செய்வேன்? உன் தங்கை என்னைத் திட்டினபோது நீ என்ன செய்தே? நீயும் சேர்ந்து என்னைத் திட்டின." சொல்லும்போதே அம்மாவின் கண்களில் கண்ணீர் ரொம்பியது.

"எதுக்குடி? பொண்ணுங்க, பொண்ணுங்கன்னு தூக்கி தலைல வச்சுக்கிட்டு ஆடினேனே அதுக்கா இந்த கஷ்டம்? போதுமடா சாமி எனக்கு யாரும் வேண்டாம். உங்கப்பா மட்டும் நல்லா இருந்தா போதும். என்னிக்கு நீ திட்டினியோ அப்போதே நீயும் வேண்டாம்னு மனசுலே நினைச்சுகிட்டேன்."

"ஏம்மா நீயே ஏதோ கற்பனை பண்ணிக்கறே" புவனா எரிச்சலோடும் சற்று வருத்தத்தோடும் கூற,

"கற்பனை இல்லைடி. இது தான் நிஜம். ஒரு வயசுக்கு மேலே பிள்ளைங்களுக்கு அம்மா, அப்பாங்கறவங்க தேவை இல்லைதான். அது விளங்கிடுச்சு. தாமரை தண்ணீர் போல் வாழறதுதான் நல்லது. நான் அப்படியே வாழ்ந்துட்டுப் போறேன்."

"அம்மா..." புவனா பேச முற்பட,

''போதும் பேசாதே. டெலிவரி ஆச்சுன்னா அறுபது நாள்லேயே உன் புருஷன் ஊருக்குப் போய்ச் சேர். அப்புறம் இங்கே வந்து எங்களை உயிரை எடுக்க வேண்டாம். வாழ்க்கை எனக்கு நல்ல பாடத்தைக் கத்துக் கொடுத்திடுச்சு.'' சொல்லும்போதே கண்களில் கண்ணீர்.

''பெண்கள், புருஷன், எதுவுமே உண்மையான உறவுகள் அல்ல. தெரியும். ஆனால் வயிற்றில் பிறந்ததைவிட புருஷன் மேல் திட்டினாலும், அடிச்சாலும், அது மேல நம்ப பொண்டாட்டின்னு ஒரு உணர்வு இருக்கு. அதுவும் உங்களை ரொம்ப சப்போர்ட் பண்றேன்னுதான் அவருக்குக் கோபமே - நான் உண்மையைப் புரிஞ்சு கிட்டதும் அவரும் இப்ப எம்மேல ஆசையாதான் இருக்கார். நான் தான் இத்தனை நாள் வாழ்க்கையை வீணாக்கிட்டேன். உங்களுக்காக அவரோட சண்டை போட்டு, போட்டு வீட்டையே போர்க்களமா மாத்திட் டேன். போதும் இனிமேலாவது என் வாழ்க்கையை வாழவிடுங்கள்.''

புவனா பெருமூச்சு விட்டாள். புவனாவிற்கு புரிந்தது. அம்மாவிடம் அன்று ஏதோ ஒரு வேகத்தில் பேசியது அவளை வெகுவாக புண்படுத்தி விட்டது. மகள்களை புரிந்து கொள்வதற்கு பதிலாக வெறுக்க ஆரம்பமாகிறாள். வெறுத்தும் விட்டாள். போகட்டும். இனிமேல் வீட்டில் இருக்கும் நேரத்தை எண்ணிக் கொண்டு இருக்க வேண்டியது தான்.

இனிமேல் இங்கே இருந்து நம் மரியாதையையும் கெடுத்துக் கொள்ளக்கூடாது. போய்விட வேண்டும். தன் வயிற்றில் பிறந்த பெண் வீட்டை விட்டுப் போய்விட்டது.

கொஞ்சம்கூட வருத்தமோ, குற்ற உணர்வோ இல்லாமல் அம்மாவால் எப்படி இருக்க முடிகிறது? ஆச்சரியமான தால்தான். இனிமேல் அம்மாவிடம் போய் நியாயம் பேசுவதும் கேட்பதும் எல்லாமே வேஸ்ட்தான். எது நடப்பதோ நடக்கட்டும். இருந்தும் அம்மாவை வெறுத் துக் கொண்டோ பகைத்துக் கொண்டோ தன்னால் இருக்க முடியாது. இருக்கும் வரை அம்மாவை அனுசரித்து தான் போக வேண்டும். அனுசரிப்போம். சட்டென்று அம்மா வின் கைகளை வாஞ்சையாகப் பிடித்துக் கொண்டவள். தன் கைகளை அம்மாவின் உள்ளங்கையில் கோத்துக் கொள்கிறாள். அம்மா கையை விலக்க முற்பட புவனா விடவில்லை.

''அம்மா. நீ எப்படி வேணா நினைச்சுக்க. ஆனா எங்களைப் பத்தின உன் கணிப்பு ரொம்ப தப்பு. நானும் சரி, கௌரியும் சரி உன்னை என்னைக்குமே தப்பா நினைச்சதே இல்லை.''

''கையை விடுடீ. கௌரியைப் பத்தி பேசாதே. பெத்த வளைப் பத்தி எப்படி எல்லாம் பேசினா? பெத்தவன்னா அத்தனை கேலியா? என்னை என்னென்ன வார்த்தை கேட்டுட்டா. பிள்ளைங்க தப்பு செய்தா பெத்தவங்க கண்டிக்க மாட்டாங்களா?

நீங்க என் பிள்ளைங்க இல்லையா? உங்க நல்லது, பொல்லாததில் எனக்கு பங்கில்லையா? நெஞ்சில் நெருப்பை அள்ளிப்போட்டவடீ. இனிமேல் அவளைப் பற்றி பேசவே பேசாதே. வெறுத்துப் போச்சு. நான்தான் எனக்கு யாரும் வேண்டாம்னு ஒதுங்கிடறேன்னு சொன்னேனே, இன்னும் என்ன?''

அம்மா மனம் இளகவே, இளகாது என்று புரிந்தது. அம்மாவை வசியப் படுத்தாமல் அந்த வீட்டில் அவர் நாள் கூட இருப்பதுகூட கஷ்டம்தான். வசியப் படுத்தும் முறையை செய்ய வேண்டியதுதான். அப்பா கோபித்தால் அம்மா அடிக்கடி செய்யும் முறைதான் சட்டென்று அம்மாவின் கால்களில் விழுகிறார்.

"அம்மா ஸாரி. நான் புண்படுத்தியதாகத் தோன்றினால் தயவு செய்து மன்னித்துவிடு." வயிற்றில் பிள்ளையைச் சுமந்தபடி அவள் காலில் விழுந்தபோது அம்மாவின் மனது சற்று இளகியது போல் தோன்றியது.

"சரி சரி எழுந்திரு. சுமையை வச்சுகிட்டு ஏன் கால்ல விழறே? எழுந்திரு. எம்மனசு என்ன பாடுபட்டிருக்கும் இப்ப புரிஞ்சுதா?"

புவனா வேறு வழியின்றி 'ஆம்' என்று தலையை ஆட்ட,

"வா நீ இன்னும் சாப்பாடே சாப்பிடவே இல்லியே. வா, சாப்பிடு." என்று அழைத்தவாறே அம்மா செல்ல, புவனாவும் கூடவே செல்கிறாள். அம்மாவின் மனதிலும் பழைய வாஞ்சை இல்லை. தன் மனதிலும் அம்மாவைப் பற்றிய உயர்வான எண்ணங்கள் இல்லை. தன் சுயநலத்திற்காக காலில் விழுந்தது வேறு அசிங்கப்படுத்தியது தன் காரியம் ஆக வேண்டுமென்றால் மனிதன் என்னவெல்லாம் செய்யத் துணிந்து விடுகிறான்.

அன்று சாப்பிடும் போதும், அடுத்த நாள் காலை உணவை ஏற்றுக் கொள்ளும்போது கூட ஒரு சகஜ நிலை ஏற்படவில்லை. ஒரு கனத்த மௌனம் அந்த வீட்டைச் சூழ்ந்திருப்பதைப் போன்று ஒரு உணர்வு புவனாதான்

கௌரியின் நிலை கண்டு வருத்தப்பட்டுக் கொண்டு இருந்தாள். அருண் தன் தங்கையின் மேல் கொண்டிருக்கும் ஈடுபாட்டைப் பற்றி அரசல் புரசலாக அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். தன் தங்கை கௌரியின் முடிவைப் பற்றியும் அவளுக்கு நன்றாகத் தெரியும். வேறு வழியின்றி தன் தங்கை அவனோடு போனது ரொம்ப பாவமான ஒரு நிகழ்ச்சிதான். தன் சொந்த வீட்டில் கூட யாரேனும், ஏதேனும் சொல்லி விட்டால் முகத்தைத் தூக்கிக் கொள்பவள், முன்பின் தெரியாத ஒரு ஆடவனிடம் போய் எப்படி எல்லாம் கூச்சப்படப் போகிறாளோ, எதையும் யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாது வேதனையோடு அமர்ந்திருக்க, வீடு வழக்கம் போல் சென்று கொண்டிருக்கிறது. கௌரியின் வெளியேற்றம் அப்பாவிற்குள் ஒரு கடுப்பை ஏற்படுத்தியது. மூன்று பெண்களையுமே தவிர்க்கிறார். அம்மா விஜியிடம் மட்டும் தான் கொஞ்சம் கொஞ்சியபடி, கெஞ்சியபடி பேசுகிறாள்.

இங்கே கௌரியின் நிலை கூட சரியாக இல்லைதான். ஏதோ ஒரு வேகத்தில் வீட்டை விட்டு வந்தாலும், அந்தச் செயல் சரியா தவறா என்று புரியாத குழப்ப நிலை, வீட்டை விட்டு வந்திருக்கக் கூடாது என்று உணர்வு மட்டும் உறுத்திக் கொண்டே இருக்கிறது. இவன் எப்பேற்பட்டவன். தனக்கு சீனியர் என்று மட்டும் தெரியும். மற்றபடி நல்லவன். நன்றாகப் பேசுவான். பொதுப்படையாக அவனைப் பற்றி தெரியுமே தவிர தனிப்பட்ட முறையில் அவனைப் பற்றி ஒன்றும் தெரியாது. நண்பராக பழகுவதற்கும் ஒரு எல்லை உண்டு அல்லவா?

அருண் நேரே கௌரியை ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லுகிறான்.

''எதுக்கு அருண்? இங்க எல்லாம் வேண்டாம். வேற எங்கயாவது வீட்டுக்கு அழைச்சிட்டுப் போங்க.''

''எங்கே? எங்க வீட்டுக்கா?''

''அது...'' என்ன சொல்வதென்று தெரியாமல் அவள் விழிக்க,

''கௌரி... ப்ளீஸ் என்னைப் புரிஞ்சுக்க. உன் நல்லதுக் காகத்தான் எதுவும் செய்வேன். ஏன்னா உன்னை நான் ரொம்ப, ரொம்ப நேசிக்கிறேன். உனக்கு என்ன வேணும்னு உன்னால இப்படி டிசைட் பண்ண முடியாது.''

''என்ன அருண் இது என்ன சின்னக் குழந்தையா ஆகிட்டீங்க? எனக்கு என்ன வேணும்னு தெரியாதா?''

''தெரியாதும்மா. மனக்குழப்பத்திலும், மன வருத்தத் திலும் இருக்கற உனக்கு தெளிவான முடிவை எடுக்க முடியாது. முடிவு எடுக்க மன அமைதி வேண்டும். அமைதியான நேரத்தில் எடுக்கும் முடிவுதான் சரியான பாதையிலே நம்மை அழைத்துச் செல்லும். மனதில் பட்டதை எடுக்கற முடிவு தவறான பாதையில் கொண்டு போய் தள்ளிடும். முதல்லே சாப்பிடு. எல்லாம் தானா சரியாயிடும்.''

கௌரி பெருமூச்சு விடுகிறாள். தான் வேறு என்ன செய்ய முடியும்? அவனின் பின்னே போய், அவனருகே அமர்ந்து மௌனமாக சாப்பிடுகிறாள்.

''கௌரி வா. மாடிலே ரூம் போட்டிருக்கேன். போய்த் தங்கிப்போம். காலைல சீக்கிரம் குளிச்சிட்டு. கோவி

லுக்குப் போயிட்டு, சாப்பிட்டுட்டு அப்படியே பத்து மணிக்கு ரிஜிஸ்திரார் ஆபீசுக்குப் போய் கல்யாணத்தை முடிச்சிடலாம்.''

கௌரிக்கு சட்டென்று கண்களில் கண்ணீர். 'இவன் நண்பனா இல்லை எதிரியா? எத்தனை கனவுகளோடு எதிர்காலத்தை எண்ணியிருந்தோம். எல்லாம் வீணா யிற்றே. மேலே எம்.எஸ்ஸி படிக்க வேண்டும். அமெரிக்கா போக வேண்டும் என்ற கனவு. எல்லாமே ஒரு திமிர் பிடித்த தந்தையால் வீணாகி விட்டதே. சொந்த மகளின் மேல் வன்மமும் கோபமும் என் வாழ்க்கையை நான் நிர்ணயம் செய்யாமல் என் வாழ்க்கையை எவர் கையிலோ ஒப்படைத்து இது தேவையா?'

நினைக்க, நினைக்க கண்ணீர் கொட்டியது.

''என்னம்மா அழறே? என்னாச்சு?'' பதறுகிறான் அருண்.

''ஹோட்டல் ரூம் எல்லாம் எனக்கு வேண்டாம் அருண்.''

''வேற எங்கம்மா போறது?''

''துரைசாமி அங்கிள் வீட்டுக்கு என்னைக் கொண்டு போய் விட்டுடுங்க.''

''ஆனா... அங்கே போய்... என்னம்மா செய்வே? வேண்டாம்...''

''இல்லை அருண் அங்கதான் நான் போகணும்.''

''கௌரி...''

''அருண் ப்ளீஸ் உங்க மேலே மதிப்பு வச்சிருக்கேன். மரியாதை வச்சிருக்கேன். அதுக்காக எல்லா விஷயத்

திலும் நீங்கதான் முடிவெடுக்கணும்ங்கறதுலே எனக்கு உடன்பாடில்லை. என்னை எம்போக்கிலேயே விட்டிருங்க. நீங்க என் நண்பர். கேக்கற உதவியை மட்டும் செய்யுங்க போதும்.''

அருண் விதிர்த்துப் போகிறான். என்னாயிற்று இந்த பெண்ணுக்கு? பலமுறை தன்னுடைய கதையை சொல்லியும் ஏன் இந்த மறுப்பு? அடுத்த நிமிடம் முகம் சிறுக்க, அவளை தன் மோட்டார் பைக்கில் பின்னால் இருத்திக் கொண்டு துரைசாமி மாமாவின் வீட்டிற்குச் சென்று இறக்கி விட்டுக் கதவைத் தட்டியபோது, அவனுடைய அண்ணி கதவைத் திறக்க அதிர்ந்து போய் நிற்கிறான்.

17

இருவரையும் ஒன்றாகப் பார்த்த மீனா எரிச்சல் உறுகிறாள். அருணுக்கு தான் தர்ம சங்கடமாக இருக்கிறது.

அத்தனை தூரம் தான் சொல்லியும் கேட்காத திமிர். ஒரு நிமிடம் எரிச்சல், ஆத்திரம், கோபம்... பிறகு யோசித்துப் பார்க்கிறான். அவள் எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டுமே. தான் உண்மையாக அவளை காதலிக்கிறோம். அவளுக்கு நல்லதே செய்வோம். தன் அன்பை என்றாவது அவள் புரிந்து கொள்வாள். மனதைத் தேற்றியவாறே சற்று மிருதுவாகக் கூறுகிறான்.

''இவுங்க என் பிரண்ட். ஒரு இரண்டு நாள் உங்க அப்பா வீட்டுலே ஸ்டே பண்ணனும்னு வந்திருக்காங்க. உங்கப்பாவுடைய பிரண்டோட பெண் தான்.'' சற்று சிரித்தபடி அவன் கூற,

''தெரியும்'' என்கிறாள் மீனா.

''ஆமா நீங்க இதை எங்க பிடிச்சீங்க?'' சற்று அநாகரீகமாக மீனா கேட்க, திகைத்தபடி நிற்கிறான் அருண். அவனுடைய அண்ணி சாதாரணமாக ரொம்ப பேசாதவள். ஆனால் இப்படி அநாகரிகமாகப் பேசியும் பார்த்ததில்லை. அவனுடைய ஒன்றுவிட்ட அண்ணனின் மனைவி எப்போதுமே இப்படி பேசுபவள் தான். எது கேட்டாலும், மண்டையில் அடிப்பது போல் ஒரு பதில். கூடுமானவரை அவளிடம் பேசுவதை அநேகம் பேர் தவிர்ப்பதை பார்த்திருக்கிறான். ஆனால் தன் அண்ணியும் இப்படிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். எப்படித் தான் இப்படி ஈவு இரக்கமில்லாமல் வார்த்தைகள் வருகிறதோ. இவர்கள் தன்னுடைய அண்ணி. இவர்களைத் தூக்கி போட்டது போல் பேச முடியாது.

''என்னங்க அண்ணி, ஏன் இப்படிப் பேசறீங்க?''

''ஏன் பேசறேனா? இவங்க வீட்டுக்குப் போய் எதுவும் வேண்டாம்னு சொல்லியும் இப்படி ஒட்டிகிட்டு வந்தா என்ன அர்த்தம்?''

சட்டென்று கௌரி மீனாவை முறைத்துப் பார்க்கிறாள்.

''இத பாருங்க. கூட வந்ததாலே யாரும் கெட்டுட மாட்டாங்க. இவர் என் காலேஜ் மேட். எனக்கு ஸீனியர், தவிரவும் எனக்கு பெஸ்ட் ஃப்ரண்ட்.''

''இத பாரும்மா... பெஸ்ட் ஃப்ரண்ட், ஸீனியர் என்ற முறையில் அடிக்கடி வந்து பார்த்தா பரவாயில்லை. வேற ஏதாவது இருந்தாதான் பிரச்சனை. நான் அன்னிக்கே உங்க வீட்டுக்கு வந்து சொன்னேன், இதெல்லாம் வேண்டாம்னு அடிச்சுகிட்டேன். அப்ப தலையை தலைய தானே ஆட்டினீங்க.''

''யார் தலை ஆட்டினாங்க.'' மீனாவின் கேள்வியில் எரிச்சலுற்றுப் பேசுகிறாள் கௌரி.

''ஓ... அப்ப மத்தவங்க பேச்சைக் கேக்கற வழக்கமே கிடையாதா?''

''ஏங்க கேக்கணும். நீங்க யாரு எனக்கு?'' கௌரி சற்று குரலை உயர்த்திப் பேச, உள்ளே இருந்து பார்வதமும், துரைசாமியும் ஓடி வருகின்றனர்.

''அட கௌரியா? என்னம்மா?'' என்றவர் அருகே நின்ற அருணைப் பார்த்து நிதானிக்கிறார்.

''என்னப்பா? பாக்கறீங்க? அன்றைக்கு எத்தனை வக்காலத்து வாங்கினீங்க பார்த்தீங்களா? நான் சொன்னது எத்தனை உண்மைன்னு புரிஞ்சு போச்சா?''

''என்ன புரிஞ்சுது?'' மீனா கேட்டதைப் பார்த்து கொதிக்கிறாள் கௌரி.

''என்ன நினைச்சுகிட்டு இருக்கீங்க? அர்த்தமில்லாது பேசிகிட்டே இருக்கீங்க. இல்லாத ஒண்ணை இருக்கு இருக்குன்னு எத்தனை முறை நீங்க சொன்னாலும் அதை ஒத்துக்க முடியுமா என்ன? நூறு தடவை அடிச்சு சொன்னாலும் பொய் உண்மை ஆகாது. மாமா இவர் என்னுடைய ஃப்ரண்ட் உங்களுக்குத் தெரியுமில்லே. வீட்டுலே ஒரு பிரச்சனை. அப்பா எப்படின்னு உங்களுக்குத் தெரியுமில்லே. இன்னிக்கு ரொம்ப ஜாஸ்தியா போய் வெளியே வந்துட்டேன். இவர் எனக்கு ஹெல்ப் பண்ணி இங்கே கூட்டிகிட்டு வந்தார். வந்தா எப்படி பேசறாங்க பாருங்க. என் தலையெழுத்து. இதையெல்லாம் கேக்கணும்னு விதி'' கௌரி சலித்துக் கொள்ள,

''நெருப்பில்லாம புகையாது. அது தெரியுமா? சும்மாவானா இல்லை இல்லைன்னா ஒத்துப்பாங்களா? கல்யாணத்துக்கு முன்னாடி என்னதான் தெரிஞ்சவன் என்றாலும் இப்படியா அவனோட வீட்டை விட்டு வெளியே வருவாங்க. சுய கட்டுப்பாடு எல்லோருக்கும் அவசியம்.'' மீனா சொல்லிக் கொண்டே போக, கௌரி சட்டென்று உணர்ச்சி வசப்பட்டு கோபமாகப் பேசலானாள்.

''ஒருத்தரோட பேசிப் பழகினா அது தப்பா? இந்தக் காலத்துலே எல்லாம் சகஜம்தானே. நான் செய்யறது தப்புன்னா நீங்க செய்யறது ரைட்டா. புருஷனோட தம்பி கிட்டே சரிக்கு சமமா உக்காந்து பேசிகிட்டு இருக்கீங்க. எங்கம்மாவெல்லாம் அப்பாவோட தம்பி வந்தாங்கன்னா முன்னாடி கூட வரமாட்டாங்க. கதவுக்குப் பின்னாடி தான் நின்னுகிட்டு இருப்பாங்க. ஆனா நீங்க எப்படி நடந்துக்கறீங்க. கல்யாணம் ஆயிட்டு யாராவது இப்படி நடந்துக்குவாங்களா? இப்படி நான் கேட்க முடியாதா?''

''ஏய் வாயை மூடு'' அருணுக்கு சட்டென்று கோபம் வர அதட்டுகிறான்.

''என்ன வாயை மூடு? இவுங்க ஒழுங்கா? புருஷன் தம்பி கூட இவங்க மட்டும் கூத்தடிக்கலாம். மத்தவங்க பேசினாலே தப்பா?''

கௌரியின் அலட்சியமான தாக்குதல் கோபத்தை தூண்டிவிட அருண் சட்டென்று கௌரியின் கன்னத்தில் அடித்து விடுகிறான்.

திகைப்பு, எரிச்சல், ஆத்திரத்தோடு, இரண்டு கண்களின் ஓரத்தில் நீர் திரள் கன்னத்தை தடவியவாறே அருணை முறைத்துப் பார்க்க,

"என்னடி முறைக்கறே? நான் உன்னை சொல்ல நேரிக்கறேன். இல்லேன்னு சொல்லலை. அதுக்காக இப்படியடி எல்லாம் பேசலாம்னு கனவுலே கூட நினைக்காதே. நீ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நீ கட்டாயம் என் மனைவியாகப் போவது நிச்சயம். ஆனா இந்த குணத்தை விட்டுடு. இந்த மாதிரி அநாகரிகமாப் பேச தப்பித் தவறிக்கூட முயற்சிக்காதே."

"என் என்னை அடித்தாய்?" கேட்க நினைத்தவள், அதைக் கேட்காமல்,

"அவங்க எப்படி வேணா அசிங்கமா பேசலாம். ஆனா நான் பேசக் கூடாதா?"

"யார் பேசினாலும் தப்பு தப்புதான். ஒருத்தன் கொலை பண்ணினா பதிலுக்கு கொலையா பண்ணுவோம். ஒரு தப்புக்கு இன்னொரு தப்பு தீர்வாகாது. புரிஞ்சுக்க."

"எனக்கு தான் அட்வைஸ் பண்ண முடியும். என்னை நான் இளக்கல. அப்பா அம்மாவால தூக்கப்பட்டு விடிவில்லாம வந்திருக்கேன் இல்லே. நீங்க என் ஃப்ரண்டுன்னு நினைச்சேன் இல்லே. அதுக்குத்தான் இவ்வளவு அலைமானப்படுத்தி இருக்கீங்களா? நல்ல வேளை நான் உங்களை மேரேஜ் பண்ணிக்கலை. பண்ணியிருந்தா என்ன ஆகியிருக்கும்? இன்னும் எத்தனை அசிங்கப்பட்டிருக்கணுமோ" கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்தபடி கூற,

"இப்ப அடிச்சது. என் மனைவி எந்த காலத்திலும் தவறு பண்ணக்கூடாது என்பதால்தான். தப்பானதை பேசாதே. எல்லாரையும் தூக்கிப் போட்டு பேசறதை நிறுத்து" என்றவன் "நான் வரேன் அன்னி. வரேன்

மாமா" என்றபடி மோட்டார் பைக்கை வேகத்தோடு உருட்டிவன் 'வரேன்' என்று கௌரியிடம் பொதுப்படையாகக் கூறி விட்டுக் கிளம்புகிறான்.

கௌரி வாசலில் நிற்கிறாள். அனாதையாக, ஆதரவின்றி, உதவியில்லாமல்... மன வருத்தத்தோடு நிற்கிறாள்.

"அம்மா உள்ளே வாங்க. அப்பா நீங்களும்தான். தலைய பூட்டணும்" சொல்லியபடி மீனா பேச, கௌரி மெதுவாகத் திரும்புகிறாள். இவர்கள் இங்கே தங்கும்படி சொன்னாலும் பிரபோசனமில்லை. மீனாவோடு ஒரே வீட்டில் இருக்க முடியாது. மெதுவாக அவள் திரும்பி நடக்க,

"நில்லும்மா..." என்ற பார்வதி, "உள்ளே வா" என்கிறாள்.

"அம்மா," மீனா கத்த,

"மீனா நீ உள்ளே போ," என்கிறாள் பார்வதி.

"அம்மா..." மறுபடியும் மீனா கத்த,

"ந பாரு மீனா ஒரு விஷயத்தை நல்லபடியா ஆக்கறதுதான் கஷ்டம். ஆனா கெடுக்கறது ரொம்ப சுலபம். உள்ளே போ."

"அம்மா அந்தப் பொண்ணை உள்ளே விடாதே. அது விவகாரமே சரியில்லை. எம் மச்சினனை மயக்கி வச்சிருக்கா."

"லைத்தியம் மாதிரி பேசாதே. அன்னிக்கு சொன்னது தான் இன்னிக்கும் சொல்றேன். யாருக்கு முடிச்சுப் போடணும்னு நினைக்கறது ஆண்டவன். ஆண்டவன்

நினைச்சிட்டா நீ இல்லே. யார் வந்தாலும் தடுக்க முடியாது. சண்டை போடறதை விட்டு வேலையைப் பாரு. நம்பளை நம்பி வந்துட்ட பொண்ணை இந்த ராத்திரியிலே வெளியே அனுப்பறது ரொம்ப தப்பு. நீ உள்ளே போ,'' அதட்டி மிரட்ட,

''அப்பா'' என்று கூப்பிடுகிறாள் மீனா.

''அம்மா சொல்றதைக் கேளும்மா. முதல்லே உதவின்னு வந்த பொண்ணுக்கு உதவி செய்வோம்.''

ஒரு நிமிடம் அப்பாவை அம்மாவை உறுத்துப் பார்த்தவள், பின் விருட்டென்று உள்ளே நகர,

''வாம்மா,'' என்று கௌரியை உள்ளே அழைக்கிறாள் பர்வதம்.

''இல்லைங்க... என்னால எதுக்குப் பிரச்சனை?''

''இதுலே என்ன பிரச்சனை இருக்கு? உள்ளே வா. உங்கப்பா ஏதோ கோபத்துல உன்னை அனுப்பியிருக் கலாம். அதுக்காக இப்ப நாங்க உதவி செய்யலைன்னா எங்களையே உங்க அப்பா நிக்க வச்சிட்டு கேட்பார்'' துரைசாமி சொல்ல,

''கேக்க மாட்டாருங்க. எங்க அப்பா வேற டைப். தன்னைத் தவிர அவருக்கு வேற யாரையும் நேசிக்கத் தெரியாது. தன் குழந்தைங்க கஷ்டப்பட்டு உருத் தெரி யாம மண்ணோட மக்கினாதான் அவருக்குப் பிடிக்கும்.''

''அப்படி எல்லாம் தப்பா சொல்லாதேம்மா. எந்த தந்தைக்கும் தன் குழந்தைகள்னு ஒரு உணர்வு உண்டு. அப்படி யாரும் தூக்கிப் போட மாட்டாங்க.''

''இல்லை அங்கிள். நீங்க வேணா அப்படி இருக்க லாம். அவர் அப்படி கிடையாது.''

''சரி இருக்கட்டும்மா. உள்ளே வா. ஒண்ணும் சாப்பிடலை இல்லை வந்து சாப்பிட்டுட்டுப் போ.''

''வேண்டாம் அங்கிள். ஏற்கனவே என்னைப் பார்த்து உங்க பொண்ணு கொதிச்சுப் போய் கிடக்கிறாங்க இன்னும் நானும் தவறு செய்தா... அவ்வளவுதான்.''

''இல்லேம்மா...'' சொன்ன பர்வதத்தை இடைமறிக் கிறாள்.

''தயவு செய்து ஒண்ணும் பேசாதீங்க. உங்க பொண்ணு ஒரு தடவை வந்து வீட்டிலே கத்தினாங்க அதனுடைய பலனை இப்ப அனுபவிக்கிறேன். அவுங்க கத்தவே எங்கப்பா அதையே சாக்கா வச்சுக்கிட்டு என்னை வீட்டை விட்டு விரட்டிட்டாரு.''

பர்வதம் பதறிப் போகிறாள். ''மீனாவாலயா நீ வெளியே வந்தே. அப்ப நீ உள்ளே வந்து தான் ஆகணும். வந்து சாப்பிடணும். மாட்டேன்னு சொல்லாதே'' கௌரி எத்தனையோ மறுத்தும் பிடிவாதமாக பர்வதம் அவளை உள்ளே அழைத்து வந்து சாப்பாடு போட்டு, சாப்பிட செய்து... கௌரி பெருமூச்சு விடுகிறாள்.

'இங்கிருந்தும் சென்றுவிட வேண்டியது தான். நாளைக்கே வேறு இடம் பார்த்துக் கிளம்பிவிட வேண்டும்.'

மீனா தாய் தந்தையரை முறைத்தபடி பார்ப்பதும் கௌரியுடன் பேசியபடி சாப்பாடு போடுவதை எரிச்சலுடனும் கோபத்தோடும் பார்ப்பது தெரிந்தது. என்னதான் ஆசையாய் சாப்பாடு போட்டாலும் கௌரிக்கு மனம் இங்கே ஒட்டவே இல்லை. பர்வதம் மெதுவாக பேச்சுக் கொடுத்தவள், அண்டை அயலார் பற்றி பேசியவள் பிறகு கௌரியின் வாழ்க்கையைப் பற்றி ஆரம்பிக்கிறாள்.

"நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே." மெதுவாக தூக்கிப் போட்டது போல் பேசும் கௌரியின் தன்மையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று மெதுவாக, ஆனால் அழுத்தமாகச் சொல்லுகிறான்.

"நான் சொல்றேன்னு தப்பா நினைக்கக் கூடாது. எல்லாருடைய இதயத்திலும் இறைவன் இருக்கிறான்" என்று சொல்லச் சொல்ல ஒரு நிமிடம் மௌனமாக இருந்தவள் பின் தன் நிலைமையைச் சொல்ல ஆரம்பிக்கிறாள். "சொல்லுங்க ஆண்ட்டி. நான் என்ன பண்ணுவேன்? எனக்கு என்கரேஜ் மென்ட்டுன்னு வீட்டிலேயே கிடையாது. ரொம்பக் கஷ்டமான லைஃப். நின்னால் குத்தம். நிமிர்ந்தால் அடிதான். எங்கப்பாவுக்கு தான் தான் ரொம்ப உசத்தி என்ற நினைவு. அவருக்கப்புறம் எங்கம்மாவை மட்டும் தான் அவர் நிகளனைல் பண்ணுவார். தன்னைவிட தன் குழந்தைகள் கொஞ்சம் முன்னுக்கு வந்தாலே பெருமைப் பட இடத்திலே அவர் எங்களை எப்பவுமே மதிச்சதில்லை. ஒரு நல்ல மார்க் எடுத்தா சபாஷ்னு முதுகிலே தட்டிக் கொடுத்ததில்லே. நல்ல செயல் செய்தா வெரிகுட்னு சொன்னதில்லே. எப்பவுமே திட்டுதான். எதுக்கு திட்டறார்னு அவருக்கே தெரியாம திட்டிகிட்டே இருப்பார். இன்னும் கொஞ்சம் மீறிப்போனா அடிதான். போன்னு தூரத்தல்தான். இதிலென்ன கொடுமை. கொஞ்சம் பரவாயில்லைன்னு நெனச்ச அம்மாவும் கம்பி நீட்ட மாறிட்டாங்க. அப்பா ஒரு பக்கம்னா அம்மா இன்னொரு பக்கம்னு வாசிக்க ஆரம்பிச்சிட்டாங்க. மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடிங்கறது போல நாங்க வாங்கிகிட்டே இருக்கோம். மனச மறத்துப் போச்ச

ஆண்ட்டி. இப்ப எல்லாம் எங்களுக்குக் கோபம் வருது. ஆத்திரம் வருது. என்ன செய்யறது சொல்லுங்க. அதான் நானும் பேசறேன். நான் பேசறது தப்புன்னு எனக்குத் தெரியும். ஆனா. வேற வழியில்லை."

பார்வதம் ஒரு பெருமூச்சோடு கேட்டுக் கொண்டிருந்தவள், "நான் ஒரு வழி சொன்னா கேட்டுப்பியா? ஆவேசமோ ஆத்திரமோ படாம கொஞ்சம் யோசிச்சியானா நான் சொல்றது நிஜம்னு தெரியும். ஒத்துப்பியா? யார் உன்னைத் தூக்கிப் போட்டாங்களோ, மிதிச்சாங்களோ அவுங்களே உனக்கு கை கொடுப்பாங்க. கௌரவம் தருவாங்க."

கௌரி பார்வதத்தை ஒரு முறை தீர்க்கமாகப் பார்த்தவள்.

"சொல்லுங்க ஆண்ட்டி," என்கிறாள்.

"நீ என் மேரேஜ் பண்ணிக்கக் கூடாது," சட்டென்று கௌரி முறுவலித்தாள்.

"என்ன ஆண்ட்டி நீங்க. கல்யாணம் வேண்டாம்னு சொன்னதால்தானே இத்தனைப் பிரச்சனை. மறுபடியும் பழைய கதைக் கேக்கறீங்களே..."

"இல்லேம்மா. நான் பழைய கதையை பேசவில்லை. உங்கப்பா பார்த்த மாப்பிள்ளையை நான் செய்துக்கச் சொல்லலை. உனக்கு யாரைப் பிடிக்குமோ அவரை செய்துக்க. உனக்கு ரொம்ப பாதுகாப்பா இருக்கும். அதுவும் நீ வருந்தப்படறவர் நல்ல பொஸிஷன்லே இருந்துட்டா நமக்கு கிடைக்கிற மரியாதையே தனிதான். இந்த அவமரியாதையும் இருக்காது. உன் விருப்பத்துக்கு

அவர் ரொம்ப உதவி செய்யற வாய்ப்பு இருக்கே. உம் மனசுலே இருக்கறவர் யாருன்னு சொல்லு. நாங்க முன் நின்று உனக்கு செய்து வைக்கிறோம்.''

கௌரி கலகலவென்று சிரித்தே விடுகிறாள். ''ஏம்மா சிரிக்கறே? நாங்க ஏதாவது ஜோக் அடிக்கிறோமா?'' பர்வதம் வருத்தப்பட்டவளாய் கேட்க, கௌரிக்கு தன் தவறு புரிகிறது.

''ஸாரி ஆன்ட்டி... உங்களைக் காயப்படுத்தணும்னு சிரிக்கலே. என்னுடைய ஆசையே மேற்படிப்பு படிச்ச அமெரிக்கா போகணும் அதான். நான் யாரையும் லவ் பண்ணவும் இல்லே. அதுலே எனக்கு நாட்டமு மில்லே.''

பர்வதம் சிறிது மௌனம் சாதிக்கிறாள். பின் மெது வாக ''ஏம்மா நான் ஒண்ணு சொல்லலாமா? கோபப்பட மாட்டியே.''

''சொல்லுங்க ஆன்ட்டி.''

''நீ யாரையும் விரும்பலேன்னாலும், உன்னை விரும்பறவரை நீ கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா?'' பர்வதம் பேசப்பேச கௌரி தீர்க்கமாக பர்வதத்தையே பார்க்கிறாள்.

''நான் ஏன் சுத்தி வளைக்கணும்? நேரடியாவே கேக்கறேன். அந்த அருண் உம்மேலே உயிரையே வச்சிருப்பான்னு நினைக்கிறேன். உன்னை விரும் பறவன் கையிலே உன்னை ஒப்படைச்சிடேன். உன் முன்னேற்றத்தை அவன் பார்த்துக்கறான்'' கௌரியின் முகம் சிவக்க,

''இதப் பாரும்மா நீ வருத்தப்படணும்னு நான் சொல்லலே. அவன் ரொம்ப நல்லவன். தங்கமான குடும்பம். ஏற்கனவே பெண்ணைக் கொடுத்தவங்க நாங்க. அதுவும் குறிப்பா அந்தப் பையன் சொக்கத் தங்கம். உன்னை ஆழமா நேசிக்கறான்னு தோணுது.''

''ஓ அதான் அடிச்சிட்டுப் போனாரா?''

அடிச்சதில் அவன் மனதின் நெருக்கம்தான் தெரிஞ்சுது.''

''இல்லை. ஆன்ட்டி கல்யாணம், குழந்தைகள் என்பது என்னைப் பொறுத்தவரை ஒரு முட்டுக்கட்டை. என்னுடைய பெரிய ஆசையை மடக்கிப் போட்டு விடும் எந்திரங்கள். நான் அதுலே போய் மாட்டிக்க விரும்பலை.''

''இல்லேம்மா திருமணத்தை நீ தப்பா புரிஞ்சுகிட்டு இருக்கே. நல்ல தாம்பத்தியம் என்பது நல்ல தோழமை மாதிரி உனக்கு கிடைக்கறது. உன் லைஃப் பார்ட்னர் உன் அழுகைக்கு கண் கலங்கி, உன் சிரிப்பில் முகமெல்லாம் பூவாய் பூத்து, தப்பு செய்தால் தண்டித்து, நல்லது செய்யும்போது தட்டிக் கொடுத்து மேலே ஏற்றி,

நீ அடைய வேண்டிய இலக்கிற்கு ஒரு ஏணியாய் இருந்து செயல் படும் தோழன்.''

கௌரி பெருமூச்சு விடுகிறாள்.

''இல்லை ஆன்ட்டி. நான் பார்த்த கல்யாணம் வேற ஆன்ட்டி. எங்கம்மா அதிக அளவிற்குக் கஷ்டப் பட்டிருக்காங்க. எங்கக்காவுக்கு கம்பெனி கிடைச்சுதோ இல்லையோ, அசிங்கப்படுத்த ஆள் கிடைச்சிருக்காங்க.

எங்க மாமாவுக்கு எங்கக்காவைத் தவிர அத்தனை பேரும் பாவம். ரோட்டிலே போறவங்களுக்கு செய்தாலும் செய்வாங்களே தவிர, கட்டின பொண்டாட்டியை மதிச்சு ஒரு நாள் கூட எதுவும் செய்ததில்லே. கல்யாணத்துக்கு முன்னாலே அப்பா ஒருத்தருக்குத் தான் பயப்பட்டா. இப்ப எல்லா ஜீவராசிக்கும் பயந்து நடுங்கறா. வேண்டாம் ஆன்ட்டி கல்யாணம் கட்டாயம் மனுஷனைப் பலவீனப்படுத்தும் ஒரு வஸ்து. எனக்கு கல்யாணமே வேண்டாம்.''

கௌரியின் வியாக்யானத்தில் பர்வதம் மௌனம் காக்க,

''ஏன் ஆன்ட்டி பேச மாட்டேங்கறீங்க? நான் பேசினது உங்களுக்குப் பிடிக்கலையா?''

''என்னம்மா பேசறது? உன்னுடைய போதாத காலம் நீ பாத்த ஆம்பிளைங்க அப்படி இருக்கு. இவர் எப்படிப்பட்டவர்னு உனக்குத் தெரியுமில்லே. குழந்தை, குட்டி, பெண்டாட்டின்னா துடிச்சுப் போயிடுவார். எனக்கு எத்தனை பிரச்சனை வந்தாலும் தாங்க முடியுதுன்னா அதுக்குக் காரணம் அவர். அப்பேற்பட்ட மனுஷன் கிடைத்தா கட்டாயம் செய்துக்க. வாழ்க்கையிலே நல்லதும் இருக்குங்கறது புரியும். நல்லது சுவைக்கிற ஒரு வாய்ப்பு கிடைக்கும்.''

கௌரி நிதானிக்கிறாள். ஒரு நிமிடம் மனதில் அருணின் சிரித்த முகம் வந்து போக அடுத்த நிமிடம் 'அத்தனை பேருக்கு முன்னாலே என்னை அடிச்சவன் இல்லே.' பல்லைக் கடிக்கிறாள்.

இன்னொரு அறையில் அமர்ந்து இவர்களின் பேச்சைக் கேட்ட மீனாட்சி அடுத்த நிமிடம் டெலி

போனின் அருகில் போய் மாமியாரின் சுழற்றிப் பேசக் காத்திருக்கிறாள்.

''யாரு மீனாட்சியா! என்னம்மா?''

அத்தையின் குரல் கேட்டு, மடமடவென்று கொட்டுகிறாள் மீனா.

''என்னம்மா?''

''இத பாருங்க அருணுக்கு அத்தப் பெண்ணை கல்யாணம் பண்ணவே கூடாது. நீங்க முக்கியமாக முடியாதுன்னு சொல்லணும்.''

அந்த அம்மாளின் காதில் விழவில்லை போலும்.

''என்னம்மா புரியலையா?'' மறுபடியும் அவள் சொல்லச் சொல்ல,

''புரியுது அன்னி. ரொம்ப நல்லா புரியுது. இது நல்லா இருக்கா? நீங்க இப்படியா பிஹேவ் பண்ணுவீங்க?'' அருணின் குரல் கேட்டு அதிர்ந்து போய் தொலைபேசியை வைக்கிறாள் மீனா.

'அத்தைதானே பேசிட்டு இருந்தாங்க. இவன் எப்படி? இன்னிக்கு வேலைக்குப் போகலையா என்ன?' நினைத்தவள் மறுபடியும் நினைத்துக் கொள்கிறாள். என்ன ஆனாலும் சரி அவர்கள் இருவருக்கும் திருமணம் என்பது கனவு தான். நடக்க விடக்கூடாது. அந்தப் பெண் திருமணத்தில் நாட்டமில்லாதது போல்தான் இருக்கிறது. தன்

மச்சினனுக்கு தான் ஆசை என்பதும் தெரிகிறது. இவரு விட்டு சொல்கிற விதமாகச் சொல்ல வேண்டும். தன் தங்கைக்கு திருமணம் செய்து வைத்து விடலாம் என்று எத்தனை கனவு கண்டேன். எல்லாமே கனவுதான். எதுவும் நடைபெறவில்லை. எது எப்படி இருந்தாலும் இந்த வாயாடிப் பெண்ணை நம் வீட்டு மருமகளாக ஒரு போதும் அனுமதிக்க முடியாது. அருண் வந்து பேச்சுக் கொடுத்தால் என்ன செய்வது? வரட்டும். பேச்சு கொடுத்துப் பார்க்கட்டும். அந்தப் பெண்ணை நினைக்காதபடி பேசி விடுகிறேன்.'

அடுத்த நாள் விடியற்காலையில் காபியை முழுங்கி விட்டு அவள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கிளம்ப, ''இல்லப்பா அவர் போன் செய்தாரு. யாரும் அங்கே இல்லையாம், அதுனால நான் போயாகணும். மாமியார் பாவம் தனியா தவிச்சிட்டு இருப்பாங்க'' மெதுவாக அடுக்க, அவருக்கு புரிந்தது. மகளுக்கு கோபம் என்று. பெண்ணை சமாதானப்படுத்தும் நோக்கத்துடன், ''என்னடா இங்கே ஒரு வாரம் இருந்துட்டுப் போறேன்னு சொன்ன, இப்ப உடனே கிளம்பறியேம்மா.''

''அப்ப சூழ்நிலை அப்படி. இப்ப இப்படி. கிளம்பியே ஆகணும். இதற்கு வற்புறுத்த வேண்டாம்'' என்று மனைவி சாடை காட்ட அவரும் மௌனம் சாதிக்கிறார்.

''சரி இராகு காலம், எமகண்டத்துக்கு முன்னால கிளம்புங்க.'' பார்வதம் கூற, துரைசாமி பெண்ணை அழைத்துக் கொண்டு கிளம்புகிறார்.

கௌரி சற்று கவலையுடன் பார்த்துக் கொண்டிருக் கிறாள். தன் பொருட்டா இவள் கிளம்புகிறாள். நாம் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லியும் இங்கே தங்க வைத்துக் குடும்பத்தில் குழப்பம்.

''ஆன்ட்டி எதுக்கு உங்க பொண்ணை அனுப்பிச் சிட்டீங்க. நான் எப்படியும் கிளம்பிப் போகலாம்னு நினைச்சுகிட்டு இருந்தேன். குளிச்சிட்டு நான் கிளம்பி இருப்பேனம்மா. என்னால ஏம்மா உங்களுக்கு கஷ்டம்?''

கௌரி மனவருத்தத்தோடு கூற,

''ஒரு கஷ்டமும் இல்லை. நீ ஒண்ணும் இப்ப கிளம்ப வேண்டாம்.''

''இல்லை ஆன்ட்டி, கிளம்பியே ஆகணும்.''

''ம்ஹூம்... அதெல்லாம் முடியாது. உன்னை பிராப்பரா செட்டில் பண்ணாம அனுப்ப மாட்டேன். என் பொண்ணாலே நீ தெருவுக்கு வந்தே. அதை நான் சரி பண்ண வேண்டாமா?''

''இல்லை ஆன்ட்டி.''

''வேண்டாம்மா. மாட்டேன்னு சொல்லிடாதே. நீ ஒத்துக்கிட்டே ஆகணும். எம்பொண்ணு பண்ணின தப்புக்குப் பிராயச்சித்தம் தேட வேண்டாமா?''

''ஆன்ட்டி உங்க பொண்ணுக்கு விஷயம் தெரிஞ்சு துன்னா பிரச்சனை ஆயிடும். நான் இங்க இருக்கேன்னு சொன்னவுடனே, நாலு நாள் வந்து இருக்கேன்னு சொன்னவங்க உடனே கிளம்பிட்டாங்க. என்னாலே உங்க உறவு எதுக்கு கெட்டுப் போகணும்.''

''இல்லேம்மா. அவ மேலே உண்மையான அன்பு இருக்கறதுனால தான் இந்த முடிவு. ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக்கோ. நல்லது செய்தாலும், கெட்டது செய்தாலும் எது செய்தாலும் அது நமக்கே திரும்பிவிடும். எம் பொண்ணு நீ வெளியே வரக் காரணமா இருந்திருக்கா. அதற்கு பதில் அவதானம்மா அனுபவி

கணும். உம்மேலே உள்ள கரிசனத்தை விட எம் பொண்ணு கஷ்டப்படக் கூடாதுங்கற ஆதங்கம் தான் எனக்கு. அதுனால தயவு செய்து எம் பேச்சைக் கேளு. உனக்கு ஒரு நல்ல வழியை தேடிக் கொடுத்தேன்னா அப்புறம் நான் நிம்மதியா இருப்பேன்.''

கௌரி லேசாக புன்முறுவல் பூக்கிறாள். எப்பேற் பட்ட நல்ல மனது. தான் உதவி செய்வதை பிச்சை என்று தவறாக கருதி விடுவாளோ என்கிற பயத்தில் அவன் பேச, வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாதது போல் என்பார்கள். நல்லதைச் செய்வதிலும் யாரும் அறியாமல் செய்யும் பாங்கு. தப்பித் தவறி கோயிலுக்கு ஒரு டியூப்லைட் கொடுத்து விட்டால் போதும். அதன் வெளிச்சமே தெரியாதவாறு கொடுத்தவரின் பெயர் எழுதப்பட்டிருக்கும் இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு ஆத்மா.

''என்னம்மா பார்க்கறே? இருப்பே இல்லே.''

''ஒண்ணும் இல்லே ஆன்ட்டி'' என்றவள் 'ஆம்' என்ற பாவனையாக தலையை ஆட்டுகிறாள்.

இங்கே ஆட்டோவில் பெண்ணை அழைத்துச் சென்ற துரைசாமியின் மனது துடித்துக் கொண்டிருந்தது. பெண் தங்களை தவறாக நினைத்து விட்டால்?

''என்னடா கண்ணு ஒண்ணுமே பேசாம வரே?'' தன் மூன்று பெண்களில் மீனா தான் வாயரட்டை. பேசாமல் வரவே தாங்க முடியாமல் கேட்கிறார்.

''ஒண்ணும் விஷயம் இல்லேப்பா.''

''இல்லேம்மா, நீ இப்படி சைலன்டா இருக்கறவ இல்லை. சொல்லு... அப்பா மேலே கோபமா?''

''இல்லைப்பா...''

''பின்னே ஏம்மா ஒண்ணும் பேசாம வர்றே?''

''இல்லைப்பா வீட்டுக்குப் போனா என்ன பிரச்னை வரும்? அதை எப்படி சரி செய்யறதுன்னு யோசிச்சிட்டு இருக்கேன்.''

''என்னாச்சும்மா! வீட்டுலே உனக்குப் பிரச்சனையா? இல்லியே, உங்க மாமனார், மாமியார் நல்லவங்களாத் தானே தெரிஞ்சாங்க'' துரைசாமி பதற்றத்துடன் பேச, அப்பாவின் பதற்றத்தில் ஒரு நிமிடம் மனது இளகியது. அப்பாவிற்கு அம்மாவின் மனது.

''அப்பா கவலைப்படாதீங்க. வீட்டுலே எந்தப் பிரச்னை யும் இல்லே. வந்திருக்காளே உங்க ஃபிரண்டோட பொண்ணு அவராலதான் பிரச்சனையே.''

''என்னாச்சும்மா?''

''அப்பா'' என்று கூப்பிட்டவள் மெதுவாக நடந்ததைச் சொல்ல சொல்ல,

''ஏம்மா அருணுக்குப் போன் பண்ணே. உன் தங்கைக்கு தான் வேற இடத்துலே நிச்சயம் ஆச்சு இல்லே. அவன் யாரை பண்ணிகிட்டா என்னம்மா?''

''அது எப்படிப்பா? ரெண்டு பேரும் ஒரே வீட்டுலே வாழப் போறோம். இவ தூக்கி போட்ட மாதிரி பேசுவா. அண்ணிங்கற மரியாதை கூட இல்லாம தூக்கிப் போடுவா. இவளை அந்த வீட்டுக்கு மருமகளா ஆக்கிட்டு நான் அசிங்கப்படவா?''

துரைசாமி ஒன்றும் பேசவில்லை. தன் பெண் சொல்வது சரியல்ல என்று அவருக்கும் தெரியும்.

இருந்தும் பெண்ணின் மேல் வைத்த பாசம் வாயையும், கையையும் கட்ட மௌனமாக இருக்கிறார்.

வீடு போய்ச் சேர்ந்ததும் வழக்கப்படி சம்பந்திகள் மரியாதையாகப் பேசி சாப்பிட்டு போகுமாறு சொல்ல, துரைசாமி சாப்பிடாமல் கிளம்பி விடுகிறார். 'இந்தப் பிரச்சனை எதில் போய் முடியுமோ' மனம் அதிலே உழம்பிக் கிடந்தது. 'இறைவா என் பொண்ணைக் காப்பாற்று' மனம் பிரார்த்தித்தது.

''ஏங்க சாப்பிடாமல் கிளம்பிப் போறீங்க. இருந்து சாப்பிட்டுவிட்டு போகலாம்.''

''இல்லீங்க நான் போயே ஆகணும். இதற்குள் சற்று தயங்கி வந்த மீனா, ''அத்தை அவர் கிளம்பட்டும். அங்கே அம்மா வெயிட் பண்ணிகிட்டு இருப்பாங்க,'' பெண் அப்பா அப்பா என்று உருகினது போக 'போகட்டும்' என்று சொன்னது மனது கஷ்டப்பட்டாலும், தன் குழந்தை அந்தப் பொருளில் சொல்லியிருக்க மாட்டாள். வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று மனது நினைத்தது.

''என்னம்மா நீ. அப்பா எப்பயோ வீட்டுக்கு வராரு; வந்தவருக்கு ஒரு வாய் காபி கூட கொடுக்காம யாராவது அனுப்புவாங்களா?'' மாமியார் லேசாகக் கடிந்ததும்,

''இல்லைங்கம்மா மீனா சொல்றது ரொம்ப சரி. அங்க விருந்தாளி வந்திருக்கு.'' சீக்கிரம் வரச் சொல்லி வீட்டுலே சொல்லி அனுப்பினாங்க. ரொம்ப நன்றிம்மா. அவர் கிளம்பிப் போக.

''அப்பா'' பின்னால் ஓடிவருகிறாள் மீனா. சற்று இரைத்தது.

''ஏம்மா ஓடி வரே. மூச்சு வாங்குது பாரு.'' சற்று பதறித்தான். போய் விடுகிறார் துரைசாமி.

''அப்பா ஒண்ணும் இல்லைப்பா'' நெகிழ்ந்து விடுகிறாள் மீனா.

''சொல்லும்மா என்ன விஷயம்?''

''அப்பா காபி கூட கொடுக்காம அனுப்பினதுக்கு மன்னிச்சிருங்கப்பா.''

''என்னடா கண்ணா. எதுக்காக அப்பாகிட்ட போய் மன்னிப்பு.''

''இல்லைப்பா. நீங்க எனக்கு அப்பா மட்டுமில்லே ஆசான், கடவுள் எல்லாமே. கொஞ்சம் மாமியார் கிட்டே தனியா பேசணும். அருண் கல்யாணத்தைப் பத்திதாம்பா; தப்பா நினைக்காதீங்க.''

''இல்லைம்மா...'' என்று சற்று நிதானித்தவர் பின் நிதானமாகப் பேசுகிறார்.

''அந்தப் பொண் அருணைப் பண்ணிகிட்டா உனக்கு என்னம்மா கஷ்டம்?''

''யாருப்பா... உங்க பிரண்டோட பொண்ணா? வேண்டாம்பா. இந்த ஜன்மத்திலே வேண்டாம். நல்ல குடும்பம், நல்ல மனுஷங்க, நல்ல பொண்ணு தாம்பா வேணும்.''

''முடிச்சைப் போடுகிறவன் ஆண்டவன்மா. நம்ம கைல ஒண்ணும் இல்லே.''

ஏதோ சொல்ல வாயெடுக்கிறாள் மீனா. அதற்குள் ''நான் கிளம்பறேம்மா'' என்றவாறே அவர் கிளம்ப, விடை கொடுத்தவாறே அவரையே பார்க்கிறாள்.

"ஐயம் எக்கேடோ தொலையும் தெரியாதவர். வெளை மனை கொண்டவர்." வாய் முணுமுணுக்கிறது.

துரைசாமியின் மனம் வேளாளரது பாவம் தன் தூற்றுதை அதற்கும் எத்தனையோ பிரச்சனை. புரிந்து கொண்டு விட்டால் எல்லாம் தீர்ந்து விடும். நினைத்தவர் எதிரே அருண் எதிர்படவே ஒரே எட்டில் அவனிடம் போகிறார். தன் பெண்ணின் வாழ்க்கையும் கண்டத்தில் மாட்டிக் கொள்ள தெரிடும். அவருக்கு தன் மருமகனைப் பற்றி நன்றாகத் தெரியும். தன் அம்மா, அப்பா தம்பி யாவரையும் விட்டுக் கொடுக்கவே மாட்டார். தனக்கு எதிரிலேயே மீனாவை கண்டித்தும் இருக்கிறார். அடித்தும் இருக்கிறார். ஒரு முறை அதை நேரில் பார்த்துவிட்டு பல நாட்கள் மனதில் குமைந்ததுண்டு. இன்று அருணின் காதில் விஷத்தைப் போட்டு விட்டால் அவன் எதையும் தவறாக எடுத்துக் கொண்டு பொங்கி எழுந்து மாட்டான்.

"என்ன மாமா இந்த பக்கம்?" அருண் சிரித்தவாறே அவரை வரவேற்கிறான்.

"உங்க அண்ணியைக் கொண்டுவிட வந்தேன்பா..."

"ஏம் மாமா இப்படியே கிளம்பிட்டீங்க! வெயில் பாத்தீங்களா? கன்னுன்னு அடிக்குது."

"இல்லைப்பா அங்கே கௌரி வந்திருக்கா இல்லே அதான் சீக்கிரம் போகணும்."

"மாமா..." என்று சற்று தடங்கியவன் பின் மெதுவாக தடங்கித் தடங்கி பேசுகிறான்..." எனக்கும் கௌரிக்கும் எப்படியாவது நீங்கதான் கல்யாணத்தை முடிச்சு வைக்கணும். செய்வீங்களா?" துரைசாமி விழிக்கிறார்.

ஒரு பக்கம் மகன் அவர்கள் உறவே வேண்டாமென்று கூற, இன்னொரு பக்கம் மருமகனின் தம்பி திருமணத்தை நடத்திட வேண்டும் என்று கெஞ்சுகிறான்.

"கூண்டவன் நினைச்சா நிச்சயம் நடக்கும்பா" என்றவர் "தம்பி உங்க அண்ணி உங்களோட ஏதோ பேசணும்னு சொல்லிட்டிருந்தாங்க. அதுல ஏதேனும் தப்பு இருந்துச்சுன்னா அப்படியே மன்னிச்சிடுங்க. மறந்துடுங்க. பெரிசு படுத்த வேண்டாம். உங்க அண்ணன் காது வரைக்கும் விஷயம் போக வேண்டாம். தப்பா நினைக்காதீங்க தம்பி. சென்மமா வளர்த்துட்டேன். உலகம் தெரியலைப்பா" அவர் சொல்லச் சொல்ல மெதுவாக புன்னகை புரிந்தவன்.

"மாமா நான் அப்படிப்பட்டவனா? கவலைப்படாதீங்க. கழுத்தை அறுத்தா கூட என் கிட்டேர்ந்து விஷயம் வெளியே போகாது" என்கிறான்.

"ரொம்ப நன்றிப்பா" சொல்லி அவர் நகர,

"எப்போப்பட்ட மனிதர்" விடைக்கிறான் அருண்.

"அண்ணி ரொம்ப கொடுத்து வச்சவங்கதான். எப்போப்பட்ட பாசமான மனிதர்."

வீட்டிற்குள் செல்லும்போதே அண்ணி மாலை டிபனுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதைப் பார்க்கிறான். அண்ணியின் அருகில் போய் நின்று கொள்கிறான்.

"அண்ணி இன்னிக்கு என்ன டிபன்" கேட்டவனை பார்க்க முடியாமல் தவிக்கிறாள்.

பின் மெதுவாக "பூரி சப்ஜி" என்கிறாள்.

''நானே சாப்பிடணும்னு நினைச்சேன். நீங்க செய்துட்டீங்க. 'தேங்க்ஸ்' என்கிறான்.

மீனா தலை குனிந்தவாறே அவனுக்கு டிபனை எடுத்து வைத்து நகரத் தொடங்க,

''அண்ணி உங்களோட பேசணும்'' என்கிறான். ''நானும்தாம்பா'' என்றவள் பேச ஆரம்பிப்பதற்குள் மீனாவின் கணவன் பாஸ்கர் வந்துவிட இருவரும் ஆச்சரியப்பட்டனர்.

''என்ன நீங்க இன்னிக்கு இத்தனை சீக்கிரம்?'' மீனா கேட்க,

''ஒண்ணுமில்லேம்மா. நீயே இன்னிக்கு வந்துடு வேன்னு சொன்னேயில்லே. அதான் பர்மிஷன் போட்டுட்டு வந்துட்டேன்.'' மீனாவிற்கு முகமெங்கும் மகிழ்ச்சி பொங்கியது. கணவனின் அன்பு வெள்ளத்தில் திக்கு முக்காடும் பெண்ணின் மகிழ்ச்சி தான் அது.

''நீங்களும் டிபன் எடுத்துக்கங்க'' கணவனோடு மாமியார், மாமனாருக்கும் டிபன், காபி கொடுத்துவிட்டு அருணிடம் ஆரம்பிக்கிறாள் மீனா.

''தம்பி நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. அந்தப் பொண்ணு உங்களுக்கு வேணாம். வேற நல்ல பொண்ணைப் பார்ப்போம். செய்துக்கங்க.''

''அண்ணி எனக்கு அந்தப் பொண்ணு மட்டும் தான் வேணும். அதுக்கு என்ன ஏற்பாடோ அதை செய்யுங்க.''

''என்ன தம்பி இது? அந்தக் குடும்பமும் அத்தனை நல்லது இல்லே. பொண்ணை தான் நம்பளே பாத் தோமில்லே. வேணாம் தம்பி. கல்யாணம் செய்துகிட்டு படப்போறீங்க.''

''அண்ணி கண்ணால் பார்ப்பதும் பொய், காதால் கேட்பதும் பொய்யுன்னு கேள்விப்பட்டிருக்கீங்க இல்லே. அது உங்க விஷயத்துலே நிஜமா போச்சு. அந்த பொண்ணோட நான் பழகியிருக்கேன். ரொம்ப நல்ல பொண்ணு. ரொம்ப புத்திசாலி பொண்ணு. மாங்கு மாங்குன்னு எத்தனை வேலை செய்வா தெரியுமா?''

இவர்கள் விவாதம் புரியாமல் மாமியார், மாமனார், கணவர் விழிக்க, மெதுவாக அவர்களிடமும் எல்லா வற்றையும் சொல்கிறாள் மீனா.

''மருமக சொன்னா கரெக்டாதான் இருக்கும். வேண் டாம்பா இந்தப் பொண்ணு.''

அருணின் தந்தை பேச, ''அவனுக்குன்னு இஷ்டம் இல்லையா? கட்டிக்கப் போறவன் அவன்'' அருணின் தாயார் பேச,

''ஏம் மீனா அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிகிட்டா உனக்கு என்ன வந்தது? கூட வாழப் போறவன் அவன். அவன்தான் டிசைட் பண்ணனும். அதுனால உன் எண்ணத்தைத் திணிக்கிற வேலை வச் சுக்காதே'' கணவன் கண்டிக்க, மீனா மௌனமானாள்.

இப்போதுதான் கணவன் தனக்காக பர்மிஷன் போட்டு ஓடி வந்தான் என்று சந்தோஷப்பட்டாள். ஒரே நிமிடத்தில் எல்லாம் புஸ்வாணமாகி விட்டது.

அடுத்து பதில் பேசாமல் எல்லாவற்றையும் ஒழித்துப் போட்டுவிட்டு இரவு சமையலுக்கு தயார் செய்தபோது அருண் மெதுவாக வருகிறான்.

''அண்ணி என்னை தப்பா நினைக்காதீங்க. என்னால அந்தப் பொண்ணைத் தவிர வேறு யாரையுமே கல்யாணம் செய்துக்க முடியாது.''

''அதான் ஏன் தம்பி? அந்தப் பொண்ணோட வாயைப் பாத்தியில்லே..''

''அண்ணி கல்யாணம் ஆனா சரி பண்ணிடலாம். நம்ம வழிக்கு கொண்டு வந்திடலாம்.''

''அதெல்லாம் கஷ்டம்பா.''

''இல்லை அண்ணி. நான் ஆசைப்பட்டுக் கல்யாணம் கட்டிக்கலே. இதுக்கு வேற ஒரு காரணமும் இருக்கு.''

''என்ன?''

''எங்க அண்ணன் உங்களை பார்க்கறதுக்கு முன்னாடி வேற ஒரு பையன் உங்களை வேண்டாம்னு சொன்னதும், உங்க மனசு பட்ட கஷ்டத்தையும் எங்கிட்டே ஒரு ஃப்ரண்ட் கிட்டே சொல்கிற மாதிரி சொல்லியிருக்கீங்க இல்லையா?''

மீனா ஆமென்று தலை ஆட்ட,

''அந்தக் கஷ்டம் எனக்கும் உண்டு அண்ணி. உதவி பண்ணுங்க. காப்பாத்துங்கன்னு கெஞ்சினபோது அவ வீட்டுலே நான் இருந்தேன். என் உதவி வேணுமாம். நான் வேண்டாமாம். என்னைக் கல்யாணம் பண்ண இஷ்டமில்லையாம். எம் மனசும் துடிச்சுகிட்டு இருக்கு அண்ணி. அதுக்கு பழிவாங்க தான் இந்தக் கல்யாணம்'' மீனா அதிர்ந்து போகிறாள்.

19

மீனா அருணையே பார்க்கிறாள். இவனை நல்லவன் என்று நினைத்தால் இவனிடம் கூடவா இப்பேற்பட்ட குணம் இருக்கிறது. ஒரு நிமிடம் மனது சந்தோஷப்பட்டாலும் அடுத்த

நிமிடம் ஒத்துக் கொள்ளவில்லை. துரைசாமியின் பெண் அல்லவா? என்னதான் உணர்ச்சி வசப்பட்டாலும் அடுத்தவரைக் கெடுக்க மனம் ஒப்பவில்லை.

''வேண்டாம்பா. கல்யாணம்ங்கறது வாழ்க்கையை வாழறதுக்கு. சண்டை போட்டுகிட்டு வாழ்க்கை நரக மாக்கிக்கறதுக்கு அல்ல'' மெதுவாக அவள் கூற,

''அண்ணி சண்டை வந்தா வாழ்க்கை நரகம் என்று யார் சொன்னார்கள்? சின்ன சின்ன சண்டைகள் மனதை பலப்படுத்தும். ரொம்ப ப்ரீயா போயிக்கிட்டு இருந்தா வாழ்க்கை போர்தான். சின்ன சண்டைகள், பின் சமாதானம் அதில்தான் த்ரில்லே இருக்கு.''

''இல்லேப்பா வேண்டாம்'' மீனா லேசாய் மறுக்க,

''அண்ணி உதவி செய்யுங்க. நீங்கதான் ஹெல்ப் பண்ணனும்.''

மீனா மௌனம் சாதிக்கிறாள்.

''அண்ணி ப்ளீஸ்...'' அருணின் கெஞ்சல் மீனாவின் மனதை இளக்க,

''சரி டிரை பண்றேன்'' என்கிறாள்.

''தேங்க்யூ...'' என்றபடி அருண் சற்று துள்ளலோடு நகருகிறான.

மறுபடியும் அப்பா வீட்டிற்குச் சென்று அவளிடம் பேசலாமா. மனம் யோசித்தது. 'அப்பா சொல்வது போல் அருணுக்கு அவள்தான் மனைவி என்று போட்டு வைத்திருக்கிறதோ என்னவோ. சரி பார்ப்போம் என்ன நடக்கிறதா பார்ப்போம். எது ஆண்டவன் சித்தமோ அதுவே நடக்கட்டும்.'

ஏகாம்பரத்தின் வீட்டிலும் இதே பேச்சுதான். 'எது ஆண்டவன் சித்தமோ அதுவே நடக்குது.' சென்பகம் குதித்துக் கொண்டிருந்தாள். திருமணமாகி எத்தனையோ வருடங்கள் சென்பகத்தின் பிறந்த வீட்டார் கூட திரும்பிப் பார்க்காத நிலையில் திடீரென்று அண்ணனிடமிருந்து கடிதம் வந்தால் கசக்குமா என்ன?

''அது என்ன இத்தினி நாள் திரும்பிக்கூட பார்க்காம இப்ப நம்ம குடும்பத்துல பெண் எடுக்கணும்ங்கறான். உங்க குடும்பமே ஒரு திமிர் புடிச்ச குடும்பம். இப்படி இறங்கி வறாங்கன்னா ஏதோ வில்லங்கம் இருக்கு.''

''யார் நாங்க திமிர் பிடிச்ச குடும்பமா? உங்க குடும்பத்தைப் பத்தி தான் ஊரே சிரிக்குதே.

''உங்க தங்கச்சி அக்கா புருஷனையே இழுத்துக்கிட்டு ஓடலை. உங்க தம்பி பெத்த தாய்க்கு சோறு போடாம பெண்டாட்டி முந்தானையை பிடிச்சுகிட்டு அலையலே.''

''எங்க குடும்பத்தை பேச உங்களுக்கு என்னடி யோக்கியதை இருக்கு? உங்க அண்ணன் உங்க எல்லாரையும் ஏமாத்திட்டு துட்டை பிடுங்கலை. சொத்து மொத்தமும் லவுட்டிக்கிடலை. உன் தம்பியும், அண்ணனும் கோர்ட் வாசல்லே பத்து வருஷம் போல சண்டை போட்டுக்கலை. குடும்பமா அது நாதாறி குடும்பம்.''

இந்தப் பேச்சைக் கேட்டு சென்பகம் கொதிக்க, ஒன்று போட்டு ஒன்று பேசி சென்பகத்தை அடி அடி என்று அடித்து துவைக்கிறார் ஏகாம்பரம். சென்பகமும் பேசிப் பணியவில்லை.

ஆயிற்று ஒரு வாரம் கழித்து மாப்பிள்ளை வீட்டார் வந்தபோது ஏகாம்பரம் வாயெல்லாம் பல்லாக வரவேற்கிறார்.

''என்ன மாமா எங்களை மறந்திட்டீங்களா? சென்பகத்தின் அண்ணன் பேசப் பேச ''உன்னை எப்படிப்பா மறக்க முடியும்?'' என்றவாறே வெகுநாள் பழகிய சிநேகிதன் பேசுவது போல் பேசுகிறார். சென்பகமும் மாய்ந்து மாய்ந்து அண்ணனை வரவேற்பதில் ஈடுபடுகிறாள்.

அதுவரை அவர்களை பழித்துப் பேசியது, திட்டியது எல்லாவற்றையும் மறந்த மாதிரி குலாவுகிறார்.

''ஆமா என்னப்பா பெரிய ஆளாயிட்டே. எங்க ஞாபகம் எல்லாம் வருமான்னு நினைச்சுகிட்டு இருந்தேன். எப்படி திடீர்னு வந்தது?''

அவன் பதில் சொல்வதற்குள் சென்பகம் பேசுகிறாள். ''அப்...பா இப்பவாவது வந்தாங்களேன்னு சந்தோஷப்படறேன். ஏன் கண்டதை கேக்கறீங்க.''

''விடும்மா. நான் வரலையேன்னு ஆதங்கத்தில் மாமா கேட்கிறார். வரக்கூடாதுன்னு இல்லை. ஓயாத வேலை, கஷ்டம், உழைப்பு பெரிய ஆளாவதற்கு ரொம்ப தான் கஷ்டப்பட வேண்டியிருந்தது.

மொத பையனுக்கு எப்படியோ பணக்கார வீட்டு சம்பந்தம் கிடச்சது. பணம் தான் வந்ததே தவிர நிம்மதியே இல்லை. அடுத்த பையனுக்காவது நம்ப உறவு முறையிலே கொடுத்தா என்னன்னு தோணிப் போச்சு. அதான் ஓடி வந்தேன். நம்ப வீட்டுலே தான் மூணு பொட்ட பிள்ளைங்க இருக்குதே.''

மொத பொண்ணு கல்யாணம் ஆச்சு தெரியும். ஆனால் இரண்டாவது பெண்ணிற்காவது எம் பையனை கொடுக்க மாட்டோமா என்ற ஏக்கத்தில் தான் வந்தேன். உங்க பொண்ணு நல்ல படிப்பாளின்னு சொன்னாங்களே. ப்ளஸ் டூவிலே நல்ல மார்க்குன்னு கூட சொன்னாங்களே. பி.எஸ்ஸியிலேகூட பர்ஸ்ட் மார்க்குன்னு சொன்னாங்களே. கோல்ட் மெடல் வாங்குச்சுன்னு சொன்னாங்க.'' கேட்க, கேட்க சுதாரிக்கிறார் ஏகாம்பரம். ''மெயின் சப்ஜெக்ட்லே வாங்கலே. ஆன்ஸிலரியிலே கோல்ட் மெடல். வெறும் பர்ஸ்ட் கிளாஸ்தான்.'' ஏகாம்பரம் சொல்ல ஒரு புன்சிரிப்போடு அவரையே பார்க்கிறார் செண்பகத்தின் அண்ணன்.

''தன்னடக்கம் தேவைதான். ஆனாலும் அதுவும் அளவுக்கு மீறக்கூடாது. சொந்த பொண்ணை புகழக் கூடாதுன்னு கொள்கை வச்சிருக்கீங்க. அதுக்காக வாங்கினதைக்கூட சொல்லக் கூடாதா என்ன?''

அண்ணன் வந்ததில் வீடு ரெண்டு பட்டது. செண்பகத்திற்கு பிறந்த வீட்டில் பாசம் என்றாலும், அண்ணன் நல்ல நிலைமைக்கு வந்த பின்தான் அந்த பாசம் அருவியாக கொட்ட ஆரம்பித்தது. அண்ணனும், தம்பியும் நல்ல நிலைமைக்கு வந்தபின், நேரடித் தொடர்பு இல்லையென்றாலும் அவர்களைப் பற்றி நினைத்தாலே மிக உயர்வாகத்தான் நினைப்பாள். தன் வாரிசுகளிடம் தன் உடன்பிறப்பான அண்ணனும், தம்பியும் தேவனுக்கு சமானம் என்று சொல்லி வைத்திருக்கிறாள்.

ஆனால் உடன் பிறந்த இரண்டு சகோதரிகளும் தன்னைவிட கீழ்நிலையில் இருப்பதால் பெயரைக்கூட

உச்சரிக்க மாட்டாள். வெளியாரிடம் சொல்லும்போது மட்டும் அவர்களைப் பற்றி சிலாகித்துப் பேசுவாள். அண்ணன் எத்தனை பெரிய பணக்காரன். தானே வலிய வந்து சம்பந்தம் பேசினால் அது தெய்வ சித்தம்தான். அதுவும் அண்ணி எப்படி ஒத்துக் கொண்டார்கள் என்றே தெரியவில்லை. அண்ணனுக்கு மூன்று பையன்கள். பெரியவனுக்கு மிகப் பெரிய பணக்கார சம்பந்தம். வரவேற்பில் அண்ணனே வந்த முக்கிய விருந்தாளிகளுக்கு குங்குமச் சிமிழ் கொடுத்திருந்தான். பெரிய பையன் சொந்தமாக கம்பெனி நடத்திக் கொண்டிருக்கிறான். அவனுக்கு அண்ணன் சொந்த வீடு, மாமனார் கட்டி கொடுத்த வீடு என்று இரண்டு வீடுகள். இரண்டாவது பையன் பேங்கில் பெரிய வேலை. அவனே சொந்தமாக வீடு கட்டிக் கொண்டிருக்கிறான். அண்ணனும் அவனுக்கு ஒரு வீடு வாங்கித் தந்திருக்கிறான். அந்தப் பையன் ரவி மற்ற பிள்ளைகளை விட பார்ப்பதற்கு மிக நன்றாக இருப்பான். பிராமண பிள்ளைகளைப் போல் ஒரு வெளுப்பு. ஆனால் வயதுதான் இடிக்கிறது. மூன்றாவது பிள்ளை முப்பது வயது அவன் அமெரிக்காவில் இருக்கிறான். அவனுக்கும் சொந்த வீடு எல்லாம் உண்டு. அது தவிர அண்ணனுக்கே ஊர் பட்ட வீடும், நில புலன்களும் உண்டு. அந்தப் பையனுக்குத்தான் கேட்கிறான் என்று நினைத்தாள் செண்பகம்.

சாப்பாடு, சவரணை எல்லாம் ஆனபின் மறுபடியும் கேட்கிறார். ''என்ன உன் பெண்ணைக் காணோம்.''

செண்பகம் மெதுவாக அண்ணனின் அருகே வந்து அமர்ந்தவள், ''புவனா இதெல்லாம் கத்தப்படுத்து'' என்கிறாள்.

காலையிலிருந்து அம்மாவின் தாளத்துக்கு ஆடி, ஆடி கால்கள் விட்டுப் போயிற்று. சிறிது நேரம் அமர மாட்டோமா என்று மனம் கெஞ்சிற்று.

'போம்மா... என்னால் முடியாது' என்று உரிமையாகச் சொல்லும் நிலையில் அவள் இல்லை. குழந்தை பிறந்ததுமே பறந்து விட வேண்டியது தான். உள்ளூரில் இருக்கும் கணவன் ஒரு மரியாதைக்கு கூட வந்து தன்னைப் பார்க்கவில்லை. 'கொண்டவன் சரியில்லை என்றால் கூரை கூட வந்து முட்டுமாம்' அம்மா சொன்ன பழமொழி மனதில் நெருட 'ரொம்ப சரியாயிருக்கு' என்று நினைத்துக் கொள்கிறாள்.

மறுபடியும் மாய்ந்து, மாய்ந்து சுத்தப்படுத்தி வேலைகளில் ஈடுபட அவளைப் பார்த்த மாமா புன்சிரிப்பு மட்டும் சிரித்தாரே தவிர பேசவில்லை. அம்மாவும் அதைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை.

ஏகாம்பரம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தவர் பிறகு தன்னறைக்குப் போய் கதவைச் சார்த்திக் கொண்டுவிட்டார்.

''ஏம்மா உங்க வீட்டுக்காரர் மாறவே இல்லையா? உன்னைப் போல பொறுமையான பொண்ணே பார்க்க முடியாதும்மா'' அவர் சொல்லச் சொல்ல உடைந்து போய் அழுகிறாள் செண்பகம்.

''என்னண்ணே பண்றது? எத்தனை கஷ்டப்பட்டேன் தெரியுமா? இன்னும் பட்டுகிட்டு இருக்கேன். புருஷன் பொண்ணு எதுவும் சரியில்லை அண்ணே.''

''என்னம்மா சொல்றே?'' அண்ணன் கேட்டதும் தான் தன் தவறு புரிகிறது செண்பகத்திற்கு. ''இல்லேண்ணே

உங்க கிட்டே சொல்றதுக்கென்ன? என் ரெண்டாவது பொண்ணு எவனையோ இழுத்துகிட்டு ஓடிடிச்சு.''

சாமான்களை சுத்தம் செய்து கொண்டிருந்த புவனாவின் காதுகளில் இது விழுந்ததும் அதிர்ந்து போகிறாள். 'என்ன அநியாயம், இவளா பெற்றவள் போ... போன்னு துரத்திட்டு அவ ஓடிப் போயிட்டான்னு கூசாம சொல்றாளே.' ஏமாற்றமடைந்து, பின்னடைய வேண்டிய அண்ணன் கொதிக்கிறார்.

''யாரும்மா அவன். நம்ப பொண்ணு படிச்ச பிள்ளை. பாக்கறதுக்கு நல்லா இருக்குதுன்ன உடனே அதை ஏமாத்தப் பாக்கறாங்களா? விடக்கூடாது, நீ அட்ரஸ் சொல்லு நான் போய் எவன் கூட்டிகிட்டு போனானோ அவன் கை, காலை உடைச்சிட்டு குழந்தையை அழைச்சுகிட்டு வந்துடறேன். ஆனா தங்கச்சி தப்பு தண்டா ஒண்ணும் நடந்திருக்காதில்லே. எனக்குத் தெரிஞ்ச டாக்டர் இருக்காரு. புல்லா செக் பண்ணிடுவோம். எல்லாம் சரியாயிருந்தா கல்யாணம் வச்சிப்போம்.''

கேட்டுக் கொண்டிருந்த புவனாவிற்கு இரத்தம் கொதித்தது. 'அம்மா பேசுவது உன் பொண்ணைப் பற்றி, உன் மனசு வலிக்கவில்லையா. உன் அண்ணன் பாட்டுக்கு பேசிகிட்டே போறார். அசடு போல் எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கிறாயே' மனதிற்குள் புலம்பினாள் புவனா.

''இல்லண்ணே அது சரி வராது.''

''ஏம்மா?''

''அது ஓடுகாலி. அதை பெத்துட்டு நாங்களே லோல் படறோம். நீங்க வேற உங்க மருமகளா ஆக்கிக்கிட்டா

அவ்வளவுதான்.'' அம்மாவின் வார்த்தைகள் சம்மட்டி அடியைப் போல் மனதைத் தாக்க, மெல்லிய பெருமூச்சு விடுகிறாள் புவனா.

''நீங்க என்னோட வேற பொண்ணை கட்டுங்களேன்.''

''என்னம்மா உளர்றே. இன்னொருத்தி தான் வயிறும் பிள்ளையுமா இருக்கா, எப்படி?''

''ஐயோ என்னண்ணே? நான் சொன்னது என் மூணாவது பொண்ணை. எம் பொண்ணு படிச்சிட்டு இருக்கா. நீங்க ஓ.கே. சொன்னா கல்யாண வேலை களைப் பார்க்கலாம்.''

''அது... அந்த குட்டிப் பொண்ணா? ரொம்ப நல்லதாப் போச்சு. ஆனா வயது வித்தியாசம் அதிகம் இருக்குதுன்னு சொல்லமாட்டே இல்லே.''

''எம் பொண்ணுக்கு பதினேழு வயசுண்ணே.''

''எம் பையனுக்கு முப்பத்திரண்டு.''

''இது என்னண்ணா பெரிய வித்தியாசம். பதினைஞ்சு வயசெல்லாம் ஒரு வித்தியாசமா என்ன? நம்ப அம்மா அப்பாவுக்கும் இருபது வயசு வித்தியாசம் ஞாபகம் இருக்கா? அவுங்க நல்லா வாழலையா என்ன? பையன் பேங்க்கிலே பெரிய அதிகாரியா இருக்கார் இல்லே. சொந்த வீடு இருக்கில்லே'' தங்கையின் ஆசையைக் கேட்டவர் சற்று ஆச்சரியமாகக் கேட்கிறார்.

''என்னம்மா என்னவோ பணமே பார்க்காத மாதிரி பேசறே. உங்க வீட்டுக்காரர் கூடத்தான் நல்லா சம்பாதிக் கிறாரு. ஏன் உன் முதல் பொண்ணை பணக்கார இடத்துலே கொடுத்திருக்கே. ஏன் இப்படி பேசறே?''

''ஆமா பணக்கார இடம். நீங்கதான் மெச்சிக் கணும்.''

''என்னம்மா சொல்றே?''

''எம்பொண்ணைப் பாத்தீங்களா? கையிலே நாங்க போட்ட நாலு வளையல். கழுத்திலே மெல்லிய சங்கிலி. காதுலே நாங்க போட்ட தோடு. வேறு என்ன இருக்கு. புருஷன்காரன் ஒரு முழம் பூ கூட வாங்கித் தரலை. எம்பொணணு ரொம்ப பாவம்'' சட்டென்று பொண்ணை நினைத்து கலங்க, புவனாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. என் பழைய அம்மா வந்துட்டாளா என்ன? மறுபடியும் என்னைப் பற்றி கவலைப்படுகிறாள்.'' அண்ணே எங்க வீட்டுக்காரருக்கு ஒண்ணும் செய்ய மனசு வராது தான். அதுக்காக வீட்டுக்கு வந்த மருமகளுக்கு ஒரு துண்டு கூடவா தரமாட்டாங்க. எப்பப் பார்த்தாலும் கழுதை மாதிரி வேலை செய்துகிட்டு இருக்கும். இதுங்க வாயெல்லாம் நம்மகிட்டேதான். புருஷனைக் கைக்குள்ள போட்டுக்கற சாமர்த்தியம் இல்லை. மாமியாரை நின்ன இடத்தில் நிக்க வைக்கற சாமர்த்தியமும் இல்லை. நம்ம கிட்டேதான் எல்லா வாயும்.''

சற்று சந்தோஷப்பட்ட புவனா மறுபடியும் வருத்தப் பட்டாள். 'ஐயோ அம்மா அவரவர் கஷ்டம் அவரவருக்கு. அதை எல்லாரிடமும் சொல்லலாமா? அப்புறம் என்ன மரியாதை இருக்கு!' லேசாக அழுகை வந்தது. வயிற்றைக் கலக்கியது. மாமா ஏற்கனவே தன்னிடம் பேசாதவர். இதில் தன்னுடைய நிலைமை தெரிந்தால் இன்னும் மோசம். இன்னும் கிள்ளுக் கீரையாக அல்லவா மதிப்பார்.

"அண்ணா உங்க பையனை சட்டுபுட்டுன்னு வரச் சொல்லி பொண்ண பார்க்கச் சொல்லுங்க. ஒரு நல்ல நாளிலே நிச்சயமும் பண்ணி கல்யாணத்தையும் முடிச்சிடலாம்."

"சரிம்மா நாளைக்கே வரச் சொல்லி தந்தி கொடுத்துட றேன். அதுக்கு முன்னால பையன் போட்டோவைப் பாரு."

சென்பகம் அசந்து போகிறாள். ராஜ அழகு என்கிறார்களே அப்படி ஒரு தோற்றம். பளபளவென்று கோதுமை நிறத்தில் அருமையாக இருக்கிறான் பையன். போட்டோவைப் பார்த்ததிலிருந்தே சென்பகத்துக்கு தரையில் கால் பாவவில்லை. இது ரொம்ப ரொம்ப நல்ல சம்பந்தம். இது கை நழுவி விட்டால் எல்லாமே போய்விடும். "அண்ணே சீக்கிரம் வந்து சொல் லண்ணே" குடைந்து எடுக்கிறாள்.

அன்று அண்ணன் பையனை வரச் சொல்லி தந்தி அடித்து அனைவரும் காத்திருந்தனர். புவனா விஜிக்காக மிகவும் பரிதாபப்படுகிறாள். 'பாவம் சின்ன பெண் அவள். தன் கணவனை விட பெரியவன் மாமாவின் பிள்ளை. அவனையா திருமணம் புரியப் போகிறாள். பாவம் இந்தக் காலத்தில் இரண்டு, மூன்று வயதுக்கு மேல் வித்தியாசங்களில் திருமணம் செய்வதில்லை. ஆனால் இங்கே பதினேழு வயது வித்தியாசம்.'

ஒரு வாரம் கழித்து பிள்ளை வந்தபோது, சென்பகம் பூரித்துப் போனாள். நல்ல நிறத்தோடு, வாட்ட சாட்ட மாக, முன் பக்க தலை மயிர் மட்டும் சற்று குறைந்த நிலையில், ஆனால் ஆள் நன்றாகவே இருந்தான்.

"நம்ப வீட்டுலே இருக்கற மாப்பிள்ளைகள்ளே இவர்தான் அழகு. இவர்தான் சாமர்த்தியம் அதிகம். இவருக்கு இணை யாருமே கிடையாது" புவனா வாயை மூடிக் கொள்கிறாள். தன்னுடையதென்று எதையும் பெருமைப் படுத்தக்கூடாது. அந்த நிலையிலும் அவள் இல்லை. ஆனால் விஜி இதற்கு ஒத்துக் கொள்வாளா? அந்த பக்கத்து வீட்டு மெக்கானிக் பையனோடு விழுந்து விழுந்து காதல் செய்கிறாள். எத்தனையோ முறை கூப்பிட்டு சொல்லியாகி விட்டது. அப்பாவிற்கே தெரிந்து போய் அடித்து அமர்க்களப்படுத்தி எல்லாமே ஆகி விட்டது. இன்னும் அந்த பக்கத்து வீட்டு தொடர்பை அவள் விட்டபாடில்லை. அவன் நல்லவனா கெட்டவனா என்றெல்லாம் விஜிக்குத் தெரியாது. அவன் ப்ளஸ் டூவோடு படிப்பை நிறுத்திக் கொண்டு, படிப்பு வராததால் மெக்கானிக் வேலை கற்றுக் கொண்டதாகக் கேள்வி, இரண்டு மூத்த சகோதரிகள். அவரவர்கள் நன்றாக படித்து வேலைக்குப் போய் நல்ல இடத்தில் திருமணமும் செய்து கொண்டு விட்டனர். பெரிய பணக்காரக் குடும்பம் என்று சொல்ல முடியாது. வீட்டில் மாமியாரைத் தவிர வேறு பிக்கல் பிடுங்கல் இல்லை. இருந்தாலும் விஜி அங்கே சுகப்படுவாளா தெரியவில்லை. பார்ப்போம் விஜி என்ன செய்கிறாள் என்று. முதலில் அம்மா சொன்னபோது விஜி முரண்டு செய்கிறாள்.

"போம்மா பர்ஸ்ட் இயர்தான் படிக்கறேன். அதுக் குள்ளே எனக்கு என்ன கல்யாணம். நீங்க கௌரிக்கு முதல்ல கல்யாணம் செய்யுங்க."

"என்ன பைத்தியம் மாதிரி உளர்றே. அவதான் என் பொண்ணே இல்லேன்னு தலை முழுகிட்டேனே.

அதுதான் கொஞ்சம் வயசு வித்தியாசம் இருந்தாலும் பரவாயில்லைன்னு உன்னை குடுக்கறேன். எக்கச்சக்க சொத்து. பையன் பேங்க்கிலே பெரிய ஆபீசர். நீ மகாராணி மாதிரி இருக்கலாம். ஏதோ எங்கண்ணன் இதுவரைக்கும் இறங்கி வந்திருக்கானேன்னு நினைச் சேன். அவன் முன்னெல்லாம் நம்பகூட பேசக்கூட மாட்டான். இப்பதான் தங்கச்சி வீட்டு சம்பந்தம் வேணும்னு ஓடி வந்திருக்கான். நீ அதை கெடுத்துடாதே."

"அம்மா..." விஜி கேட்க,

"இதப் பாருடி நான் சொன்னதுதான் கடைசி முடிவு. வேற மாதிரி போகணும்னு முயற்சிகூட பண்ணாதே. ஏதாவது ஆச்சு? பொண்ணே வேண்டாம்னு உன்னைத் தலை முழுகிடுவேன் பத்தரம்."

விஜி மௌனமாகிறாள். புவனா ஒன்றும் பேசாமல் என்ன நடக்கப் போகிறது என்ற துடிப்போடு பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

பிள்ளை வந்து சம்மதித்து நாளை நிச்சயதார்த்தம் என்று நாள் கூட குறித்தாகி விட்ட. புவனாவிற்கு கொள்ளை வேலை. அம்மா வீட்டு உறவினர்தான் வந்திருந்தார்கள். அப்பா வீட்டு உறவினர்கள் இந்தப் பக்கமே வர வில்லை. அம்மா வீட்டு உறவினர்கள் கூட அம்மாவின் அண்ணனுக்காக வந்திருந்தனர். வந்திருந்தவர்கள் மரியாதை. மட்டும் என்று நிறைய எதிர்பார்க்க, அப்பா எரிந்து எரிந்து விழுந்து கொண்டிருந்தார். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் முகம் சுருங்க, அம்மா எல்லா வற்றையும் சரி செய்கிறாள். விழுந்து விழுந்து விசாரிக் கிறாள்.

"என்னா அத்தை பண்றது இந்த மாதிரி புருஷன்கூட எனக்கு போட்டு வச்சிருக்கு" என்று கண்ணீரை துடைத்தபடி பேசுகிறாள்.

அன்று நிச்சயதார்த்தம் செண்பகத்தின் அண்ணனே எல்லா செலவையும் பார்த்துக் கொண்டார். ஊரிலேயே இருக்கும் பெரிய சத்திரத்தில் நிச்சயம் செய்யப்பட்டது. பெண்ணுக்கு முத்து செட், தங்க செட், கெம்பு செட் என்று மூன்று செட்டு நகைகளைப் போட்டனர். இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் மயில் கழுத்து நிறத்தில் சுற்றிலும் குட்டி குட்டி மயில்கள் போட்ட அழகான அந்த பட்டுப் புடவை. அம்மா மலைத்து விட்டாள். இத்தனை வருடத் தில் புருஷன் ஒரு சாதாரண முத்துமாலை கூட வாங்கித் தந்ததில்லை. மாமியார் வீட்டில் திருமணத்திற்கென்று தனக்கு எதையுமே செய்யவில்லை. எல்லாமே நீங்களே செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். பொன் வைத்த இடத்தில் பூவை வைத்து திருமணம் எத்தனை நகை, என்ன மாதிரியான புடவை. புவனாவிற்கு கூட இத்தனை சவரணையாக செய்யவில்லை.

விஜி அத்தனை நகைகளையும் போட்டுப் போட்டு அழகு பார்த்துக் கொண்டிருக்கிறாள். புடவையை கட்டி ஆளுயரக் கண்ணாடியில் தன் அழகை ரசிக்கிறாள். அப்பாவிற்கு எதுவும் பிடித்தமில்லை என்பது முகச் சுளிப்பிலிருந்தும் கடுமையான வார்த்தைகளிலிருந்தும் புரிந்தது. நிச்சயம் முடிந்து அவர்கள் எல்லோரும் சென்ற பின் அன்று அம்மா பெருமிதத்தோடும் நிம்மதியோடும் உறங்கினாள்.

ஏகாம்பரம் எரிச்சலில் உறங்க, நிச்சயத்திற்கு வந்திருந்த கணவன் பெயருக்கு சாப்பிட்டு விட்டு

தன்னிடம் ஆசை வார்த்தை பேசிவிட்டு கிளம்பிச் சென்ற அவலத்தை நினைத்து உள்ளுக்குள் புழுங்கிய படி நீண்ட நேரம் உறக்கம் வராமல் பின் நடுநிசியில் உறங்கினாள் புவனா. மறுநாள் எல்லோருமே சற்று நிதானமாக எழுந்து வேலைகளை ஆரம்பித்தபோது தான் விஜி வீட்டில் இல்லை என்பது தெரிந்தது.

எப்போதுமே ஐந்தரை மணிக்கு எழுந்திருக்கும் அம்மா அன்று ஆறரை மணிக்கு எழுந்தாள். எழுந்தவுடன், ''ஏய் புவனா... புவனா... எழுந்திரு. மணி ஆறரை ஆயிடுச்சு'' எழுப்ப, தள்ளாமை, முடியாமையோடு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறாள் புவனா. போ சுடு தண்ணிக்கு அடுப்பு பத்த வை. காபியை போடு. நான் வாசல் கூட்டிட்டு வரேன்.''

கொஞ்ச நேரத்தில் எல்லோரும் காபி குடித்து முடித்த பின் ''விஜியை எழுப்பு மணி ஏழாயிடுச்சு. பாவம் நேத்தே அது சரியா சாப்பிட்டதோ இல்லையோ.''

புவனா தேடிவிட்டு காணோமென்று சொல்ல, ''எங்க போயிடுவா. இங்கதான் எங்கேயாவது இருப்பா'' என்று அசட்டையாகச் சொன்னாள் செண்பகம். புவனா விற்கு ஏதோ பொறிதட்ட, பீரோ இருக்கும் இடத்தில் பார்க்க, பீரோ கதவுகள் திறந்திருக்க விஜியின் நிச்சய தார்த்த புடவை, நகைகள் இவை எல்லாவற்றையும் காணவில்லை. பீரோ வேறு திறந்திருந்தது.

''அம்மா... இங்க வாயேன்'' அப்பா கூடத்தில் அமர்ந்து காபி குடித்தவாறே பேப்பர் படிக்க, மிக மிக மெதுவாகக் கூப்பிடுகிறாள்.

சமையலுக்கு கறிகாய் நறுக்கிக் கொண்டிருந்த அம்மா ''என்னடி இங்க வந்து பேசேன் அதென்ன சைகை'' என்று கடிந்துகொள்ள, அப்பா திரும்பிப் பார்க்கிறார்.

''என்ன?'' என்று சற்று அதட்டலாகக் கேட்க ''விஜி காணோம்.'' நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ள மெதுவாகச் சொன்னாள்.

''காணோமா... பேஷ்... பேஷ்...'' என்று உரக்கச் சிரித்தவர், உன் அண்ணன் வீட்டு சம்பந்தம் முறிந்தது.'' சொல்லச் சொல்ல, அம்மா அதிர்ந்து போகிறாள்.

''இது என்ன அநியாயமாய் இருக்கு! என்னடி ஆச்சு?'' கேட்டவாறே மூத்த பெண்ணுடன் உள்ளே போக, அங்கு பீரோ இருந்த நிலையைப் பார்த்து லபோ திபோ என்று அடித்துக் கொள்கிறாள்.

''என்னங்க இங்க ஓடியாங்களேன்'' அம்மா போட்ட கூச்சலில் அப்பா ஓடி வருகிறார்.

''என்ன ஆச்சு?''

''எல்லாத்தையும் சுருட்டிக் கொண்டு போயிட்டாங்க. அவங்க நிச்சயத்திற்கென்று கொடுத்த நகை புடவைகள் என் நகைகள் ஒன்றிரண்டு அதையும் காணோம். பாவிப் பொண்ணே. அது கமுக்கமா இருக்கும் போதே நினைச்சேனே. நிச்சயம் பண்ணிக்கிட்டு எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு ஓடிப்போச்சே.''

''ஓடற கழுதையை நகையை தூக்கிட்டு ஏன் ஓடணும்? செருப்பால அடிக்கணும். வா போய் போலீஸ்லே கம்ப்ளைண்ட் பண்ணிட்டு வரலாம்.'' ஏகாம்பரம் கத்த,

''ஐயோ பேசாம இருங்களேன். இவ எடுத்துட்டுப் போனாளோ இல்லை வேற யாராவது நகைக்காக குழந்தையை'' நினைத்தவுடனே,

''ஐயையோ என் குழந்தை... எவன் அழைச்சுகிட்டு போனானோ. அவன் நல்லா இருப்பானா.''

''போதும் கத்தாதே'' கர்ஜித்த ஏகாம்பரம். ''எத்தனை தடவை சொல்லி இருப்பேன். மூணும் மூணு மூதேவிங்கன்னு. கடைசி பொண்ணுன்னு தலைல தூக்கி வச்சுகிட்டு ஆடினியே இப்ப என்னாச்சு?'' அம்மா எதையும் கேட்காமல் அழ ஆரம்பிக்க, அப்பா வெளியே போகிறார். அவர் சென்ற பத்து நிமிடங்களில் அம்மா ஆவேசம் பிடித்தவள் போல் பக்கத்து வீட்டிற்குச் செல்கிறாள்.

அப்பாவின் பேச்சினால் காயப்பட்ட புவனா, விஜி வரவில்லை என்றால் என்ன ஆகும்? தன்னால் இங்கே இருக்க முடியுமா? வருத்தப்பட்டவளாய் அதிர்ச்சி அடைந்தவளாய் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித் தாள். துடிக்கும் மனதை அடக்கத் தெரியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறாள்.

சிறிது நேரத்தில் கதவு தட்டும் ஓசைக் கேட்க அம் மாவா, இல்லை அப்பாவா நினைத்தவாறே கதவைத் திறந்தவள் எதிரில் விஜி எதிரில் சூட்கேஸுடன் நிற்கிறாள்.

''விஜி என்னம்மா இதெல்லாம்?'' புவனாவின் கேள்வி கள் அவளுக்கு காதில் விழுந்ததா இல்லையா என்றே தெரியவில்லை. உள்ளே நுழைந்து பீரோ உள்ள அறைக் குச் சென்று பீரோவைத் திறந்து ஏதோ தேடுகிறாள்.

''ஏய் விஜி கேட்டுகிட்டே இருக்கேன். பதில் சொல்லுடி.''

''விடு...'' என்றவள்,

''நான் போறேன். என் சர்டிபிகேட் எடுக்கத்தான் வந்தேன்.''

''விஜி என்னம்மா இதெல்லாம். அப்பா அம்மா கிட்டே சொல்லிகிட்டு கிளம்பு.''

''அவுங்களைப் பாத்தா அப்புறம் கிளம்ப முடியுமா?'' சற்று பரபரப்புடன் தேடியவள். அலமாரியைத் தேடு கிறாள். பாதி தேடிக் கொண்டிருக்கும்போதே அம்மா வந்துவிட திடுக்கிட்டுத் திரும்புகிறாள்.

''ஏய் எங்கேடி போனே? கைல என்னடி பை?'' ஒரு நிமிடம் விஜி நழுவ முற்பட, எட்டிப் பிடிக்கிறாள். பையை தன் முதல் மகளைத் திறக்கச் சொல்ல, புவனா சற்று பயத்துடன் திறக்கிறாள். அதில் விஜியின் துணிமணிகள். நிச்சயதார்த்த புடவை, அம்மாவின் பட்டுப் புடவை. மாப்பிள்ளை வீட்டார் போட்ட நகைகள். தனக்காக அப்பா செய்திருக்கும் மயில் தோடும் ஒரு கனத்த சங்கிலி. பார்க்க, பார்க்க விஜியை அம்மா உலுக்குகிறாள்.

''இதெல்லாம் என்னடி? இதெல்லாம் சுருட்டிகிட்டு எங்கே ஓடப் போறே? அந்த பக்கத்து வீட்டுப் பையனை நாங்க சும்மா விட மாட்டோம். நிச்சயம் பண்ணது ஒருத்தனோட. ஓடறது இன்னொருத்தனோடயா?''

''யாரைக் கேட்டு நிச்சயம் பண்ணினே.''

சட்டென்று கன்னத்தில் அடிக்கிறாள்.

"எத்தனை தைரியம் இருக்கும் உனக்கு? எங்கண்ணன் பாவம் நல்ல குடும்பம்னு நிச்சயம் பண்ணினாரே. அவர் இதைக் கேட்டா என்ன செய்வார்? உன்னை..."

அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் விஜியை தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் வெந்நீர் அடுப்பில் இருந்த கட்டையை இழுத்து காலில் குடு போட, விஜி ஓவென்று கத்தி அலறுகிறாள்.

"இந்தக் கால் தானே ஒடுச்சு. போவியா?" கொள்ளிக் கட்டையை கால், கை என்று மாறி மாறி வைத்து குடு போட விஜி ஓவென்று அலற, புவனா ஓடி வந்து அம்மாவின் கையில் இருந்த கட்டையைப் பிடுங்கி எறிகிறாள்.

"நீ போ... அந்தப் பக்கம்..." புவனாவைத் தள்ளினாலும்,

"வேண்டாம்மா, வேண்டாம்மா" புவனா தடுக்கிறாள்.

இதற்குள் வாசலில் இருந்து யாரோ ஓடி வரும் சத்தம் கேட்க, எல்லோரும் திரும்பிப் பார்க்கின்றனர்.

"விஜி... விஜி... என் விஜியை என்ன செய்தீங்க? ஏய் கிழவி, விஜியோட அம்மாவாச்சேன்னு பார்க்க றேன். இல்லேன்னா உன்னைக் கொன்னுடுவேன்" கத்தி விட்டு விஜியை அணைத்தபடி எழுப்பி நிறுத்துகிறான்.

"நான் அப்பவே சொன்னேன் இல்லே. உங்க வீட்டுது எதுவும் வேணாம். கட்டின புடவையோடு வான்னு சொன்னேன் இல்லே."

விஜியின் நிலை பார்த்து அழுது கொண்டே கேட்கிறான் பக்கத்து வீட்டு மெக்கானிக்.

"ஏண்டா பாவி அவளுக்கு இன்னொருத்தனோடு நிச்சயம் ஆயிடுச்சு. அவளை அழைச்சுகிட்டு போனா போலீஸ்லே சொல்லிடுவேன். நீ வெளியே வர முடியாது தெரிஞ்சுக்க. அவளுக்கு பதினேழு வயசுதான் ஆவுது."

"சொல்லு... பதினேழு வயசுலே கல்யாணம் பண்றது சட்டப்படி குத்தம்னு உன்னை உள்ளே தள்ளலை என் பேரு ரவி இல்லே."

"ஏய் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க மருமகளா நீ வரப்போறேன்னுதான் கொடுத்தாங்க. மரியாதையா அதை எல்லாம் எல்லாத்தையும் எடுத்து வை."

அம்மாவையே வெறிக்கப் பார்க்கிறாள் விஜி. கை காலெல்லாம் சுடப்பட்டு எரிச்சல், வலி. கண்களில் கண்ணீர். சட்டென்று நிச்சயதார்த்த புடவையை சுருட்டி வெந்நீர் அடுப்பில் கீழ் எரியும் நெருப்பில் எறிகிறாள்.

"அடிப்பாவி" சென்பகம் எடுக்க முனைய தடுக் கிறாள்? "இந்தா உன் நகை."

அம்மாவின் மேலும் அடுப்பிலயும் நாலா பக்கமும் நகைகளை இறைத்துவிட்டு "வாங்க போவோம்" என்கிறாள்.

"ஏய் எங்கேடி போறே? நான் உன் அம்மா."

"சீ... நீயா அம்மா பிசாசு. பூதம். பணத்தாசை புடிச்சு எத்தனை வயசானவனோடு என்னைக் கல்யாணம் பண்ண பாத்தே. இனி உன் மூஞ்சிலே முழிக்க மாட்டேன். என்னைத் தேடி வந்தாலோ போலீஸ்ல கம்ப்ளைண்ட் கொடுத்தாலோ நான் கிடைப்பேன்னு நினைச்சிடாதே. இன்னும் நாலு மாசம் பாக்கி இருக்கு.

அப்புறம் எனக்கு பதினெட்டு வயசு. உன்னை உண்டு இல்லன்னு ஆக்குவேன். 'வாங்க போவோம்'' என்றபடி வந்தவனின் கையைப் பிடித்தபடி வெளியேறுகிறாள்.

இங்கே செண்பகமும், புவனாவும் நகைகளை பொறுக்கி எடுத்து அடுப்பை அணைத்து அதில் சற்று கறுத்திருந்த நகைகளை எடுத்து வைத்து, பாதி எரிந்த புடவையையும் எடுத்து வைத்துவிட்டு நிற்கும்போது, அம்மா குமுறிக் குமுறி அழுவது தெரிந்தது.

காலை பதினோரு மணிக்கு வியர்க்க, விறுக்க வருகிறார் ஏகாம்பரம். ''கம்ப்ளைண்ட் எல்லாம் கொடுத்தாச்சு. நீ ஏன் கன்னத்திலே கை வச்சுகிட்டு இருக்கே? உம் பொண்ணு திமிர் பிடிச்சது. நான் தான் சொன்னேனே. பிஞ்சிலே பழுத்ததுன்னு சொல்லிகிட்டு இருந்தேன். எம் பேச்சை கேட்டியா?'' இதற்குள் பாத்ரூமுக்கு சென்று வந்தவர் அங்கே பொசுங்கிய நாற்றமும், சுட்ட நாற்றமும் மூக்கில் வீச, எட்டிப் பார்க்கிறார்.

''என்னடி இதெல்லாம்?'' என்கிறார். செண்பகம் மெதுவாக விஷயத்தைக் கூற, கோபத்தின் உச்சிக்கே போகிறார் ஏகாம்பரம்.

''பாவி எல்லாத்தையும் கெடுத்தியேடி'' செண்பகத்தின் முடியைப் பிடித்து இழுத்து அடிக்கிறார். ''பொண்ணுங்களை வளத்து வச்சிருக்கே பாரு. எத்தினி நாள் பொண்ணுங்களை ஸ்டிரிக்டா வளருன்னு சொன்னேன். கேட்டியா? அதுங்களை குட்டிச் சுவராக்கிட்டியே. ஒழியட்டும். எந்த நாயும் இனிமே வீட்டுலே இருக்க வேண்டாம்'' கத்துகிறார்.

இருந்த ஒரே வாரிசான புவனா பயப்படுகிறாள். மீதி இருவரும் சென்றாகி விட்டது. இனி நான் ஒரு வள்தானே. சட்டென்று அப்பாவிற்கு தெரியாமல் மறைந்து விடுகிறாள். வீட்டின் பின்புறம் போய் ஒளிந்து கொள்கிறாள்.

இங்கே செண்பகம் அழுதுகொண்டு இருக்கிறாள். ''அடப்பாவிப் பெண்ணே. இப்படி பண்ணிட்டியே. இங்கே அண்ணன் வந்தா நான் என்ன பண்ணுவேன்? அழுகிறாள். புடவையைக் கொளுத்திட்டாளே பாவி. அந்த நெக்லஸ் தோடு எல்லாத்தையுமே தீயிலே போட்டாளே. இரண்டும் நாசமாவே போயிடுச்சே. அதை மறுபடியும் செய்து தரணுமே'' அழுதாள். மறுபடியும் ஆவேசம் வந்தவளாக ''ஏங்க அந்த கெளரி பொண்ணை தூக்கிட்டு வாங்க எப்படியாவது கல்யாணத்தை முடிச்சிடுவோம்'' கணவனிடம் கெஞ்ச.

''என்னது கல்யாணமா? உன் அண்ணன் பணக்காரன்னு தானே போய் விழுந்தே. அனுபவி. புருஷனை ஒரு வார்த்தை கேட்டியா? உனக்கு பயங்கர திமிர். அதுக்கு தான் லோல் படறே? அனுபவி'' அம்மா வெறுப்பு ஓடிய கண்களால் அப்பாவை பார்க்கிறாள்.

''சீ... நீ எல்லாம் ஒரு மனுஷன்'' மனது விண்டு போனது.

''என்னடி சொன்னே? இப்ப உனக்கு மனுஷனாத் தெரியலையா?'' அவ்வளவுதான் மறுபடியும் குருக்ஷேத்திரம் ஆரம்பித்தது. அம்மாவை அடித்து வெளியே அனுப்பி, எங்கே உன் பொண்ணு அதையும் துரத்து. இனிமேல் ஒரு நாயை கிட்ட சேக்க மாட்டேன்.

ஒவ்வொரு அறையாக சோதனை இட்டு கதவை இழுத்து மூடி, முன் பக்கம், பின்பக்கம் ரெண்டையும் தாழ்ப்பாள் போட்டு உள்ளே போய் மின் விசிறியை சுழல விட்டு பேப்பரை வைத்துக் கொண்டு உட்காருகிறார். செண்பகம் வாசற் பக்கம் அமர்ந்து அழுகிறாள். பின் பக்கம் புவனா அழுகிறாள். 'போதும் இனிமேல் இந்த ஈனப்பிழைப்பு வேண்டாம். தினம் தினம் எப்படி இருப்பது என்று தெரியாத பிழைப்பு. குளமோ குட்டையோ எங்கேயாவது போய் கதையை முடித்துக் கொள்ள வேண்டியதுதான்.' மனதை திடம் பண்ணிக் கொண்டு மெதுவாக நகர்கிறாள். 'எதற்கு யாருக்கும் வேண்டாதவளாய் அசிங்கப்பட்டு வாழ வேண்டும். பெற்றவளுக்கே பிள்ளை பாவம் என்று இல்லை. இதில் மற்றவர் பற்றி கேட்பானேன். வீட்டில் இருக்கும் கிணற்றில் விழுந்து விட்டால் என்ன? வேண்டாம். இறந்தும் இவர்களிடம் வசவு வாங்க வேண்டாம்.' மெதுவாக முன்னேறி நடக்கிறாள். மணி பத்தைத் தாண்ட காபி சாப்பிட்ட வயிறு, கபகபவென்று பசியைக் கிளப்ப, கண்ணீரைச் சிந்திக் கொண்டும், துடைத்துக் கொண்டும் போகிறாள். பெண் இப்படி செய்து மானத்தை வாங்கி விட்டதே என்று தாங்க முடியாத சோகத்தில் அழு கிறாள் செண்பகம். பெண்ணைப் பெற்றதற்கு கல்லைப் பெற்றிருக்கலாம். புவனா பின் வழியாக வந்து கேட்டைத் திறப்பதைப் பார்த்தவள், காபி சாப்பிட்டு வயிற்றைக் கிள்ள,

''ஏய் புவனா இங்க வாடி'' ஆத்திரம் மொத்தமும் பெண்ணின் மேல் கொட்டத் தயாராக நிற்க, அம்மா கூப்பிட்டதும் பயந்து நடுங்கி நிற்பவள், ஒரு சொல்

சொன்னால் பிழியப் பிழிய அழுது வீட்டின் ஒரு மூலையில் உட்காருபவள், அம்மாவைக் கூட லட்சியம் செய்யாமல் நடக்கிறாள்.

''ஏய் புவனா... நில்லுடி திமிரா? கூப்பிடறது காதிலே விழலே. வீட்டுலே சேக்க மாட்டேன்.''

செண்பகம் கத்த, கத்த புவனா அவசரம் அவசரமாக நடை போட்டு சித்தம் போக்கு சிவன் போக்கு என்று போய்க் கொண்டிருக்கிறாள்.. 'போதும் வந்த நாளி லிருந்து 'போ... போ' என்று துரத்தி... துரத்தி அப்படி யாவது தான் ஏன் இருக்க வேண்டும்? கடவுளுக்கு தன் உயிர் தேவைப்பட்டால் காப்பாற்றிக் கொள்ளட்டும். இப்படி மானங்கெட்டு கதி கெட்டு வாழவே தேவை இல்லை.'

சற்று வேகமாக நடை போட்டு அந்த ஏரியின் அருகில் வருகிறாள். தலை வேறு சுற்றுகிறது. பசி வயிற்றை இழுத்துப் பிடிக்க, 'என்னை மன்னித்து விடு. நானே ஒரு விரும்பத்தகாத ஆத்மா, இதில் நீயும் ஏன் வருகிறாய்? நீ ஆணோ, பெண்ணோ உன்னை வரவேற்க யாருக்கும் இஷ்டம் இல்லை. நீயாவது பிறக்கு முன் கண்ணை மூடி விடு. இந்தத் துன்பங்களே வேண்டாம். பகை, பழி, பொறாமை, திமிர் இருக்கும் இடம் இது. இங்கு நல்லதிற்கு காலம் இல்லை. என்னைப் போன்ற முட்டாள்களுக்கு இடமுமில்லை.' மனதில் நினைத்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்தவாறே மெதுவாக ஏரியின் கரைக்குப் போகிறாள். ஏரியின் கரையில் அழகான சிவப்பு விரிப்பு போட்டு அதில் அவள் கணவனும் நண்பர்களும் ஏதேதோ சிரித்துப் பேசுவது

தெரிய, ஒரு நிமிடம் அவர்களையே பார்க்கிறாள். தன் கணவன் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறான். 'திருமணம் ஆகி இத்தனை நாட்களில் ஏதேனும் ஒரு நாள் தன்னோடு இத்தனை அக்கறையாய் பேசியிருக்கிறானா? அவள் சமையற்கட்டிலே கிடப்பாள். வேளா வேளைக்கு சாப்பிடுவதோடு சரி, இவள் அறைக்கு வரும்போதே பாதி தூக்கத்தில் இருப்பான். சொல்லவும் முடியாமல் தன் உணர்வுகளை யாரிடம் பகிர்ந்து கொள்வது என்று மோட்டு வளையைப் பார்த்து அழுத நாட்கள் ஏராளம். தான் இறந்து விட்டால் அவனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைத்து விடுவார்கள். உலகத்தில் அபலைகளுக்கா பஞ்சம்.' நினைத்தவாறே சட்டென்று தண்ணீரில் குதித்து விடுகிறாள் புவனா.

21

ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவர்கள் சப்தம் கேட்டவுடனே ஓடி வருகிறார்கள். ''யாரோ ஒரு பிரக்னென்ட் லேடி தூர இருந்து சரியா முகம் தெரியலே. விழுந்துட்டாங்க'' இதற்குள் புவனாவின் கணவனின் நண்பர்கள் தண்ணீரில் குதித்து புவனாவைத் தேடுகின்றனர். காப்பாற்ற முடியுமா என்று யோசிக்க,

''சே... பாவம் என்ன கஷ்டமோ?'' என்றான் ஒருவன்.

''ஒருவேளை கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்லி ஏமாத்திட்டானா?''

இது மற்றொருவன்.

''அவ புருஷன் மட்டும் எங்கைல கிடைக்கணுமாம். அப்புறம் நடக்கறதே வேற. எப்படியும் எட்டு மாசம்

இருக்கணும்னு நினைக்கறேன். இந்த நிலையிலே அவ சாகணும்னு நினைச்சா அது எத்தனை கொடுமை. புவனாவின் கணவனும் இதை ஆமோதிக்கிறான்.

''அந்த பொண்ணைக் காப்பாத்த முடிஞ்சா கட்டாயம் அவ லைஃபை சரி பண்ண நம்மாலான முயற்சியை செய்வோம். அவ புருஷன்கிட்டே போய் பேசுவோம்.''

தண்ணீரில் குதித்த இருவரும் ஒரு வழியாக புவனாவை கரை சேர்க்க, பார்த்த அவள் கணவன் அதிர்ந்து போகிறான்.

''என்னப்பா இவள் உன் வைஃப் இல்லே.''

''ஏண்டா இப்படி? நமக்கு ஆயிரம் கஷ்டம் இருந்தாலும் வீட்டுக்கு வந்தவங்களை நல்லா வச்சுக்க வேண்டாமா?''

''சரி அப்புறம் பேசலாம். இவுங்களை முதல்லே ஆஸ்பிடலுக்கு கூப்பிட்டுகிட்டு போவோம்.'' புவனாவை எமர்ஜென்ஸி வார்டில் சேர்த்துவிட்டு எல்லோரும் வெளியே நிற்க, நண்பர்கள் பழையபடி ஆரம்பிக்கிறார்கள்.

''என்னடா இதெல்லாம்? யாரோன்னு நினைச்சுகிட்டு பேசிகிட்டு இருந்தோம். கடைசியிலே உன் வீட்டுலேயா இப்படி நடந்திருக்கு? ஏண்டா உன்னை நம்பி வந்தவங்ககிட்டே இப்படியா நடந்துப்பே. ஊருக்கெல்லாம் கேக்குமுன்னே உதவி செய்யறே? உம் பொண்டாட்டி என்ன பாவம் பண்ணா? சாகிற அளவுக்கு விட்டுட்டியே.''

''ஒரு வேளை. உங்கம்மா ஏதாவது பிரச்சனை பண்ணிட்டாங்களா? இதப் பாருப்பா. அம்மா முக்கியம்தான். ஆனா பொண்டாட்டியும் பாவம்தான். திக்கற்று நீதான் துணைன்னு வந்தவகிட்டே இப்படியா நடக்கறது?''

''சே! வாயிலே வந்தபடி பேசாதீங்க. அவ எங்க வீட்டுலே இப்ப இல்லே. பிரசவத்துக்கு அவுங்க அம்மா வீட்டிற்குப் போயிருக்கா. அங்கே என்ன பிரச்சனைன்னு தெரியலை.''

''யாரு அந்த நடேச முதலி தெருவிலே இருக்கற அந்த கார்னர் வீடுதானே. ஐயோ அந்த ஆளு நூறு மாமியாருக்கு சமம். பாவம் இன்னிக்கு கூட காலைலே ஒரே அமர்க்களம். எப்பவுமே அந்த ஆளு பொண்ணுங்களையும், பொண்டாட்டியும் வெளியே தள்ளி கதவைச் சாத்திடுவான்.''

''அங்க தான் ஏதோ பிரச்னை இருந்திருக்கணும்'' புவனாவின் கணவன் யோசனையில் ஆழ, ஆயிரம் ''பிரச்சனை இருக்கட்டுமே. கல்யாணம் ஆயிட்டாலே பொண்ணுங்களுக்கு தன் புருஷன்ங்கற உணர்வு வந்திடும். நீ அங்க போகும்போது அவுங்க சொல்லலையா?''

''இல்லை...'' என்று தயங்கியவன், ''நான் அங்கே போகவே இல்லை.''

எல்லாரிடமும் ஒரு கனத்த மௌனம் எழுந்தது.

''பாவம்பா சிஸ்டர்... எப்ப வந்தாலும் காபி, டிபன் கொடுத்து உபசரிக்கும். ஆனா நான் ஒண்ணு சொல்றேன்னு தப்பா நினைக்காதே. பாவம் அவுங்க. இனிமேலாவது அவுங்களை நல்லா கவனிச்சுக்க.''

''இதே வேறொருத்தர் இந்த தப்பை செய்திருந்தா நாம விட்டிருப்போமா?''

என்னதான் சகஜமா பேச முயன்றாலும் புவனாவின் கணவனுக்கு எரிச்சல் வந்தது. அவள் சாகத் துணிந்து விட்டாள் என்று தெரிந்தபோது மனது உண்மையிலேயே அதிர்ந்தது. இருந்தாலும் எல்லார் எதிரேயும் தன்னைக் குற்றவாளியாக்கியது மனதைக் கடிந்தது.

ஒரு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு புவனா சற்று கண் விழிக்க, பிரசவ வலி வந்து குறைப் பிரசவம் ஆனது. அழகான எட்டு மாத ஆண் குழந்தை இறந்தே பிறந்தது. எல்லாம் முடிந்து அவளை வார்டுக்கு கொண்டு வந்து விட்டபோது புவனா தலையணையில் முகத்தைத் திருப்பியவாறே அழுது கொண்டுதான் இருந்தாள். 'தன்னை யார் காப்பாற்றினார்கள்? ஏன்? இன்னும் அனுபவிக்க வேண்டிய துன்பங்கள் பாக்கி உள்ளதா என்ன?'

சிறிது நேரத்திற்குப் பின் தன் தலையை யாரோ தொடுவது போல் உணர, திடுக்கிட்டு திரும்புகிறாள்.

''என்ன இதெல்லாம்? ஏன் இப்படி பண்ணே?'' புவனாவின் கணவன் கேட்க,

மறுபடியும் புவனாவின் கண்களில் இருந்து கணணீர்.

''என்னாச்சும்மா? என்னை விட்டுட்டு செத்துப் போற அளவுக்கு என்னாச்சு? நீ பண்ண இந்த காரியத்துனாலே குழந்தை போயிடுச்சு தெரியுமா?''

புவனா பதில் பேசாமல் அழுகிறாள். ''சொல்லு புவனா. ஏன் இப்படி பண்ணே?''

"எனக்கு யாருமில்லேங்க. நானே அனாதை. எனக்கு எதுக்கு குழந்தை?"

"என்னம்மா உளர்றே? நான் இல்லே."

"நீங்களா? இருக்கீங்க. ஆனா என் புருஷன்? எனக்கு கஷ்டம் வந்தா அவர் மடியிலே தலையை வச்சுகிட்டு கஷ்டத்தைச் சொல்லணும். சந்தோஷம்னு வந்தா புருஷனை கட்டிகிட்டு ஆனந்தக் கூத்தாடணும். இது ரெண்டும் என்னிக்காவது என் வாழ்க்கையிலே நடந்திருக்கா? இல்லேங்க. நடந்ததில்லே. ஏன்னா நான் மனுஷியிலே சேர்த்தி கிடையாது. மிருகத்தை விடவும் கேவலமானவ."

"நீயே ஏதோ கற்பனை பண்ணிக்கறே? நான் அந்த மாதிரி உன்னை நினைச்சதே இல்லை."

"இல்லீங்க. உங்ககிட்டே எதையும் நான் ஷேர் பண்ணிகிட்டதில்லே. நான் வரும்போதே பாதி நாள் தூங்கிகிட்டு இருப்பீங்க. ஒரு நாளாவது இத்தனை ராத்திரி வரைக்கும் என்ன வேலைன்னு கேட்டிருக்கீங்களா? இல்லை. களைச்சுப் போய் வர என்கிட்டே என்ன பிரச்சனை, ஏதாவது சாப்பிட்டியா? அப்படின்னு ஆதரவா நாலு வார்த்தை பேசியிருக்கீங்களா? நாள் மொத்தமும் வேலை செய்யறியே ஒரு ஞாயிற்றுக் கிழமையாவது வா வெளியே போயிட்டு வரலாம்னு கூப்பிட்டிருக்கீங்களா? உங்க வீட்டு நாயைக்கூட தினமும் வாக்கிங் கூப்பிட்டுப் போறீங்க. ஆனா என் நிலைமை? வேண்டாம்ங்க. ஏன் என்னை காப்பாத்தினீங்க. பிள்ளை போயிடுச்சு. நானும் போயிடறேன். எனக்கு இங்கிருக்க வேண்டாம்."

சட்டென்று அவள் கைகளை தன்னில் எடுத்துக் கொண்டவன் தலையை தடவிக் கொடுக்கிறான். கண்களில் நீர் சொட்ட "உன்னை எம் மனசுலே இங்கே வச்சிருக்கேன். எல்லாத்தையும் சமாளிக்கக் கூடிய நீன்னு நினைச்சுகிட்டு இருக்கேன். உனக்குள்ளே இத்தனை வேதனை இருக்கும்னு எனக்குத் தெரியாது. இந்த ஒரு சந்தர்ப்பத்தைக் கொடு. உன் தோழனா, கணவனா, உன் சுமையை தாங்கும் சுமை தாங்கியா இருக்க ஒரு சந்தர்ப்பம். ப்ளீஸ். செத்துப் போவேன்னு தயவு செய்து சொல்லாதே. இப்ப சொன்னதை அப்ப சொல்லியிருக்கலாமே. என் குழந்தை பிழைச்சிருக்குமே."

புவனா இதை சற்றும் எதிர்பார்க்கவில்லைதான். கணவன் வள்ளென்று விழுவான். இன்னும் மிரட்டுவான். என்றெல்லாம் எதிர்பார்த்தவளுக்கு எப்பேற்பட்ட திருப்பம். நம்ப முடியாமல் கணவனைப் பார்க்கிறாள். தட்டுங்கள் திறக்கப்படும் என்று இதைத்தான் சொன்னார்கள். மனதில் இருப்பதை ஒவ்வொருவரும் சொல்லத்தான் வேண்டும். அப்போதுதான் விடியலுக்கு வழி.

தன் வாழ்க்கை மலர்ந்து விட்டதா. அஸ்தமனத்தில் ஒரு விடியல் வந்து விட்டதா என்ன?

அன்று டிஸ்சார்ஜ் செய்ததுமே அவளை அழைத்துக் கொண்டு நண்பனின் பங்களாவிற்கு அழைத்துச் சென்று விட்டான். நான்கு வேளை சாப்பாடு, கணவனின் ஆறுதலான மொழிகள், கணவனின் நண்பர்களின் உபசரிப்பு ஒரு பத்து நாட்களில் சற்று ஊதித்தான் போனாள் புவனா.

புவனாவின் கணவன் முதலில் இவள் செய்த காரியத்தை எண்ணி எரிச்சலுற்றான். நண்பர்கள் இல்லை யென்றால் இவளை விட்டிருந்தாலும் விட்டிருப்பான். கண்ணுக்கெதிரே தனது குழந்தையைப் பறி கொடுத்த அவலம். தன் பெண்டாட்டியின் செயலுக்கு தானும் ஒரு காரணம் என்று சொன்னதால் மனம் சிந்தனை வயப் பட்டது. சாதாரணமாக மாமியார் வீட்டில் தான் கவனிக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. வீட்டவர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்று நினைத்துக் கொண் டிருந்தான். ஆனால் இந்தப் பெண் இத்தனை மனம் உடைந்து போவாள். இத்தனை வேதனைப்படுவாள் என்று நினைக்கக் கூட இல்லை.

சரி தன் வீட்டில் தான் இப்படி என்றால், அவங்க வீட்டிலேயாவது சந்தோஷமா இருந்திருக்கக் கூடாதா? அப்பா சரியில்லைன்னா அம்மா கூடவா மோசமா இருப்பாங்க. அவுங்க ஒண்ணும் தடுக்கலையா என்ன? சாகும் அளவிற்கு மனம் உடைந்து போனால் அவள் பிறந்த வீட்டில் என்ன சூழ்நிலையோ. மனம் வேதனைப் பட்டது. சரி இனிமேல் எக்காரணம் கொண்டும் மனைவியை பிறந்த வீட்டுக்கு அனுப்பவே கூடாது என்று முடிவு செய்து கொண்டான்.

இங்கே துரைசாமி தன் மூன்றாவது பெண்ணின் கல்யாண மும்முரத்தில் இருந்தார். நாளன்னிக்குத் திருமணம். ஏற்பாடுகள் முடிந்து விட்டன. நெருங்கிய உறவினர்கள், நண்பர்களைக் கூப்பிட வேண்டும். ஏகாம்பரத்தின் வீட்டிற்கு வந்தனர், துரைசாமியும் அவர் மனைவியும். அவர்கள் போனபோது செண்பகம் வாசலில் தான் அமர்ந்திருந்தாள். இன்னும் உள்ளே

செல்லவில்லை. அழுது அழுது அப்படியே உறங்கிப் போயிருந்தாள். பெண் ஓடிப் போனது கூட பெரியதாகத் தோன்றவில்லை. தன் அண்ணனுக்கு என்ன பதில் சொல்வது. எரிந்துபோன பட்டுப் புடவைக்கு என்ன தருவது என்ற உணர்வு மட்டும் இருந்தது. நகை வேறு ஒன்றிரண்டை எரித்து விட்டிருக்கிறாள். எத்தனை செலவு செய்து நிச்சயம் செய்தான். பணத்தைக் கீழே வை என்று கேட்டால் என்ன செய்வது?

''என்னங்க எப்படி இருக்கீங்க?'' பார்வதம் கேட்டபோது,

சிறிதுகூட சந்தோஷம் இல்லாமல் ''வாங்க'' என்று கூறுகிறாள் செண்பகம்.

அதற்குள் துரைசாமி கதவைத் தட்ட ஏகாம்பரம் கதவைத் திறக்கிறார்.

நாளைய மறுநாள் திருமணம் என்றும் கட்டாயம் வரவேண்டும் என்றும் ஞாபகப்படுத்த, ஏகாம்பரம் தலையை ஆட்டுகிறார்.

''வந்து நல்லபடியா நடத்தித் தரணும்'' பார்வதம் கூப்பிட,

''என்ன பெரிய நல்லது? என்ன பெரிய கொண் டாட்டம்?'' என்கிறாள் செண்பகம்.

''என்னம்மா விரக்தியா பேசறீங்க?'' கேட்டதும்தான் தாமதம் எல்லாவற்றையும் கொட்டி விட்டாள். கல் யாணம் நிச்சயமாயிட்டு இப்பப் புடவையை எரிச்சுட்டு நகையை நெருப்பிலே போட்டுட்டு ஓடிட்டா'' சொல்லி அழுகிறாள்.

"என்னது கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சா? எங்களுக்கெல்லாம் சொல்லவே இல்லையே" பார்வதம் ஆச்சரியமாய்க் கேட்க.

"எதுக்குமே நேரமில்லீங்க. எங்க அண்ணன் வந்தாரு. பாத்தாரு உடனே நிச்சயம் பண்ணிட்டாரு. சத்திரம் கிடைக்கவே இல்லீங்க. இங்கே பக்கத்திலே இருக்கற சத்திரம் அதுலேதான் நடந்தது. ஆனா இந்த பாவிப் பொண்ணு சொல்லாம ஏமாத்திடுச்சே. மாப்பிள்ளை பக்கத்துலே உட்கார்ந்து போட்டோ சிரிச்சுகிட்டு எடுத்துக்கிடுச்சு. எத்தனை போட்டோ எடுத்துகிச்சு. இப்ப அவன் வேண்டாமாம்?"

"யாரும்மா இப்படிச் செய்தது. கௌரியா அவ மேலே படிக்கப் போறேன்னு சொல்லிகிட்டு இருந்தாளே, அவளா இப்படிச் செய்தா?"

"அட நீங்க வேற. அந்த ஓடுகாலிதான் வீட்டை விட்டே போயிடுச்சே. என் மூணாவது பெண் விஜிக்குதான் நிச்சயதார்த்தம்."

"என்னம்மா இது. அது இன்னும் சின்ன குழந்தை இல்லே. இப்பதானம்மா பர்ஸ்ட் இயர்."

"அதைப் பாத்தா முடியுமாங்க. நல்ல வரன் வந்தது முடிச்சிட்டோம்."

சோகத்தில் இருப்பவளிடம் என்ன தேறுதல் சொல்வது?" ரொம்ப சாரி" என்ற பார்வதம், "வர்றேங்க" என்றபடி கணவனை அழைத்துக் கொண்டு கிளம்பிச் செல்ல.

சட்டென்று புவனாவின் ஞாபகம் வந்தவளாய் "அந்தக் குழந்தையைப் பார்த்துக் கூப்பிட்டுடுவோம்.

நீங்க போய் சொல்லிட்டு வந்திடுங்க" என்கிறாள் கணவனிடம்.

துரைசாமி மறுபடியும் திரும்புகிறார். "புவனா... புவனா..."

"அவ பெயரை ஏன் ஜபிக்கறே?" என்கிறார் ஏகாம்பரம்.

"என்னப்பா சொல்றே?"

"அவளை வீட்டை விட்டு அனுப்பிச்சாச்சு."

"என்ன சொல்றே?"

"சின்னவ வீட்டை விட்டுப் போக இவளும் ஒரு காரணம்னு சொல்றேன்."

"என்ன ஏகாம்பரம். நீ மாறவே மாட்டியா?"

"ஆமா உம் பொண்ணுங்க போல இருந்தா எப்படி வேணா இருக்கலாம். அதது நீ பாத்த மாப்பிள்ளையை கட்டிக்கிடுச்சு. உம்பொண்ணுங்க எதிர்க்குரல் எடுத்து நான் பார்த்ததே இல்லை. இதோ இவளும் பெத்து வச்சிருக்காளே. மூணும் மூணு ரகம்."

"என்னம்மா தங்கச்சி இதெல்லாம்? குழந்தை பிறக்குமுன் வீட்டை விட்டு தொரத்துவாங்களா?"

"எனக்கு என்ன தெரியும் அண்ணாச்சி. இன்னிக்குக் காலைல முறைச்சுக்கிட்டு வீட்டை விட்டுப் போனா? எனக்கு என்ன தெரியும்? கூப்பிடக் கூப்பிட நிக்கலை."

துரைசாமி பெருமூச்சு விட்டார். 'எதுவும் மாறாது. இவர்கள் வீட்டில் எதுவுமே மாற்றம் பெறாது. அவள் கணவனிடம் சொல்லி அந்தப் பெண்ணுக்கு ஒரு விடியலை ஏற்படுத்தியே ஆக வேண்டும்.' நினைத்துக் கொண்டார் துரைசாமி.

''என்ன பர்வதம் பேசாம வர்றே?''

''என்ன பேசறது? உங்க ப்ரண்டு வீட்டுக்கு ஏன் போறோம்னு ஆயிடுது. ஏற்கனவே எந்த சொந்தக்காரங் களும் வீட்டுப் பக்கம் வரதில்லைன்னாங்க. இந்த காலத் துலே ஒண்ணுவிட்ட பெரியப்பா, சித்தப்பா சொந்தம் எல்லாம்கூட நின்னு போச்சு இல்லேன்னு சொல்லலை. தாய், தந்தை, பெத்த பசங்கன்னு இருக்கற சொந்தம் ஏதோ இருக்குன்னு பார்த்தா இங்க அது கூட இல்லையா? உங்க ப்ரண்ட் லூஸா? காரணம் இல்லாம தன் வயிற்றில் பிறந்த குழந்தைகளை யாராவது திட்டி கிட்டே இருப்பாங்களா? எதுவுமே நல்லா இல்லேங்க.''

''ஆமா கௌரி நம்ப வீட்டுலேதான் இருக்கா? நீ ஏன் கௌரிக்கா நிச்சயம்னு கேட்டே?''

''நீங்க வேற பொண்ணே இல்லாம கூட அந்தம்மா செய்யற டைப் தான். சே, சே ரொம்ப கேவலம். புருஷன் தான் அப்படின்னா பொண்டாட்டியுமா அப்படி இருக்கணும்? அந்தப் பிள்ளைகளை நினைச்சா தான் ரொம்ப வேதனா இருக்கு.''

வீட்டிற்கு வந்தபோது கௌரி இரவு சமையல், மாலை டிபன் என்று எல்லாவற்றையும் முடித்து சுத்தமாக வைத்திருந்தாள்.

''ஏம்மா நீ எல்லாத்தையும் செய்த? நான் வந்து செய்ய மாட்டேனா?''

''என்னம்மா நீங்க! சும்மா உக்கார்றதுக்கு இந்த வேலை செய்யக் கூடாதா? கல்யாண வேலையா நீங்க அலைஞ்சுகிட்டு இருக்கீங்க. நான் செய்தா என்னவாம்.''

கௌரியின் முகத்தில் ஒரு புன்னகை வந்து ஒட்டிக் கொள்ள,

''என்ன இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கா போலருக்கு.'' பர்வதம் கேட்க,

''பாருங்க...'' என்றபடி ஒரு கவரை நீட்டுகிறாள். இது ஏற்கனவே இந்துவைப் பார்த்து விண்ணப்பித்தது. நாளைக்கு இன்டர்வியூவிற்கு கூப்பிட்டிருக்காங்க.'' முகம் முழுவதும் புதுப் பொலிவு.

''எந்த கம்பெனிம்மா?''

கௌரி கம்பெனியின் பெயரைச் சொல்ல, ''அட நம்ப அருண் வேலை செய்யற கம்பெனிக்குப் பக்கத்துலே தாம்'' துரைசாமி கூற, கௌரி மௌனமாகிறாள்.

'இந்த வேலை கிடைத்து விட்டால் போதும். எல்லா கஷ்டமும் விலகிவிடும். தான் ஏதாவது பெண்கள் விடுதியில் தங்கிக் கொண்டால் போதும். எப்படியும் மேற்படிப்பு கிடைத்து, போனாலும் பார்ட் டைம் வேலைக்கு முயற்சி செய்து போய் விட்டால் தான் நினைத்தது போல் எதிர்காலம். கால் சென்டருக்குப் போகலாம் என்றால் தங்கள் ஆங்கில உச்சரிப்பு அத்தனை நன்றாக இருக்காது. தாங்கள் எல்லாவற்றை யும் தாய்மொழியில் படித்தவர்கள். பார்ப்போம்.'

அடுத்த நாள் விடியற்காலையில் எழுந்து வீட்டு வேலை களைப் பர்வதம் வேண்டாம் வேண்டாம் என்று மறுத்தும் செய்துவிட்டு, இன்டர்வியூவிற்கு கிளம்புகிறாள். துரைசாமி - பர்வதத்தின் காலில் விழுந்து விட்டு கிளம்புகிறாள். இது மட்டும்தான் முன் அனுபவம் கேட்கவில்லை. சற்று பெருமிதமாக, கனவுகளில் மிதந்தவாறே அவள் கம் பெனிக்கு எதிரில் இருக்கும் பஸ் ஸ்டாண்டில் இறங்கி, தெருவைக் கடந்து கம்பெனிக்குச் செல்ல அதே நேரத் தில் மோட்டார் பைக்கில் தன் கம்பெனிக்குச் சென்ற, அருண் கௌரியைப் பார்த்தவன் அதிர்ந்து போகிறான்.

'இவள் எங்கே இங்கே போகிறாள்? ஏற்கனவே இந்த கம்பெனியைப் பற்றி நல்ல பெயர் இல்லை.' அரசல் புரசலாக ஏதோ காதில் கேள்விப் பட்டிருக்கிறான். எத்தனையோ பெண்கள் இங்கே வந்து ஏமாந்ததாகக் கேள்விப் பட்டிருக்கிறான். இந்த இடத்தில் கௌரிக்கு என்ன வேலை? சட்டென்று துரைசாமியை செல்லில் தொடர்பு கொள்கிறான்.

''இல்லேப்பா ஏதோ இன்டர்வியூ வந்திருக்கு. அதுக்குதான் கௌரி போயிருக்கா'' தலையை பிடித்துக் கொண்டான் அருண்.

''ஷிட்.. என்கிட்டே ஒரு வார்த்தை கேட்டிருக்கக் கூடாது.'' முனகியவன், வண்டியை அலுவலகத்தில் நிறுத்தி விட்டு மேலே ஏறி தன் அலுவலகத்திற்கு செல்கிறான். சிறிது நேரம் அங்கே இருந்தவன், பின் இருப்பு கொள்ளாமல் தவிக்கிறான்.

அருண் தவிக்க, கௌரி பெருமிதத்தோடு, தன் அலுவலகத்திற்குப் போகிறாள். இந்த வேலை மட்டும் கிடைத்தால் தன் வாழ்க்கைப் பாதையே மாறிவிடும்.

இந்த வேலை கிடைக்குமா? கடவுளே உதவி செய்.

சம்பளம் ஆறாயிரம் என்று போட்டிருக்கிறார்கள். கிடைத்தால் அதிர்ஷ்டம்தான். ஏறக்குறைய ஒரு இருபதுக்கும் மேற்பட்ட பெண்கள் அமர்ந்திருந்தனர். கௌரி துடிக்கும் மனதுடன் அமர்ந்திருந்தாள். வரிசை வரிசையாக்கப்பட்டதில் அவள் பத்தொன்பதாவது எண். இப்போதுதான் பத்து பேர் உள்ளே போயிருக்கின்றனர் எல்லோருமே மிகுந்த நாகரீகமாக உடை உடுத்து அதிநாகரீகத்துடன் காணப் பெற்றனர். யாராவது ஒருவர்

வந்தாலும் என்ன கேட்டார்கள் என்று தெரிந்து கொள்ளலாம் என்றால் இன்னும் ஒருவர் கூட வரவில்லை. என்ன கேள்வி கேட்பார்கள்.

சற்று துடிப்புடன் அமர்ந்திருந்தாள். மெயின் ஹாலில் உட்கார்ந்திருந்தவர்களை கடைசி ஒன்பது பேரை இன்னொரு சிறிய அறையில் அமரச் செய்யத் துடிக்கும் மனதுடன் அமர்ந்திருக்கிறாள் கௌரி.

இன்னும் நான்கு பேரை மட்டும் உள்ளே அனுப்ப கௌரி வெளியே காத்திருக்கிறாள். கடைசியாக இவர் களையும் இன்னொரு சிறிய அறையில் அமர வைத் தனர். எப்பதான் உள்ளே அனுப்புவார்களோ. இதென்ன சரியான முட்டாள் தனமா இருக்கு. பதினைந்து இடத்திலே மாத்தி, மாத்தியா அனுப்புவாங்க. கடைசி ஐவர் அந்த அறையில் அமர்ந்திருந்தபோது சட்டென்று ஜன்னல் ஒன்று திறந்து அதில் முதன் முதலாக போன பெண் முகத்தைக் காட்டுகிறாள். ஆடையில்லாமல் அவள் நிற்பது தெரிகிறது. ''போயிடுங்க தப்பிச்சுப் போயிடுங்க'' அழுது கொண்டே பெண் சொல்ல, பின் டக்கென்று ஜன்னல் மூடப்பட, கடைசி ஐந்து பேரும் திகில் அடைந்து உட்கார்ந்திருந்தனர்.

மெதுவாக எழுந்தவர்கள் வந்த வழியே இருந்த கதவை திறக்க முயன்றார்கள். முடியவில்லை. பயம், வெட்கம், அவமானம், அதிர்ச்சியோடு இவர்கள் ஐவரும் கதவைத் தட்ட கதவு திறக்கப்படவே இல்லை. அந்தச் சிறிய அறையில் இன்னொரு பக்கம் இருந்த ஜன்னல் வழியாக கத்துகிறாள் கௌரி. கூடவே அந்த நான்கு பேரும் 'ஹெல்ப் ஹெல்ப்' என்று கத்த, செய்வதறியாது இந்த கட்டிடத்தையே பார்த்துக் கொண்டிருந்த அருண்,

கௌரியைப் பார்த்து விட்டு தன் அலுவலக சகாக்கள் கொஞ்சம் பேரை அழைத்துக் கொண்டு ஓடி வருகிறான்.

ஒரு சில மணி நேரங்களில் அனைவரையும் விடுவித்து, முதலில் போன ஐந்து பெண்கள் 'செக் அப்' என்ற பெயரில் துணியை அவிழ்த்துவிட்டு போட்டோ எடுத்ததாக அழுது கொண்டே கூற காவல் துறையை வரவழைத்து ஆவன செய்து, ஒரு மணி நேரம் பர்மிஷன் போட்டுவிட்டு மறுபடியும் கௌரியை துரைசாமியின் வீட்டில் விட்டு நகர, கௌரி இன்னும் பயத்தின் உச்சியில் இருந்தாள். இன்டர்வியூ என்று கூப்பிட்டு இப்படிக் கூடவா செய்வார்கள். ஏமாற்றம், வருத்தம், நல்லவேளை தன் எண் கடைசியில் இருந்ததால் தப்பித்த மகிழ்ச்சி. அருணிடம் என்ன சொல்வதென்று தவிப்பு. தான் எத்தனை உதாசீனப்படுத்தியும் தன்னிடம் எத்தனை அக்கறை? அவன் மட்டும் இல்லாமல் இருந்தால் தன் கதி.

''முட்டாள் இன்னொரு முறை போகும் போது என்னிடம் சொல்லிட்டுப் போ. கண்டதுலே போய் மாட்டிக்காதே'' என்றவாறு அருண் கிளம்பிப் போக, துரைசாமியும், பர்வதமும் மலைத்துப் போயினர்.

''வேண்டாம்மா நீ வேலைக்குப் போக வேண்டாம். ஒண்ணும் வேண்டாம். இந்த மாதிரி வம்புலே போய் மாட்ட வேண்டாம். ஒழுங்கா மேல் படிப்புக்கு இடம் கிடைச்சதும் ஸ்காலர்ஷிப்லே படிக்க ஆரம்பி, போதும். எங்களோடயே இருந்துடு. என் மூணாவது பொண்ணு போயிட்டா அப்புறம் இங்க யார் இருக்காங்க சொல்.''

ஆனால் எதையுமே மனிதன் முடிவு செய்வதில்லை. நாம ஒன்று நினைக்கு முன் தெய்வம் வேறொன்றை செயல்படுத்தி விடுகிறது. அடுத்த ஒரு வாரத்தில்

துரைசாமியும், பர்வதமும் கல்யாண வேலைகளில் ஈடுபட கௌரியும் எல்லாவற்றையும் மறந்து விட்டு அவர்களுக்கு உதவி புரிந்து கொண்டிருக்கிறாள்.

அன்று திருமணத்திற்காக என்று சில மளிகைச் சாமான்களை இரண்டு தெரு தள்ளி இருக்கும் கடையில் வாங்கிக் கொண்டு திரும்புகையில் இன்டர்வியூவில் பார்த்த தலைவன் போல் ஒருவன் நின்று கொண்டிருப் பதைப் பார்க்கிறாள். 'அடப்பாவி இவன் எப்படி வெளியே வந்தான். உள்ளே இருக்கான்னு நினைச் சேனே..' மனதிற்குள் சொல்லியபடி இவள் நகர்ந்தபோது அவன் பார்த்து விட்டது தெரிந்தது.

அடித்து பிடித்தபடி ஓடி வருகிறான். இந்த நேரத்தில் துரைசாமியின் வீட்டிற்கும் போகக்கூட பயமாக இருக்க, இரண்டாவது யாருமில்லாத வேளை தெரிந்து தன்னிடம் வம்பு செய்தால், இப்போதுதான் திருமண வேலையில் மும்முரமாக இருக்கும் துரைசாமி, பர்வதத்தை தன் பிரச்சனையால் வருத்தப்பட வைக்க மனமில்லாத நிலையில் சட்டென்று அருகில் இருந்த ஆட்டோவைப் பிடித்து அருண் இருந்த ஆபீசுக்கு வந்து இறங்குகை யில், மோட்டார் பைக்கில் பின்னால் தொடர்ந்தவன் யோசனையோடு நிற்பது புரிந்தது.

வெட்கம், தயக்கம், பயம் எல்லாவற்றையும் விட்டு விட்டு அருணிடம் போகிறாள். விஷயத்தை சொல்ல அவன் முகம் சிவக்கிறது.

அருண் வெளியே வர, பைக்கில் வந்தவன் பைக்கை கிளப்பியபடி போய் மறைகிறான்.

''சரி இங்கே கீழே ஹால்லே உக்காந்துட்டு இரு. லஞ்ச் அவர்லே கொண்டு போய் உன்னை வீட்டுலே விட்டுடறேன்'' அவன் சொல்லிவிட்டு மறைய கௌரி

யோசிக்கத் தொடங்குகிறாள். யோசிக்க, யோசிக்க தான் நினைப்பதைச் செய்தால்தான் தனக்கு விடி மோட்சம் என்று தோன்ற, அவன் வரும் வழியை ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

மதிய இடைவேளையில் அவன் வந்தபோது ''சீக்கிரம் வா. கொஞ்ச நாளைக்கு வெளியே வராதே. இவங்க எல்லாம் மேலிடத்து செல்வாக்கோட இருக்கறவங்க. நீ இருக்கற இடம் தெரிஞ்சுதுன்னா கூட இந்த பக்கம்தான் அலைஞ்சுகிட்டு இருப்பாங்க ஜாக்கிரதை. உன்னால துரைசாமி அங்கிள் குடும்பத்துக்கும் பிரச்சினை வந்துடப் போறது. பத்திரம். கல்யாணத்தை வேற வச்சுக்கிட்டு இருக்காங்க ஜாக்கிரதை. எல்லாம் அடங்கற வரைக்கும் வெளியே வராதே.''

''உங்களோட பேசணும்.''

''என்ன?''

''இன்னிக்கு ஹாப் எ டே லீவு போட்டுட்டு வரமுடியுமா?''

''எதுக்கு?''

''ப்ளீஸ்.''

ஒரு நிமிடம் அவளையே விநோதமாகப் பார்த்தவன், ''முதல்ல நான் சாப்பிடணும். பசி கொல்லுது. காலை சாப்பிட்டது'' என்கிறான்.

''எனக்கும்தான்...'' அவள் மிக மெதுவாகச் சொல்ல,

''என்னது இன்னும் சாப்பிடலையா? அறிவிருக்கா உனக்கு? எதுக்கு பட்டினி கிடக்கறே? வா முதல்லே ஹோட்டலுக்குப் போவோம்.''

ஹோட்டலில் சாப்பிட மெனுவைக் கொடுத்துவிட்டு சற்று சில்லென்ற நீரைப் பருகியவன், அவளைத் தீர்க்கமாகப் பார்த்தவாறே கேட்கிறான்.

''சொல்லு... என்னமோ சொல்லணும்னே.''

''வந்து நாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாமா?'' தயங்கி தயங்கித்தான் கேட்கிறாள். கண்கள் அவனை நேரில் சந்திக்காத வண்ணம் தரையை நோக்கி தாழ்ந்திருக்க,

ஒரு நிமிடம் அவளையே தீர்க்கமாகப் பார்க்கிறான்.

''முடியவே முடியாதுன்னே. இப்ப மாத்திக்க வேண்டிய அவசியம் என்ன?''

''என்னுடைய அனுபவங்கள், தவிரவும் ஒரு நல்ல துணையோட உதவியால் இமயத்தையும் வசப்படுத்த முடியும்னு தோணுது.''

தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்களில் ஒரு இளக்கம். ''ஓ.கே. எப்ப கல்யாணம் பண்ணிக்கலாம்?''

''இப்பவே. ரிஜிஸ்டர் ஆபீசுக்குப் போய்...''

சட்டென்று சிரித்து விடுகிறான். ''இது என்ன சினிமான்னு நினைச்சுகிட்டியா. இதையும் முதல்லயே சொல்லணும். டாக்குயுமெண்ட்ஸ் ரெடி பண்ணி காபி கொடுக்கணும். உன்னுடைய சர்டிபிகேட் இந்த பர்ஸன் நீதாங்கறதுக்கு அத்தாட்சி எல்லாம் வேணும். இன்னிக்கு எல்லாமே கொடுத்துட்டோம்னா நாளைக்கு காலை ரிஜிஸ்டர் பண்ணிக்கலாம். ஆனா சனிக்கிழமை இருக்கான்னு தெரியலை.''

''இன்னிக்கு பண்ணிக்க முடியாதா? தை வெள்ளிக் கிழமையா இருக்கு.'' லேசாக அவள் கூற ''இரு

எனக்குத் தெரிஞ்சவர் பக்கத்து முருகன் கோவில்லே இருக்கார் கேட்டுப்போம்.''

அடுத்த அரை மணி நேரத்திற்குள் இருவரும் சாப்பாட்டுக் கடையை முடித்துக் கொண்டு கோவிலுக்குச் சென்று கேட்க, அன்று மதியம் மூன்று மணிக்கு மேல் திருமணம் புரிந்து கொள்ளலாம் என்று அவர் ஒப்புதல் அளித்துவிட, கௌரியையும் அழைத்துக் கொண்டு நகைக் கடையில் ஒரு தாலியை வாங்கிக் கொண்டவன், பூக்கடையில் இரண்டு மாலைகளை வாங்கிக் கொண்டு கோவிலை அடைந்தபோது மணி மூன்றைத் தாண்டியது.

தன் அலுவலக நண்பர்கள் சிலரை வைத்துக் கொண்டு கௌரியின் கழுத்தில் மூன்று முடிச்சுகள் போட்டான் அருண். அவளின் கால்களில் புதிய மெட்டிகளைப் போட்டான். கௌரியை நண்பன் ஒருவன் வீட்டில் விட்டவன் சாமான்களை எடுத்துப் போய் துரைசாமியின் வீட்டில் கொடுத்தான்.

துரைசாமியிடம் விஷயத்தைச் சொன்னபோது பதறித் தான் போய் விட்டார். ''என்னப்பா இது அநியாயமா இருக்கு.''

''அங்கிள் நடைமுறை வாழ்க்கை இதுதான்.''

''இப்ப நானே கொஞ்சம் ஜாக்கிரதையாதான் இருக்கணும்'' என்றவன்.

''சரி அங்கிள் நாளைக்கு ரிஜிஸ்டர் ஆபீசுக்கு வந்துடுங்க.'' இடத்தை சொல்லிவிட்டு நகருகிறான். பின் தன் வீட்டிற்குச் சென்று தாய், தந்தை அண்ணன், அண்ணி எல்லோரிடமும் பேசிவிட்டு வர,

''எதுக்கு ரிஜிஸ்டர் மேரேஜ் எல்லாம், அடுத்த முகூர்த்தத் துலே உங்களுக்கு கல்யாணமே பண்ணி வச்சிடலாமே.''

''இல்லை அண்ணி. இது ரொம்ப முக்கியம். பிறகு பெரியவங்க சொல்படி எப்ப கல்யாணம் சொல்றாங்களோ அப்ப பண்ணிகிட்டா போகுது.''

அடுத்த திங்கள் அன்று அவனுடைய சுற்றம், துரைசாமி, அவர் மனைவி முன்னிலையில் ரிஜிஸ்டர் திருமணம் நடந்தது.

ஏறக்குறைய இருபது நாட்கள் கழித்து இவர்களின் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. முறைப்படி திருமணம் ஆகாமல் அருணுடன் மனைவியாக வாழ அவர்கள் வீட்டில் அனுமதிக்காததால் அவர்கள் வீட்டோடு இருந்தும், மாமியார் அருகில் படுத்தும் காலத்தை கழித்தாள் கௌரி. வீட்டு வேலைகள் மொத்தத்தையும் மாய்ந்து மாய்ந்து செய்கிறாள்.. கை வேலையைக் கூட பிடுங்கி பிடுங்கி செய்கிறாள். அண்ணி, அண்ணி என்று சுற்றி வந்து மாமியாருக்கு பணிவிடை செய்வது போல் செய்ய, அண்ணிக்கும் செய்ய மீனா நெகிழ்ந்து போகிறாள்.

மனிதனில் தேவத்தன்மை, மிருகத் தன்மை இரண்டுமே உண்டு. நாம் மிருகத்தன்மையை மட்டும் தட்டி எழுப்புகிறோம் என்பார்கள். கௌரியின் உண்மையான அன்பு, பணிவான பேச்சு, எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் பாங்கு எல்லோரையும் மயக்கித்தான் விட்டது.

புவனாவும், கௌரியும் சமையல்கூட அதி அற்புத மாக செய்வார்கள். கௌரி தன் கை வரிசையைக் காட்ட, அருண் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறான்.

துரைசாமியின் கடைசி பெண்ணின் திருமணம். வீடு கொள்ளாத உறவினர்கள். துரைசாமிக்கே உறவினர்கள் அதிகம். யாரையும் விட்டுக் கொடுக்காமல், எல்

லோருடைய திருமணத்துக்கும் உதவி செய்து திறந்த மனத்தோடு உதவிகள் செய்வதால் அவருக்கு சொந்தங்கள் மிக அதிகம். இவர் வீட்டவர், இவர் மனைவி வழி உறவினர்கள் முதல் பெண்ணின் உறவுகள், இரண்டாவது பெண்ணின் உறவுகள் என்று ஒரு நான்கு நாளைக்கு முன்பே வீடு களை கட்ட ஆரம்பித்தது. ரொம்ப நெருங்கிய சொந்தங்கள் எல்லாம் வந்தாகி விட்டது. சற்று தூரத்து உறவுகளும் ரொம்ப தூரத்திலிருந்து வருபவர்களும் வந்தாகி விட்டது. இனி திருமணத்தன்று வரும் உறவுகள்தான் பாக்கி. இனி அந்த ஊரிலே இருக்கும் நண்பர்கள், உறவினர்கள் என்று திருமணத்திற்கு ஊர்பட்ட கூட்டம் வரும்போல் தோன்றியது.

பர்வதம் செலவுகளைக் குறைக்கலாமா என்று கேட்ட போது ''வேண்டாம்மா. அவுங்க ஒண்ணுமே கேட்டுக் கலை. இது கடைசி கல்யாணம். மன நிறைவா எல்லோரும் சந்தோஷப்படும்படி நடத்திக் காட்டணும். நம்ம பொண்ணுக்கு நாம செய்யறோம். கொஞ்சம் கூட போனா என்ன? சமாளிச்சிப்போம். அவர்கள் கையில், பையில் என்று ஒன்றுமே வாங்காததால் பெண்ணின் வீட்டுக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்தார். எவர் சில்வர் பாத்திரங்கள், முக்கியமான பித்தளைப் பாத்திரங்கள், டி.வி., கட்டில், படுக்கை, டிரஸ்ஸிங் டேபிள், சோபா செட், கிரைண்டர், வாஷிங்மெஷின் என்று சகலமானதும் பெண்ணிற்கு எது விருப்பமோ, பெண்ணை அழைத்துப்போய் அவள் விருப்பப்படி தேர்ந்தெடுக்க அனுமதித்தார். தன் மற்ற இரு பெண்களும் தவறாக நினைத்து விடக்கூடாது என்று அவர்களை வைத்துக் கொண்டு, பெண்களுக்கு நல்ல

சரிகை போட்ட பட்டுப் புடவைகளை வாங்கியதோடு மட்டுமல்லாமல் கையில் பத்தாயிரம் தந்து விட்டார்.

அருணின் வீட்டார், அருணின் அனுமதி பெற்று வந்து கௌரி பம்பரமாக வேலை செய்கிறாள்.

துரைசாமிக்கு வேலையின் அழுத்தத்தால் புவனாவையும் விஜியையும் தொடர்பு கொள்ளவே இல்லை. போதாத குறைக்கு அவர்கள் இருவருமே எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. சம்பந்திகளுக்கு எல்லாம் ஒரே மாதிரி சரிகை வேஷ்டி பட்டுப் புடவைகள். மூன்று சம்பந்திகளையும் பார்த்துப் பார்த்து உபசரித்து கவனித்து, உறவினர்களையும் அவ்வப்போது கவனித்து எல்லோருக்குமே விருப்பமானவர் துரைசாமி.

''மனுஷன் தங்கம்'' என்கிறார் முதல் சம்பந்தி.

''அப்பேற்பட்ட ஒரு நல்ல மனுஷனைப் பார்க்கவே முடியாது'' - இது இரண்டாவது சம்பந்தி.

மூன்றாமவர் இன்னும் உரிமை எடுத்துக் கொண்டு சொல்கிறார், ''அவர் சம்பந்தி இல்லை. என் கூடப் பிறந்தவராகத்தான் நினைக்கிறேன்.''

முதல் நாள் நிச்சயதார்த்தத்தின் போது ஒரு பெரிய மாலை, கெம்பு தோடு, கெம்பு வளையல் போட்டார்கள். ஒவ்வொரு கெம்பும் இரண்டு மொச்சைக்கொட்டை அளவில் இருந்தது. கோவிலில் பழைய கால நகை போல் எல்லோரையும் அசர வைக்க, எல்லோருடைய பார்வையும் அந்த நகையிலே இருந்தது. இன்னும் ஒரு பச்சை செட், தங்க செட் போட்டார்கள். அதெல்லாம் நவீன கால நகை போல் இருந்தது. கெம்பு செட் அவர்களின் வம்சா வழி நகையாம். அதைப் போட்டுக் கொண்டுதான் திருமணமே ஆக வேண்டுமாம். ஆயிற்று

பெண் அலங்கார தேவதையாக எல்லாவற்றையும் அணிந்து கொண்டு ஊர்வலம் போயாகி விட்டது. நிச்சயதார்த்தமும் நடந்து முடிந்தது.

திருமணம் ஆறு ஏழரை. இன்று பிரமாதமான விருந்தை ஏற்பாடு செய்திருந்தார். பூ அலங்காரம், திருமண மண்டப அலங்காரம் எல்லாமே பிரமாதமாக இருந்தது. எந்தக் குறையும் இருக்கக் கூடாது. பிரமாதமாக இருக்கணும் என்று பார்த்துப் பார்த்து செய்திருந்தார் துரைசாமி.

இரவு படுக்கப் போகுமுன் கல்யாணப் பெண்ணை கேட்கிறார். ''கண்ணம்மா ஏதாவது குறை இருக்காடா. இன்னிக்கு உன் கல்யாணம் எப்பவுமே நினைச்சுகிட்டு இருக்கற மாதிரி இருக்கணும்.''

ஒவ்வொரு பெண்ணிடம் கேட்கும் கேள்விதான். மூன்று பெண்களுமே அப்பாவை சுற்றிக் கொண்டனர்.

''அப்பான்னா அப்பாதான்.''

இரவு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, எல்லோரும் படுத்தபோதே சற்று நேரமாகி விட்டது தான். விடியற்காலை எல்லோரும் எழுந்து முகூர்த்தத் திற்கு ரெடியாக ஆரம்பித்தனர். மணப்பெண்ணுக்கு அழகுக்கலை நிபுணர் வந்து அழகுபடுத்தி முகூர்த்தத் திற்கு உடுத்தும் கூரைப் புடவை (நூல் புடவையை) உடுத்தியவாறே நின்றபோது, எல்லா நகைகளையும் அணிந்து கொண்டவள் கெம்பு செட்டை எடுத்துப் போட்டுக் கொள்ள முற்பட்டபோது கெம்பு செட்டைக் காணவில்லை. ரேணுவிற்கு பகீர் என்றது.

''இது நம்ப பரம்பரை நகை. நாளைக்கு முகூர்த்த புடவை கட்டும்போது இதை போட்டே ஆகணும்'' சொல்லி அனுப்பினர் மாமியார்.

ரேணுவிற்கு கை கால் எல்லாம் நடுங்கியது. உடம்பு முழுவதும் குப்பென்று வியர்த்தது. கண்களில் நீர் திரள, மயக்கம் வரும்போல் இருக்க சற்று பதற்றத்துடன் நெஞ்சை பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள் ரேணு. 'யார், யார் எடுத்திருப்பார்கள். இந்த கெம்பு செட்டின் மீதுதானே அனைவரின் பார்வையும் இருந்தது. நேற்று படுக்கப் போகும்போது எல்லா நகைகளுடன் தானே வைத்தேன். இது மட்டும் எங்கே போய் விட்டது?' ரேணு உறைந்து போய் நிற்க, அந்த அறைக்கு வந்த செய்தியைக் கேட்ட இரு சகோதரிகளும் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து விட்டனர்.

இந்தத் திருமணம் நடக்குமா? இல்லை நின்று விடுமா? கொஞ்சம் கொஞ்சமாக பெண் வீட்டார் எல்லோருக்கும் பரவ, எல்லோருமே அதிர்ச்சி அடைந்தனர்.

''எங்கேம்மா கழட்டி வச்சே? ரொம்ப விலை யாம்மே. பத்திரமா எடுத்து வச்சுக்க மாட்டே''

''இங்கே தான் அண்ணி வச்சேன்'' சொல்லும்போதே அழுது விடுகிறாள் ரேணு.

மறுபடியும் தேடும் படலம். அருண் ஓடி வருகிறான். என்னாச்சு அண்ணி.''

''நகையைக் காணோம்பா.''

''என்னது? இதோ போட்டிருக்காங்களே.''

''அது இல்லேப்பா. அந்த கெம்பு நெக்லஸ். அதுதான் காணோம். அது போட்டு தான் தாலி கட்டணும்னு சொன்னாங்களே. நடுவில் பெரிய கெம்பும் சுற்றிலும் சின்னச் சின்னக் கெம்புகள் வைத்து அந்த கால நகை யாம்.'' எல்லோரும் மறுபடியும் தேட, அந்தப் பக்கம் வந்த கௌரியின் மேல் மொத்த பார்வையும் விழுந்தது.

"என்னாச்சு ஏன் அழுதுகிட்டு இருக்கீங்க எல்லோரும்?"

"அந்த கெம்பு செட்டை காணோம். நீ எங்காவது எடுத்து வச்சியா?" என்று கேட்கிறாள் ரேணு.

கௌரி ஒரு நிமிடம் அதிர்ந்து போகிறாள். 'இவர்கள் நகையை நான் ஏன் எடுக்க வேண்டும்? ஏன் இந்தப் பெண் இப்படிக் கேட்கிறது?'

"என்னம்மா ரேணு இப்படி பேசறே?"

"இந்த ரும்லே என்னோட நீதான் இங்கே இருந்து கிட்டு இருக்கே. கௌரி வேடிக்கை பண்ணாதே. கல்யாணமே நின்னு போயிடும்" ரேணு கேட்க,

"என்ன ரேணு... நீ இப்படி பேசறே? என்னைப் பார்த்தா நகையை எடுக்கறவ மாதிரியா இருக்கு?" அதிர்ந்து போய் கேட்ட கௌரியின் கண்களில் கண்ணீர்.

"ஐயோ நான் உன்னை தப்பா எல்லாம் சொல்லலே. விளையாட்டுக்கு ஏதாவது?" பழி ஓரிடம் பாவம் ஓரிடம் என்று சொல்வார்கள். கோபமும் சரி பழியும் சரி நம்மைவிட இளைத்தவர்களிடம்தான் நம்மால் காட்ட முடியும். அத்தனை பெரிய கூட்டத்தில் கௌரியைத் தவிர வேறு யாரையும் கேட்க ரேணுவிற்குத் தோன்ற வில்லை. இதை நினைத்ததுமே கௌரிக்கு கண்கள் மடை திறந்தது. எத்தனை கேவலமான பழி.

ரேணுவின் சுற்றத்தினர் எல்லோரும் அவள் தான் நகையை எடுத்தாற் போல் பார்க்கின்றனர்.

"என்ன ரேணு இது? நீ எங்கே வச்சே சரியா பாரு. கௌரியைப் போய் எதுவும் சொல்லாதே. அவ அந்த மாதிரி பொண்ணு இல்லே" மீனா கூட கடிந்து கொள்ள.

"நான் சாதாரணமா கேட்டதை ஏன் எல்லாம் பெரிசு படுத்தறீங்க? நகையைக் காணோமேன்னு என் ஆதங்கம் எனக்கு" ரேணு பிழியப் பிழிய அழுகிறாள்.

இதற்குள் அருண் துரைசாமியைத் தேடிப் போகி றான். விஷயத்தை அவரிடம் சொல்ல,

"நகை எங்கேயும் போயிடலப்பா. நான்தான் எடுத்து சம்பந்தி அம்மாகிட்டே கொடுத்தேன். காலைல பூசை சடங்கு இருக்காம் அதுல வைக்கணும்னு கேட்டாங்க. அது முடிஞ்ச பிறகு முகூர்த்தம் போது தந்து விடுவாங்க நான் ஒருத்தன். சொல்லாம வந்துட்டேன்." விடியற்காலை எழுந்து சொஸைட்டி பாலை வாங்கியவாறு வருகிறார்.

"என்ன அங்கிள் சொல்லிட்டுப் போக வேண்டாமா?"

"ஏன் உங்க ஆன்ட்டிக்கு தெரியுமேப்பா?"

"அவுங்களை ஆளையே காணோம். ரேணு பிழியப் பிழிய அழுதுகிட்டு இருக்காங்க" வார்த்தைகளைக் கேட்டதும் அதிர்ந்து விடுகிறார்.

"என்னப்பா சொல்றே? என் குழந்தையா அழுது கிட்டு இருக்கா? சந்தோஷமா இருக்க வேண்டிய கல்யாணப் பொண்ணு அழுதுகிட்டா இருக்கா." அருண் இதை ஒரு ஆளை வச்சு சமையற்காரங்ககிட்டே கொடுத்திடு. நான் போய் என் பொண்ணை பாக்கறேன். பாவம் என் பொண்ணு" பால்கேனை அவனிடம் தள்ளி விட்டு ஓடும் மனிதரைப் பார்க்க ஆச்சரியப்படுகிறான்.

என்ன மாதிரியான மனிதர். நினைத்தவன் கௌரியை வேறு நினைத்துக் கொண்டான். 'எங்கே போனாள் இவள்' ஆளையே காணவில்லையே.'

இங்கே பெண்ணை நினைத்து பதறி அடித்துக் கொண்டு ஓடி வருகிறார் துரைசாமி. கண் தான் பட்டிருக்க வேண்டும். நேற்று இருந்த சந்தோஷமெல்லாம் போய் விட்டதே. திருமணம் நடக்கும் சந்தோஷத்தில் இருப்பவள் போய் அழலாமா? மனம் துடிக்க, துடிக்க ஓடுகிறார்.

மணமகள் அறையில் ரேணு அழ, கூடவே கௌரியும் அழுது கொண்டிருக்கிறாள். துரைசாமியின் மனம் உருகிப் போய்விட்டது. ரேணுவின் மாமியார் நகையைக் கேட்டதும் கொடுத்துவிட்டு மனைவியிடம் சொல்லி விட்டு பொறுப்பேற்றுக்கொள்ள ஆள் வரவில்லை என்று செல்லில் ஆள் கூப்பிட அதற்கு ஓடியதில் தான் இத்தனை கலாட்டா. பாவம் தன் பெண் அழுது அழுது முகமெல்லாம் வீங்கி கூடவே தன் மற்ற இரு பெண்களும் அழுது இருக்கிறார்கள். 'கௌரி... பாவம் அந்தப் பெண் எப்படி அழுது இருக்கிறது? தன் மனைவி எங்கே போய் தொலைந்து விட்டாள். 'சே இத்தனை பேரையும் அழ வைத்து விட்டு...'

''என்னடா எதுக்கு அழறீங்க?''

''அப்பா...'' ரேணு விம்ம, ''என்னடி கண்ணு அழறே. நகை எங்கேயும் போகலை. உம் மாமியார்தான் காலைலே பூசைலே வச்சு தர்றேன்னு வாங்கிட்டுப் போனாங்க. எதுக்குடா அழுதீங்க.'' சொல்லும்போதே அவரும் கலங்கிப் போனார்.

''கௌரி நீ ஏம்மா அழறே? ஒண்ணும் ஆகலேம்மா. நகை கிடைச்சுப் போச்சு.''

''ஸாரி கௌரி'' என்கிறாள் ரேணு.

''நான் அப்பவே சொன்னேன் இல்லே. என்ன பேசற துன்னு உனக்குத் தெரியாது.'' மீனா கடிந்து கொள்ள,

''நீ வருத்தப்படாதே'' என்று கௌரியை தேற்றுகிறாள்.

''என்னாச்சும்மா?''

மீனா விஷயத்தைச் சொல்ல,

''என்னடா இதெல்லாம். கௌரி உன் தங்கச்சி மாதிரிடா. பாவம்டா அது. அது மாதிரி சொல்லலாமா? சரி எழுந்திருங்க. மாமியார் வந்திடுவாங்க. சடங்கெல் லாம் இருக்குல்ல. முகத்தைத் துடைச்சிக்கம்மா'' அவர் துரிதப்படுத்த எல்லோருமே முகூர்த்தத்திற்கு ரெடியாக கௌரி ஒதுங்கிப் போகிறாள். சிவந்து போன கண்கள், வீங்கிப் போன முகம். துரைசாமி பின்னால் வருகிறார்.

''கௌரிம்மா மன்னிச்சிடுடா. தப்பா நினைக்காதேடா. பதட்டத்திலே பொண்ணு ஏதோ தப்பு செய்திட்டதுமா. மன்னிச்சிடும்மா.'' சட்டென்று அவளின் காலில் விழுந்து விட,

''ஐயையோ என்ன அங்கிள்'' என்கிறாள்.

''இந்தக் கல்யாணம் முடியறவரைக்கும் நீ இருந்து சாப்பிட்டு கொண்டு சகஜமா இருந்துட்டுப் போகணும்மா. ப்ளீஸ்.''

கௌரி தலையை ஆட்டியவள் முகத்தைத் துடைத்துக் கொண்டு வேறு உடை மாற்றிக் கொண்டு வர, போட்டோ எடுப்பவனிடம் கௌரியையும் வைத்துக் கொண்டு போட்டோ எடுத்துக் கொள்கிறார்கள் சகோதரிகள். ரேணு மறுபடியும் மறுபடியும் மன்னிப்புக் கேட்கிறாள்.

ஒரு வழியாக நெக்லஸ் தரப்பட்டு திருமணம் முடிந்தபோது, 'அப்பாடா' என்றிருந்தது கௌரிக்கு.

இங்கே இருந்து எப்படியாவது சென்று விடவேண்டும். 'ஏனோ இருக்க மனமில்லை' நேற்றும் அவள் தாய் தந்தை அக்கா தங்கை யாருமே வரவில்லை. இப்போதும் ஏன் வரவில்லை? நினைக்கும்போதே அப்பா அம்மா இருவரும் அவசரம் அவசரமாக வருவது தெரிந்தது. அம்மா அக்கா திருமணத்தின்போது வாங்கிய மேக வர்ண புடவையை உடுத்திக் கொண்டு வந்திருந்தாள்.

கையில் கழுத்தில் வெள்ளைக்கல் செட் போட்டுக் கொண்டு வந்திருந்தாள். தலையை இழுத்துக் கொண்டை யாக கட்டியிருந்தாள். அப்பா ரோஸ் கலர் சட்டை போட்டு சரிகை வேஷ்டி உடுத்தி வந்திருந்தார். அவர்களைப் பார்த்ததுமே கௌரி தலை மறைவாக போய் அமர்ந்தாள்.

''ஏம்மா புவனா...'' ஆரம்பித்த துரைசாமி, அவர்கள் வேறு மாதிரி பார்க்க அமைதியானார்.

அம்மா சீர்வரிசைகளை நோட்டம் விடுகிறாள். பெண் ணின் கழுத்தில் தொங்கும் அந்த கெம்பு அட்டிகை, அந்த காலத்தில் சந்திரஹாரம் என்று சொல்லுவார்கள். அதைப் போல் இருக்கிறது. அசந்து போகிறாள்.

''வாங்க'' பார்வதம் அவளை வரவேற்று மணமகளின் கழுத்தில், கையில் இருப்பது எல்லாம் பெண்ணின் மாமியார் வீட்டில் போட்டது என்று பெருமையாகப் பேசுகிறாள். மொத்தம் மூணு செட் போட்டாங்க. கெம்பு செட், தங்க செட், பச்சை செட், நிச்சயதார்த்த புடவையே இருபத்து ஐந்தாயிரம். எப்படி இருக்கு தெரியுமா? நீங்க முதல்லே வருவீங்க. காண்பிக்கணும்னு நெனைச்சேன்'' சற்று பெருமையாகச் சிரித்தவாறே உள்ளே போக, செண்பகத்தின் முகம் லேசாக ஜிவுஜிவுத்தது.

'இது தன் வீட்டுக்கு வந்திருக்க வேண்டிய சம்பந்தம். நம்ப கௌரிக்கு இவனோட திருமணமாகி இருக்க வேண்டியது. இந்தப் பெண் ரேணுவைவிட தன் பெண் நல்ல நிறம். நல்ல அழகும்கூட. இவருக்கு மருமகப் பிள்ளைகள் எப்படி அமைகிறது. ஒருவன் இன்ஜினியர், இன்னொருவன் ஆடிட்டர். இப்போது இவரும் காலேஜில் பெரிய வேலை. இன்னும் பெரிய லெவலுக்குப் போவது இன்னும் உறுதி. ஆனால் தன் மருமகன் முதல்வன் வேலை இல்லாதவன். மீதி இரண்டு பெண்களுக்கு ஒன்றுமே இல்லை.

பார்வதம் கொடுத்து வைத்த மகராஸி. பொன்னை வைக்கும் இடத்தில் பூவை வைத்து, புதையலை அள்ளி விட்டாள். ஆனால் தன் குடும்பம்? புருஷனுக்கும் மனமில்லை. பிள்ளைகளும் சரியில்லை. இங்கே அப்பா பார்க்கும் இடத்தை பெண்கள் தட்டாமல் செய்து கொள்கிறார்கள். ஆனால் தன் கதி என்ன? நல்ல வேலை செய்பவனாக, இவர்களைவிட பணக்கார வீடாக உள்ளவனைத் தான் மருமகனாக கொண்டு வந்தான் தன் உடன் பிறந்தவன். தன் அண்ணன் மகன் எப்பேர் பட்டவன். பாவி மகள் அடுத்த வீட்டு நாயோடு ஓடி விட்டாள். புருஷன் சொல்வதெல்லாம் சரிதான். எனக்குத்தான் பிள்ளைகளை வளர்க்கத் தெரியவில்லை போலும், பெருமூச்சு விடுகிறாள். பார்வதத்தைப் பார்த்து பொறாமை. அவளின் மூன்று பெண்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி சேலை உடுத்தி, ஒரே மாதிரி அலங் காரத்தில் அசத்துகின்றனர்.

'இத்தனை ஒற்றுமை தன் குடும்பத்தில் இருக்கிறதா என்ன?' சுய அலசல் செய்து கொள்கிறாள் செண்பகம். இருக்கவே முடியாது. தன் குடும்பம் ஒரு குடும்பமா?

துரைசாமி குடும்பத்தின் செழுமையும் சிரிப்பும், ஆனந்தமும் அவளுக்கு எரிச்சலைத்தான் தோற்றுவித்தது. பெயருக்கு கூப்பிட்டுவிட்டுக் கிளம்புகையில் கணவன் அருகே வருகிறான்.

''சாப்பிட்டாச்சா.''

''ம்..'' என்கிறார் ஏகாம்பரம். ''சாப்பிட்டு விட்டு வெத்தலை போட்டுவிட்டு திரும்பும்போது, வெற்றிலை பாக்கு முகூர்த்த தேங்காய் சேர்த்து தந்து கொண்டிருந்தாள் கௌரி. இவர்களைப் பார்த்தவுடன் சட்டென்று தலையை குனிந்து கொள்கிறாள்.

பெண்ணையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் பார்வதம். பெத்த தாய் தேவையில்லை. தந்தை வேண்டாம். இவர் நண்பர் மட்டும் தேவையா? கௌரி பையை நீட்டிக் கொடுத்துவிட்டு, வாயை மூடிக் கொள்ள,

''நீ ஒருத்தி தான் இங்க இருக்கியா? உங்கக்கா எங்கே? உன் தங்கச்சி...'' கௌரி விழிக்கிறாள்.

''அம்மா என்ன சொல்கிறாள். புவனா இல்லையா? அம்மாவுக்கு ரொம்ப பெட்டான விஜிக்கு என்னாயிற்று?'' கேட்க வாயைத் திறந்தவள் மீண்டும் வாயை மூடிக் கொண்டாள். வேண்டாம் இவர்களோடு எனக்கு என்ன சம்பந்தம்? முடிந்து விட்டதை மறுபடியும் புதுப்பிப்பதால் என்ன லாபம்? அம்மா கேட்டது காதில் விழாதது போல் பாவனை செய்து இன்னொருவரை அந்த இடத்தில் இருக்கச் சொல்லிவிட்டு நொடிப் பொழுதில் அங்கிருந்து மறைந்து போகிறாள்.

கௌரியின் மனம் துன்பப்பட்டது. அப்பா பதிலே பேசவில்லை. பெண் ஆச்சே என்று ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஒரு நிமிடம் பெண்ணை உறுத்துப்

பார்த்ததோடு சரி. அதற்கு மேல் அவளிடம் பேசவே இல்லை. ஒரு நிமிடம் கௌரி வருத்தப்படுகிறாள். 'சொந்த பெற்றோருக்கே தான் அந்நியனாகி விட்டோம். போதும், இந்த பந்தம் போதும் என்றுதானே விலகி விட்டோம். இதை ஒட்ட வைத்துக் கொள்வதில் என்ன லாபம் இருக்கு. பார்க்காதவரை ரொம்ப நல்லது தான்.' தவித்த மனதை அடக்கியவாறே அங்கிருந்து கிளம்பிப் போகிறாள்.

கௌரியைப் பற்றி தப்பாக நினைத்துக் கொண்டதால் அதற்கு வருத்தப்படும் வண்ணம் ரேணு மாய்ந்து, மாய்ந்து அன்பைக் கொட்டுகிறாள். தனக்கு அன்பளிப்பாக வந்த சில பொருள்களைக் கூட கௌரிக்குக் கொடுக்கக் கூட முற்பட்டாள். விஷயத்தைக் கேள்விப்பட்ட பார்வதமே கௌரி கௌரி என்று ஒரேயடியாகச் செய்கிறார்கள்.

நிச்சயித்த நாளில் கௌரியின் திருமணம் அருணோடு நடந்து முடிந்தது. காலையில் எழுந்தவுடன் பம்பரமாகச் சுழன்று வீட்டைக் கவனித்துக் கொண்டு, எல்லா வேலைகளையும் மாய்ந்து, மாய்ந்து செய்து இரவில் அருணுக்காக வேண்டியது செய்து, அவனை மகிழ்வித்து அந்த சந்தோஷத்தில் தான் மகிழ்ந்து பாதி வாழ்க்கை அப்படியே தான் ஓடிவிடும் என்று தோன்றியது.

அன்று ஏதோ கை வேலையாக இருக்கும்போதே அருண் வந்து விட்டான். ''நாளைக்கு ஒரு முக்கியமான இடத்துக்குக் கிளம்பணும். அதனால சமையல் எல்லாம் மூட்டை கட்டி வச்சுட்டு ஷார்ப்பா ஏழு மணிக்கு கிளம்பு.''

அவனோடு தனியறையில் இருக்கும்போது எத்தனை கேட்டும் அவன் பதில் பேசவில்லை. ''என்னங்க நீங்க, இத்தனை கேக்கறேன் சொல்லக்கூடாதா?''

''அதையே தான் நாளைக்குத் தெரிஞ்சுக்கயேன்'' என்று பிடிவாதமாகக் கூறிவிட்டான்.

என்னவாக இருக்கும். ஒரு வேளை, அப்பா, அம்மாவை பார்க்கப் போகணுமா என்ன? அவர்கள் தான் திருமண வீட்டில்கூட என்னோடு பேசவில்லையே. அம்மா என்னோடு சண்டை பிடிக்கும் விதமாக அல்லவா பேசினார்கள்.

கௌரி யோசிக்கிறாள். இங்கே வந்து ஒரு மூன்று மாதங்கள் இருக்குமா? மாமியார் என்பவர் அனாவசியமாக பேசுவதே இல்லை. மாமனார் சாப்பிட மட்டும் வாயைத் திறக்கும் ரகம். 'போதும்... வேண்டாம்' என்பதோடு எதையும் பேசமாட்டார். அருணின் அண்ணனோ ஜென்டில் மேன் என்று தான் சொல்ல வேண்டும். எதை சொன்னாலும் மனம் புண்படக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருப்பான். இப்போது அண்ணி மீனா உடன்பிறவா தோழிபோல் ஆகி விட்டாள். தன் வீட்டில் இருந்த ஆயாசங்கள் இங்கே இல்லை. மனம் புண்பட்டு வெதும்பி, வருத்தப்பட்டு அப்படி எதையுமே தான் அனுபவிக்கவில்லை. சொன்னது போல் அருண் ரொம்ப அக்கறையோடு தன்னை கவனித்துக் கொள்கிறான். தப்பித் தவறி ஏதேனும் தலைவலி, ஜுரம் என்றாலும் துடித்து விடுகிறான். ஒரு நாளைக்கு பலமுறை டெலிபோனில் தொடர்புகொண்டு தன்னைப் பற்றி விசாரிக்கிறான். பெற்ற தாய் கேட்பது போல் 'சாப்பிட்டாயா' என்று கேட்கிறான்.

இது எல்லாமே கௌரிக்கு புதிதுதான். எப்போதுமே ஒதுக்கப்பட்ட வீட்டிலிருந்து வந்தவளுக்கு இது ராஜ வேட்டை மாதிரி தோன்றுகிறது. 'கடவுளே எந்தக் காரணம் கொண்டும் என் தேன் கூட்டை உடைக்காமலிரு' கணவன் எதுவாயிருந்தாலும் உடனே சொல்லி விடுவான். அவனே ரகசியம் காக்கிறான் என்றால் கட்டாயம் அது ஏதோ ரகசியமாக இருக்க வேண்டும்.

முக்கால்வாசி அவர்கள் வீட்டைப் பார்த்து வரவே தன்னைக் கூப்பிட்டிருக்கிறான். கிட்டே போனதும் வேண்டாம் என்று சொல்லி விட்டாற் போகிறது' நினைத்துக் கொள்கிறாள் கௌரி.

கணவனோடு காலை ஏழரை மணிக்கே கிளம்பி விடுகிறாள். சற்று விடியற்காலையில் எழுந்து வேலைகளைத் தொடங்கி விட, மாமியார் இட்லியை செய்து மீனா சட்னி அரைத்து சாப்பிடச் செய்தார்.

''இன்னிக்குக் கூட என்ன போய், அவன் தான் கூப்பிட்டானே போய் பாத்துட்டு வா, போ.''

''இப்பவாவது சொல்லக் கூடாதா எங்கே போறோம்னு.''

''போனவுடனே நீ தெரிஞ்சுக்கப்போறே. இதுல என்ன சொல்றதுக்கு இருக்கு'' அருண் சொல்லிவிட மௌனமாகிறாள் கௌரி.

கௌரி படித்த கல்லூரி வளாகத்தில் நுழைகிறார்கள்.

''என்னங்க இது?''

''நீ மேல் படிப்பு படிக்கணும்னியே. எம்.எஸ்ஸி அதுக்குதான். பணம் கட்டிட்டு வந்தேன்.''

''பணமா? ஸ்காலர்ஷிப் இல்லே கேட்டிருந்தேன்.''

''ஸ்காலர்ஷிப் ரொம்ப கொஞ்ச பேருக்குதானாம். போன மாசமே வந்துடுச்சு. பணத்தை கட்டியாச்சு. பிரின்ஸிக்கு உன்னைத் தெரிஞ்சதாலே இன்னிக்கு பார்மல் இன்டர்வியூவிற்கு வந்தா போதும்னு சொல்லிட்டாங்க.''

கௌரிக்குப் பேச வாய் எழவில்லை. தான் காண்பது நிஜமா பொய்யா?

தன் கணவன் சொன்ன சொல்லை நிறைவேற்றி வைத்து விட்டானே. சட்டென்று அவன் கைகளைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொள்கிறாள். அவள்

நாளை மறுநாளிலிருந்து கல்லூரி என்றும், இம்முறை யும் சிறந்த மாணவி என்றும் பெயரெடுக்க வேண்டும் என்று சொன்ன முதல்வர் அருணை வெளிப்படை யாகவே புகழ்கிறார். 'தன் மனைவி படிக்க வேண்டும்; அவள் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்' என்ற நினைப்பு கொஞ்சம் ஆண்களிடம் மட்டுமே இருப்பதாகச் சொன்னவர், 'நீ ரொம்ப லக்கி' என்றும் சொல்லுகிறார்.

அன்று இரவு அவனின் கைகளை கண்களில் ஒற்றிக் கொண்டு அழுதபோது,

''ஏய் பைத்தியம், என்ன இது?'' செல்லமாகக் கடிந்தவாறே தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

ஆயிற்று கௌரியும் கல்லூரிக்குப் போய் வரலானாள். மாமியாரிடம் மாமனாரிடம் சொல்லிக் கொண்டு, அவர்களின் கால்களில் விழுந்து வணங்கி விட்டு புறப் பட்டுச் சென்றாள். அருண் கொண்டுவிட்டு, மாலை வரும்போது கூட்டிக் கொண்டு வருகிறான். சில நேரங் களில் வருவதற்கு நேரமாகுமென்றால் கௌரியே பஸ்ஸில் வந்து விடுகிறாள். புதிய சூழ்நிலை, புதிய வாழ்க்கை, சண்டை, சச்சரவு இல்லாத தன்மானத்துக்கு கேடு வராத, சுயமரியாதையை தொலைக்காத ஒரு இடத்தில் தன் பிறந்த வீடு, தாய் தந்தை எல்லாமே மறந்து தான் விட்டது.

இங்கே விஜியின் நிலைமையும் கிட்டத்தட்ட அப் படித்தான். விஜி வாழ்க்கைப் பட்டிருக்கும் இடம் பெரிய பணக்கார இடமல்ல. அன்றாடக் கூலிதான். ரொம்ப கீழ் நிலையிலிருந்து சற்று சுமாரான நிலைக்கு வந்தவர்கள். பழைய வீட்டில் அதாவது தன் பிறந்த வீட்டிற்கு அருகே இருக்காமல் சற்று தொலைவில் ஒரு வீட்டில் இருந்தனர். மாமியாரும் மிக நல்லவள். தப்பான வார்த்தையோ, மருமகளாயிற்றே என்று சாடுதலோ எதுவும் கிடையாது.

சுற்றுப்புறத்தைக் கவனியாமல் அவன் கைகளை கண்களில் ஒற்றிக்கொள்ள அதில் கண்ணீர் திவலைகள்.

''ஏய் என்ன இது?''

''என் தந்தை செய்ய வேண்டிய வேலை இது? ஆனா இனிமே நான் படிக்க முடியுமா?''

''நீ கட்டாயம் படிக்கத்தான் வேண்டும். நீ கவலைப் படாதே. அம்மா இருக்காங்க. அண்ணி இருக்காங்க. எல்லோருமே நல்லவங்கதான். யாரும் எதுவும் சொல்ல மாட்டாங்க. போய் பிரின்ஸியை பார்த்துட்டு வா. வெயிட் பண்ணி உன்னைக் கொண்டு போய் வீட்டுலே விட்டுட்டுப் போறேன்.''

கௌரி மெதுவாக நடந்து பிரின்ஸியின் அறைக்குள் நுழைகிறாள்.

அவள் கேட்ட பிரிவு கொடுக்கப்பட்டது. ஒரு ஐந்து நிமிடம் பேசிவிட்டு பிரின்ஸியிடம் சொல்லிவிட்டு வெளியே வருகிறாள்.

தனக்காக மரத்தடியில் நின்று கொண்டிருக்கும் கண வனைப் பார்த்து மனம் வெதும்பிப் போய் விடுகிறது. சொல்லிச் செய்வது ஒன்று. சொன்னாலும் செய்யாதது ஒன்று. சொல்லாமலே செய்வது ஒன்று. தன் பிறந்த வீடு இரண்டாவது ரகம். புருஷன் மூன்றாவது ரகம். அவனைப் பார்க்க, பார்க்க நன்றி கண்களில் தாண்டவமாடியது. பெண் என்பவளை ஆண் சரிபாதியாக வைக்க வேண் டும் என்று கூட எந்தப் பெண்ணும் எதிர்பார்ப்பதில்லை. அவளை சக மனுஷியாக, அவளுக்கு செய்ய வேண்டுவனவற்றை உள்ளன்போடு செய்யும் போதும், அவள் செய்யும் சேவைகளை திறந்த மனத்துடனும் ஏற்றுக் கொள்ளும் போதும் அவளின் மனம் விரிந்து போய் அன்பு செய்தவரின் பாதங்களில் விழுந்து விடுகிறது.

கை, கால்களில் சூட்டோடு வந்த மருமகளுக்கு மருந்து போட்டு பணிவிடை செய்து அவள் துக்கத்தை ஆற்றி, காதும் காதும் வைத்ததுபோல் திருமணத்துக்கு நிச்சயித்து, ஒரு அபூர்வா சில்க் புடவை எடுத்து, கழுத்தில் மஞ்சள் கயிறு மாங்கல்யம் செய்து கண்ணாடி வளையல்களும், பூவுமாக திருமணத்தை நடத்தி வைத் தாள். மருமகளை உள்ளங்கையில் வைத்து தாங்கினாள்.

சாதாரணமாகவே விஜி அவர்கள் வீட்டிற்குப் போய் விட்டால் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து விட்டு வருவாள். இப்போதோ கேட்க வேண்டாம். அத்தையை அம்மா அம்மா என்று மூச்சுக்கு முன்னூறு அம்மா கூப்பிட்டு அந்த குடும்பத்தோடு ஒருத்தியாக இணைந்து விட்டாள்.

புவனாவின் கணவனும் தனிக் குடித்தனம் போய் விட்டான். புவனாவின் மாமனார் இறந்துவிட கஷ்டப் பட்டு ஒன்றாக இருப்பதாக நடித்த குடும்பம் சின்னா பின்னமாகியது. மாமனார் இறக்கும் வரை ஒன்றாக இருக்கும் குடும்பம் பின் சிதறிப் போவது ஏன்? புரியாத புதிர்தான். கணவனோ, மனைவியோ இருவரில் ஒருவர் போய் விட்டாலும் மற்ற குடும்பங்களோடு வாழ்வதும், அட்ஜஸ்ட் செய்து கொண்டு போவதும் மிகவும் கடினம்தான். வேலைக்குப் போகும் மாமியார்கள்கூட கணவன் இறந்து விட்டால் குடும்பம் துண்டாடிப் போவதைத் தடுக்க முடியவில்லைதான்.

இங்கே செண்பகத்தின் மகள் திருமணம் நின்றவுடன் அண்ணன் வழக்கு மன்றத்திற்கே போவேன் என்று ஆடி சூளுரைத்து கடைசியில் செண்பகத்தின் தம்பி வந்துதான் அக்காவை காப்பாற்றுகிறான். நகைகளை எல்லாம் கொடுத்து விட்டவள், சற்று கருகிப் போன நகையையும்

பாலிஷ் போட்டு வைக்கவே, எல்லாவற்றையும் கொடுத்து விட்டாள். புடவைக்கும் செலவுக்கும் சேர்த்து, ஒரு லட்சம் தருமாறு கேட்க, ஏகாம்பரம் முடியாது என்று திட்டவட்டமாகக் கூற, செண்பகம் பயந்து போய், கெஞ்ச கடைசியில் புருஷனுக்குத் தெரியாமல் தன் இரட்டை வடச் சங்கிலி, நெக்லஸ், வளையல்கள் எல்லாம் கொடுத்து விஷயத்தைத் தீர்த்தாள். இதற்கு தம்பி தான் உதவி செய்தான். அக்காவிற்கு அண்ணன் வீட்டு சம்பந்தம் கிடைக்கிறதே என்று எரிச்சல் ஆத்திரம். அதனால் முறையாக வெட்டி விட்டான். ''அண்ணா இவனுக்கு ரெண்டாவது கல்யாணம் பண்ணியிருக்கேன்னு தெரிஞ்சா நீதான் அவுங்களுக்கு காம்பன்ஸேஷன் தர வேண்டியிருக்கும். விட்டது சனியன்னு தலையை சுத்தி எறிஞ்சுட்டு, வேற இடத்தை பாரு. பேசாம கொடுத்ததை வாங்கிக்க.''

கடைசி பெண்கள் தன் நகைகள் கால்வாசிக்கு மேல் காலியானதைத் தொடர்ந்து அவளை நினைத்தாலே எரிச்சல் வருகிறது. எத்தனைக் கெத்தனை இரண்டாவது பெண்ணை சபித்தாளோ முதல் பெண்ணை கரித்துக் கொட்டினாளோ இப்பொழுது எல்லாவற்றையும் சேர்த்து மூணாவது பெண்ணின் மேல் காண்பிக்கிறாள். அவளை நினைத்தாலே எரிச்சல் வருகிறது. தன் பெண்ணை கொலை செய்தால் கூட தவுறில்லை. மனம் அத்தனை ஆத்திரப்பட்டது.

அன்று ஏதோ மனது சரியில்லை என்று கோவிலுக்குப் போய் அர்ச்சனை செய்துவிட்டு திரும்பிய செண்பகம் எதிரே விஜி மாமியாருடனும், புருஷனுடனும் கழுத்தில் புது மஞ்சள் கயிறும், கையில் கண்ணாடி வளையல்கள் சலசலக்க வருவதைப் பார்த்து அதிர்ந்து போகிறாள்.

24

சென்பகத்திற்கு பற்றிக்கொண்டு வந்தது. 'இது பெண்ணா இது? பிசாசு. எத்தனை தைரியம் இருந்தா புது மஞ்சள் கயிறு. கையில் கண்ணாடி வளையல்கள், தன் வீட்டில் போட்டதோடு, கழுத்தில் வெறும் மஞ்சள் கயிறு. தலையில் நிறைய மல்லிகைப் பூக்கள். காலில் மெட்டி போட்டுக் கொண்டு சிரித்தபடி கணவனின் கையைப் பிடித்தவாறு வருகிறாள். திருமணம் ஆகி விட்டது போலும்.'

கணவன் மாமியாரோடு கோவிலுக்கு வந்திருக்கிறாள். அம்மாவிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. பெற்றவர்கள் உயிருடன்தானே இருக்கிறோம். வெட்கம் இல்லாமல் இன்னொருவனோடு நிச்சயம் செய்து கொண்டு இப்போது வேறொருவனோடு திருமணம். இவள் கணவனுக்கு வெட்கம் என்பதே இல்லையோ! சே! பணத்திற்காகத்தான் இந்தத் திருமணமே செய்திருப்பான். எப்படியும் நாங்கள் மண்டை போட்டால் எங்கள் சொத்து இவர்களுக்குத்தானே வரும். அந்த நினைப்பா இருக்கும்?'

"உங்க அம்மாம்மா கால்ல விழுந்து கும்பிட்டுக்கம்மா" மாமியார் கூற, "நீயும் போப்பா." பிள்ளையையும் கூற, பிள்ளை சற்று முன்னே வர, பெண் தயங்கிற்று. "போம்மா அவுங்க உன் அம்மா. கல்யாணத்தின் போது தான் ஆசீர்வாதம் வாங்கலை. முடிஞ்சப்புற மாவது வாங்கிடு."

மாமியாரின் சொல்லை மறுக்க முடியாமல் கணவனை அழைத்துக் கொண்டு முன்னே வருகிறாள்.

"அத்தை" விஜியின் கணவன் பேச, சட்டென்று வெடிக்கிறாள் சென்பகம்.

"என்னடா அத்தை? யாரு உனக்கு அத்தை? என்னைப் பொறுத்தவரைக்கும் இவ என்னிக்கோ செத்துட்டா. எவன் கூடவோ நிச்சயம் பண்ணிட்டு நம்மை வந்து கல்யாணம் கட்டறாளே இதெல்லாம் தப்புன்னு கூடவா தோணாது. நீ பண்ணிய பாவத்தினால் தான் என் நகை எல்லாம் வித்து கொடுத்தனுப்பினேன்."

விஜி சற்று அலட்சியமாக நின்று கொண்டிருக்க, மறுபடியும் ஆரம்பித்தாள் சென்பகம்.

"நான் சொல்றேன் எழுதி வச்சிக்க. நீ நல்லா இருக்க மாட்டே. என் வயிறு எரியறது போல் உனக்கும் ஆகும். மேலே இருக்கற ஆண்டவன் பார்த்துகிட்டேதான் இருக்கான். என்ன தண்டனை வரும்னு தெரியாது ஞாபகம் வச்சுக்க."

நேற்று திருமணம் முடிந்திருந்ததில் இருந்த மகிழ்ச்சி எல்லாம் காணாமல் போக ஒரு முறை தீர்க்கமாய் அம்மாவைப் பார்க்கிறாள். அடுத்த நிமிடம் புருஷன் கையைப் பிடித்தவாறே "கண்ட கழிசடை எல்லாம் எதிர்லே வருது. கண்டவங்ககிட்டே பேச வேண்டாம், கிளம்புங்க."

சென்பகம் இன்னும் கோபம் அடைந்து மண்ணை வாரித் தூற்ற,

தன் கணவன் கையைப் பிடித்தவாறே விருட்டென்று போகிறாள் விஜி.

விஜியின் கணவனின் சொந்தங்கள் அனைத்தும் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கிளம்ப, அவமானம், வெட்கம், ஆத்திரம், கோபம் ஒருசேர வீட்டிற்குக் கிளம்பி வருகிறாள்.

இங்கே கணவன் டிவியோடு ஐக்கியமாகிவிட, அப்படியே கணவனின் குரல்வளையை பிடிக்கலாமா என்ற உணர்வு எழுந்தது. உள்ளே வந்தவள் ஆத்திரம்

தாளாமல் பெருங்குரலெடுத்து கத்த ஆரம்பிக்கிறாள் ''பாவி மனுஷா. எல்லாம் உன்னாலதான். எனக்கு மரியாதை கொடுத்து அம்மா பாவம்னு சொல்லியிருந்தா பிள்ளைங்க என்னைத் தூக்கிப் போடுமோ? மாமியார்க் காரி காலில் விழுன்னு சொல்லியும் உம் பொண்ணு திமிரா போவுது.''

''யாரு'' என்கிறார் அலட்சியமாக.

''அதான் அந்த கடைசிது இருக்கே.''

''நீ செல்லம் குடுத்து கெடுத்து வச்சிருந்தியே அந்த கடைசி குலக் கொழுந்தா?''

''ஆமாம்மா நான் செல்லம் கொடுத்தேன். நீ காப்பாத்திட்டே. எனக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை நீ கொடுத்திருந்தா பிள்ளைங்களுக்கு அம்மான்னு ஒரு பயம் இருக்கும்.''

''வினைடி வினை. அப்பனை மோசமானவன்னு உன் பொண்ணுங்களுக்குச் சொல்லிக் கொடுத்தியே அந்த வினை.''

''அடப்பாவி உன் கூட சேர்ந்துகிட்டு உனக்குப் பிடிக்காதுங்கறதுனாலேதான் மொத்தத்தையும் நானும் சேர்ந்து துரத்தி அடிச்சேன். என் சொந்தம் மொத்தம் இப்ப அத்துப் போச்சு. அண்ணன், தம்பி எல்லாமே இனிமே வீட்டு வாசப்படி ஏறமாட்டேன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க. சொந்தம் ஏற்கனவே அழகு. வராது.''

''உம் பொண்ணு செய்ததுக்கு என்னையா குத்தம் சொல்றே? நீ திங்கற சோறு கூட உனக்குக் கிடைக்காம தெருவிலே நிக்கப் போறே.''

சென்பகத்திற்கு பெண் தன்னை அலட்சியப்படுத்திய ஆத்திரம் தாங்க மாட்டாமல் மேலும் மேலும் புருஷனிடம் சண்டை போட கோபமடைந்த ஏகாம்பரம் பெரிய

தாக கத்தி பட்டென்று மனைவியை அடித்து. மிதித்துவிட சென்பகத்திற்கு பழையபடி விழிப்பு வந்தது. கண்கள் மேல் பார்வை பார்க்க, வாய் கோணிக் கொள்ள, கை, கால் வெட்டி வெட்டி இழுக்க,

இதை சிறிது நேரம் வேடிக்கை பார்த்த ஏகாம்பரம் சொல்லுகிறார். ''வினைடி அனுபவி. எல்லாத்துக்கும் புருஷனை குத்தம் சொன்னே இல்லே. அனுபவி.''

ஆனால் சில நிமிடங்களில் சரியாகி விட வேண்டியது. அரை மணி நேரம் ஆகியும் நாக்கை கடித்துக் கொண்டு மேல் நோக்கிய பார்வை பார்த்துக் கொண்டு இருக்க, ''சென்பகம்... சென்பகம்'' மெதுவாக கூப்பிட்டுப் பார்க்கிறார் பலனில்லை. சற்று பயம் ஏற்பட தொலை பேசியில் மருத்துவருக்குப் போன் செய்ய ஆம்புலன்ஸ் வர மனைவியோடு அவரும் பயணமாகிறார். மனைவி மயக்கமான நிலையிலே இருக்கிறாள். இரண்டு நாட்களாக இதே நிலைதான்.

இதுவரை யாருக்காகவும் எதுக்காகவும் கவலைப் படாத மனது கவலைப்பட ஆரம்பித்தது. முதல் நாள் டிபன் சாப்பிட்டதோடு சரி எதையும் சாப்பிடக்கூட மனது வரலை. அவ்வப்போது காபி குடிப்பதோடு சரி, அவருக்கும் நெஞ்சு படபடப்பு, பயம், அதைரியம் வந்தது.

தொலைபேசியில் அலுவலகத்திற்கு விடுப்பு சொல்லியாயிற்று. அலுவலகத்திலிருந்து கூட ஒரு ஈ காக்காய் கூட வரவில்லை. துரைசாமி அவருக்கு என்னாயிற்று? தான் வரவேண்டாம் என்று சொல்லியும் எத்தனையோ முறை தங்கச்சியைப் பார்க்கிறேன் என்று வந்து உலாவி விட்டுப் போகும் ரகம்.

அப்பேற்பட்டவர் இந்த இரண்டு நாட்களாக ஆஸ்பத்திரி பக்கம் கூட எட்டிப் பார்க்கவில்லை. துரைசாமி

மின் மேல் கோபம். ஆத்திரம். 'வரட்டும் இனிமே உள்ளேயே வர விடக்கூடாது' கறுவிக் கொண்டார். தன்னந்தனியாக சொத்து இருந்தும் சுகம் இருந்தும் யாருமில்லாத அனாதை போல தவித்து நின்றார்.

அலுவலகத்திற்கு போனவுடனேயே துரைசாமிக்கு விஷயம் தெரிந்தது. பதறிப்போய் விட்டார். அன்று இரவு அவருடைய மூன்று பெண்களுக்கும், மாப்பிள்ளை சம்பந்திமார்களோடு விருந்து. தான் வீட்டிற்குப் போயே ஆக வேண்டும். நாளைக்கு பார்வதத்தை அழைத்துப் போய் செண்பகத்தைப் பார்க்க வேண்டும். பாவம் அந்த அம்மாள். என்னவோ மூளை கெட்டுப் போய் வேலை செய்து கொண்டு... அவருக்கு வேலையில் இருப்பே கொள்ளவில்லை. நெஞ்சை வேறு என்னவோ செய்தது. மனது வேறு அதிகமாக கஷ்டப்பட்டது.

வீட்டிற்கு வந்து பார்வதத்திடம் விஷயம் சொன்ன போது, ''ஐயையோ எப்பங்க ஆச்சு? பாவம் அந்த அம்மாதான் மொதல்ல எப்படி இருந்தாங்க? இப்ப எப்படி ஆயிட்டாங்க பாருங்க. ஆனா இன்னிக்கு என்னால வர முடியாதுங்க. சம்பந்தி வீட்டுக்காரங்களை கூப்பிட்டுக்கிறோம். மூணு பொண்ணுங்களையும் இரண்டு மணிக்கே வரச் சொல்லி இருக்கிறேன். சாமான் வாங்க வும், விருந்து செய்யவுமே நேரம் சரியாயிருக்கும். நாளைக்குப் போகலாம்.''

துரைசாமிக்கு பார்வதம் சொல்வது சரி என்று பட்டது. இப்போது போனால் தன்னால் அங்கே ஒரு மணி நேரம் கூட உட்கார முடியாது. சரிதான் என்னதான் செண்பகம் மாறிப் போனாலும் 'அண்ணே... அண்ணே' என்று தன்னை ஆசையாக அழைத்தது ஞாபகத்திற்கு வந்தது. மனது வலித்தது. பாவம். பெண்கள் எல்லோருமே விலகி

விட்டார்கள். தன்னந்தனியாக கணவரோடு வாழ்க்கை என்னாயிற்றோ? ஆமாம் புவனா எங்கே போனாள்? ஏன் அவளைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை? நினைத்துக் கொள்கிறார் துரைசாமி.

சம்பந்திமார்கள், மாப்பிள்ளைகள், பெண்கள் என்று வீடே களை கட்டியது. விருந்தில் தங்களை பரிமாற விடாமல் தங்களையும் உட்கார வைத்து பெண்கள் பரிமாறியபோது, ''என்னம்மா நீங்க எல்லாம். நான் அப்புறம் உட்காருகிறேன். முதல்ல சம்பந்திங்க எல்லாம் சாப்பிடட்டும்.'' பார்வதம் மறுக்க பெண்கள் கேட்கவில்லை. சம்பந்திங்களும் அவர்களை கூட சாப்பிடும்படி வற்புறுத்த, ஒரே கலகலப்பு, மகிழ்ச்சி, சந்தோஷம் ஆரவாரம். ஆயிற்று. இன்னும் சிறிது நேரத்தில் எல்லோரும் கிளம்பி விடுவர். இன்னும் சிறிது நேரம் இங்கே இருந்தால் நன்றாக இருக்கும் போல் தோன்றியது துரைசாமிக்கு. பெண்களிடம் சொல்லலாம் என்று எழுந்தபோது மார்பின் ஒரு பக்கத்தில் சுருக்கென்றது.

அவருக்கு இந்த வலி எப்போதோ வருவதுண்டு. ஆனால் இதையெல்லாம் அவர் லட்சியப்படுத்திய தில்லை. இன்று வலி இருக்க, இருக்க அதிகமாகி மார்பு பூரா பரவி, தோள் பட்டை, முதுகு என்று வலிக்க சற்று கஷ்டப்பட்டார். லேசாக மூச்சு விடுவது கஷ்டமாகி எழுந்திருக்க முடியாமல் போக, ''பார்வதம்...'' என்றவர் அதற்கு மேல் பேசவில்லை. அப்படியே சுருண்டார்.

பெண்கள், மாப்பிள்ளைகள், சம்பந்திகள் பதறிப் போயினர்.

''ஏம்மா, டாக்ஸி கூட்டிட்டு வா'' மூத்த சம்பந்தி கூற, அடுத்த சம்பந்தி மகனை விரட்டியே விட்டாள். மூன் றாவது சம்பந்தி, புதிதாக வந்தவர் தனக்குத் தெரிந்த டாக்டரிடம் பேச, பத்து நிமிடத்தில் டாக்டர் அங்கே

வந்து விட்டார். பர்வதம் துடித்து விட்டாள். தன் கணவருக்கு என்ன ஆயிற்று? பெண்கள் தந்தையின் நிலையைப் பார்த்து குமுறி குமுறி அழுதனர். மாப் பிள்ளைகள், சம்பந்திகள் கலங்கிப் போய் நின்றனர். ஒரு சம்பந்தியம்மா இறைவனுக்கு நேர்ந்து சேலை தலைப்பை முடி போட்டுக் கொண்டாள். சிறிது நேரம் வரை கல கலப்பு, சந்தோஷம், சிரிப்பு என்று இருந்த வீடு மாறிப் போனது. எங்கு பார்த்தாலும் துக்கத்தின் சாயல்.

அடுத்த அரை மணிக்குள் எல்லோரும் பிரபல மருத்துவ மனையில் இருந்தனர். துரைசாமிக்கு 'ஹார்ட் அட்டாக்' என்று சொல்லி இன்டன்சிவ் கேர் யூனிட்டில் சேர்த்து விட்டார்கள்.

பர்வதம் எல்லாவற்றையும் மறந்து விட்டாள். துக்கத் தோடும் துன்பத்தோடும், கல்லாய் சமைந்து இருந்தாள். கணவன் என்பவன் அவனைப் பொறுத்த மட்டில் துணை தான். எல்லாவற்றிலும் துணை. அப்படிப்பட்டவனுக்கு ஏதேனும் ஒன்று என்றால் மனது தவித்துப் போகிறது.

பெண்களும் அசையவில்லை. சின்னக் குழந்தையை வைத்துக் கொண்டு மூத்த பெண்ணும் அங்கே உட்கார்ந் திருக்கிறாள்.

"குழந்தை இருக்கே நீ வீட்டுக்குப் போம்மா" என்று சொல்லியும் கேட்கவில்லை.

"அப்பா இப்படி இருக்கும்போது என்னால எப்படிப் போக முடியும்? சம்பந்தி மார்களும் வெகு நேரம் இருந்து தைரியம் சொல்லிவிட்டு பிள்ளைகளோடு கிளம்பிச் சென்றனர்.

விடியற்காலையிலேயே மாப்பிள்ளைகள் திரும்பி வந்து விட்டனர்.

"அங்கே இருப்பே கொள்ளலை. பாவம் மாமா" என்கின்றனர்.

ஒருவர் டிபன் காபி வாங்கித் தர, ஒருவர் சாப்பாடு வாங்கித் தர ஒருவர் வீட்டைப் போய் பார்த்து விட்டு வர என்று வேலையைப் பங்கு போட்டுச் செய்ய பெண் களும் ஒவ்வொருவராக வீட்டுக்குப் போய் வந்தனர். பர்வதம் அசைய மறுத்து விட்டாள். "அவர் இன்டன்ஸிவ் கேர்லேந்து வெளியே வராம நான் வரமாட்டேன்."

"மாமாவுக்கு ஒண்ணும் ஆகாது அத்தை நல்லா ஆயிடுவார். கவலைப்படாதீங்க."

மாப்பிள்ளைகள் தேறுதல் சொல்ல, ஒரு வழியாக அபாய கட்டத்தைத் தாண்டி விட்டார் என்று சொல்ல, பிறகுதான் பர்வதம் குளிக்கவே வீட்டிற்குச் செல்கிறாள்.

கைகளில் டிரிப்ஸ் ஏத்துகிறார்கள் போலிருக்கிறது.

அவர் கண் மூடி படுத்திருக்கிறார். கணவரை சற்று எட்டிப் பார்த்துவிட்டு வீட்டிற்குப் புறப்படுகிறாள். மனம் முழுவதும் தாங்க முடியாத சோகம். தன் கணவருக்கு இரத்த அழுத்தமோ, சர்க்கரையோ, உப்போ எதுவும் கிடையாது. அவருக்கு எதற்கு இந்த வியாதி வரவேண்டும்?

குளித்துவிட்டு கோவிலுக்குச் சென்று வணங்கிவிட்டு வந்தபோது பெண்கள் சமையல் பொறுப்பேற்றுக் கொண்டனர். ஒரு பெண், மாப்பிள்ளை அப்பாவின் அருகிலேயே இருந்தாள்.

"வேண்டாம், வேண்டாம்" என்று மறுத்தும் விடாமல் அம்மாவைச் சாப்பிட வைத்து, "ஏம்மா நீங்க நல்லா யிருக்க வேணாமா? அவரோட உங்களுக்கும் ஏதாவது ஆயிடுச்சுன்னா..."

"சாப்பிட முடியலைம்மா" இதைக் கேட்டு மூன்று பெண்களுமே கண் கலங்கினர்.

இரண்டு வாரங்கள் சென்றிருக்கும். துரைசாமி தேறி விட்டார். வீட்டிற்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்கள்.

துரைசாமி வீட்டிற்கு வந்து ஏகாம்பரத்தைப் பார்க்க வேண்டும் என்று கூற பெண்கள் பெண்டாட்டி எல்லோருமே மறுத்து விட்டனர்.

"இப்ப வேண்டாங்க இப்படிதான் செத்து பிழைச்சிருக்கீங்க"

பெண்கள் அவரவர் வீடு போய் சேர்ந்து விட்டார்கள். அவ்வப்போது அப்பாவிடம் தொலைபேசியில் தொடர்பு. உடம்பை பார்த்துக் கொள்ளும்படி உபதேசங்கள். வாரம் ஒருமுறை பெண்கள், மாப்பிள்ளைகள், சம்பந்திகளும் வந்து பார்த்து விட்டுப் போவது உண்டு. அப்பா, அம்மா என்று உருகி உருகி நிற்கும் மகள்கள், மாப்பிள்ளைகள் பார்த்து மனம் அப்படியே உருகிப் போயிற்று.

அன்று வந்த மீனாவிடம் பேசுகிறார். "நீ கௌரி கிட்டே அம்மாவை பத்தி சொன்னியா? போய் பார்க்கச் சொல்லும்மா பாவம்."

"நீங்க கவலைப்படாதீங்க. நான் சொல்லிக்கறேன்."

"மீனா வீட்டிற்கு வந்து கௌரியிடம் பேசியபோது கௌரிக்கு சுவாரசியப்படவில்லை.

"என்னம்மா இது? உங்கம்மாவுக்கு பிட்ஸாம் நீ பேசாம இருக்கே. நல்லா இருக்காது. போய் பார்த்துட்டு வந்துடு."

"எப்பவும் வரது தான் அண்ணி. ரெண்டாவது போனாலோ எங்கப்பா ஏடாகூடமாக ஏதாவது கேட்பார். பாக்க விடு வாரோ என்னவோ. ஏற்கனவே உணர்வுகளை கொன் னுட்டவங்க அண்ணி. அம்மா, அப்பாங்கற உணர்வும் செத்துப் போச்ச அண்ணி. நான் போனா வீணா பிரச்னை தான் வரும்."

மீனா அருணிடம் சொல்ல, அருண் மட்டும் ஒரு எட்டு பார்த்துவிட்டு வரப்போக.

அந்த அம்மாள் அனாதை போல் இன்டன்ஸிவ் கேர் யூனிட்டில், அவர் வீட்டிலிருப்பதும் தெரிந்தது. மாலை நான்கு மணிக்கு வந்து விட்டு எட்டு மணிவாக்கில் திரும்பிப் போய் விடுவாராம்.

அன்று பார்த்துவிட்டு அவன் திரும்பியபோது கௌரி அந்த ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாள். கிட்டத்தட்ட விடாத வாந்தி, தலை சுற்றல் என்பதால் அவர்கள் வீட்டி னருகே இருக்கும் டாக்டரைப் பார்க்க வந்திருந்தார்கள். கௌரியைப் பார்த்தவள் வியந்து போய் விஷயத்தைச் சொல்ல ஒரு நிமிடம் இறுகினாள்.

"எங்களுக்கும் அவுங்களுக்கும் என்ன சம்பந்தம். எங்க விஷயத்திலே எல்லாமே முடிஞ்ச போச்ச சாரி" என்றவள், "வாங்க டாக்டரைப் பாத்துட்டு சீக்கிரம் போகணும். அங்க உங்க அம்மா தனியா தவிச்சுகிட்டு இருப்பாங்க," என்கிறாள்.

கௌரி கணவனோடு விரைந்து நடந்து மறைய,

மெதுவாக வந்தவளின் கண்களில் புவனாவும் அவள் கணவனும் பட "இவர்களுக்கு விஷயம் தெரிந்து வந்து விட்டார்களா?" மனம் சற்று நிம்மதி அடைந்து அவர் களிடம் சென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான்.

"நீங்க கௌரியோட ஹஸ்பண்டா, அருண்தானே நீங்க. கௌரி எப்படி இருக்கா?"

பாசமாக விசாரிக்கிறாள் புவனா. முன்னைவிட உடலில் மெருகேறி, பளபளவென்று அழகாகவே இருந்தாள் புவனா.

அருண் விஷயத்தைக் கூற ஒரு நிமிடம் அதிர்ந்தவள், ''வர்றீங்களா. இங்க தான் இருக்காங்களா?'' மெதுவாக கணவனிடம் கேட்க,

''நோ'' என்கிறான்.

''ஸாரிம்மா. வேற வழியில்லே. தாய், தந்தைங்கற _றவெல்லாம் சரிதான். ஆனா தாய் தாயாகவும், தந்தை தந்தையாகவும் இருக்கணும். இல்லேன்னா இந்த உறவுக்கு அர்த்தம் இல்லே. கிளம்பு. உன்னை வீட்டை விட்டு துரத்தி குழந்தை செத்துப் போற அளவுக்கு செய்திருக்காங்க. நீ கிளம்பு. நாம நம்ம வேலையைப் பார்த்துட்டுப் போவோம்.''

கணவன் பேச்சுக்கு எதிர் பேச்சு பேசாமல்,

''நான் வரேன் அருண். கௌரியை நல்லாப் பார்த்துக்கங்க'' சொல்லிவிட்டு கிளம்பிச் செல்கிறாள் புவனா.

அருண் பெருமூச்சு விட்டு வெளியே வரும்போது, ஏகாம்பரம் வருவதைப் பார்க்கிறான். அருகில் போய் ''சார்,'' என்று கூப்பிட,

''யார்ரா நீ எதுக்கு என்ன கூப்பிட்டே?'' என்கிறார். அவன் மெதுவாக கௌரியின் கணவன் என்று கூற, அவனையே தீர்க்கமாகப் பார்த்து ''எதுக்கு இங்க வந்தே? சொத்தைக் கேக்க வந்திருக்கியா, நான் குடுப்பேன்னு நினைச்சியா? குடுக்க மாட்டேண்டா?'' என்றார். அசிங்கப்பட்டவனாய் அருண் வேகமாக திரும்பி நடக்க, தன்னந்தனியாக இன்டஸிவ் கேர் யூனிட்டின் வெளியே உள்ள நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். உள்ளே இன்னும் கண் திறக்காமல் தன்னந்தனியாளாக படுத்து இருக்கிறாள் செண்பகம். உறவுகள் சேர்த்து அணைத்துக் கொள்வதற்குதான். வெட்டி விடுவதற்கு அல்ல.